"என்கிட்ட எதுக்கு வருவாங்க?"

"ஹோ... சரி, சரி...."

"வந்தவன் ஒரு கவருமெண்ட்டு வேலைக் காரன் போல தெரிஞ்சுது. வேலைக்காரன்னா உன் வேலை இல்ல, என் வேலை இல்ல, பெரும்பச்சை நோட்டா இரண்டு மூணு சம்பாதிக்கிற ஆளு!"

"அது சரி என்னா சோலி அந்த ஆளுக்கு கவருமெண்டுல?"

"ஏதோ ஆராய்ச்சி துறைன்னான்."

"ஆயிரம் ஆராய்ச்சித் துறை இருக்குதே தங்கம். எந்த ஆராய்ச்சித் துறையை அவன் சொன்னான்?"

"தோல பொருள் இலாக்கான்னோ, என்னவோ சொன்னான்?"

"தோல் பொருளா? அதான் உன்னிய ஆராய்ச்சி பண்ண வந்தானா?"

"ச்சீ..நடுவுல பேசாம சொல்றத கேளு, நாச்சி."

"அது தோல் பொருள் இல்ல, தொல் பொருள் இலாக்கா! சரிதான். கதை சரியாத்தான் போவுது. ஆமாம் அப்புறம்?" -நாச்சியப்பன் தங்கமணியிடம் கேள்வி கேட்ட அதே வினாடியில் அந்த உடும்பு தனது இரட்டை நாக்கை சிருட்டென்று ஒரு சாண் நீளத்துக்கு வாய்க்கு வெளியே நீட்டியவாறு நிமிர்ந்தது.

"என்னடா வில்வாத்திரி தயக்கம்? ஒளிஞ்சிருந்தது போதும். இறங்கி பூஜை அறைக்கு



போடா, வயிரவநாதன் என் குருகிட்ட இருந்து வாங்கின அந்த மந்திர தாயத்து என்னாச்சுன்னு பார்.

பூஜை அறையில் முருகன் படத்துக்கு கீழே விபூதிப் பாத்திரத்துல உள்ள விபூதிக் குவியல்ல அந்த தாயத்து மூழ்கிக் கிடக்கிறதா மேல் மலையூர் ருத்ர காளி சொல்றா. பூஜை அறைக்கு போடா போ!"

அனுமன் கரட்டிலிருந்து மாந்திரீகன் கருடராஜ பட்டத்திரி தனக்கு கட்டளையிட்டதும், எஃகு நிகர் கால்களை அசைத்து அரவமின்றி தரை இறங்கத் தொடங்கியது.

ஹாலில் நாச்சியப்பன் கால்களை சற்று அகட்டி விரித்து நின்றவனாய் தங்கமணியைப் பார்த்து பேசிக் கொண்டிருந்தான். அவனுக்கு நேர் எதிரே பூஜை அறை.

பூஜை அறையில் தரை மேலும், சுவற்றிலும் ஏகமாய் சுவாமி படங்கள். மையத்தில் ஒரு தேக்கு மர மண்டபம். அதற்குள் வேல் பிடித்து நிற்கும் பழனி முருகனின் படம். முருகன் படத்துக்கு முன்னாலே அந்த விபூதி பாத்திரம்!

தங்கமணி தொடர்ந்து கொண்டிருந்தாள்.

"வந்த ஆளு என்னைக் கட்டிகிட்டு நீதான் எவ்ளோ அழகு? மானு, மயிலு, கொக்கு அது இதுன்னு உட்டான் வாணம். யோவ், ஜோலியப் பாருய்யான்னா கேக்க மாட்டேங்கறான்.

அப்பால, அந்த தங்கக் காசுங்க மட்டும் கிடைச்சா என் பொண்டாட்டிக்கு கூட மாலை செஞ்சு போடமாட்டேன். உனக்குத் தான் போடு வேன்னு சொன்னப்பதான் நான் சுதாரிச்சேன்.

எந்த தங்கக் காசுன்னு கேட்டேன்?"

வில்வாத்ரியும் அதைக் கேட்டுக் கொண்டே கீழே இறங்கி விட்டது. தனது மெல்லிய செதில் களைக் கொண்ட நீண்ட வாலை வளைத்து நெளித்து தனது பேரபோலா முகம் தூக்கி, இரட்டை நாக்கை நீட்டி, சிமெண்ட்டு நிற சின்னக் கண்களால் தங்கமணியையும், நாச்சியப்பனையும் பார்த்துக் கொண்டு சுவர் ஓரமாய் நடந்து பூஜை அறையை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தது.

இருவரும் தங்களுக்கு மிக அருகில் அப்படி ஒரு ஜீவன் நடமாடிக் கொண்டிருக்கிறது என்பதே தெரியாமல் பேசிக் கொண்டிருந்தார்கள். படு

சுவாரஸ்யமான பேச்சு!

"எல்லாம் ராஜா காலத்து கஜானா தங்கம்னான்! என்னய்யா உடான்சு உட்றேன்னேன். இல்ல சத்தியம், சரித்திரத்தை கரைச்சு குடிச்சிட்டு வந்து சொல்றேன்னு சொன்னான். உம் சரிய்யான்னு. அதன் பெறவு ரவிக்கை அவுத்தேன் அப்பால."

தங்கமணி தன் பேச்சில் தேர்ந்த கதாசிரியனைப் போல ஒரு சுவாரஸ்யமான இடைவெளி வைத்து அவனைப் பார்த்தாள்.

"தங்கம் ரொம்ப என்னைத் துவட்டாதே. விஷயத்தை முழுசும் சொல்லு." - நாச்சியப்பன் அவளை செல்லமாய் வைதான்.

"தாலி கட்டுவியா? பெண்டாட்டியாக்கிக் தவியா?"

"நான்தான் கட்டிக்கிறேன்னு சொல்லிட்டேன்ல."

"அப்ப சத்தியம் பண்ணு!"

அவன் சத்தியம் பண்ண கையை உயர்த்திய சமயம் விருட்டென்று திறந்து கிடந்த பூஜை அறைக்குள் நுழைந்து விட்டது வில்வாத்திரி.

'போடா வில்வாத்திரி போ, நிற்காதே. அவங்க என்ன பேசினா உனக்கென்ன? வயிரவநாதன் என் குருகிட்ட இருந்து வாங்கின அந்த யந்திர தாயத்து என்னாச்சுன்னு பார். பூஜை அறையில் இருக்கிற விபூதி பாத்திரத்துல இருக்கு அது. உன் இரட்டை நாக்கால சுருட்டி விழுங்கு.

ஒரு மண்டல காலம் இடுப்பளவு தண்ணியில உட்கார்ந்து உடம்பு விரைக்க மந்திர உச்சாடனம் பண்ணி யட்சணி வசியம் செய்து, கன்னி பலி கொடுத்து உருவாக்கின சொர்ணதாயத்து!

எத்தனை ஆவி எதிர்த்து வந்தாலும் கட்டிப் போட்டு அடக்க முடிஞ்ச வல்லமை கொண்ட அபூர்வ தாயத்து அது!

மாந்திரீகன் கருட ராஜபட்டத்திரியின் கட்டளைச் சொற்கள் அதன் இரும்புக் கால்களில் வேகம் கூட்டின.

சான்னித்யமே துளிகூட இல்லாத பூஜை அறை வில்வாத்திரியை வரவேற்றது. பூஜை கண்டு பல வருடமாகிவிட்ட சுவாமி படங்கள். நூலாம்படைக்குள் சிக்கிக் கொண்டு அழுக்கு படிந்து போன தேக்கு மரபூஜை மேசை.

பளபளப்பைத் தொலைத்து விட்டு வெறித்து



பார்க்கும் குத்து விளக்கு என்று பொலிவே இல்லாத பூஜை அறையில் சுவாமி படங்கள் முன்னே வேகமாக நடந்து பூஜை மேடை ஏறி தனது இரட்டை நாக்கை ஒரு முறை நீட்டி எதிரே தெரிந்த முருகனைப் பார்த்துவிட்டு இலேசாய் பம்மியது வில்வாத்திரி.

அதோ விபூதிக் குண்டிகை. அதில் மணம் இழந்த சாம்பலாய் விபூதி. வில்வாத்திரி அதை நோக்கி முன்னேறி, தனது நாக்கை திரும்பவும் சிருட்டென்று அதற்குள் நுழைத்து அளம்பிவிட இலேசாய் விபூதிப் புகை கிளம்ப வெளியே தலைகாட்டியது அந்த தாயத்து.

அதைப் பார்த்ததும்தான் தாமதம். கபக் என்று சுருட்டி விழுங்கி நாக்கின் கீழே அடக்கிக் கொண்டு திரும்பித் திரும்பி பார்த்தது.

"வந்த வேலை முடிந்தது. இனி கிளம்ப வேண்டியது தான்!"

அது வேகமாய் திரும்ப யத்தனிக்க அதன் நீண்ட வால் பக்கத்து விநாயகர் பீடத்தின் ஃபிரேமின் மேல் பட்டு அது நகர்ந்து சப்தத்துடன் சரிய "என்ன சப்தம்" என்று தங்கள் சம்பாஷணைக்கு நடுவே எட்டிப் பார்த்தான் நாச்சியப்பன்.

'ஐயய்யோ, பார்த்து விடப் போகிறான்!' என்ற பயத்தில் வில்வாத்திரி வேகமா சுவர் மேல் சரிந்தபடி தரைமேல் நின்று கொண்டிருக்கும் படத்தின் பின்னால் போய் ஒளிந்து கொள்ள நாச்சியப்பன் அதைப் பார்த்து விட்டு விதிர்த்து போனான்.

"தங்கமணி பூஜை அறைக்குள்ள பாம்போ, ஓணானோ நுழைஞ்சிருக்கு!"- என்றவனாய் பயத்துடன் அறைக்குள் கால் எடுத்து வைத்தான்.

வில்வாத்திரியிடமும் விதிர்ப்பு.

"என்னய்யா சொல்றே?" என்ற கேள்வியோடு தங்கமணி பூஜை அறைக்கு வெளியே நின்று கொண்டாள்.

நாச்சியப்பன் பூஜை மேடையைப் பார்த்தான். விபூதி சிந்திக் கிடந்தது. பட முருகன் வேலோடு நாச்சியப்பனை வெறித்துப் பார்த்தான்.

வில்வாத்திரியின் வால் வெளியே தெரிந்து கொண்டிருந்தது.

"மாட்டிகிட்டியா" என்ற கேள்வியோடு அப்படியே பின்வாங்கி ஒரு குச்சியையோ, கம்பையோ அவன் தேட முனைய......

"என்னய்யா ஆச்சு? பாம்பா, ஒணானா?" - தங்கமணி கேட்டாள்.

"இரண்டும் இல்லை. வேற ஏதோ ஒண்ணு. உடும்பு மாதிரி தெரியுது. அங்க எங்கியாவது தடி கிடி இருக்கா பாரு. ஒரே போடு. ஆள் ஆறுமாசமா வீட்டுப் பக்கம் வராம இருந்துட்டேனா? கண்ட கழுதையெல்லாம் உள்ளே நுழைஞ்சிடுச்சி."

என்றபடி சுற்றும் முற்றும் பார்வையை விட்டான்.

வில்வாத்திரி நடுங்க ஆரம்பித்தது. 'கவலைப் படாதேடா நான் பாத்துக்கறேன்' என்று கருடராஜ பட்டத்திரியிடம் இருந்து பதில் வந்தது போல் ஒரு உணர்வு.

தெருவில் கணேசன் தான் மேய்ந்து முடித்திருந்த பண்ணையார் வீட்டு மாடுகளை ஒன்றாகத் திரட்டிக் கொண்டு அப்பொழுதுதான் நுழைந்திருந்தான்.

அதில் ஒரு சண்டிக்காளை திடீரென்று தறிகெட்டு ஓட ஆரம்பித்தது! கூர் தீட்டிய தனது கொம்புகளால் தரையை குத்திக் கிளறி புழுதியை பறக்கவிட்டுக் கொண்டு வீதியில் நடப்போர் மிரண்டு ஓட பாய்ந்து ஓடியது.

கணேசனுக்கு ஒன்றும் புரியவில்லை.

"என்னாச்சு இந்த செங்கோடன் காளைக்கு?" என்று அவன் வாய்விட்டு புலம்பும் சமயம் அது நாச்சியப்பன் வீட்டு வாசலை எட்டி அவன் வீட்டு வராண்டாவிற்குள் நுழைந்தே விட்டது!

வெறி கொண்டு நுழைந்த அதைப் பார்த்து வீல் என்று அலறினாள் தங்கமணி!



அந்த சப்தம் நாச்சியப்பனை ஒரு உலுக்கு உலுக்கியது. தங்கமணி ஏன் அப்படி கத்தினாள் என்று பார்க்க வேண்டி பதைப்போடு பூஜை அறையை விட்டு வெளியே வந்தவன் ஒரு வினாடி ஸ்தம்பித்தான்.

வீட்டிற்குள் நுழைந்து விட்ட அந்த மாடு தனது பெரிய கண்களால் 'புஸ் புஸ்' -என்ற பெருமூச்சோடு தலையை ஒரு இருபது டிகிரிக்கு தாழச்



சரித்தபடி தங்கமணியை ஒரு பார்வையும், நாச்சியப்பனை மறு பார்வையும் பார்த்தது.

ஒரு கட்டுப்பாட்டுக்குள் இல்லாத வெறி அதன் கோபக்கண்களில் தெரிந்தது. முன்னிரண்டு காலில் வலக்காலை அது வளைத்துக் கொண்டு நிற்கும் தோரணையே வயிற்றைக் கலக்கியது.

தங்கமணி மாட்டுக்கு அந்த புறமாய் நின்றபடி அலறிய அலறலின் பயம் குறையாதவளாய் நாச்சியப்பனை பார்த்தாள். "நாச்சி என்னைக் காப்பாத்து... மாடு என்னை முட்டிடப் போவுது..... அது மொறைக்கிற மொறைப்பைப் பாரு... -அவள் படபடத்தாள்.

இதற்குள் கணேசன் தன் மாட்டை பிடிக்கும் முகமாய் நாச்சியப்பன் வீட்டுக்குள் நுழைந்து வராண்டா வாசலில் நின்றவனாய் ஹாலில் நிற்கும் தனது மிரண்ட மாட்டைப் பார்த்து அதைத்தன் பக்கம் திசை திருப்ப ஆரம்பித்தான்.

'இது ஏன் இப்படி மிரண்டு ஓடி இங்கே வந்து நுழைந்தது?' அவனுக்குள் ஆச்சர்யமான ஆச்சர்யம்.

"எலே! மாடு மேய்க்கற லட்சணமாடா இது? பிடிச்சு இழுத்துகிட்டு போடா, பரதேசி..." - நாச்சியப்பன் கணேசனைப் பார்த்து விட்டு சற்றே கடுமையாய் குரல் கொடுக்க, அந்த மாடு அதைக் கேட்டு பயந்தது போல் அப்படியே அங்கேயே அமர்ந்தது!

பிறகு மெள்ள உடம்பை தரையில் கிடத்தியது. அனைத்தையும் ஒரு அதிசயமாய் மூவரும் பார்த்து பிரமித்து நிற்க தரையில் கிடந்த அந்த மாட்டின் வாயண்ணங்களில் நுரை ததும்பத் தொடங்கியது. கண்கள் செருக ஆரம்பித்தன.

கணேசனை பயம் வந்து கவ்வியது.

"எலே என்னடா வேடிக்கை பார்த்துகிட்டு நிக்கிறே? மாட்டுக்கு என்னடா வந்துச்சு? கோமாரி நோய் வந்தாப்பல வெறிக்குதே...." நாச்சியப்பன் கணேசனின் பயத்துக்கு தகுந்த மாதிரி கேள்வி வேறு கேட்க கணேசன் குடைராட்டினமாய் மனது சுழன்று குழம்ப நாச்சியப்பனை ஏதும் புரியாமல் பார்த்தான்.

ஊடே அந்த மாட்டின் துடிப்பு மெல்ல அடங்க ஆரம்பித்தது. பருத்த வயிற்றில் காற்றுப் போக்கு வரத்து குறையத் தொடங்கி ஒரு கட்டத்தில்

வயிற்றின் அசைவு, அப்படியே நிற்க நிலை குத்திய விழிகளோடு அந்த மாடு தனது ஜீவனை காற்றோடு கலக்க விட்டு சவமானது.

"அய்யோ மாடு செத்துப் போச்சே.... என் மாடுங்களுக்கு என்ன வந்துச்சுன்னே தெரியலையே. ஒரு பசு மாடு என்னான்னா அனுமன் காட்டுப் பக்கம் போய் ஒரு மந்திரவாதிக்கு பால் பீச்சிட்டு வருது. ஒரு மாடு என்னான்னா மிரண்டு ஓடிவந்து தரையில விழுந்து சாவுது.

எனக்கு என்ன பண்றதுன்னே புரியலையே...."

கணேசன் வாய்விட்டு வெடித்தான். பயத்திலும் பதட்டத்திலும் இருந்த போதும், தங்கமணி கணேசன் மந்திரவாதியைப் பற்றி சொன்னதைக் கூர்மையாய் கேட்டுக் கொண்டாள்.

மெல்ல நாச்சியப்பனை நெருங்கி அவனோடு சேர்ந்து கொண்டு கணேசனை பார்த்தாள்.

"எலே... என்னடா கதையடிக்கிறே? மந்திரவாதி அனுமன் காடுன்னு ஏதேதோ சொல்றே?" நாச்சியப்பன் கோபமாக கேட்டான். கேட்டுவிட்டு அதிசயமாய் தன் வீட்டுக்குள் நுழைந்து தன்னை வெறித்து விட்டு சவமான மாட்டை பார்த்தான்.

"ஆமா நாச்சியப்பா. இன்னிக்கு மாடு மேய்க்கையில ஒரு காராம் பசு தனியா பிரிஞ்சு கம்பி வேலிய கூட தாண்டிக்கிட்டு அனுமன் காட்டு பக்கம் போயிடுச்சு. நானும், வள்ளியம்மா மவ கனகமயிலும் பின்னாடியே போய் பார்த்தோம்.

காட்டுல ஒரு மந்திரவாதி உட்கார்ந்திருந்தான். பாக்கவே பயமா இருந்துச்சு. அவனோட ஜோல்னா பையுல மண்டை ஓடும் எலும்புத் துண்டுமாய் இருந்துச்சு. அத்தோட அதுக்குள்ள புத்தகம் சிலேட்டை வெச்சுக்கற மாதிரி ஒரு உடும்பை வேற வச்சிருந்தான். அதுவும் என் பசுவோட பாலை குடிச்சுச்சு!"

கணேசனின் பதில் நாச்சியப்பனை பச்சென்று நிமிர்த்தியது. உடும்பு என்று அவன் சொன்னதும் சற்று முன் தான் பூஜை அறையில் அதைப் பார்த்ததும் ஒரு மின்னலாய் நினைப்பில் வெட்டியது.

அதை அடித்துக் கொல்ல ஒரு தடியை தேடி எடுப்பதற்குள் தான் எத்தனை அசம்பாவிதங்கள்? வெறி பிடித்தாற் போல் மாடு நுழைந்து தங்களது கவனத்தை கலைத்து சவமாகிக் கிடக்க, இதோ இப்பொழுது அதே உடும்பைப் பற்றி இந்த மாட்டுக்கார கணேசன் நம்ப முடியாதபடி ஒரு தகவல் வேறு தருகிறான்!

என்ன இதெல்லாம்?

எதற்காக இந்த நிகழ்ச்சிகள்?

மனச் சலனத்தோடு பூஜை அறைப்பக்கம் திரும்பி அங்கே நாசம் துப்புமாய் கிடந்த சுவாமி படங்களைப் பார்த்தவன் அப்படியே குழம்பிப் போய் நின்றான்.

வில்வாத்திரியோ இதுதான் சமயம் என்று அங்கிருந்து தப்பி விட்டிருப்பது பார்க்கும் போதே தெரிந்தது. நாச்சியப்பன் மனதுக்குள் பயம் கலந்த சிந்தனை அலையடிக்கத் தொடங்க, தங்கமணி அவனை நெருங்கி வந்து கணேசன் இருப்பதைக் கூட பொருட்படுத்தாமல் அவனை கட்டிக் கொண்டாள்.

கணேசன் சவமாய் கிடக்கும் மாட்டின் தலைமாட்டில் வருத்தமாய் உட்கார்ந்து விட்டிருந்தான். வாஞ்சையாய் அவன் விரல்கள் அதன் நெற்றியை வருடி அவன் கண்களில் கண்ணீரை திரட்டும் சமயம்....

"நாச்சி இந்த பய சொன்ன அந்த மந்திரவாதி நாம ரயில்வே ஸ்டேஷன்ல இருந்து வர்ற வழியிலே பார்த்தவனாத்தான் இருக்கணும். நீ என்ன நினைக்கிறே?" தங்கமணி கேட்டாள். ஆமோதிக்கிறது நாச்சியப்பன் தலை அசைப்பு. ஆனால் உதடு பிரிந்து வார்த்தைகள் சிதறவே இல்லை.

அப்படியே பூஜை அறைக்குள் நுழைந்து சுவாமி படங்களை தீர்க்கமாய் ஒரு பார்வை பார்த்தான். விபூதிப் பாத்திரம் குலுங்கிக் கிடப்பது தெரிந்தது.

அதில் ஒரு தாயத்து இருந்த விஷயமே நாச்சியப்பனுக்கு தெரியாததால், அப்பன் வயிரவ நாதன் மரணத்துக்குப் பிறகு இப்பொழுதுதான் அந்த பூஜை அறைக்குள் அவன் நுழைந்திருப்பதால் அங்கே வில்வாத்திரியால் நடந்த எந்த ஒரு சம்பவத்தையும் அவனால் யூகிக்கக் கூட முடியவில்லை.

சுற்றும் முற்றும் பார்த்தான். பக்கத்து ஜன்னல் திறந்து கிடக்க, ஜன்னலுக்கு அந்தப் புறமாய் வீட்டின் பக்கவாட்டு தோட்டவெளி தெரிந்தது.

தான் சற்று முன் பார்த்த அந்த உடும்பு அது வழியாய் தப்பியிருக்க வேண்டும் என்பதும் புரிந்தது.

திரும்பவும் ஹாலுக்கு வந்தான். அழுது கொண்டிருந்த கணேசனைப் பார்க்க சற்று பரிதாபமாகவும், சற்று எரிச்சலாகவும் இருந்தது.

"டேய்... அழுவறதை நிறுத்திட்டு ஆக வேண்டியதைப் பாருடா, பண்ணை ஆளுங்களை கூட்டிகிட்டு வந்து சவத்தை வெளியே எடுத்துக்கிட்டு போகப்பாரு, நல்ல மாடப்பா! சாகறதுக்கு என் வீடுதானா கிடைச்சுச்சு?" பெரிதாக சலித்துக் கொண்டான்.

கணேசன் கவலையோடு எழுந்து அகலவும் தங்கமணி நாச்சியப்பன் காதை கடிக்க ஆரம்பித்தாள். தான் பாதியில் விட்டதைச் சொல்ல வாயெடுத்தாள்.

"நாச்சி.... அந்த அரசாங்க அதிகாரி ரொம்ப விவரமான ஆளா இருக்கான். தங்கக் காசு பத்தி அவனுக்கு நெறைய விஷயம் தெரிஞ்சிருக்கு. குடி போதையில கூட தொண்டைக் குழி தாண்டி ஒரு விஷயம் கூட வரலேன்னா பாத்துக்கையேன்.

அவனை மடக்கி விசாரிச்சா நமக்கு நிறைய விசயம் கிடைக்கும். அதுக்குத்தான் நான் இரண்டாயிரம் கேட்டேன்" என்றாள்.

"ரெண்டாயிரத்த கொண்டு என்ன பண்ணலி அவன் கிட்ட விசயத்தை வாங்குவே?" நாச்சியப்பன் செத்துக் கிடக்கும் மாட்டைப் பார்த்துக் கொண்டே கேட்டான்.

"ஒரு நல்ல கேமராவா வாங்கி அவன் என்கிட்ட வரும்போது படம் எடுக்கத்தான்"

"எடுத்து?"

"அந்தப் படங்களைக் காட்டி மிரட்டுனா விசயத்தைக் கக்கிட்டு போறான்."

"யார் படம் எடுக்கப் போறது?"

"நீதான்!"

"நல்லது தங்கம். அப்படியே செஞ்சு பார்ப்போம். நீ சொல்ற விசயத்துல நிறைய உண்மைங்க இருக்கு. நம்ம ஊர்ல தங்கக் காசுங்க இருக்கறது நெஜம்தான். எங்க இருக்குன்னுதான் தெரியலை. எனக்கு கூட அது பத்தி தகவல் கிடைச்சிருக்கு. இந்த சாவிக் கொத்துக்கும் அதுக்கும் கூட ஏதோ சம்பந்தம் இருக்கும்னு நினைக்கிறேன்.



ஆனா..."

"என்னா ஆனா?"

"இந்த மந்திரவாதிப் பயல நினைச்சா தான் குழப்பமா இருக்கு."

"அவனுக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம் நாச்சி?"

"இல்லாமலா உடும்பு என் வீட்டு பூஜை அறைக்குள்ள நுழைஞ்சிருக்கு?"

"நல்லா பாத்தியா அது உடும்புதானா?"

"எனக்கென்ன நொள்ளக் கண்ணா? நல்லா பார்த்தேன். அடிச்ச காலி பண்றதுக்குள்ள இந்த மாட்டு உருவத்துல தடை!"

"கணேசன் சொல்றதை நம்பி குழம்பாதே. எதார்த்தமா ஏதாவது நடந்திருக்கும்."

"இல்ல தங்கம். இதை இப்படியே விடக்கூடாது. மாட்டோட சாவக் கவனிச்சியா? இதுலே ஏதோ மாய மந்திரம் இருக்கு. நா உடும்பை குறி வைச்சு அடிக்க நினைக்கறச்சே வீதியில் போய்க்கிட்டிருந்த இந்த மாட்டுக்கு அப்ப பார்த்து ஏன் வெறி பிடிக்கணும்? இந்த புதிரை உடைக்கணும். நீ வீட்டுக்குப் போ. நா அந்த மந்திரவாதிப் பயல கவனிச்சுட்டு வரேன்."

தங்கமணி உடனேயே 'வேண்டாம்' என்பது போல அவனை வந்து கட்டிக் கொண்டாள்.

பயப்படாதே... பயந்தா காரியம் ஆவாது. கணேசன் ஒளிஞ்சிருந்து அந்த மந்திரவாதியை கவனிச்சுட்டு வந்த மாதிரி நானும் கவனிச்சிட்டு வரேன்"

பேசிவிட்டு கிளம்புவதற்கு ஆயத்தமானான் நாச்சியப்பன்.

இதற்குள் கணேசனோடு நாலு பேர் வெளியே இருந்து உள்ளே நுழைந்திருந்தனர். பண்ணை வேலையாட்கள் என்பது பார்க்கும் போதே தெரிந்திருந்தது.

கூடவே பண்ணையாரும் வந்திருந்தார். ஆனால் நாச்சியப்பன் வீட்டுக்குள் நுழையப் பிரியமில்லாதவராய் வெளியேயே நின்றிருந்தார்.

வேலையாட்கள் இறந்து போன மாட்டின் கால்களை சேர்த்து கட்டி ஒரு மூங்கிலை அதற்குள் விட்டு மாட்டை தூக்கினபடி வெளியே கிளம்ப ஆரம்பித்தனர்.

கணேசன் மிக வருத்தமாய், நடந்து விட்ட

சம்பவத்துக்காக வருந்துவது போல நாச்சியப்பனைப் பார்த்தான்.

நாச்சியப்பன் அதை சட்டையே செய்யவில்லை. அவன் நினைப்பெல்லாம் இருட்டுவதற்குள் காட்டுப் பக்கம் சென்று அந்த மாந்திரீகனை கவனிக்க வேண்டும் என்பதிலேயே இருந்தது.

அதற்கேற்ப கிளம்பியும் விட்டான்.

வெறிச்சோடிக் கிடந்த காட்டின் மேல் தனது முரட்டுப் பாதங்களை வைத்து விட்டு பயத்தோடு நிமிர்ந்து பார்த்தான் நாச்சியப்பன்.

இலேசான உயரத்தில் அனுமன் காடு அவனை ஆச்சரியமாகப் பார்த்தது.

மெல்ல சப்தமின்றி நடக்க ஆரம்பித்தான்.

பாறை பாறையாக பார்த்தபடி, முன்னும், பின்னும் திரும்பி சூழ்நிலைகளை அளந்தபடி மெல்ல மெல்ல நடந்து உச்சிக்கு வந்து பட்டத்திரியை துழாவிற்று அவன் பார்வை.

ஆனால் யாரையும் காணவில்லை. பிரண்டை செடியும், சப்பாத்திக் கள்ளிகளும் மட்டுமே அவனை வெறித்தன.

எங்கே போனான் தன்னிடம் வழி கேட்ட அந்த பட்டத்திரி?

இன்னும் சற்று முன்னேறித் துழாவினால் என்ன?

பயந்தாலும் ஒருவகை தைரியத்தோடு அவன் கால்கள் பாறைகளில் எகிறி நடந்து முன்னேறின. பயங்கரமான மாடு விழுங்கிப் பள்ளம் பக்கமாய் திரும்பி நடந்தவன் அப்படியே ஒரு வினாடி திகைத்து நின்றான்.

ஹோவென்று ஒரு பூதம் போல் வாய் பிளந்து இருண்ட ஆழக் குழி. இலை கொடி மூடி கடூரமாய் காட்சி தந்த அந்த பள்ளத்துக்குள் பட்டத்திரி இறங்கிக் கொண்டிருந்தான்.

தனது இடுப்போடு ஒரு கயிற்றை கட்டிக் கொண்டு மறு முனையை வில்வாத்திரியின் உடம்போடு சேர்த்து கட்டியிருந்தான். வில்வாத்திரியோ மாடு விழுங்கிப் பள்ளத்தின் வெளி விளிம்புப் பாறை ஒன்றின் மேல் பட்டத்திரியின் சுமையோடு தனது கால்களை மிக உறுதியாய் பற்றிக் கொண்டு உட்கார்ந்திருந்தது.

தனது பேரபோலா வடிவ முகத்தை வளைத்து எதிரே எட்டிப் பார்க்கும் நாச்சியப்பனை பார்த்து விட்டு தனது சின்ன தேன் நிற விழிகளால் அவனை வெறிக்கத் தொடங்கியது!




**வி**ல்வாத்திரி தன்னை வெறிப்பதை நாச்சியப்பன் கவனித்த மாதிரி தெரியவில்லை. அவன் கவனம் கயிற்றைப் பிடித்தபடி மாடு விழுங்கிப் பள்ளத்தில் இறங்கும் பட்டத்திரி மேலேயே இருந்தது.

பட்டத்திரி மிக நிதானமாய் இறங்கிக் கொண்டிருந்தான். பாறைகளின் இண்டு இடுக்குகளில் வேர்விட்ட கிளைவிட்ட பூவரச மரத்தின் இலையும், எச்சங்கோரை புற்களின் நீண்ட குஞ்சாமும் பட்டத்திரியின் உடம்பை உரச அதிர்வின்றி சரீரம் கீழே இறங்கிக் கொண்டு இருந்தது.

அந்தகாரமான இருட்டு. அங்கங்கே ஊடுருவி விளையாடும் சூரியக் கதிர்.

அதன் பிரதிபலிப்புகளில் ஒரே எலும்புத் துண்டங்கள்!

பட்டத்திரியின் கைகளில் வலி பரவவே அப்படியே தொங்கும் நிலையில் சற்று ஊசலாடி பாறைச் சரிவின் ஒரு திண்டான மேட்டின் மேல் காலை வைத்து சற்று இளைப்பாறினான்.

பார்வையை கீழே விடுமுன் வலது கரத்தைக் கயிற்றுப் பிடிப்பினின்றும் நீக்கி நெற்றிப் பொட்டின் மேல் கொண்டு சென்று கண்களை இடுக்கினான். உதடுகள் அசைத்து எதையோ முணுமுணுத்தன.

அவன் நெற்றியின் கூட்டுப் புருவத்தின் இடையில் அவனது சகல எண்ணங்களும் ஒன்றாய் வந்து கூடிக் கலைந்து போக ஒரு தீபச் சுடர் மட்டும் இப்பொழுது சுடர்விட்டது!

'ருத்ர காளி... சக்ர தேவி... யட்சநீலி வா... வா....' அவன் ஆழ் மனத்தில் தனது உபாசனை தேவியை நோக்கிய அழைப்புக் குரல்.

அந்தக் குரலுக்கு இசைந்த மாதிரி அவளும் வந்தது போல் ஒரு பரவசம் அவனிடம். அவனுக்குள் அவளது பதில் குரல்!

"இன்னும் முப்பது தப்படி ஆழம்தான் பட்டத்திரி போ.... போ! பிரச்சினை இல்லை. துளியும் சிதையாத எலும்புக் கூடுதான். உன் குருவுக்கு குருவான மாந்திரீகனின் கூடு. மார்பின் மத்திம எலும்பின் மேல் அவன் அணிந்திருந்த சொர்ண வயிரவர் மந்திரத் தகடு பத்திரமாய் இருக்கிறது.

பக்கத்தில் நைந்து போய் கிடக்கிறது குறளி. ஆனாலும் சக்தி போய் விடவில்லை. உன் நிழலோ உடலோ எது பட்டாலும் வந்துவிடும் விபரீதம் ஜாக்கிரதை!

மேலே வில்வாத்திரி விழிப்பாகத் தான் இருக்கிறான். புதிதாய் ஒரு மானிடன் வந்திருக்கிறான். நாச்சியப்பன் அவன் பேர் என்று நாடி சொல்கிறது.

என்ன செய்யப் போகிறாய்? மேலே வரப் போகிறாயா? இல்லை கீழே போய் சொர்ண வயிரவர் தகட்டை எடுக்கப் போகிறாயா?"

யட்சநீலி அவனுக்குள்ளே புகுந்து கேட்ட கேள்வி அவனை விதிர்ப்படைய வைத்தது.

எதற்காக வந்திருக்கிறான் இந்த நாச்சியப்பன்? வில்வாத்திரியை வீட்டில் பார்த்து விட்டதன் விளைவா?

கயிற்றில் தொங்கிக் கொண்டே அவன் கேள்வியிலும் தொங்கிய சமயம், மேலே நாச்சியப்பன் என்னதான் நடக்கிறது என்பதில் ஜரூராக இருப்பது துல்லியமாய் தெரிந்தது.

வில்வாத்திரி அவன் மேல் வைத்த விழியை விலக்கவே இல்லை. ஒரு முழ நீளமே உள்ள அந்த ஜீவன் தன்னைப் போல் பல மடங்கு பருமனுள்ள ஒரு தேகத்தை மிக அசாதாரணமாய் சுமந்தபடி பாறையில் நிற்கும் காட்சியைப் பார்க்கும் போது நாச்சியப்பனால் ஆச்சரியப்படாமல் இருக்க முடியவில்லை.

மாடு விழுங்கிப் பள்ளத்தின் மேல் வைத்த விழிகளை அகற்றாமல் அப்படியே சிலையாய் நின்றுவிட்டவன் மெல்ல பிரக்ஞை பெற்று ஒரு முறை சுற்றும் முற்றும் ஒரு மாறுதலுக்காகப் பார்த்தான்.

பக்கத்தில் அதோ அந்த பட்டத்திரி சுமந்து வந்த ஜோல்னாப் பை!

'அதில் என்னதான் இருக்கிறது?

இந்த பட்டத்திரி கேரளத்து கொல்லத்தில் இருந்து ஒரு உடும்பு சகிதம் இந்த ராஜமங்கலம்



வளை வந்து இப்படி ஒரு படு ஆபத்தான பள்ளத்தில் இறங்கிக் கொண்டிருக்கும் மர்மம் தான் என்ன?'

நாச்சியப்பன் கேள்விகளோடு துணிச்சலாய் அந்த ஜோல்னாப் பையை நோக்கி நகர்ந்தான்.

வில்வாத்திரி அதைப் பார்த்து வேகமாய் நாக்கினை சிருட்டென்று நீட்டி தனது மொட்டை வாலை வளைத்து உடம்பை மிக லேசாய் அசைத்தது. ஆனாலும் கூரிய நகம் வளர்ந்த அந்த உறுதியான கால்களில் துளி கூட அசைவே இல்லை!

நாச்சியப்பன் பையை நோக்கி நகர்ந்த அதே சமயம் பட்டத்திரியும் ஒரு தீர்மானத்தோடு, யட்சநீலி தனக்குள் விடுத்த எச்சரிக்கை உணர்வோடும் கீழே தொடர்ந்து இறங்கத் தொடங்கினான்.

கோரமான இருட்டு!

கால்களை பிசு பிசு என்று சிலந்தியின் கூட்டு வலை வந்து வளைத்தது போல் ஒரு உணர்வு.

சடாரென்று பட்டத்திரியை தாண்டிக் கொண்டு வானம் ஏறத் தொடங்கின, அந்த இருட்டுக்குள்ளே தொங்கிக் கொண்டிருந்த வெளவ்வால்கள்.

பயம் என்றால் வீசை என்ன விலை என்று கேட்கும் பட்டத்திரிக்கே தன்னை விருட்டென்று தாண்டி மேலேறிய வெளவ்வால்களின் வேகம் கண்டு ஒரு வினாடி இதயம் துடித்து அடங்கியது.

"பட்டத்திரி இன்னுமா உன்னுள் தேக பயம் அடங்கவில்லை? இன்னுமா உன்னுள் மனிதர்களுக்கே உரித்தான உணர்ச்சிகளின் பெருக்கு? நீ எல்லாம் பஞ்சாட்சர வலிமை பெறுவதெப்போது?

ஹையக்ரீவனுக்கு சொர்ணாபிஷேகம் செய்து சித்த முக்தி அடையத் துடிக்கும் உன் எண்ணம் ஈடேறுமா? எனக்கு நம்பிக்கை இல்லை. வெளவ்வாலுக்கே பயப்படும் சாதாரண மனிதன்தான் நீ..."

யட்சநீலி தான் அவனை அப்படி பரிகசித்தவள். அவனது உபாசனையால் அவன் அழைக்கும் சமயம் வந்து திருஷ்டியில் அமர்ந்து முக்காலமும் சொல்லும் அவள். சில சமயம் உரிமையோடு பட்டத்திரியை இப்படி கேலி செய்வதும் வாரி விடுவதும் உண்டு.

பட்டத்திரி யட்சநீலி தன்னுள் பரிகசித்தது கண்டு அப்படியே நொறுங்கிப் போனான்.

மாந்திரீக உலகில் நான் போக வேண்டிய தூரம்

இன்னும் பலகாதம் இருப்பதாக அவனுக்குள் ஒரு உணர்வு.

தனது மாந்திரீக உபாசனைகளின் மூல நோக்கமான அந்த சொர்ணாபிஷேகம் சாத்யம் ஆகுமா? அவனுக்குள் வினா!

'சொக்கத் தங்கம் உருகிப் பெருகி குழம்பாகி ஹயக்ரீவன்' எனும் பெயரோடு குதிரை முகம் கொண்ட பெருமானின் திருமேனி மேல் ஓடிப் பரவிட அந்த தேவன் குளிர்வதெப்போது?

அதனால் தான் சித்த முக்தி பெறுவதுதான் எப்போது? கவலை மிகுந்த கேள்விகளைச் சுமந்தவனாய், தன்னுள் பரிகாசமாய் கேள்வி கேட்கும் யட்சநீலியை நினைத்து மனம் நொந்தவனாய் திரும்பவும் கீழே இறங்க ஆரம்பித்தான். ஒரு வினாடி மேலே தனது செயல்களை நோட்டமிடும் நாச்சியப்பனையும் மனது நினைத்துப் பார்த்தது.

யட்சநீலி உடனே அவனுக்குள் சிரித்தாள்.

"பட்டத்திரி... அந்த நாச்சியப்பன் இப்பொழுது உனது ஜோல்னா பையை துழாவிக் கொண்டிருக்கிறான். உனது குரு எழுதி வைத்து விட்டுப் போன அதிமுக்கிய மாந்திரீக குறிப்புகளை எடுத்து வாசித்துக் கொண்டிருக்கிறான். என்ன செய்யப் போகிறாய்? மேலே ஏறப் போகிறாயா? இல்லை தொடர்ந்து கீழே போகப் போகிறாயா?"

யட்சநீலி தனது மனதுக்குள் நின்று மேலே நடப்பதை படம் பிடித்து காட்டிய கேள்வி பட்டத்திரியை பிராண்டியது.

"நீலி நான் முன் வைத்த காலை பின் வைக்கப் போவது இல்லை. அவனை அங்கேயே அப்படியே கட்டி வைத்திரு. அவன் அந்த குறிப்புகளோடு கம்பி நீட்டி விடப் போகிறான். அப்படி அவன் போனால் நீ தொலைந்தாய். எனது மகா கோபத்திற்கும் வீரிய உபாசனைக்கும் நீ பதில் சொல்லியே தீர வேண்டும் ஜாக்கிரதை."

யட்சநீலிக்கு தனக்குள்ளேயே ஒரு எச்சரிக்கையை விடுத்து விட்டு தொடர்ந்து கீழே இறங்க ஆரம்பித்தான். இப்பொழுது மேலும் கீழும் வெறும் இருட்டு மட்டுமே தெரிந்தது.

இடுப்பில் கட்டியிருந்த எண்ணெயில் ஊறிய துணித் திரியை அவிழ்த்து வெளியே எடுத்தவன் அதை கயிற்றைப் பிடித்துக் கொண்டு தொங்கும் நிலையிலேயே பற்ற வைத்தான்.



சடாரென்று முதல் முறையாக அந்த பிராந்தியத்தில் வெளிச்சம் பரவியது.

ஓ! என்ன ஒரு கோரமான இடம்! குவியல் குவியலாய் எலும்புகள். தரைப் பரப்பே தெரியாத செதில் செதிலான மண்ணும் கல்லுமான குகைச் சுவர். எங்கே போய் முடிகிறது என்பதே தெரியாத வளைவுகள்.

கால்களைப் பள்ளத்தின் குகை போன்ற சுவர் பரப்பின் மேல் பதித்துப் பதித்து, எரியும் துணித் திரியை இடது கையால் பிடித்துக் கொண்டும், வலது கையால் கயிற்றைப் பிடித்துக் கொண்டும் சூழலை உற்றுப் பார்த்தவனாய் மேலும் மேலும் கீழே இறங்கியவன் சரியாக முப்பதாவது அடியில் துளி இடம் கிடைத்த ஒரு பாறை மேல் போய் நிற்க, திரியின் வெளிச்சத்தில் சற்றுத் தள்ளி நைந்த நிலையில் காட்சிக்கு அகப்பட்டது யட்சநீலி எச்சரித்த அந்த குறளி!

ஒரு மாந்தீரிகனால் சக்தி பெற்று இறுதி வரை அவனுக்கே தனது சக்திகளால் பலன் தரும் வல்லமை மிகுந்த சாத்தானின் குறளி!

அதே மாந்திரீக இனத்தில் எவர் வந்தாலும் அவருக்குக் கூட கட்டுப்படாமல் தனது சக்தியை அந்தக் குறளி அவருக்கு எதிராக பிரயோகித்து அடக்கப் பார்க்கும் என்பது மாந்தீரீகர்கள் உணர்ந்து வைத்திருக்கும் ரகசியம்.

அந்த வகையில் இரண்டு தலைமுறைக்கும் முன்னாலே தனது குருநாதருக்கு குருநாதராய் திகழ்ந்தவரின் மகா உற்பத்தியே இந்த குறளி.

ஒரு மண்டல வருஷம் எந்தவித மந்திர உரு வேற்றுதலும் இல்லாமல் போய் விட்டபடியால் செத்த சவம் போல ஆகி விட்ட போதிலும் மீண்டும் உயிர் பெற வழி இருப்பதாக யட்சநீலி சொன்னது நினைவுக்கு வர அந்த குறளி பொம்மையை உற்றுப் பார்த்தான் பட்டத்திரி.

திரும்பவும் அங்கே கண்களை மூடி தியானத்தில் மூழ்கி யட்சநீலிக்கு அழைப்பு விடுக்க, அவன் தியானத்தில் பொங்கி எழுந்து வந் தாள் யட்சநீலி.

அவன் அவளிடம் கேள்விகளாய் கேட்க தொடங்கினான்.

"நீலி.... இங்கே எங்கிருக்கிறது அந்த மாந்திரீகனின் கூடு?"

"உனக்கு வலப்பக்கத்தில் பார். சரீரத்தில் உச்சி முதல் பாதம் வரை உருக்குலையாமல் முழுமையாய் அப்படியே ஒரே கூடாய்!"

"மற்ற கூடுகள் ஏன் நொறுங்கிக் கிடக்கின்றன?"

"சாமான்யர்களின் கூடுகளைப் பற்றிய கேள்வி உனக்கு எதற்கு?"

"தெரிந்து கொள்வதில் தப்பென்ன?"

"தற்கொலை செய்து கொண்ட துரதிருஷ்ட ஆவிகளின் கூடுகள் ஒன்றுபட்டு அப்படியே கிடக்காது. சதை அழுகும் சமயம் சிதைந்து போகும். அந்த சரீரங்களை கால பைரவன் பஞ்சபூத நிவேதனமாக்கி விடுகிறான். ஈடேறாத எண்ணங்களை கொண்ட தேகங்களே கலையாத கூடுகள் ஆகின்றன."

"அப்படி ஆனால் அந்த ஆன்மா சாந்தி பெற்றிருக்காதே?"

"நிச்சயமாக. நீ அந்த கூட்டை தொட்டு. அந்த கூட்டில் உயிர் வாழ்ந்த சமயம் அணிந்திருந்த சொர்ண வயிரவர் தகட்டை எடுக்கும் சமயம் அந்த ஆன்மா உனக்கு துணையும் வரலாம், துன்பமும் தரலாம்."

"எதற்காக எனக்குத் துன்பம் தர வேண்டும். அந்த மாந்திரீகரின் நோக்கமே என் நோக்கம். அவர் எதற்காக இந்த ராஜமங்கலம் வந்தாரோ நானும் அதற்கே வந்திருக்கிறேன்!"

"இருக்கலாம், முக்காலத்தையும் உணரப் பார்த்த அவரின் விதி எப்படி முடிந்தது என்பது தெரியுமா?"

"நீயே சொல்"

"சிங்கத் தேவன் என்னும் வீரனால்!" அவனது கட்டாரியால்!"

"சாதாரண மனிதனாலா?"

"ஆம்! விதிப் போக்கு அப்படி அமைந்து விட்டது."

"எனக்கு அப்படி எதுவும் ஆகிவிடாதே. மேலே வந்திருக்கும் நாச்சியப்பன் எனக்கு துயர் தருவானோ?"

"அது அவனை நீ பயன்படுத்திக் கொள்வதை பொறுத்தது"

"எப்படி?"

"அவனும் உன்னைப் போல் தங்கத்தைத் தான்



தேடிக் கொண்டிருக்கிறான்"

"நிஜமாகவா? அவனுக்கு எப்படி ராஜமங்கலத்தில் தங்கம் இருப்பது தெரியும்?"

"வளவள என்று பேசாதே. பேசும் நேரமா இது? ...ஞ்சாட்சரம் ஜெபி. மாந்திரீகன் கூட்டிலிருந்து ...தலில் அந்த தகட்டை எடு. கூடு அசைந்து உன் ...கைகளைப் பிடித்தால் தகட்டை விட்டு விட்டு ...மேலே வந்து விடு. நான் பிறகு வேறு உபாயம் ...சொல்கிறேன்.

மேலே அந்த நாச்சியப்பன் உனது நோக்கம் ...முழுவதையும் இப்பொழுது ஓலைகளால் அறிந்து ...கொண்டு விட்டான். அவனை முதலில் கவனி"

யட்சநீலி அவனை எச்சரித்துவிட்டு ஒதுங்கிக் ...கொள்ள, பட்டத்திரி சுற்றிலும் பார்வையை விட் ...டான். குறிப்பாக வலப்பக்கம்.

...நீலி சொன்னது போலவே ஒரு பாறை மேல் ...ப்பது டிகிரி சரிந்த நிலையில் துளியும் உருக் ...குலையாத, அந்த மாந்திரீகனின் கூடு தென் ...பட்டது.

மார்பின் மேல் மூன்றாவது வரிசை எலும்புக்குள் ...ருத்திக் கொண்டு கிடந்தது அந்த தகடு! அந்த ...தகட்டை தாங்கியிருந்த கயிற்றுப் புரிகள் இற்று ...மண்ணோடு மண் ஆகிவிட்டிருந்தன.

மெல்ல பட்டத்திரி அந்த கூட்டை நெருங்கி ...தீ நெருப்பினால் ஊன்றிப் பார்த்தான். பிறகு பஞ் ...சாட்சரம் ஜெபித்தபடி கைகளை நீட்டி தகட்டை ...தொட்ட அதே வினாடி. அந்த கூட்டிற்கே உயிர் வந் ...தது போல, அந்த எலும்புக் கூட்டின் வலது கரத்து ...எலும்புகள் சட்டென்று உயர்ந்து பட்டத்திரியின் ...கையைப் பிடித்தன!




பட்டத்திரிக்கு சட்டென்று உடம்பு வியர்த்தது. யட்ச நீலி சொன்னது போலவே உடனடியாக அந்த தகட்டை பற்றிய கைகளை நழுவ விட அந்த எலும்புக் கூட்டு கைகளும் கூட தனது பிடிப்பை கை விட்டது.

"பட்டத்திரி.... போதும் சட்டென்று மேலேறு. அந்த ...ச்சியப்பன் கிளம்பி விடப் போகிறான்!"

...யட்ச நீலியிடம் இருந்து அவசர அழைப்பு.

பட்டத்திரி அதற்குத் தோதாக கயிற்றை திரும்பவும் இறுக்கமாய் பிடித்து அதை இலேசாய் சுண்டிவிட அந்த சுண்டுதலின் அதிர்வு மேலே பாறை மேல் அமர்ந்திருக்கும் வில்வாத்திரி வரை போனது.

வில்வாத்திரியும் அது புரிந்தது போல் தனது கால்களை அசைத்து பாறை மேல் நடக்கத் தொடங்கியது.

அங்குலம் அங்குலமாய் அது கயிற்றை இழுப்பது தெரிந்தது. பட்டத்திரியும் முனைந்து கயிற்றைப் பிடித்து வேகமாக ஏறினான். ஜோல்னாப்பை அருகில் அதற்குள் கிடந்த ஓலைகளை வேகமாய் வாசித்துக் கொண்டிருக்கும் நாச்சியப்பனோ ஓலைகளின் இறுதிப் பக்கத்தை நெருங்கியி ருந்தான். பட்டத்திரி மேலேறி வந்து கொண்டி ருப்பது தெரியாமல்!

ஓலையின் அந்த இறுதி பக்க விஷயம் மிகக் கடூரமாய் இருந்தது.

'தேவாதி தேவன் ஹையக்ரீவன் அவன் சாது ஜனப்பிரியன். வரம் தருவதில் வள்ளல். ஐம்புலன் கருக்கி உள்ளொளி பெருக்கி விரதம் காத்து தன்னை அணுகுவோர் துன்பம் துடைப்பதில் அவனே நிகரற்றவன்.

துஷ்ட தேவதைகளை தொழுவது போல, அவைகளை கட்டுப்படுத்த நிஷ்டை புரிவது போல சிவனை அணுகத் தேவையில்லை.

இவன் ஆலய வாசன். ஆயினும் ரௌத்ர உபாசனை இவன் மேல் புரிபவர்களை இவன் விரைந்து அனுக்கிரகிக்கிறான்.

ரௌத்ர உபாசனை புரியும் முன் பஞ்சாட்சர சித்தி பெற்றிருக்க வேண்டும். பஞ்சாட்சர சித்திக்கும் முன்பாக பட்சி வசியம், ஸ்திரி வசியம், மானுட மனோவசியம் முதலான சித்துக்களை கைவரப் பெற்றிருக்க வேண்டும்.

அதற்காக தேக சவுந்தரியத்தையே இழக்க நேரிடலாம். மண்டலமண்டல காலம் மயான வேட்டை ஆட வேண்டி வரலாம்.

துர்கால பிறவிகளின் தற்கொலை ஆன்மாக்களை கொண்டு நல்ல காரியங்கள் செய்து அவைகளுக்கு விடுதலை பெற்றுத் தரவேண்டி வரலாம்.



இடையே சித்தம் சுவாதீனம் இழக்காதபடி
இருக்க வேண்டும். ஒருக்காலும் பெண்ணாசை
தலை காட்டக் கூடாது. உடம்பின் ஒரு பொட்டுக்
ட இழக்கக் கூடாது.

இவ்வளவெல்லாம் செய்தவன் ஹயக்ரீ
னுக்கு சொர்ணாபிஷேகம் செய்தால் கேட்டது
கிடைக்கும். நினைத்தது நடக்கும். சித்த முக்தி
அவனுக்கே.......

அந்த சொர்ணாபிஷேக தங்கம் ராஜமங்கலத்து
சான வடக்கில் உள்ளது.

எண்ணிரண்டு பதினாறு சக்திகளின் பலம்
க்க காவலில் உள்ளது.

கிட்டச் செல்வதே கடினம். அதைத் தொட்டு
டுக்க ஹையக்ரீவன் அனுக்கிரகம் வேண்டும்.
ரு ராஜ அம்ச சவத்தின் வாயில் மூடி ஊற
வைக்கப்பட்ட நூற்றி எட்டு மிளகுகளை பதினாறு
த்திக்கு வழங்கிட அவை சாந்தி பெற்று வழி
டும்.

இல்லாவிட்டால் வலது மார்பிலும், இடது மார்
லும் ஒரு சேர மச்சம் உள்ள சாமுத்திரிகா லட்ச
ம் மிகுந்த பெண்ணைக் கொண்டு சாதாரண
ய் அதை எடுக்கலாம். மேலும்....

ஓலையின் பால் வைத்த விழிகளை அகற்றாமல்
ஷயத்தைப் படித்து விதிர்ப்படைந்து கொண்டே
ந்த நாச்சியப்பன் மேலும்... என்ற கட்டத்தை
டைந்த சமயம் பட்டத்திரியின் நிழல் அவன்
ல் விழுந்தது.

திடுக்கிட்டு நிமிர்ந்தான் நாச்சியப்பன்.

பட்டத்திரி முகத்தில் கர்ண கடூரம்.

நாச்சியப்பனிடம் உதறல்.

"எங்கே வந்தே... யாரைக் கேட்டு இதை
பல்லாம் எடுத்துப் படிக்கிறே? நான் யார்னு தெரி
மா உனக்கு?" பட்டத்திரி அப்படி கேட்கவும்
ச்சியப்பன் மிடறு விழுங்கினான். எப்படி பதில்
சால்ல ஆரம்பிப்பது என்பது தெரியாமல் விழிகள்
றிக்க பட்டத்திரியைப் பார்த்தான்.

அந்த பார்வையில் என்னை ஒன்றும் செய்து
டாதே என்னும் கெஞ்சல், ஊடே ஓடி வந்து
டத்திரியின் தோள் மேல் விறுவிறு என்று ஏறி
ச்சியப்பனைப் பார்த்து தன் நாக்கை கோபமாக
டி முறைத்தது வில்வாத்திரி.

"ஆமா... உனக்கும் தங்கம் பத்தி தெரியும் போல இருக்கே?" - பட்டத்திரியிடம் மீண்டும் கேள்வி. நாச்சியப்பனிடமோ அந்த கேள்வி ஒரு குலுக்கே குலுக்கி விட்டது.

"அது உனக்கு எப்படித் தெரியும்?" மெல்ல வாயைத் திறந்தான் நாச்சியப்பன்.

"சாதாரண மனுஷனைப் பார்த்துக் கேட்க வேண்டிய கேள்வியை சர்வ சக்திகளை அடையத் துடிக்கற என்னைப் பார்த்து நீ கேட்கலாமா?" பட்டத்திரியிடம் கேள்வி இடி போல் பிறந்தது.

நாச்சியப்பனிடமோ அசாத்திய மவுனம். தனது வறட்டு தைரியம் வசமாக மாட்டிக் கொண்டு விட்டது போல் ஒரு பயம்.

"உனக்கு இந்த ஊர்ல தங்கம் இருக்கற விஷயம் எப்படித் தெரியும்?" -திரும்பவும் பட்டத்திரியிடம் அதட்டுவது போல் கேள்வி. பதில் சொல்லா விட்டால் விடமாட்டேன் என்பது போல் அமைந்து விட்ட அந்த கேள்வியின் தொனிப்புக்கு நாச்சியப்பனிடம் ஒரு பொய் பதிலாக பிறக்க ஆரம்பித்தது.

"இந்த ஊர்ல எங்கையோ ஒரு இடத்துல தங்கம் நிறைய இருக்குங்கற விஷயம் ஊர்ல நிறைய பேருக்கு தெரியும். எல்லாரும் அதை வதந்தி மாதிரி நினைக்கிறாங்க. தீர்மானமாக இருக்குன்னு யாரும் நம்பலை...."

"ஆனா நீ மட்டும் தீர்மானமா இருக்குன்னு நம்பறே! உண்மை தானே?"

"ஆமா!"

"எதை வெச்சு?"

"அந்த நம்பிக்கைக்கு காரணம் சொல்ல என்னால முடியாது. எனக்கு தெரியாது. ஆனா நான் நம்பறேன்."

"சரி தங்கத்தை தேட வேண்டியவன் என்னை தேடி எதுக்கு வந்தே?"

"உன் உடும்பு என் வீட்டுக்கு எதுக்கு வந்தது?" -நாச்சியப்பன் இப்படி கேட்கவும் பட்டத்திரி சற்று பின் வாங்கி தயங்கினான். அதே வேளை நாச்சியப்பன் ஏகமாய் உண்மைகளை மறைத்து சாமார்த்தியமாய் பேசுவதும் புரிந்தது. இனி மேல் எதையும் மறைக்காமல் பேசிவிடுவது என்ற முடிவிற்கு வந்தான்.

"உன் வீட்லதானே எனக்குத் தேவையான தாயத்து இருந்தது?"

"தாயத்தா, எனக்குத் தெரியாமலா?"

"ஆமாம். உன் அப்பா வயிரவ நாதன் என் குருநாதர்கிட்ட வேண்டி வாங்கிய, ஆவிகளை கட்டுப்படுத்தற எந்திரத் தாயத்து!"

"என் அப்பா தாயத்தை வாங்கி வெச்சிருந்தாரா? இதெல்லாம் உனக்கு எப்படி தெரியும்?"

"இது மட்டும் இல்ல. நான் இப்போ சில நிமிஷம் கண்மூடி உட்கார்ந்து தியானம் பண்ணினா என் யட்ச நீலி நீ இங்க வருவதற்கு முன்பு வரை என்ன செஞ்சேங்கறதை கூட சொல்லிடுவா. என் உபாசனைத் தேவதை தேவி காயத்திரியின் அம்சம்!"

"தயவு செய்து புரியும்படி சொல்லு. என் அப்பா எதுக்கு ஆவிகளை கட்டுப்படுத்தற தாயத்தை வாங்கணும்?"

"நீயும் நானும் தேடற தங்கத்தை எண்ணிரண்டு பதினாறு சக்திகள் காவல் காக்கிறதா சுவடி ஓலைக்குறிப்பு சொல்றதை படிச்சிருப்பியே...."

"ஆமா!"

"அந்த பதினாறு சக்திகளை வெற்றி கொள்ளத்தான்...."

"என் அப்பா வெற்றி கொண்டாரா? தங்கம் அவருக்கு கிடைச்சதா? உன் சக்தியால் கண்டறிஞ்சு சொல்லு...."

"வெறும் எந்திரத் தாயத்துனால மட்டும் அந்த சக்திகளை வெற்றி கொள்ள முடியாது நாச்சியப்பா. அதற்கு மேலும் பல சக்திகள் தேவை. அது உன் அப்பாகிட்ட இல்லே. அதனால தங்கத்தை அடையற முயற்சியில் பாதி வெற்றி தான் உன் அப்பாவுக்கு... மீதியை அவர் அடையும் முன்னே அவன் விதி முடிஞ்சு போச்சு!"

"எங்கியோ இருக்கற ஒரு மலையாளியான உனக்கு இதெல்லாம் எப்படித் தெரியும்?"

"உன் அப்பாவுக்கு எந்திர தாயத்து செய்து கொடுத்ததே என் குருநாதர் ஸ்ரீ சக்ர பட்டத்திரி தானே?"

"இப்போ உன் குரு எங்கே?"

"அவர் சமாதியாயிட்டார். அவருடைய இறுதி ஆசை ஈடேறாமலே போயாச்சு! குடவல்லித்

தோட்டத்து பட்டத்திரி கோட்டம் கேரள மலை நாட்டின் பிரதான கோட்டமாகும்.

ஆன்மீக உலகத்தின் அவ்வளவு ரகசியங்களையும் பிரபஞ்ச மாயங்களையும் கண்டறிந்த சர்வ சித்தி பெறுவது தான் அந்த கோட்டத்து பட்டத்திரிகளின் நோக்கம்.

பட்டத்திரி என்பது ஒரு உயர்ந்த சொல், பிராம்மண பாரம்பரியத்தை குறிக்கிற சொல். எங்க குரு வழியில யாரும் போக முடியாத, போகக் கூடாத பாதையில என் குருவுக்கு முந்தைய பட்டத்தை சேர்ந்த குருவான பாஸ்கர பட்டத்திரி போனார். சுதந்திரப் போராட்ட காலத்துல வாழ்ந்தவர் இவர். மாந்திரீகம் பற்றி தெரிஞ்சு வெச்சுக்கறது மட்டுமே. எங்க கோட்ட நோக்கம். அதைக் கண்டு வித்தைகள் புரிய கூடாதுங்கறது எங்க கோட்பாடு கட்டுப்பாடு.

அதை மீறினார் பாஸ்கர பட்டத்திரி. காரணம்? ராஜ மங்கலத்து தங்கம்!" - கருட ராஜபட்டத்திரி சரியான இடத்தில் இடைவெளி விட்டு பேச்சை நிறுத்திவிட்டு திரும்பவும் ஆரம்பித்தான்.

"ஒருநாள் உபாசனை சமயம், ஆஞ்சநேய மூர்த்தி பாஸ்கர பட்டத்திரிக்கு காட்சி தந்தார். ஹயக்ரீவனுக்கு சொர்ணாபிஷேகம் செய்தால் சர்வசித்தியும் உடனடியா சித்திக்கும்னு வழி காட்டினார்.

சொர்ணாபிஷேகம்னா என்ன சும்மாவா? தோலா தோலாவா தங்கம் வேணுமே? அதுவும் சொக்கத் தங்கமா ஒரு மண்டல வருஷமாவது மனிதர்கள் உபயோகப் படுத்தியிராததாய் இருக்கணும். பாஸ்கர பட்டத்திரி எப்படியாவது தனது பட்ட காலத்தில் சொர்ணாபிஷேகம் செய்து சர்வ சித்தியை அடைஞ்சிடணும்னு முடிவு பண்ணினார்.

குடவல்லி தோட்டத்துல பட்டத்திரிகளுக்கான கட்டுப் பாடுகளை மீறினார். பூஜை, புனஸ்காரம், உபவாசம், ஆராதனை, தியானம்னு சத்வ மயமாக போக வேண்டியவர். மயானம், மண்டல விரதம், ஆவி ராஜ்யம், அனுஷ்டானம்னு ரவுத்ர மயமா மாறினார்.

இருந்தும் பலனில்லை. இதோ இந்த மாடு விழுங்கிப் பள்ளத்துல அவரோட சிதையாத எலும்புக்கூடு ஆன்ம சாந்தி பெற வழியில்லாமல் தவிச்சுக்கிட்டு இருக்கு!"

அதற்கு அடுத்து வந்தவர் தான் என் குருவான ஸ்ரீ சக்ர பட்டத்திரி. தன் குரு பாஸ்கர பட்டத்திரிக்கு ஏற்பட்ட கதியை தனது சக்தியால தெரிந்து கொண்டு எச்சரிக்கையாகி விட்டார்.

ஒரு நாள் என் குருவின் கனவுல பாஸ்கர பட்டத்திரியின் ஆவி வந்து தனக்கு விடுதலை வாங்கித் தருமாறு கெஞ்சினது. தன் ஆவி தற்சமயம் பல ஆவிகளுக்கு மத்தியில மாடு விழுங்கிப் பள்ளத்திலே வசிப்பதாகவும் ஆவி ராஜ்யத் துக்குள்ளே நுழைய தடை இருப்பதாகவும் சொன்னது.

என் குரு, பாஸ்கர பட்டத்திரியோட ஆவிக்கு சமாதானம் தர முயற்சி பண்ணினார். அதற்காக ராஜ மங்கலம் வந்தப்போ தான் உன் அப்பா வயிரவ நாதனோட பழக்கம் ஏற்பட்டது. வயிரவ நாதனுக்கு யாரோ இந்த ராஜ மங்கலத்து தங்கம் பற்றி கடிதம் எழுதியிருந்த சமயம் அது!"

பட்டத்திரி தனது வெகு நீளப் பேச்சில் நடந்த நிஜங்களை வரிசைப்படுத்தி சரியாக நாச்சியப்பன் எடுத்து படித்த ஜாதக நோட்டு கடிதம் வரை வந்து விட்டு அவன் முகத்தை பார்த்தான். நாச்சியப்பன் அதைக் கேட்டு வாயைப் பிளக்காத குறையாக விதிர்த்திருந்தான்.

"உன் அப்பாவும் தங்கம் பற்றி தனக்கு கடிதம் வந்த விஷயத்தை என் குருநாதர்கிட்ட சொல்ல என் குருநாதர் ஒரு முடிவுக்கு வந்தார்.

அதன்படி தங்கம் பற்றி உன் அப்பாவுக்கு கடிதம் எழுதின ராமநாதன்கிற நபரோட சேர்ந்து உன் அப்பாவும் என் குருவும் தங்கத்தை தேடி எடுக்க வேண்டியது.

தங்கம் கிடைத்த உடனே அதை உருக்கி சொர்ணாபிஷேகம் செய்து சர்வசித்தியை அடைஞ்ச மறுகணமே அவ்வளவு தங்கத்தையும் உன் அப்பாவுக்கும், அந்த ராமநாதனுக்குமே கொடுத்து விடுவதுங்கற முடிவுக்கு என் குரு வந்தார்.

அதற்கு முன்னால பாஸ்கர பட்டத்திரியோட ஆவிக்கு விடுதலை வாங்கித்தர அவர் மாடு விழுங்கிப் பள்ளத்துல இறங்க வேண்டியிருந்தது. அந்த பள்ளத்துல இறங்கி பாஸ்கர பட்டத்திரியோட எலும்புகளை எடுத்து சாந்தி

கழிச்சு சாம்பலாக்கி தாமிரபரணியோட கலக்க விடணும்.

இப்படி செய்தா தன்னோட தங்கம் எடுக்கற முயற்சிக்கு பாஸ்கர பட்டத்திரியின் ஆவியும் உதவும்னு நம்பினார். ஆனா பாஸ்கர பட்டத்திரியின் ஆவி தங்கம் விஷயமா வாயே திறக்கலை. என் குருவான ஸ்ரீ சக்ரபட்டத்திரிக்கு கோவமான கோவம் வந்தது.

பாஸ்கர பட்டத்திரியின் ஆவியை அடக்கி தன் வசப்படுத்த முடிவு பண்ணினார். ராஜமங்கல மயானம் அதற்கு உதவி செய்தது.

ஒரு அமாவாசை இரவு முழுக்க புதைக்கப்பட்ட ஒரு கன்னிப் பிணத்தை கட்டிப் பிடித்தபடி யார் படுத்திருந்தாலும் அவர்களுக்கு அந்த பிணத்தின் ஆவி அடி பணிந்தே தீரும்.

என் குருவும் அந்த மாதிரி செய்ய மயானத்துக்குப் போனார்" கருடராஜ பட்டத்திரி சொல்லச் சொல்ல நாச்சியப்பன் அசைவற்ற சிலை யாக மாறி கேட்டுக் கொண்டிருந்தான்.




கருட ராஜ பட்டத்திரி மேலும் தொடர்ந்தான். அமாவாசை இரவு முழுக்க மயானத்தில் ஒரு கன்னியின் பிணத்தை ஒருவன் கட்டிப் பிடித்தபடி படுத்திருந்தால் அந்த பிணத்தின் ஆவி அவனுக்கு கட்டுப்படும் என்பதால் அந்த முயற்சியில் ஈடுபட்ட ஸ்ரீ சக்ர பட்டத்திரியின் திட்டத்துக்கு இடையூறுகள்...

ஏனெனில் அங்கு ஒரு மயான சூலி காவல் காக்கிறா. அவளை மீறி யாரும் மயான பூஜையோ, உபாசனையோ அல்லது இது போல ஆவி வசியமோ செய்ய முடியாது.

அப்படி யாரும் செய்ய முயற்சி செய்தா மயான சூலியோட கடும் கோபத்துக்கு ஆளாக வேண்டி வரும். ரத்தப் பசி எடுத்து அலையற அவளோட கோரப் பசிக்கு இரையாயிட வேண்டியிருக்கும்.

ஆகையினால் மயான சூலியோட பசிக்கு இரையா, ஒரு ரத்தப் பானையை உண்டாக்கி அதுல மிருக ரத்தத்தை வெச்சு அவளை சமாதானப் படுத்திட்டு, ஒரு கன்னிப் பொண்ணோட



பிணத்தை கட்டிப் பிடித்தபடி என் குருநாதர் படுத்துக் கிடக்கவும் அந்த பிணத்தோட ஆவி என் குருநாதருக்கு கட்டுப்பட்டது!

அந்த ஆவியைக் கொண்டு பாஸ்கர பட்டத்திரியின் ஆவியை பிடிக்க என் குரு முயற்சி செய்தார். இது ஒரு புறமிருக்க, மறுபுறம் தங்கம் தேடும் முயற்சி தொடர்ந்தது. ஆனா தங்கம் கிடைக்கலை. அதற்குப் பதிலா பெண்ணோட ஆவி பாஸ்கர பட்டத்திரியின் ஆவியை மயக்கி இழுத்து வந்திருந்தது.

பட்டத்திரியின் ஆவியை என் குரு ஒரு சுரைக் குடுக்கைக்குள் போட்டு அடைத்து கொடுமைப் படுத்தவும் அது தான் தங்கத்தை கஸ்தூரிங்கிற சாமுத்திரிகா லட்சணம் உள்ள பெண்ணைக் கொண்டு தேடி எடுத்த விஷயத்தைச் சொன்னது!

நீ கொஞ்சம் முந்தி படிச்சியே சுவடிக் குறிப்பு... அதுல சொன்ன மாதிரி இரண்டு மார்பிலும் மச்சம் உள்ள பெண் அவள்!

இப்ப இருக்கிற உன் ஊர் பண்ணையாருக்கு அத்தை முறையாகணும் இந்த பெண். தங்க பாத்திரங்களை நேரில் பார்த்ததும் அல்லாமல், அந்த தங்கத்தை நிர்வாணமா நின்னு தன் மேலேயே அணிந்து கொண்டு பவுர்ணமி பூஜையில் பங்கு கொண்டவ இவ.

அந்த சந்தர்ப்பத்துல தான் பாஸ்கர பட்டத்திரியை, கஸ்தூரியைத் தேடி வந்த சிங்கத் தேவன் தன் கட்டாரியால கொன்னுட்டான்.

எப்படியோ பாஸ்கர பட்டத்திரியின் ஆவி வழி காட்ட என் குருவான ஸ்ரீ சக்ர பட்டத்திரி, உன் அப்பா மற்றும் ராமநாதன் அந்த தங்கக் காசுகள் நிரம்பி வழியற இடத்தை அடைஞ்சாங்க.

எண்ணிரண்டு பதினாறு சக்திகளுக்காக கையில், ஒரு ராஜ அம்ச சவத்தின் வாயில் ஊற வைக்கப்பட்டிருந்த நூற்றி எட்டு மிளகுகள் தயாரா இருந்தது. அது மட்டுமா?

என் குரு மயான நிஷ்டை செய்து உருவாக்கிய ஆவி வசிய தாயத்து வேற. அதை உன் அப்பா தன் கைகள்ல கட்டியிருந்தார். தங்கப் பாத்திரங்களை நெருங்கப் போன அந்த கடைசி வினாடியில், பாஸ்கர பட்டத்திரியின் ஆவியை அடக்கியிருந்த சுரைக் குடுக்கை எதிர்பாராத விதமா கீழே விழுந்து உடைய பட்டத்திரியோட ஆவி அங்கு இருந்து

பறந்தது.

அது மட்டுமா?

அந்த வல்லமை மிருந்த ஆவி ராமநாதனோட சித்தத்தை குழப்பி சித்தபிரமைக்கு உள்ளாக்கி டிச்சு. ஆனா உன், அப்பாவையோ, என் குருவான ஸ்ரீ சக்ர பட்டத்திரியையோ நெருங்கி எதுவும் பண்ண முடியலை. ஏன்னா ஆவி வசிய தாயத்து தடை செய்தது.

ஆனாலும் மேலும் முன்னேறியும் தங்கத்தை அவங்களால அடைய முடியலை. அன்றைக்கு அத்தோட திரும்பிட்டாங்க. நடுநடுவே பாஸ்கர பட்டத்திரியின் ஆவி வந்து மிரட்டிக்கிட்டே இருந்தது.

என் குரு பஞ்சாட்சர சித்திகளை அடைஞ்சு மிரட்டற ஆவிகளை ஒரு வழி பண்ணுவதற்காக குடவல்லி தோட்டத்து பட்டத்திரி கோட்டத்துக்கே திரும்பி விட்டார்.

உன் அப்பாவும் காலம் வரட்டும்ங்கற மாதிரி அமைதியாயிட்டார். இடையிலையே இரண்டு பேரோட விதியும் முடிஞ்சுப் போச்சு. ஆனா மூன்றாவதா சித்த பிரமை பிடிச்ச ராமநாதன் மட்டும் இன்னும் சாகலை. சென்னையில் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் இப்பவும் சித்த பிரமை நீங்காம அல்லாடிக்கிட்டுத்தான் இருக்கார். அவரோட பிரமை நீங்கினா பாதி காரியம் முடிஞ்சிடும்.

பட்டத்திரி தனக்குத் தெரிந்த உண்மைகளை ஒரு பூச்சரத் தொடுப்பு போல் வரிசையாய் சொல்லி ராமநாதன் இன்னமும் உயிரோடு, ஆனால் சித்தப் பிரமையோடு இருப்பதாக கூறிவிட்டு சற்றே ஆயாசமாக பெருமூச்சு விட்டான்.

நாச்சியப்பனிடமோ அந்த மூச்சு விடும் சத்தம் கூட இல்லை. அத்தனை தூரத்திற்கு பட்டத்திரி கூறிய நிஜங்களில் உறைந்து கல்லாகி விட்டிருந்தான்.

"என்ன நாச்சியப்பா! பேசக்கூட மாட்டேங்கற. நான் சொன்னது உனக்கு புரியலையா, இல்லை குழப்பமா இருக்கா?"

"இல்ல பட்டத்திரி... நீ சொன்னதெல்லாம் நிஜம் தான். நீ சொன்ன அந்த கடிதத்தை நான் நேத்துதான் பார்த்தேன். அதை எழுதினது கூட ராமநாதன்ங்கற நபர்தான். யார் இந்த ராமநாதன்னு நான் புரியாம தவிச்சுக்கிட்டிருந்தேன். இப்ப நீ

சொல்லவும் தெரிஞ்சு போச்சு. அது சரி நீ எதுக்கு இந்த மாடு விழுங்கிப் பள்ளத்துல இப்ப இறங்கினே?"

நாச்சியப்பனும் எதையும் மறைக்காதபடி பேசி சினேகமாகக் கேள்வியைக் கேட்கவும் பட்டத்திரிக்கு அது மிகவும் பிடித்துப் போனது.

தனது முயற்சிக்கு உறுதுணையாய் ஒரு முரட்டு மனிதனின் துணை கிடைக்கப் போகிறது என்பது போன்ற சந்தோஷம் பட்டத்திரி முகத்தில் பரவியது.

"நாச்சியப்பா! உன் கேள்விக்கு நான் பதிலை பிறகு சொல்றேன். அதுக்கு முன்னால சில விஷயம்.... " பட்டத்திரி கேட்டுவிட்டு நாச்சியப்பன் முகத்தில் தன் கண்களை ஊன்றினான். நாச்சியப்பனும் என்ன என்பது போல் பார்க்க பட்டத்திரி மிக நிதானமாக அந்தக் கேள்வியைக் கேட்டான்.

"உன் முயற்சியும் தங்கத்தைத் தேடறதுதான். என் முயற்சியும் தங்கத்தை தேடறதுதான். நாம ஏன் ஒண்ணா சேர்ந்து முயற்சி செய்யக்கூடாது?"

நாச்சியப்பன் முகத்தில் அதை ஆமோதிப்பது போல் மகிழ்ச்சி பரவியது. அதைக்காண பட்டத்திரியிடமும் பரவசம்.

"எனக்கு அந்த தங்கம் சொர்ணாபிஷேகம் வரை பயன்பட்டா போதும். அப்புறம் அவ்வளவும் உங்களுக்கே. நான் அடையத் துடிக்கிற சர்வ சித்தியைவிட அந்த தங்கம் எனக்குப் பெரிசில்ல! சர்வசித்தியை நான் அடைஞ்சிட்டா ஒரு தங்க மலையையே கூட என் வல்லமையால் உருவாக்க முடியும். நீ என்ன சொல்றே?" -பட்டத்திரி பரவசம் கலையாமல் கேட்கவும் நாச்சியப்பன் முகம் பூப்பூத்தாற் போல் சிரித்தது.

"பாஸ்கர பட்டத்திரியால முடியாம போன செயல், என் குரு ஸ்ரீ சக்ர பட்டத்திரியாலயும் செய்து முடிக்க முடியாம போன செயல், இப்ப இந்த கருடராஜ பட்டத்திரியால தான் நடக்கணும்னு அந்த தேவன் விரும்பறான். இந்த முறை நான் தோல்வி அடையப் போவதே கிடையாது." - பட்டத்திரி உரக்கக் கத்தினான். ஆள் நடமாட்டமே இல்லாத அந்த அனுமன் காட்டு பாறை சுவர்களில் அந்த கத்தல் மோதி எதிரொலித்தது.

"நாச்சியப்பா! உன்னைப்

நல்லாத் தெரியும். நான் ஊரை விட்டு கிளம்பும் போதே என் யட்ச நீலி எனக்கு குறி சொல்லிட்டா, நீ போகப் போற இடத்துல உன் முயற்சிக்கு உறுதுணையா ஒரு ஆத்மா கிடைக்கும்னு. நீயும் கிடைச்சுட்டே!" - பட்டத்திரி தனது சந்தோஷத்தை வார்த்தைகளாக்கி விட்டு அர்த்த புஷ்டியோடு சிரித்தான். நாச்சியப்பனுக்குள்ளேயோ ஏகப்பட்ட சந்தேகங்கள்.

"பட்டத்திரி நீ எதற்கு இந்த மாடு விழுங்கி பள்ளத்துல இறங்கினே? தங்கம் இதுக்குள்ளேயா இருக்கு?" -அவனது சந்தேகத்தின், முதல் கேள்வி இது. பதில் பட்டத்திரியிடம் உடனே வந்தது.

"தங்கம் எங்க இருக்குன்னு தெரியாது. இந்தப் பள்ளத்துக்குள் பாஸ்கர பட்டத்திரியோட எலும்புக்கூடு இருக்கு. அந்தக் கூட்டு மார்பு மேலே பாஸ்கர பட்டத்திரி தவமிருந்து, உபவாசம் இருந்து உருவாக்கின சொர்ணலிங்கத் தகடும் இருக்கு...."

"பாஸ்கர பட்டத்திரியோட ஆவி தான் அமைதி இல்லாம அலையறதா சொன்னியே.."

"ஆமா... தங்கப் புதையல் பற்றி உண்மைகள் தெரிஞ்ச ஒரே ஆவி அதுதான். ஏனோ அது உன் குருவான ஸ்ரீ சக்ர பட்டத்திரிக்கு வழிகாட்ட விரும்பலை. எனக்கும் காட்டும்னும் நான் நம்பலை!"

"அப்ப எதுக்கு பள்ளத்துல இறங்கினே?"

"அந்த தகட்டை என் வயப்படுத்திக் கொள்ள, அது மட்டுமில்லே, பாஸ்கர பட்டத்திரியோட ஆவி எனக்கு தொல்லை தராம இருக்க, அதோட எலும்புகளை எரிச்சு சாம்பலாக்கிடலாம்னு நெனச்சிருந்தேன்.

"தகட்டை எடுத்து எலும்பை சாம்பலாக்கிட்டியா?"

"இல்லை. அதுக்குள்ள நீ வந்து காரியத்தை கெடுத்துட்டே..."

"அப்படின்னா, நீ பாஸ்கர பட்டத்திரியோட எலும்பைத் தொடக்கூட இல்லையா. பாதியிலேயே என்னால மேலே ஏறி வந்துட்டியா?"

"தொட்டேன். தகட்டை தொட்ட மறுவினாடியே அந்த கூட்டுக்கு உயிர் வந்த மாதிரி அந்த எலும்புக் கைகள் என் கைகளைப் பிடிச்சு இழுத்தன! பட்டத்திரியோட ஆவி வேலைதான்



இது. என் யட்ச நீலி எச்சரிக்கை செய்து என்னை மேலே வரும்படி பண்ணி இப்போ உன் கூட சேர்த்துட்டா.... "

"மேற்கொண்டு என்ன செய்யப் போறே?"

"பாஸ்கர பட்டத்திரி ஆவியை ஏன் நாம நம் வசப்படுத்தி என் குரு ஸ்ரீ சக்ர பட்டத்திரி முயற்சி செஞ்ச மாதிரி முயற்சி செய்து பார்க்கக்கூடாது?" ஆவி... அதன் வசியம் என்று கருடராஜ பட்டத்திரி தன் பதிலைச் சொல்லவும் ஒரு வினாடி நாச்சியப்பன் ஆடிப் போய்விட்டான்.

"பட்டத்திரி! ஆளை அடிக்கறது, கை காலை ஒடிக்கிறது, துணிச்சலா திருடறது இதுதான் எனக்கு கை வந்த கலை. உன் மந்திர தந்திர சமாச்சாரமெல்லாம் எனக்கு குலை நடுக்கம் தரும் விஷயங்கள் நீயே தனிச்சு முயற்சி பண்ணு. என்னை விட்டுடு. எனக்குப் பயமா இருக்கு..." என்றான்.

"பயப்படாதே நான் இருக்கேன். என் குரு உன் அப்பாவுக்கு செய்து கொடுத்த ஆவி வசியத் தாயத்து இருக்கு. அதைக் கட்டிக்கோ. இப்போ முதல் வேலை பாஸ்கர பட்டத்திரியோட ஆவியை நம் வயப்படுத்துவது தான்."

"அடுத்து?"

"மெட்ராஸ்ல இருக்கற ராமநாதனை இங்க கொண்டு வரணும்"

"எதுக்கு"

"தங்க பாத்திரம் உள்ள அந்த இடத்தை தெரிஞ்சுக்கத்தான்...."

"சித்த சுவாதீனமில்லாத ஒரு பைத்தியம் எப்படி நமக்கு உதவ முடியும்?"

"அவன் சித்தத்தை நாம் பாஸ்கர ஆவியைக் கொண்டே தெளிவிப்போம்...."

"நல்ல ஐடியா தான். ஆமா தங்கம் இருக்கற இடம் தெரிஞ்சிடுச்சின்னு வெச்சுப்போம். அந்த இடத்தை எண்ணிரண்டு பதினாறு சக்திகள் காவல் காக்கறதா சொல்றியே. அந்த சக்திகளை எப்படி ஜெயிப்பே? ராஜ அம்ச சவத்தின் வாயில ஊற வைக்கப்பட்ட மிளகுகளைக் கொண்டா? இல்லை கஸ்தூரி மாதிரி சாமுத்ரிகா லட்சணம் உள்ள ஒரு பெண்ணை கொண்டா?"

"அந்த கஸ்தூரியே இன்னமும் கன்னித்தன்மை நீங்காம உயிரோட இருக்கும்போது இன்னொரு பெண் எதுக்கு நாச்சியப்பா?" -பட்டத்திரியின்

பதிலால் நாச்சியப்பன் அப்படியே சுண்டிவிடப் பட்டான்.

"என்ன பட்டத்திரி சொல்றே நீ. கஸ்தூரி கன்னித் தன்மை கெடாம இன்னமும் அப்படியே இருக்காளா?"

"ஆமாம் நாச்சி.... அவள் இன்னமும் உயிரோட இருக்கா. ராமநாதன் மாதிரியே உண்மை தெரிஞ்ச இன்னொரு ஜீவன் அவள்."

"பட்டத்திரி இன்னொரு விஷயம். ராமநாதனுக்கும் கஸ்தூரிக்கும் மட்டும்தான் தங்கம் பற்றி தெரியும்ங்கறது உன் நினைப்பு. ஆனா ஒரு கவர்மெண்ட் ஆபீசர் ஒருத்தனுக்கும் இதுபற்றி தெரிஞ்சிருக்கு. என்னோட வைப்பாட்டியப் போல உள்ள தங்கமணிங்கற வேசிகிட்ட வந்து குடி போதையில தங்கம் பற்றி நிறைய உளறியிருக்கான் அவன்"

நாச்சியப்பன் பதிலால் பட்டத்திரி முகம் வதங்க யோசனைகளில் மூழ்கவும், நாச்சியப்பனும் அதற்காக கவலைப்படும் தினுசில் பேசினான்.

"பட்டத்திரி! நாம நினைக்கிற மாதிரி தங்கம் பற்றி சிலருக்கு தான் தெரியும்கறது தப்பு. பலருக்கும் தெரிஞ்சிருக்கு. இந்த ராமநாதனுக்கே ஜெயில்லே யாரோ ஒருத்தர் சொல்லவும் தானே தெரியும்? ஆகையினால நாம் தங்கத்தை தேடற அதே சமயம் மற்ற யாரும் அதைத் தொடாத படி பாத்துக்கணும். என்ன சொல்றே?" -பட்டத்திரியிடம் பதில் இல்லை. புதிய சிக்கலுக்கான விடைகளை யட்ச நீலியிடமே கேட்டு விடுவது என்பது போல் கண்கள் இடுங்க, நெற்றிப் பொட்டின் மேல் ஐந்து விரல்களை குவித்து மனத்தை ஒருமைப் படுத்தி யட்ச நீலியை அழைத்தான்.

அவன் அழைப்புக்காக காத்திருந்தவள் போல் அந்த தேவதை உடனேயே கிளம்பி வந்தாள்.




ருடராஜ பட்டத்திரி கண்கள் செருக, தன்னுள் விஸ்வரூபம் எடுத்து அழைத்த அழைப்புக்கு இணங்கி ஓடி வந்த அந்த துர்தேவதையை ஒரு பார்வை பார்த்தான்.

பார்வையிலேயே அவன் பேரில் தனக்கு கோபம்



இருப்பதை உணர்த்தவும் அவன் தவறவில்லை.

"என்ன பட்டத்திரி! எதற்காக அழைத்தாய்....?" யட்சநீலியிடம் கேள்வி.

"நீலி நீ எப்பொழுதும் நான் கேட்கும் கேள்விக்கு மட்டும்தான் பதில் தருவாயா?" - பட்டத்திரி தனது ஐயப்பாட்டை கோபத்தோடு ஒரு கேள்வியாக்கிக் கேட்டான்.

"எதற்காக கேட்கிறாய்?" இது யட்சநீலி.

"உன்னை என் ஆதர்ச தேவதையாய், மாபெரும் பலமாய் நான் நம்பிக் கொண்டிருக்கிறேன். நீயும் என் தவம், உபவாசம், பூஜை, புனஸ்காரம் முதலான செயல்களினால் மகிழ்ந்து எனக்கு அடிமை போல் செயல்பட்டுக் கொண்டிருக்கிறாய். ஆனாலும் உன் செயல்பாடுகளில் எனக்கு திருப்தி இல்லை.

உன்னை ஏன் நான் பூத கணாதிபதியான பைரவ மூர்த்திக்கு மயானக் கொள்ளை அன்று பலியாகக் கொடுக்கக் கூடாது?"

பட்டத்திரி இப்படிக் கேட்டதும்தான் தாமதம் யட்சநீலியிடம் குலை நடுக்கமே ஏற்பட்டு விட்டது. என்னதான் சக்தி வாய்ந்த துர்தேவதையாக இருப்பினும் கூட பூத கணாதிபதியான ஈசனின் மயான ராஜ்ய பலியாகி, பின்பு அங்குள்ள அரக்கப் பிசாசுகளுக்கு காலமெல்லாம் கட்டுப் பட்டு கிடப்பதா? நினைக்கும் போதே யட்சநீலிக்கு மலைப்பு தட்டியது.

"பட்டத்திரி நான் செய்த தவறுதான் என்ன? எதற்காக என்னை பயமுறுத்துகிறாய்?" - கேட்டது.

"பின் என்ன... நான் எதற்காக இந்த ராஜமங்கலம் வந்தேனோ அந்த நோக்கம் ஈடேறாது போல் உள்ளதே.

அந்த தங்கம் பற்றி இந்த ராஜமங்கலத்தில் பல பேருக்கு தெரிந்திருக்கிறது. அதை அபகரிக்கும் முயற்சிகளை பலரும் பல விதத்தில் எடுத்துக் கொண்டிருக்கின்றனர். நீ அது பற்றி மூச்சு கூட விடவில்லை. என்னை எச்சரித்து செயல்பட வைத்து வெற்றியடைய உதவுவதுதானே உனது கடமை?"

"நிச்சயமாய்!"

"என்றால் யார் யாருக்கு தங்கம் பற்றி தெரியும்.

எப்படி அவர்களுக்கு அந்த ரகசியம் தெரிய வந்தது. இதில் யாருக்கு உண்மையிலேயே அந்த தங்கம் இருக்கும் இடம் தெரியும் என்று கண்டறிந்து சொல்."

"உத்தரவு! -பட்டத்திரி ஒரு வேண்டு கோள்...."

"என்ன?"

"எத்தனை பேருக்கு அது பற்றி தெரிந்து என்ன? அதை நெருங்கி எடுக்கும் வல்லமை உன் போன்றவர்களுக்குத் தானே உண்டு. நீ ஏன் கவலைப்படுகிறாய்?"

"இருக்கலாம். இருந்தாலும் துளி எச்சரிக்கை யாக இருக்கவும், போட்டி போடுகிறவர்களை அடையாளம் கண்டு கொள்ளவும்தான் கேட்கி றேன். சொன்னதை நீ செய்."

"நல்லது. என்னை ஏதேனும் ஒரு கறுப்பு ஆடையில் ஐக்கியப்படுத்தி அந்த கறுப்பு ஆடையை உற்றுப் பார். நான் உனக்கு விடை தருகிறேன்.

நீலி சொல்லிவிட்டு தற்காலிகமாக விலகியது. நிலை மீண்ட பட்டத்திரி புன்னகையோடு எதிரே நிற்கும் நாச்சியப்பனைப் பார்த்தான். நாச்சியப்ப னுக்கு எல்லாமே புதிராக இருந்தது.

"என்ன பட்டத்திரி தியானம் செய்யற மாதிரி கண்ணை மூடினியே? விடை தெரிஞ்சுதா?"

நாச்சியப்பனின் கேள்விக்கு பதில் பேசாமல் தனது கறுப்பு துண்டை சுருட்டி ஒரு பந்து போல் ஆக்கிவிட்டு அதன் மேல் கண்களை ஆடாமல் அசையாமல் வைத்து விட்டு இமைகளை அகல விரித்தான். பட்டத்திரி.

மனம் அவனது அசுர பயிற்சி காரணமாக நிர்மலமாகி அந்த கறுப்பு ஆடையின் மேல் யட்சநீலியை மட்டுமே நினைத்து, ஒன்றுபட, பொங்கிப் பிரவாகமாகி அதன் மேல் தனது முகத்தை பட்டத்திரி மட்டுமே உணரும் விதமாய் காட்டினாள் யட்சநீலி. அவள் உதடுகள் உண் மைகளைப் படம் பிடித்து காட்டத் தொடங்கின.

"பட்டத்திரி... பார்கவ வருடத்திலேயே இந்த தங்கம் பற்றிய விஷயம் ராஜமங்கலத்தில் இரண்டு பேருக்கு தெரிந்து விட்டது. தெரிவித்தவள் கஸ்தூரி என்னும் சாமுத்திரிகா லட்சணம் உள்ள எழில் வல்லபியாவாள்!"



"பார்கவ வருடம் என்றால்?"

"அதாவது இன்றைக்கு சரியா எண்பத்தெட்டு வருடத்துக்கு முன்பு 1921-ல்...."

"நல்லது மேலே போ...."

"இப்பொழுது மாடு விழுங்கிப் பள்ளத்தில் மரண சான்னித்தியத்தில் ஆன்ம தவிப்போடு கிடக்கும் பாஸ்கர பட்டத்திரியே முதலில் தங் கத்தை அணுகி அதை எடுத்தவன். உதவியவள் தான் கஸ்தூரி."

"அந்த கஸ்தூரி இப்பொழுது எப்படி இருக் கிறாள்?"

"அதை பிறகு சொல்கிறேன். கஸ்தூரியும், பாஸ் கர பட்டத்திரியும் கார்த்திகை பவுர்ணமியில் சாந்தி பூஜையில் ஈடுபட்டிருந்த சமயம் சிங்கத் தேவனும் ராஜேந்திரனும், வந்து பாஸ்கர பட்டத்திரியை கொன்று கஸ்தூரியை மீட்கின்றனர்."

"ம்... சொல்!"

"மீட்சி பெற்ற கஸ்தூரி மட்டும் தனக்கு தங்கம் பற்றி தெரிந்த உண்மைகளோடு ஊர் போய் சேரு கிறாள். ராஜேந்திரனையும், சிங்கத் தேவனையும் குறளி பொம்மை கொல்கிறது."

"ராஜமங்கலத்தை அடைந்த கஸ்தூரியைப் பற்றி சொல்"

"அவள் தனது தாய் தந்தையிடம் இதனை தெரிவிக்கிறாள். அவர்கள் முதலில் நம்ப மறுக்கின் றனர். ஆனாலும் சிங்கத் தேவனும், ராஜேந்திரனும் மரணமடைந்தது தெரியாததால் அவர்கள் ஊர் திரும்பாததைக் கண்டு ஆச்சரியப்படுகின்றனர்.

தங்கத்தை அவர்கள் எடுத்துக் கொண்டு ஊரை விட்டே ஓடி விட்டதாக கருதுகின்றனர். ஆனால் கஸ்தூரி அதை நம்ப மறுக்கிறாள். தங்கத்தை சாதாரண மனிதர்களால் தீண்டக் கூட முடியாது என்கிறாள். இதை அவளது அப்பாவான பண்ணை யார் முத்துசுந்தரம் நம்புகிறார். அதே வேளை கஸ்தூரியிடமும் இதுபற்றி யாரிடமும் பிரஸ்தா பிக்கக் கூடாது என்கிறார்.

கஸ்தூரி தனது காதலன் வராத அதிர்ச்சியில், அவன் என்ன ஆனான் என்பது புரியாத நிலையில் மனம் கலங்கிப் போகிறாள். எந்தக் காரணத்தைக் கொண்டும் வேறு ஒருவரை திருமணம் செய்து கொள்ள முடியாது என்று கூறி விடுகிறாள்!"

"என்றால் கஸ்தூரி இப்பொழுதும் கூட கன்னி

அப்படித்தானே?"

"ஆமாம். இடையில் சுதந்திரப் போராட்டம் வலுக்கிறது. ஒரு நாள் முத்துசுந்தரம் தனது நண்பரில் ஒருவரான ஏழுமலை என்பவரோடு அனுமன் கரட்டை அடைந்து தங்கத்தை தேடுகிறார். இரண்டு நாள் காடு முழுக்க அலைந்து தேடியதில் தங்கத்தை அவர்கள் பார்த்து விடுகின்றனர்."

"என்னது தங்கத்தை அவர்கள் பார்த்து விடுகின்றனரா?"

"ஆமாம் எண்ணிரண்டு பதினாறு சக்திகளின் காவல் இருப்பது தெரியாமல் அதை இருவரும் எடுத்துக் கொண்டு ஊர் திரும்பப் பார்க்கும் சமயம் பண்ணையார் முத்துசுந்தரம் ஊர் எல்லையை தீண்டுவதற்கு முன்னமே வாயில் நுரை கக்கி மரணமடைகிறார். ஏழுமலை இதனால் பயந்து தங்கத்தை எடுத்த இடத்திலேயே வைத்துவிட்டு திரும்புகிறார்!"

"அதன் பிறகு ஏழுமலை என்ன ஆனான்?"

"ஏழுமலையை காவல் சக்திகளால் தீண்ட முடியவில்லை. காரணம்? ஏழுமலை தேவகணத்தில் ஈசனுக்கு உகந்த திருவாதிரை நட்சத்திரத்தில் ஆருத்ரா தரிசனத்தன்று பிறந்தவன்."

"என்றால் உன்னால் கூட மனிதர்களில் சிலரைத்தான் நெருங்க முடியும். அப்படித்தானே?"

"ஆமாம். பூதகண, மனிதகண வாசிகளைத் தான் என் போன்ற தேவதைகள். ஆவிகளால் எதுவும் செய்ய முடியும். மாறாக தேவ கணத்தில் பிறந்தவர்களை அவ்வளவாய் நெருங்க முடியாது. இவர்களும் வாழ்நாள் முழுக்க என் போன்ற சக்திகளை நம்பாமலே கூட காலம் கழித்து விடுவர்."

"சரி விஷயத்துக்கு வா"

"ஏழுமலை தங்கத்தை எடுத்த இடத்திலேயே வைத்துவிட்ட போதிலும் அதை இழக்க மனமில்லாமல் அல்லாடுகிறான். அந்த சமயத்தில் சுதந்திரப் போராட்ட களத்தில் கைதாகி ஜெயிலில் அடைக்கப்படுகிறான்.

பத்தாண்டு சிறை வாசம்! இந்த சிறை வாச காலத்தில்தான் ராமநாதன் என்பவன் சிறையில் ஏழுமலைக்கு பரிச்சயமாகிறான். ராமநாதன் ஒரு வக்கீல். ராமநாதனிடம் ஏழுமலை தங்கம் பற்றி கூறிகிறான்.



அதே சமயம் ஜெயிலர் விஸ்வநாதன் என்பவரிடமும் கூறுகிறான். ஜெயிலரின் ஒரே மகன் காசிநாதன் தமிழக அரசின் புதை பொருள் ஆராய்ச்சித் துறையில் இருப்பவன்!

இப்படியாக ஏழுமலை மூலமாக விஷயம் ராமநாதனுக்கும், ஜெயிலர் விஸ்வநாதன் மற்றும் காசிநாதனுக்கும் போகிறது."

"நல்லது. இதில் ராமநாதன் தற்சமயம் சித்திரமை பிடித்து சென்னையில் இருப்பதாக முன்பே கூறினாய். இந்த விஸ்வநாதனும் அவர் மகன் காசிநாதனும் என்ன ஆனார்கள்?"

"விஸ்வநாதன், ஏழுமலை சொன்னதை அவ்வளவாக நம்பவில்லை. ஆனால் காசிநாதன் நம்பி அனுமன்கரட்டை போய் தோண்டித் துருவிப் பார்க்கிறான்!"

"ஏழுமலை எதற்காக இதை ஜெயிலர் விஸ்வநாதனிடமும் வக்கீல் ராமநாதனிடமும் கூற வேண்டும்?"

"தான் ஜெயிலிலேயே மரணமடைந்து விடக் கூடும் என்று கருதியதாலும், அப்படியே ஜெயிலிலேயே ஏழுமலை மரணடைந்து விட்டதும் தான் காரணம்."

"ஏழுமலை சரியாக இடத்தைச் சொல்லவில்லையா? சொல்லியிருந்தால் ராமநாதனும், விஸ்வநாதன் மகன் காசிநாதனும் போய் பார்த்திருக்கலாமே..."

"ஏழுமலைக்கு நினைவு தப்பிப் போய்விட்டது. ஆகையால் திசையையும், சில மர அடையாளங்களையும் மட்டுமே காட்டிக் கூற முடிந்திருக்கிறது."

"சரி. காசிநாதன் அந்த அடையாளங்களை வைத்து தங்கத்தைப் பார்த்தானா?"

"இல்லை. ஆனால் அந்த அடையாளங்களை, தனது சந்தேகத்தை தனது வேலை நாளில் அரசாங்கத்துக்கு எழுதி பின்னாளில் அவசியப்பட்டால் ஆராய வேண்டும் என்று குறிப்பெழுதி விட்டான்!"

"அப்படியானால் அரசாங்கம் வசம் தற்போது அந்த உண்மை குறிப்பாக உள்ளது அப்படித் தானே?"

"ஆமாம்! அரசாங்கத்திடம் நம்ப முடியாத விஷயமாக அதே சமயம் தொண்ணூறு சதவிகிதம் அது

இருக்கும் இடம் பற்றிய குறிப்புகளுடன் இந்த தகவல் உண்டு.

ஜெயிலர் விஸ்வநாதனும், காசிநாதனும் இப்பொழுது உயிருடன் இல்லை. அதே போல் ஏழுமலையும் இல்லை. ஆனால் ராமநாதன் மட்டும் சித்த சுவாதீனமின்றி இருக்கிறான்."

"மொத்தத்தில் அரசாங்கத்தில் குறிப்பு ரூபத்தில் இருக்கிறது. இது பற்றி தெரிந்த ராமநாதனுக்கும் தற்சமயம் சித்த சுவாதீனம் இல்லை, அவ்வளவு தான். வேறு யாருக்கும் இது பற்றி தெரியாது! அப்படித்தானே?"

"ஆமாம். ஆனால் இப்பொழுது அரசாங்கம் வசம் உள்ள குறிப்புகளை சந்திரசேகர் என்னும் அதிகாரி பரிபூரணமாக நம்புகிறான். அந்த குறிப்புகளோடு அவன் ராஜமங்கலம் வந்திருக்கிறான். அவன் சரியான பெண்பித்தன். ஆதலால் தங்கமணி என்கிற வேசியை தேடிப்போய் இந்த விஷயங்களை உளறிவிட்டான். ஆனால் குறிப்புகளை கொடுக்கவில்லை!"

"தங்கமணி நாச்சியப்பனின் ஆள் தானே?"

"ஆமாம். நாச்சியப்பனுக்காக ஏங்கித் தவிக்கும் பெண் எமகாதகி. எச்சரிக்கையாய் நீ இருக்க வேண்டும்."

"நாச்சியப்பன் தற்சமயம் என் கட்டுப்பாட்டில்! ஆகையால் எனக்குப் பயமில்லை."

"மொத்தத்தில் உன்னைத் தவிர நாச்சியப்பன் தங்கமணிக்கு தங்கம் பற்றி மட்டுமே தெரியும். ஆனால் சந்திரசேகர் எனும் தொல்பொருள் இலாகா அதிகாரிக்கோ, அது குறிப்புகளோடு இருக்கும் இடம் வரை தெரியும்! தவிர ராமநாதனுக்கும் தெரியும். இந்த ராமநாதன் சித்த சுவாதீனமற்றவன். ஆகவே அவனை விட்டுவிடு. சந்திரசேகரை பிடித்துக் கொள்."

"நல்லது. கஸ்தூரி என்ன ஆனாள். அவளைப் பற்றி நீ எதுவும் சொல்லவில்லையே?"

"கவலைப்படாதே. கஸ்தூரி கன்னித்தன்மை குன்றாமல் இன்றும் அப்படியே உள்ளாள். கணக்குப்படி அவளுக்கு இப்பொழுது எண்பத்தைந்து வயது. ஆனால் பார்த்தால் அப்படித் தோன்றாது. பார்க்க அதே பதினெட்டு வயதுப் பெண் போல தான் இருப்பாள்!"

யட்சநீலி பதிலால் பட்டத்திரி ஒரு வினாடி



தடுமாறிப் போனான். வாழ்க்கையின் முதுமைக்கு இடம் கொடுக்காமல் நித்ய இளமையோடு கஸ்தூரி இருக்கிறாளா?




பட்டத்திரி ஆச்சர்ய அதிர்ச்சியில் வாயைப் பிளப்பது கண்டு நாச்சியப்பனுக்குள்ளேயும் ஆச்சர்யம்.

"என்ன பட்டத்திரி, ஏதாவது அதிசயமா?"கேட்டான்,

"ஆமாம். அதிசயம்தான். முதுமையை ஒருவர் ஜெயிச்சு எப்பவும் இளமையாகவே இருக்கறது ஆச்சர்யமில்லையயே?"

"நிறையபேர் இருந்துருக்காங்களே! தங்க பஸ்பமா சாப்பிட்டு உடம்பை தங்கமா ஆக்கிக்கிட்டவங்க நிறைய பேர் உண்டு பட்டத்திரி"

"நீ சொல்றது மனத்திட்டங்களால ஏற்பட்ற இளமை. நான் சொல்ல வந்தது மந்திரத்தால ஏற்பட்ட இளமை!"

மந்திரத்தாலையா, யார்?"

"வேற யார்? கஸ்தூரி பற்றி கேட்டியே அவ தான்!"

"என்னது கஸ்தூரியா?"

"ஆமா... நித்ய இளமையோட கன்னியாவே இன்னமும் இருக்காளாம்!"

"எங்க, ராஜமங்கலத்துலையா?"

"பொறு கேட்டுச் சொல்றேன்" பட்டத்திரி திரும்ப கண்களை இறுக்கி, மனதால் மந்திரங்களை சொல்லி உக்ரத்தோடு யட்ச நீலியை அழைத்தான்.

"நீலி... கஸ்தூரி எப்படி இளமையுடன் இன்னமும் இருக்கிறாள்? அது சாத்யமா?"

நீலியிடம் உடனே புன்னகை கிளம்பியது.

"நீலி.... நீ அடிக்கடி என்னைப் பார்த்து இளக்காரமாய் சிரித்து என் கோபத்தை அதிகப் படுத்துகிறாய்" பட்டத்திரி எரிந்து விழுந்தான். உடனேயே பட்டத்திரியின் அந்த கோபத்துக்குப் பணிந்தது போல் யட்சநீலி நிதானமாய் பதில் தந்தாள்.

"கோபிக்காதே பட்டத்திரி. மந்திர சாஸ்திரங்களில் நீ இன்னமும் எந்த அளவு கடைக்

குட்டியாக இருக்கிறாய் என்பதை எண்ணியே
சிரித்தேன். மிருத்யுஞ்சய ஜபம் பற்றியோ,
மார்கண்டேய விலாசம் பற்றியோ உனக்குத் தெரி
யாதா?"

"கேள்விப் பட்டிருக்கிறேன்"

"உனது குருவுக்கு குருவான பாஸ்கர பட்டத்திரி இந்த இரண்டிலும் கை தேர்ந்தவன். கஸ்தூரியை அவன் ராஜமங்கலத்திலிருந்து கடத்திய மறு வினாடியே இந்த இரண்டின் சக்தியாலும் அவளை நித்ய இளமைக்கு சொந்தமாக்கி விட்டான்.

தனது தங்கம் தேடும் பணி உடனேயும் முடியலாம் அல்லது சிறு காலம் செல்லவும் செய்யலாம். அப்படி காலம் கடக்கும் சமயம் கஸ்தூரியின் கன்னித் தன்மைக்கு எந்தவித கேடும் வந்துவிடக் கூடாது என்று அவன் கருதியதன் விளைவே, அவன் அவளை அப்படி இளமையுள்ளவளாய் ஆக்கக் காரணம்!"

"என்றால் அவளது குன்றாத இளமையை கண்டு இந்த ஊரே மாய்ந்து போயிருக்குமே. அவளைப் பற்றிய பேச்சே எங்கும் இல்லையே?"

"ஊரைப் பொறுத்தவரை அவள் ஓடிப் போனவள். ஆனால் இன்னமும் ஊர்ப் பண்ணையாரின் பாதுகாப்பில் ஊருக்குள்தான் அவள் இருக்கிறாள்!"

"எனது தங்கம் தேடும் பணிக்கு நான் அவளை பயன்படுத்திக் கொள்ளலாமா?"

"தாராளமாக"

"யட்சநீலி பிறரைப் பற்றி இத்தனை தூரம் உண்மைகளை கூறும் நீ, ஏன் தங்கம் இருக்கும் இடம் பற்றி மட்டும் பேச மறுக்கிறாய்?"

யட்சநீலி பட்டத்திரியின் இந்த கேள்விக்கு முன்னால் மவுனம் சாதித்தது.

"உன்னிடம் எனக்குப் பிடிக்காத விஷயமே இதுதான். நீ தங்கம் இருக்கும் இடத்தை சொன்னால் எனக்கு அலைச்சல் மிச்சமாகாதா?"

யட்சநீலியிடம் தொடர்ந்து மவுனம்.

"இப்படி மவுனமாக இருந்தால் எப்படி? நீலி நீ மட்டும் அந்த தங்கம் இருக்கும் இடத்தைச் சொல்லிவிடு. நான் உடனே உன்னை விடுதலை செய்து விடுகிறேன். அது மட்டுமல்ல. நீ தற்சமயம் அல்லாடிக் கொண்டிருக்கும் மத்திம லோகத்தில

ருந்து புண்ணிய லோகம் செல்ல வழியும் காட்டு
கிறேன்."

யட்சநீலி பேசத் தொடங்கியது.

"பட்டத்திரி. என் ஜென்ம பாப புண்ணியங்களே நான் இப்படி மத்திம லோகத்தில் ஒரு தேவதையாகவேனும் சஞ்சரிக்கக் காரணம். என் சக்தி சாதாரண குற்றம் குறையுள்ள மனிதர்களின் இருப்பிடங்களில் மட்டுமே செல்லுபடியாகும். தெய்வ சக்தி உள்ள இடங்களில் அல்ல"

"அப்படியானால் அந்த தங்கக் காசுகள் தெய்வ சக்தி உள்ள இடத்திலா இருக்கிறது?"

"தயவு செய்து என்னை எதுவும் கேட்காதே. தங்கத்தை தேடி அடைவது உன்பாடு. வேறு உதவி கேள்"

"சரி அடுத்து நான் என்ன செய்யட்டும்?"

"முதலில் மாடு விழுங்கிப் பள்ளத்தில் அகப்பட்டு ஆத்ம சாந்தி பெற முடியாமல் தவித்துக் கொண்டிருக்கும் பாஸ்கர பட்டத்திரியின் ஆவிக்கு ஒரு நல்ல வழி காண்பி."

"பாஸ்கர பட்டத்திரி வைத்திருந்த அந்த சொர்ண லிங்கத் தகட்டை எடுத்து உன் இடுப்பில் அணிந்து கொள்"

"பதினாறு சக்திகளின் தீய செயல்களில் இருந்து தப்பிக்கத் தானே?"

"ஆமாம். வைரவநாதன் வசம் உன் குருவான ஸ்ரீ சகர பட்டத்திரி வழங்கிய அந்த தாயத்தை எப்பொழுதும் உன் தலை முடிக்குள் கட்டி வைத்திரு. எங்கும் எந்த ஆவிகளும் உன்னைத் தீண்டி உன் மந்திர சக்திகளுக்கு கேடு விளைவிக்க முடியாது."

"நல்லது. தங்கம் எங்கே இருக்கிறது என்பதை கண்டறிய ஏதாவது ஒரு வழியாவது கூறு"

"எனக்குத் தெரிந்ததைவிட தொல்பொருள் இலாக்கா ஊழியன் சந்திரசேகருக்கு நிறையத் தெரியும். அவனைப் பிடித்துக் கொள்"

"இவ்வளவு தானா?"

"முக்கியமான ஒன்று"

"என்ன நீலி?"

"மாடு விழுங்கிப் பள்ளத்தில், பாஸ்கரப் பட்டத்திரியின் அத்துமெத்த மாந்திரீக சக்தியில் உருவான அந்த குறளிப் பேய் இருக்கிறது. அதன் வசம் அகப்படாமல் நீ பாஸ்கர பட்டத்திரிக்கு கர்மம் செய்ய வேண்டும்"

"அந்த குறளிப் பேய் என்ன அத்தனை வல்லதா?"

"நிச்சயமாக... எண்பத்தெட்டு வருடங்களாக அது அடைபட்டுக் கிடப்பதால், தன்னை இயக்கும் பாஸ்கர பட்டத்திரியின் ஆவியும் தவித்துக் கொண்டிருப்பதால், எஜமான் விசுவாசத்தோடு அது ஒளிக்காக தவித்துக் கொண்டிருக்கிறது. குறிப்பாக 'நிலா வெளிச்சம்' அதன் சக்தியை பொங்கிப் பிரவாகிக்கச் செய்யும். ஆகையால் பள்ளத்தில் இறங்கும் வேளையில் எச்சரிக்கையாக இரு. கர்ண கடூர இருட்டில் அது கிடக்கிறது. வெளிச்சத்தை நேரடியாக அதன் மேல் பாய்ச்சி விடாதே. உன் உடலோ, நிழலோ கூட அதன் மேல் பட்டுவிடக் கூடாது."

"வெளிச்சம் என்றால் மட்டும் ஏன் அந்த குறளிக்கு அத்தனை பயம்?"

"பயமல்ல பலம்!"

"அந்த குறளியை நான் என் வசப்படுத்தி இயக்க முடியாதா?"

"அதற்கு உனக்கு பஞ்சாட்சரம் முழுவதுமாய் தெரிந்து இருக்க வேண்டும்! உனக்கு தான் தெரியாதே! அது மட்டுமல்ல மாசு மருவில்லாத ஒரு கன்னியை நீ அந்த குறளிப் பேய்க்கு நிவேதனமாய் சமர்ப்பிக்க வேண்டும்."

"புரியவில்லையே எனக்கு"

"கன்னித் தன்மை கெடாத ஒரு பெண்ணை நீ குறளிப் பேயை அழைத்து பலி கொடுப்பாயானால் அது உனக்குக் கட்டுப்பட்டு ஏவல் செய்யும்?"

"அப்படியானால் பாஸ்கர பட்டத்திரி அப்படி செய்து தான் அந்த குறளிப் பேயை வசப்படுத்தினாரா?"

"ஆமாம். அந்த மகா பாபமே அவர் துர்மரணத்துக்கும் தற்பொழுது ஆவியாய் சித்ரவதை அனுபவிக்கவும் காரணமாகி விட்டது. நீயும் அந்த பாதையில் போகாதே!"

"குறளிப் பேய்க்கு நிவேதனம் செய்த பிறகு அந்த கன்னியின் ஆவிக்கு புண்ணிய லோகம் செல்ல வழி காட்டி பரிகாரம் தேடிக் கொண்டால் போயிற்று. இதற்குப் போய் பயப்படலாமா?"

யட்சநீலி இதற்கு மேல் பட்டத்திரியிடம் பேசக் கூடாது என்பது போல் உடனேயே அவன் மனதிலிருந்து விலக ஆரம்பித்தது.

பட்டத்திரியும் நீலியை போகவிட்டு, தான் கய திலைக்கு திரும்பினான். நாச்சியப்பன் எதிரே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

"என்ன பட்டத்திரி அடிக்கடி கண்களை செருகிட்டு வாயை மூடிக்கிற. முகத்துல மட்டும் நீ யார் கூடயோ பேசற உணர்ச்சிகள் மின்னுது"- ஆவலாகக் கேட்கவும் செய்தான். பட்டத்திரி அதற்குப் புன்னகையோடு பதில் தந்தான்.

"ஒவ்வொரு மாந்திரீகனுக்கும் ஒரு துஷ்ட தேவதை அடிமையா இருப்பா. எனக்கு யட்ச நீலிங்கற துஷ்ட தேவதை அடிமை. அவகூடத் தான் மானசீகமா பேசிக்கிட்டிருந்தேன். அவ முக்கால மும் உணர்ந்தவ!"

"அப்படின்னா தங்கம் இருக்கற இடத்தை பத்தி அவகிட்ட கேட்க வேண்டியதுதானே?"

"அந்த ஒரு கேள்விக்குத்தான் எனக்கு விடை தெரியலை. மற்ற எல்லா கேள்விக்கும் சந்தேகத்துக்கும் விடை கிடைச்சாச்சு நாச்சியப்பா"

"நீ என்ன சொல்றே பட்டத்திரி"

"நாச்சியப்பா. கவலைப்படாதே! இனி நான் என்ன சொல்றேனோ அதைச் செய்"

"நான் இப்ப என்ன செய்யணும்?"

"முதல் வேலையா அந்த தொல் பொருள் இலாகாகாரனை நீ வளைக்கணும்"

"சரி. அடுத்து?"

"ஒரு அழகான கன்னிப் பெண்ணை குறளிப் பேய்க்கு பலியா தர அழைச்சுக்கிட்டு வரணும்" - நாச்சியப்பனுக்கு தூக்கி வாரிப் போட்டது. "என்னது. கன்னிப் பெண்ணை பலி கொடுக்க நான் அழைச்சிக்கிட்டு வரணுமா?"

"ஆமாம். இந்த இரண்டு காரியத்தை செய்துட்டா பாதி காரியம் முடிஞ்ச மாதிரி நாச்சியப்பா"

"நரபலிங்கறது சாதாரண விஷயமா? சர்வ சாதாரணமா சொல்றியே பட்டத்திரி"

"வேறு வழியில்லை நாச்சியப்பா. குறளிப் போய் என் வசமானா என்னை ஒருத்தரும் எதிர்க்க முடியாது. நாம தங்கம் தேடும் போது யார் தடையா வந்தாலும் குறளியே அவங்களுக்கு பதில் சொல்லும். தங்கம் இருக்கற இடம் மட்டும் தெரிஞ்சா போதும். மற்ற எல்லா காரியங்களும் முடிஞ்ச மாதிரிதான்."

"கஸ்தூரி பற்றிக் கேட்டியே அவ இப்ப எங்க

இருக்கா? அவனால எதுவும் காரியம் ஆகுமா?"

"கஸ்தூரி ராஜமங்கலத்துல பண்ணையார் வீட்ல தான் இருக்கா. அவ பாட்டுக்கு அங்கேயே இருந்துட்டு போகட்டும். நம்ம முயற்சியில் அவளையும் சேர்த்துகிட்டு இப்போதைக்கு குழம்ப வேண்டாம். அவ தேவைப்பட்டா பிறகு பார்த்துப் போம். இல்லைன்னா அவளை நினைக்கக் கூட வேண்டாம். நாமளே எல்லா செயலையும் முடிச்சுப் போம். சொர்ண லிங்கத் தகடு, ஆவி வசியதா யத்து, எல்லாத்துக்கும் மேல் குறளிப் பேயோட துணை, இந்த மூணு போதாதா நாம நினைச்சதை முடிக்க?"

"என்கிட்ட கேட்டா?" நீ தானே எல்லாத் தையும் செய்யப் போறவன். நான் இப்ப உன்கிட்ட ஒரு எடுபிடிதானே?"

"எல்லாம் என் சொர்ணாபிஷேகம் முடியற வரைக்கும் தான். அப்புறம் நீ குபேரன். சரி முதல் காரியமா நான் இந்த பள்ளத்துல கிடக்கற பாஸ்கர பட்டத்திரியோட ஆவிக்கு ஆத்ம சாந்தி கிடைக்க வழி பண்ணணும். அதே சமயம் குறளிப் பேயையும் சமாளிச்சு அதை என் வசப்படுத்திக்கணும். எனக்கு அதுக்கு தேவையானதை செய்யணும் நாச்சி யப்பா"

"என்ன செய்யணும்?"

"நாலு மண் சட்டி, கைப்பிடி மயானப் பிணச் சாம்பல், ஒரு உயிருள்ள தேவாங்கு, ஒரு பிடி அரிசி மாவு, வெள்ளை அரளிப் பூ, எள்ளு, ஒரு குடம் நீர். இவ்வளவும் வேணும். இத்தோட முக் கியமா கன்னிப் பெண்"

"தேவாங்குக்கும், கன்னிப் பெண்ணுக்கும் நான் எங்க போவேன் பட்டத்திரி?"

"கவலைப்படாதே, இந்த ஊர்ல இருக்கற வில்வ மரத்துக் கிளை ஒண்ணுல தேவாங்கு குடி இருக்கு. கன்னிப் பெண்களுக்கா நாட்டுல பஞ் சம்"

"இந்த ஊர்ல வில்வமரமே எனக்கு தெரிஞ்சு கிடையாதே"

"போய் விசாரிச்சுப் பார் தெரியும். வளவளன்னு பேசாதே. முதல்ல நான் கேட்டதை எல்லாம் கொண்டு வா"

நாச்சியப்பன் பயத்துடன் தலையசைத்து விட்டு அங்கிருந்து கிளம்பினான். மேற்குப் புறம்



சூரியன் சரிந்து கொண்டிருந்தான். அடிவானம் செம்பொன்னால் மெழுகப்பட்ட மாதிரி ஜொலித் தது.

அதைப் பார்த்து ரசித்த படியே நடக்க ஆரம்பித்தான். தன் வீட்டிற்கு கூட போகாமல் முதலில் தங்கமணியை பார்த்து நடந்த அவ்வள வையும் சொல்ல அவன் மனது துடித்தது. எனவே அவள் வீட்டைக் குறி வைத்து நடந்தான்.

தங்கமணியும் மனதில் பய அலைகளோடு நாச்சியப்பனுக்காக காத்துக் கொண்டிருந்தாள். எதிரே உற்சாகமாய் நாச்சியப்பன் வருவதைப் பார்த்து அப்படியே பூரித்துப் போனாள்.

"வா நாச்சி... போன விஷயம் என்ன ஆச்சு?" ஆவலாய் அவள் கேட்கும் சமயம், அவள் வீட்டு வாசலில் ஆட்டோ ஒன்று வந்து நின்றது. அதில் இருந்து துளி போதையோடு சந்திரசேகர் என்னும் அந்த தொல் பொருள் இலாகாவை சேர்ந்த அதிகாரி இறங்கிக் கொண்டு இருந்தான்.

**சுபம்**

**இந்த நாவலின் முடிவு பாகம் டிடே க்ரைமில் வெளிவந்துள்ளது. அதுவும் இப்பொழுதே விற்பனையாகிக் கொண்டிருக்கிறது.**

கதை, கவிதை மற்றும் கடிதப் போக்குவரத்து, டிடி அல்லது எம்.ஓ. இவைகளை SREE AISHVARYA PUBLICATION க்ரைம் ஸ்டோரி, 4, தேவகி நகர் 2வது குறுக்குத் தெரு, பொன்னியம்மன் மேடு, சென்னை-110. என்ற நிர்வாக அலுவலக முகவரிக்கே அனுப்பவேண்டும்.

செல்: 94453 45067

CRIME STORY Owner & Published by M.Pon Chandra Sekaran at 77,Madhavaram High Road, Perambur, Chennai - 600 011. Printed by M.Pon Chandrasekaran at Basker Atchagam, No.16, Visaka Thottam Street, Saidapet, Chennai - 600 015.

Editor: Pon ChandraSekar




## 14

தங்கமணிக்கு அவனைப் பார்க்கவும் தூக்கி வாரிப் போட்டது. "நாச்சி நான் சொல்லலை. அந்த தொல்பொருள் இலாக்கா ஆராய்ச்சியாளன்! அவன் தான் இவன்"

தங்கமணி வீட்டுக்குள்ளே நுழையும் அவனைக் காட்டி நாச்சியப்பன் காதைக் கடிக்கவும் நாச்சியப்பன் அவனை ஊன்றிப் பார்த்தான்.

"வா ராசா... வா...." தங்கமணி நாக்கில் தேனைத் தடவிக் கொண்டு அவனை அழைத்தாள். வந்து நின்ற அவன் பார்வையில் கனல் கூடு கட்டி யிருந்தது. தங்கமணியை விழுங்கி விடுகின்ற மாதிரி பார்த்தான்.

தங்கமணி அவன் பக்கமாய் போய் உரசிக் கொண்டு நின்றாள். பிறகு நாச்சியப்பனை கெஞ்சுவது போல் பார்த்தாள். நாச்சியப்பன் முகத்தில் அர்த்த புஷ்டியுடன் புன்னகை!

"என்ன ராசா... வரும் போதே நல்லா ஊத்திக்கிட்டு வந்துருக்கே. என் வீட்ல இல்லாத சீமைச் சரக்கா?" - கொனட்டலாகக் கேட்டாள்.

"அது சரி. இது யாரு?" -அவன் நாச்சியப்பனைப் பார்த்து பட்டென்று கேட்கவும் தங்கமணிக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை. மவுனமாய் சிரித்தாள்.

"யாருன்னு கேட்கறேன்ல. இனிமே நீ என் கூட தவிர யார் கூடயும் படுக்கக்கூடாது. நீ என் பெண்டாட்டி மாதிரி. ஊஹூம் மாதிரி கூட இல்லை. பெண்டாட்டியே தான்" -அவனது உளறல் தங்கமணிக்கு சிரிப்பை உண்டு பண்ணியது.

"சரி ராசா... வா நாம பெட்ரூமுக்குப் போகலாம்" என்று அவனை பக்குவமாக பெட்ரூமுக்கு அழைத்துச் சென்று கட்டிலில் உட்கார்த்தி வைத்தாள்.

அவன் உடனேயே அவளை அப்படியே இழுத்து அணைத்துக் கொண்டு மார்பு மேல் இதழ்களை தேய்க்கப் போனான். அவ விருட்டென்று விலகினாள்.

"அவசரத்தைப் பாரு" என்று சிணுங்கினாள்.

"ராசா கொஞ்சம் இருங்க. வேற உடுப்பை மாட்டிகிட்டு வந்திடறேன்" என்றவளாய் அந்த அறையை விட்டு வேக வேகமாய் வெளியே வந்து நாச்சியப்பனை நெருங்கினாள்.

"நாச்சி! போன காரியம் என்னவாச்சு? அந்த மந்திரவாதியைப் பாத்தியா. உனக்கு ஆபத்து ஒண்ணுமில்லியே? எனக்கு பக்கு பக்குன்னு இருக்குது. இப்ப பார்த்து இவன் வேற வந்துருக்கான். என்ன பண்றதுன்னு தெரியலையே?"

படபடவென்று பொரிந்து தள்ளினாள் தங்கமணி.

"கும்பிடப் போன தெய்வம் குறுக்கையே வந்துடுச்சு தங்கமணி. மந்திரவாதிய பாக்கப் போனப்ப மட்டுமல்ல. இப்ப இங்கையும்தான்!"

"என்ன சொல்றே நாச்சி?"

"நா பிறகு உனக்கு விலாவரியா சொல்றேன். இப்ப இந்த பயலை விட்றாதே. இவனுக்கு தங்கப பத்தி நிஜமாலுமே நிறைய விஷயம் தெரியும். ஆமா காமிரா வாங்கிட்டியா. இப்பவே படத்தை எடுத்திடவா?" ஆவலாக கேட்டான் நாச்சியப்பன்.

உம் கொட்டிக் கொண்டே பக்கத்து மர அ மாரியை திறந்தாள் தங்கமணி. அதில் ஜம்மென்று காட்சி தந்தது காமிரா.

"பிலிம் ரோலு?"

"அது இல்லாமலா? அதைப் போட்டே வாங் கிட்டு வந்துருக்கேன். நீ குறி பாத்து பட்டனை தட்டுனா ஃப்ளாஷ் லைட் எரியும். படம் விழுவும். ஒரு படத்துக்கு ஒன்பது படம் எடு. நீ காமிராவுக்கு புதுசு. அப்பத்தான் ஒண்ணாவது தேறும். என்ன?

"கிண்டலா பண்றே. ஒண்ணு இல்ல. ஒன்பது உழுவப் போவுது. நீ அவனை நல்லா சமாளி



நடுவுல கலாட்டா பண்ணப் போறான்"

"கவலைப்படாதே. ஆளு மேல ஆரம்பிச்சா இடி இடிச்சாக்கூட அசர மாட்டான். நானும் இன்னிக்கு தோதா வளைஞ்சு கொடுத்துக்கறேன் என்ன?"

"பேசிக்கிட்டிருக்காதே சீக்கிரம் போ! அவன் போதை தெளிஞ்சிடப் போவுது?"

தங்கமணி துள்ளிக்கொண்டு சிலுப்பலாக நடந்து அந்த அறைக்குள் நுழைந்து கதவைத் தாழிடாமல் சாத்தினாள். எதிரே சந்திரசேகர் என்னும் அந்த ஆராய்ச்சியாளன் சட்டையைக் கழட்டி விட்டு பேண்ட்டையும் கழற்ற சிரமப் பட்டுக் கொண்டிருந்தான்.

"நான் ஹெல்ப் பண்ணவா ராசா?" -கேள்வியோடு அவன் இடுப்பில் கை போட்டு ஜிப்பைப் பிடித்து இழுக்கவும். அவனுக்கு தன் உடம்பே இல்லாமல் தொலைந்தது போல் ஒரு மிதப்பு ஏற்பட்டது.

அவனை மேலும் பேண்ட்டை அவிழ்க்க விடாதபடி அப்படியே வாரிச் சுருட்டினான். தனது கருத்த உதடுகளை அவளது கழுத்தின் மேல் வைத்து எச்சில் ஒழுக ஒரு அழுத்தமான முத்தம் வைத்தான். பிறகு அப்படியே அவளது திரண்ட தோள்பட்டை சதையை அவளுக்கு வலிக்காத மாதிரியில் கடித்தான்.

இதுதான் சமயம் என்பது போல் காமிராவுடன் பூனை போல் உள்ளே நுழைந்தான் நாச்சியப்பன்.

நாச்சியப்பனை பார்த்துவிட்ட தங்கமணி சந்திர சேகரை வேகமாக இழுத்து தன் மேல் படர விட்டுக் கொண்டாள்.

கண்களை ஒரு வினாடி மூடி அவள் மேல் நெளிந்த அதே வினாடியில் நாச்சியப்பன் காமிரா வெளிச்சத்தை இருவர் மேலும் பாய்ச்சி 'க்ளிக்' என்றது.

தங்கமணி நாச்சியப்பனை பார்த்துக் கொண்டே சந்திரசேகரனின் கன்னத்தில் தன் உதடுகளை போட்டு தேய்க்க இன்னொரு பளிச்!

சந்திரசேகர் தனது கைகளை தங்கமணியின்
மார்பு மேல் கொண்டு சென்றும், இடுப்புக்கு கீழ்
பரபரப்படையவும் தொடங்கிய அந்த மிக முக்கிய
கட்டத்தில் மூன்றாவது பளிச்!

இந்த முறை சந்திரசேகர் ஃப்ளாஷ்
வெளிச்சத்தை பார்த்துவிட்டு திடுக்கிட்டு
நிமிர்ந்தான். மார்பில் வியர்வை ஓட அவ
தங்கமணியின் உடம்புக்கு மேலே படுத்த
மாதிரியில் பயத்தோடு நிமிர்ந்த அந்த நான்காவது
கோலத்தையும் 'பளிச்' என்று கோழி அமுக்குவது
போல் அமுக்கினான் நாச்சியப்பன்.

"டேய் யார்ரா நீ...... எதுக்குப் படம் எடுக்கறே;
பயம் கூட்டப் படபடப்பு என்ற உணர்ச்சியோடு
காமம் கால் மாட்டுக்கு இறங்கி விட எழுந்து நின்ற
சந்திர சேகரரை நாச்சியப்பன் நெடு நாட்களுக்கு
பிறகு தனது ரவுடித்தனமான பழைய பாணியில்
பார்த்தான்.

"யோவ் வந்த ஜோலியப் பாரு! எடுத்த
படங்களையெல்லாம் கழுவி பிரிண்ட் போட்டு
எடுத்துகிட்டு வந்திடறேன். அப்புறமா உக்காந்து
விலாவாரியாப் பேசுவோம். வரட்டுமா?" கேட்டு
விட்டு நிமிட நேரங்களை கூட வீணாக்காமல் அங்
கிருந்து நகர்ந்து மளாரென்று அறைக்கதவையு
வெளியே இழுத்துப் பூட்டினான்.

சந்திரசேகருக்குள்ளேயோ இதயம் அறுந்து
வயிற்றுக்குள் விழுந்து விட்ட மாதிரி ஒரு
வேதனை.

"ஏய் தங்கமணி என்ன இதெல்லாம். எதுக்கு
இவன் நம்பளை போட்டோ எடுத்தான். வெளிய
தெரிஞ்சா நான் தலைகாட்ட முடியாதே. எதுக்கு
இவன் போட்டோ எடுத்தான்?"

படபடப்பாக சந்திரசேகர் கத்தவும், அதைக்
கண்டு துளி கூட பதட்டப்படாமல் சந்திரசேகரை
பார்த்து தனது வலது இமையை ஒரு மின்னல்
வெட்டாய் வெட்டி கண்ணடித்தாள் தங்கமணி.

"அட கத்தாதே ராசா. ஒரேடியா புலம்பறியே.



போட்டோ எடுத்தா என்ன இப்போ? நான் கேக்கற கேள்விக்கு பதிலை சொல்லிட்டு போட்டோவை வாங்கிட்டுப் போ" மிகச் சாவதானமாக வேறு பேசினாள்.

"என்ன கேள்வி?"

"இந்த ராஜமங்கலத்துல எங்கியோ ஒரு இடத்துல தங்ககாசுங்க இருக்கு. அது நிஜம்! ஆனா அது எங்க இருக்குன்னு தெரியாது. உனக்கு குத்து மதிப்பா அது இருக்கற இடம் தெரியும். அதைச் சொல்லிடு. நாங்களும் போட்டோவைத் தந்துட்றோம்"

"தங்கமாவது காசாவது எல்லாம் கப்ஸா. யார் சொன்னா தங்கம் இருக்குன்னு?"

சந்திரசேகர் பயம் குறையாமல், பதட்டம் குறையாமல் தங்கமணியிடம் மறுப்பை சொன்ன அதே வேளை சாலையில் நடந்து கொண்டிருந்த நாச்சியப்பன் கண்களில் அந்த பெண் தட்டுப்பட்டாள்.

ஒல்லியான சரீரம். ஆனால் நல்ல நிறம். நீல நிற பாவாடை தாவணியில் இலேசாய் ஒரு தேவதை போல் தோற்றம் கொண்டிருந்தாள். கண்ணுக்கு நிறைய மை தீட்டியிருந்தாள். அவள் யாரையோ தேடுவது போல் இருந்தது.

"பாப்பா யாரைத் தேட்றே?" நாச்சியப்பன் கை வசம் காமிரா சகிதம் பக்குவமாய் கேட்டான்.

"எங்க அண்ணனை! இங்கையே நில்லு இதோ வந்துட்றேன்னு சொல்லிட்டுப் போச்சு."

"எங்க?"

"கோவிலுக்கு"

"ஏன் நீ போகலையா?"

"நான் போகக் கூடாது"

"அதான் ஏன்?"

"நீங்க யார் அதைக் கேட்க?"

"நான் போலீஸ் சி.ஐ.டி. இப்படி தனியா யாராவது நின்னா விசாரிக்கிறது என் கடமை"

அவள் நடுங்கினாள் மெல்ல, பிறகு

வெட்கப்பட்டு கொண்டு பதில் சொன்னாள்
"நான் மூணு நாள் வீட்டு விலக்கா இருக்கேன்!"

"அப்படியா?" -என்று அதை சந்தோஷமாய் அங்கீகரித்த நாச்சியப்பன் நரபலி பிரச்சனை தீர்ந்து விட்டதாக கருதி உற்சாகமாய் கைகளை குத்திக் கொண்டான். அவள் அதைப் பார்த்து அ... கமாய் பயந்தாள்.

## 15

நாச்சியப்பனின் சிந்தனை வானத்து வல்லூறாய் வட்டம் போட்டு சட்டென்று ஒரு முடிவுக்கு வந்தது.

"தா பாரும்மா... இது ஒரு மாதிரியான இடம். நீ இப்படி தனியா நின்னேன்னா உன்னை தப்பான பொண்ணுன்னு நினைச்சு யாரும் தப்பா நடந்துக்கலாம். ஆகையினால் கோவிலுக்குப் பின்புறம் போய் நில்லு! உன் அண்ணன் எப்படி இருப்பான்னு சொல்லு! நான் போய் கூட்டிக்கிட்டு வர்றேன்" என்றான்.

அவள் அடையாளம் சொல்லத் தொடங்கினாள்.

"நல்லது நீ கோவிலுக்குப் பின் பக்கம் போ.. வழி தெரியும்ல! ஆமா உன் பேரு...."

"நிர்மலா!"

அவள் கோவிலின் பின்பக்கம் செல்லத் தயாரானாள். நாச்சியப்பன் கோவிலுக்குள் நுழைய ஆரம்பித்தான்.

கைலாயநாதர் சன்னதி என்னும் பெயர் பலகை சிறு எழுத்தில் கண்சிமிட்ட உள்ளே கர்ப்பகிருகத்தில் கைலாய நாதராய் லிங்க ரூபம் காட்டி நின்றான் சிவன். பக்கத்தில் உமையாம்பிகை சன்னதி.... அந்த சன்னதிக்கு வடக்கில் நவக்கிரகங்கள்.

பய பக்தியோடு சுற்றிக் கொண்டிருந்தான் அந்த பெண் குறிப்பிட்ட அடையாளத்துக்கு



சொந்தக்காரன்! அவனுக்கு பின்னாலேயே கூட்டிய கையும் மூணு மூணு உதடுமாய் கனகமயில்! நாச்சியப்பனை பார்த்துவிட்டு பார்க்கக் கூடாதவனை பார்த்த மாதிரிக்கு முகத்தை திருப்பிக் கொண்டாள். நாச்சியப்பன் அவளை கவனிக்கவில்லை. அவன் மூளை சுருசுருவென்று இயங்க ஆரம்பித்தது.

"மிஸ்டர் மனோகர்!"

தீர்க்கமாய் அழைத்தான்.

"என்ன சார், என்னையா கூப்பிட்டீங்க?"

"ஆமா... நீங்க தானே மனோகர்? வெளியே உங்க தங்கை நிர்மலாவை யாரோ நாலு தடிப் பசங்க. ஆட்டோ ரிக்ஷாவுல ஏத்திக்கிட்டிருந்தாங்க. அது கத்துனிச்சு. நான் குறுக்க பூந்து விசாரிச்சேன். அது விவரம் சொல்லி உங்க பேர் அடையாளம் எல்லாம் சொன்னிச்சு. அந்த தடிப்பசங்க என்னை மிரட்டினாங்க. நான் உங்களை தேடி வந்துருக்கேன். வாங்க சார் போய் பார்ப்போபோம் ஒரு கை!"

"என்ன சார் ஏதேதோ சொல்றீங்க... நிஜமாவா?"

"அட வாங்க சார், போய் பார்ப்போம்கறேன் ..."

மனோகர் நாச்சியப்பனின் அழைப்பில் தன் கால்களில் நூறு மீட்டர் ஓட்ட வேகத்தைக் காட்டி கோவில் வாசலுக்கு அப்பால் நிர்மலாவை நிற்க சொன்ன இடத்துக்கு வந்த போது வீதியே வெறிச்சோடி போய் ஹோ என்று கிடந்தது.

"ஐயய்யோ என் தங்கையை காணலியே..." மனோகரிடம் புலம்பல்.

"நான் நெனச்சேன். அதே மாதிரி நடந்துடுச்சு. அந்தப் பசங்க விபசார விடுதியை சேர்ந்தவங்க, பம்பாய் டெல்லிக்கெல்லாம் பெண்களை கடத்திக்கறவங்க. போங்க சார் போய் போலீஸ்ல புகார் பண்ணுங்க....."

நாச்சியப்பன் பொய்யாய் வருந்தி, இல்லாத

திங்கலை மூட்டி, மனோகரை போட்டு உலுக்கவும் அவன் "நீங்களும் வாங்க சார்!" என்றான்.

"ஐய்யயோ எனக்கு தலைக்கு மேல வேலை" என்று நாச்சியப்பன் வெட்டவும் மனோகர் ஓட்டமாய் ஓட ஆரம்பித்தான், போலீஸ் ஸ்டேஷனுக்கு.

அவன் இந்தப் பக்கம் நகரவும் நாச்சியப்பன் கோவிலுக்கு பின்புறமாய் நடக்க ஆரம்பித்தான், வீதியில் யாரும் தன்னைப் பார்க்கிறார்களா என்கிற ஊன்றிப் பார்க்கும் பார்வையோடு. இல்லை இதுவரையில் இந்த விபரீதத்தை யாரும் கண்டு கொள்ளாத பொன்னான சூழல் தான்.

நாச்சியப்பன் வேகவேகமாய் அங்கு வந்தான். நிர்மலா அவனை பார்த்துவிட்டு விழிகளை அதிகமாக விரித்தாள். "எங்கே அண்ணன்?" என்று அது வெகு அழகாய் கேட்டது.

"எம்மா உங்க அண்ணனுக்கு காக்கா வலிப்பு வருமா?" நாச்சியப்பன் தன் பேச்சில் புதிதாக ஒரு கொக்கியை மாட்டினான். நிர்மலாவின் முகத்தில் குப்பென்று வியர்வை வந்து பந்தல் போட்டது.

"என்னது எங்கண்ணனுக்கு காக்கா வலிப்பா? அப்படி எல்லாம் ஒண்ணும் வராதே... என்ன சொல்றீங்க நீங்க?"

"அட ஆமாம்மா. நான் விஷயம் சொல்லப் போனா அவனை சுற்றி ஒரே கூட்டம். எட்டிப் பார்த்தா தரையில கைகால் வெட்டி வெட்டி இழுக்க நாக்குல நுரை ததும்ப கிடக்கிறான் உன் அண்ணன்!"

"இருக்காது. நல்லா பாத்தீங்களா? அது என் அண்ணனா இருக்காது. வாங்க போய் பார்ப்போம்."

"அட அவனை கோவில் ஊழியர்களே பெரிய ஆஸ்பத்திரிக்கு எடுத்துகிட்டு போயிருக்காங்க. நீ வா நான் உன்னை அங்க கூப்பிட்டுக்கிட்டு போறேன்." நாச்சியப்பன் சரியாக தனது காரியத்துக்கான பாதையில் அவளை திசை திருப்பி இழுக்க, அவளும் பதட்டத்துடன் அதில் நடக்க



கால் எடுத்த சமயம்...

"அண்ணே... அண்ணே....." ஒரு சேர நாலைந்து சிறுவர்களின் அழைப்பொலி! திக்கென்று இதயம் சுணங்க திரும்பினான் நாச்சியப்பன். கடுமையான குரலில் "என்னங்கடா?" என்றான்.

"நாங்க அடிச்ச விளையாடின கில்லி ஒண்ணு அந்த வில்வ மரத்துல மாட்டிகிச்சு. கொஞ்சம் அந்த மரத்துல ஏத்தி விடுங்கண்ணே...."

ஒரு பொடியன் சொன்ன உண்மையில் தெரிந்த அந்த வில்வமரம் என்ற வார்த்தை சக்கென்று நாச்சியப்பன் மனதில் நங்கூரம் போட்டது.

"என்னாது வில்வமரமா? எங்கேடா?" கேட்டான்.

"அதோ அந்த மரங்களுக்கு நடுவுல, உயரமா நிறைய கிளைகளோட...."

ஊன்றிப் பார்த்தான் நாச்சியப்பன். கையை உற்சாகமாய் சொடக்கி விட்டுக் கொண்டான். மனதுக்குள் ஆனந்த பந்து ஆகாச உயரத்துக்கு எழும்பிய மாதிரி ஒரு உணர்வு.

"போங்கடா... எனக்கு வேலை இருக்கு..." என்றபடி நிர்மலாவுடன் முதலில் அந்த இடத்தை விட்டு நகர ஆரம்பித்தான்.

நிர்மலாவை தங்கமணி வீட்டில் போட்டு உடனடியாக முடக்க வேண்டும். மனோகர் இந்நேரம் போலீசில் புகார் கொடுத்திருப்பான். போலீசார் தேட ஆரம்பித்து விடுவார்கள். இல்லாத ரவுடிகளைத் தேடிக் கொண்டு பம்பாய் வரை கூட போய் வருவார்கள்.

இங்கே கன கச்சிதமாய் காரியத்தை முடிக்க வேண்டும்.

போட்டோ ஃபிலிமை ஆறுமுகம் கடையில் விசேஷமாக சொல்லி கொஞ்சம் பணத்தை கூடுதலாய் தள்ளி பிரிண்ட் போட்டாக வேண்டும். அப்புறமாய் இங்கே இந்த வில்வமரத்தைத் தேடி வந்து அந்த தேவாங்கை ஒரு கை பார்க்க வேண்டும்.

மனதிற்குள் கணக்குப் போட்டபடி வே
வேகமாய் நடந்து ஒரு குதிரை வண்டியை கூப்பி
டான். அதில் நிர்மலாவை ஏறி அமரச் சொன்னா

அவள் முதல் தடவையாக சந்தேக ஊஞ்சலி
ஏறி அதில் ஆட ஆரம்பித்தாள். இருந்தாலும் ஏ
அமர்ந்தாள். இவனும் அதில் ஏறிக் கொள்ள
போன சமயம் எதிரே கனகமயில்!

நாச்சியப்பனையும், அவன் ஏறி உட்கார
போன வண்டிக்குள் நிர்மலாவையும் பார்த்
விட்டு ஒரு மாதிரியாக முகம் சுணங்கினான்.

"இவனுக்குன்னு எப்படித்தான் பொண்ணுங்
கிடைக்கிறாங்களோ?" என்ற கேள்வி அவன் உத
களை பிரித்துக் கொண்டு பலமாகவே பிரசவ
ஆனது.

நாச்சியப்பன் கனகமயிலை ஒரு மாதிரியா
பார்த்தான். இலேசாக சிரித்து மிடறு விழுங்கு
பாவனை காட்டினான். அவன் நிர்மலாவையே
ஊன்றிப் பார்த்தான். ஆனால் தப்பான பெ
போலவே தெரியவில்லை.

வண்டியோ பறக்க ஆரம்பித்தது.

தங்கமணி வீட்டில் சந்திரசேகர் அப்படியே
அட்டைப் பூச்சியாய் சுருண்டு விட்டிருந்தான்
இனி ஜென்ம ஜென்மத்துக்கும் காமம் அவ
உடம்பில் தணலைக் கொட்டாத படிக்கு மன
நடந்து முடிந்த போட்டோ பிடிப்பு சம்பவத்தி
சுற்றி சுற்றி களைத்து விட்டிருந்தது.

"என் ராசா இல்ல. சொல்லிடுப்பா அந்த வி
யத்தை!" தங்கமணி ரவிக்கையை கூட அவ
எதிரே இன்னமும் எடுத்து அணிந்திருக்கவில்லை
ஆனால் கேள்வியை மட்டும் இடைவிடாம
கேட்டுக் கொண்டிருந்தாள்.

சந்திரசேகரோ எல்லா ஆடைகளையும் வேக
மாய் அணிந்து கொண்டு ஓடத் தயாராய் இருக்
கின்ற மாதிரி அவளை கோபம் பயம் என்று இரண்
டும் கலந்த பார்வை பார்த்துக் கொண்டிருந்தான்.

ஊடே வாசலில் குதிரை வண்டி வந்து நிற்கும்



அரவம்.

சந்திரசேகருக்கு வியர்க்க ஆரம்பித்தது. வந்திருப்பது தன்னைப் போல் யாராவது வாடிக்கை கிராக்கியா? இல்லை என்பது போல் நாச்சியப்பன் தலை தென்பட்டது. கூடவே நிர்மலா.

"என்னங்க ஆஸ்பத்திரின்னு இங்க எங்கியோ கூட்டிக்கிட்டு வந்திருக்கீங்க?"

"உஸ் பேசாம வா!"

"நான் வரமாட்டேன். எங்க என் அண்ணன்? உண்மையைச் சொல்லு!"

"அட வாடின்னா?"

பலமான சப்தங்களுடன் உள்ளே நுழைந்த இருவரையும் தங்கமணி விதிர்ப்புடன் ஜன்னல் வழியே பார்த்தாள். கதவை திறந்து கொண்டு நிர்மலாவையும் இழுத்துக் கொண்டு உள்ளே வந்தவனை புரியாத மாதிரி பார்த்துவிட்டு ரவிக்கையைத் தேடி எடுத்தபடி எழுந்திருந்தாள்.

"தங்கம் அந்த ஆள் ஏதாவது சொன்னானா?" ஆர்வமாகக் கேட்டான் நாச்சியப்பன்.

"வாயத்திறக்க மாட்டேங்கறான் நாச்சி. ஆமா யார் இந்த குட்டி?"

"ஆளை பத்ரமாப் பார்த்துக்கோ. எனக்கு வெளிய ரெண்டு முக்கிய வேலை இருக்கு. துப்பாக்கில தோட்டா போட்டு வெச்சிருக்கேன் பார்க்கலையா? தலைகாணிக்கு அடியில தான் இருக்கு! ஏதாவது வீம்பு பண்ணா ரெண்டு பேரையும் சுட்டுத் தள்ளிடு. நான் வந்து விபரமா சொல்றேன்...."

பேசிவிட்டு திரும்ப வேகமாக வெளியேறினான். அவன் அப்படி பேசிவிட்டு அகலவும் நிர்மலா அப்படியே மயங்கி விழாத குறையாக விசும்ப ஆரம்பித்தாள்.

தங்கமணி சூழ்நிலையின் சிக்கலை புரிந்தவள் போல் சட்டென்று தலைகாணியின் கீழே கையை விட்டு துழாவி துப்பாக்கியை எடுத்து இருவர் எதிரேயும் நீட்டியபடி கட்டிலின் மேல் போய்

உட்கார்ந்து கொண்டான்.

இருவரும் உடனே வாயை மூச்சு விடக்கூட பயந்தபடி மூடிக் கொண்டார்கள்.

ஆறுமுகத்தின் ஸ்டூடியோவில் ஒரு நூறு ரூபாயைத் தந்து "விசேஷமான படம்.... எல்லாம் தங்கமணி செட்டப்! பாத்து பெரிசா கேபினட் சைஸ் போட்டுக் குடு! நெகடிவ் படம் எல்லாம் இன்னும் மூணு மணி நேரத்துல கைக்கு வரணும். ஒரு பய படத்த பார்க்கக் கூடாது. உனக்கு என்னைப் பத்தி நல்லாவே தெரியும். ஜாக்ரதை" என்று முண்டா தட்டிக் கொண்டிருந்தான் நாச்சியப்பன். ஆறுமுகம் பயத்தோடு அதைக் கேட்டு மரியாதையோடு ஃபிலிம்ரோலை கேமராவிலிருந்து கழட்டிக் கொண்டான்.

"இன்னும் பணம் நீ போட்டோ தரும்போது தருவேன்" என்று சொல்லிவிட்டு வேகமாக அங்கிருந்து கிளம்பினான்.

சிவன் கோவிலின் பின்புறத்து மரக்கூட்டமும் அந்த வில்வ மரமும் அவனை வா வா என்று வரவேற்பது போல் தனது ஏகாண்ட கிளைகளை விரித்தபடி காற்றில் ஆடிக் கொண்டிருந்தது.

அதற்குக் கீழே இப்பொழுது அவ்வளவாய் யாரையும் காணோம். வானம் இருட்டை செட் அப் செய்யும் சாயங்காலம்.

இன்னும் சில நாளில் அமாவாசை என்பதற்கு தோதாய் வானின் ஒரு மூலையில் துண்டு கீற்றாய் சந்திரன்.

கோவில் யானை தும்பிக்கையை போட்டு துவட்டிக் கொண்டிருக்க, அதைத் தாண்டிக் கொண்டு வில்வ மரத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

அது அவனைப் பார்த்து விட்டு காரணமில்லாமல் முறைக்கின்ற மாதிரி இருந்தது.

'எப்படி இருக்கும் தேவாங்கு?' அவன் மனதில் கேள்வி. வில்வ மரத்தின் பருத்த அடிப்பரப்பில் நின்று கொண்டு தலையை உயர்த்தி மரம் முழுக்க பார்வையை ஓட விட்டான்.

'எங்கே இருக்கே நீ?'- அவனது தேடலின் கேள்விக்கு விடையாய் உச்சாணிக் கொம்பில், வில்வக் காய்கள் தொங்கும் அடர்ந்த புசுபுசுத்த இலைகளுக்கு நடுவே ஒரு சவலைக் குழந்தை போல், ஆனால் தட்டை முகத்தோடு, கூரிய பார்வையோடு ஒரு அட்டையைப் போல் ஒட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தது அது.

## 16

நாச்சியப்பன் பருத்த மரத்தின் அடிப்பாகத்தில் காலை வைத்து அந்த மரத்தின் மேல் ஏற ஆரம்பித்தான்.

பாவம் அந்த ஜீவன்! பகல் வெளிச்சத்தில் அவ்வளவாய் பார்க்கும் திறன் இல்லாத கண்களோடு, அவன் தனக்காகத்தான் மரம் ஏறுகிறான் என்பது புரியாத தினுசில் உடம்பை பந்துபோல் சுருட்டிக் கொண்டு தனது குச்சி போன்ற கைகளாலும், கால்களாலும் கிளை மேல் தேகத்தை இறுகப் பற்றியபடி கிடந்தியிருந்தது அது.

மாந்திரீக உலகத்தில் தனக்கு இருக்கும் மகத்துவம் பற்றி அதற்கு துளி கூட தெரிந்திருக்க நியாயமில்லை! விலங்குகளில் மிக மிக சாதுவான, சற்று கோரமான ஒன்று என்று மட்டும்தான் மனிதர்களுக்கு தெரியும்.

ஆனால் அது சாத்தானின் அம்சம் கொண்ட ஒரு ஜீவன் என்பதும், ஆவிகளை தன் ஊனக் கண்களாலேயே பார்க்கும் திறன் படைத்தது என்பதும் பட்டத்திரி போன்ற சிலருக்குத்தான் தெரியும். அது மட்டுமல்லாமல் அதன் கரம் பட்ட கறுப்பு நிறப் பொருட்கள் அனைத்திலும், தேங்கி நிற்கும் திருஷ்டி விலகிப் போய்விடக் கூடியது என்பது முதல், அதன் குடலை மாலையாக போட்டுக் கொண்டு மாந்திரீக பூஜைகளில் ஈடுபடும் சமயம் கால பைரவன் மனம் மிக மிகக்

குளுமைப்பட்டு வேண்டும் வரம் தருவான் என்பதும் மாந்திரீக உலகின் அசைக்க முடியாத நம்பிக்கைகளில் ஒன்று.

இதைப் பற்றியெல்லாம் துளி கூட தெரிந்திராத நாச்சியப்பன், பட்டத்திரிக்காகவும், அவன் மூலம் தான் அடையப் போவதாகக் கருதும் தங்கத்துக்காகவும் ஒரு இயந்திரம் போல் மரம் ஏறிக் கொண்டிருந்தான்.

கிளைகளில் அவன் ஊர்ந்தும், ஏறியும், தாவியும் வருகின்ற அசைவில் அந்த தேவாங்கு ஒரு கணம் தன் முட்டை நிற விழிகளின் இமையை சிருட்டென்று விலக்கி எதிர் வரும் நாச்சியப்பனை ஒரு பார்வை பார்த்தது.

அந்த அஸ்தமன வெளிச்சத்தில், சூரியனை மேற்கு திருடிக் கொண்டு விட்ட அந்த அந்தி சந்திக் காலத்தில் அதன் பார்வைக்கு மெல்ல உயிர் வந்து கொண்டிருந்தது.

எதிரே ஒரு நிழல் போல் கருப்பாய் ஒரு உருவம் தன்னை நெருங்கும் பயத்தில் அது ஒரு தினுசாய் கத்தத் தொடங்கியது. பயத்தின் வெளிப்பாடாய் அது போட்ட சப்தம் நாச்சியப்பனையே கூட லேசாய் மிரட்டியது.

துணிந்து தன் கையை அதன் எதிரே நீட்டி அதன் மெத்தென்ற முதுகின் மேல் வைத்து ஐந்து விரல்களையும் சக்கென்று பதித்து, அதைப் பிடித்து இழுக்கப் பார்க்க, அது கிளைகளை பிடித்த பிடியை விடாமல் தொடர்ந்து கத்தியது.

"அடச்சீ வான்னா..." - அவன் அதட்டலாய் பலத்தை எல்லாம் திரட்டி இழுக்க அவன் கைகளில் பயத்துடன் சுருண்டு அடங்கியது.

திரும்ப கீழ் இறங்கத் தொடங்கினான் நாச்சியப்பன்.

'அப்பாடா!' என்ற பெருமூச்சு அவன் நாசித் துவாரங்களில்.

சந்திரசேகர் தங்கமணியிடம் கெஞ்சிக் கொண்டு இருந்தான்.



"தங்கமணி நீ நினைக்கிற மாதிரி தங்கம் பத்தி எனக்கு ஒண்ணும் தெரியாது. எங்க டிபார்ட்மெண்ட்டுல தங்கம் இருக்கு, வெள்ளி இருக்குன்னு ஓராயிரம் குறிப்புங்க உண்டு. அதுல நூத்துக்கு தொண்ணூறு பொய். அந்த மாதிரி தான் இதுவும்."

"அது பொய்யா மெய்யாங்கறதை நாங்க பாத்துக்கறோம். நீ குறிப்பை கொண்டா" - தங்கமணியும் அவனை விடுவதாக இல்லை.

"சட்டப்படி அது குற்றம்"

"நீ இங்க வந்திருக்கறது மட்டும் ரொம்ப சரியோ?"

"தங்கமணி என்கிட்ட விளையாடாதே. நான் பொல்லாத ஆளு."

"நான் மட்டும் என்ன லேசான ஆளா? நீ ஈரை பேன் ஆக்கினா, நான் பேனை பெருமாள் ஆக்கறவ. என் நாச்சி உன் முதுகு எலும்புல மூன்னூறு துளை போட்ற கில்லாடி! விஷயத்தை சொன்னா உனக்கு நல்லது. இல்லாட்டி போட்டோ உன் பெரிய அதிகாரிங்க கைல உன் லீலைகளை சொல்லி சிரிக்க ஆரம்பிச்சிடும்."

அவள் அத்தனை தீர்மானமாய் பேசவும், அதுவும் ஒரு ரிவால்வரோடு பேசவும் வேறு வழியில்லாமல் அந்த குறிப்பை தர அரை மனதாய் தலையசைத்தான் சந்திரசேகர்.

நிர்மலாவோ ஒரு கட்டிலின் ஓரமாய் புறாக் குஞ்சு போல் தேம்பலோடு சுருண்டு கிடந்தாள்.

'இவர்கள் என்ன பேசிக் கொள்கிறார்கள்? தங்கம், வெள்ளி என்றெல்லாம் பேசிக் கொள்கிறார்களே? தன்னை என்ன செய்யப் போகிறார்கள்?'

கேள்விகளுக்கு நடுவில் அவள் இதயம் அவள் காதுகளையே அடைத்து விடுவது போல் துடித்துக் கொண்டு இருந்தது. கண்களில் குற்றாலம்!

"ஏய் பாப்பா.... ஏன் அழுவறே. நான் என்ன உன்னை பண்ணிட்டேன். ஆமா என் நாச்சி

உன்னை எதுக்கு இங்க இழுத்துகிட்டு வந்துருக்கு. தொழிலுக்கா?"

"தொழிலுக்கா?" -என்ற அவள் கேள்வி அந்த பெண்ணை ஒரு அழுக்கு அழுக்கியது.

"ஐயய்யோ... நீங்க என்னவெல்லாமோ பேச நீங்களே. அந்த ஆளு என்னை சி.ஐ.டி. போலீஸ்னு சொல்லி ஏமாத்தி இங்க இழுத்துக்கிட்டு வந்துட்டான். எங்க அண்ணன் என்னை தேடிக்கிட்டு இருக்கும். அண்ணே...."

அவள் வயதை மீறி சிறு குழந்தை போலானாள். தேம்பித் தேம்பி புலம்பினாள்.

"பொண்ணு பேர், வயது, உயரம், அங்க அடையாளம் எல்லாம் தெளிவா குறிப்பிட்டு புகார் எழுதிக் கொடுங்க. நாங்க நடவடிக்கை எடுக்கிறோம்"

ஸ்டேஷனில் நிர்மலாவின் அண்ணன் மனோகரிடம் ஏட்டு எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தார். மனோகர் அவன் நீட்டிய மட்டரகமான கோபுரச் சின்னம் போட்ட சாணித்தாள் ஒன்றில் நிர்மலா காணாமல் போன பின்னணியோடு அவள் அங்க அடையாளங்களை அதில் குறிப்பிடத் தொடங்கினான்.

ஏட்டு சாவதானமாக அதை வாங்கிப் பார்த்தார். படித்தார்.

"சார் என்ன சார் ரொம்ப சாவகாசமா படிக்கறீங்க. வேகமா நடவடிக்கை எடுங்க சார்! உடனே ஜீப்பை எடுத்துகிட்டு கிளம்புவீங்கன்னு நெனைச்சேன் சார் நான்..."

"நீங்க நினைச்சா போதுமா? ஜீப் நினைக்க வேண்டாமா? அது இரண்டு நாளா ரிப்பேர்! இன்ஸ்பெக்டரோ இப்ப ஸ்டேஷனில் இல்ல. அவர் உத்தரவு இல்லாம வண்டிய வெளிய எடுக்கவும் முடியாது. என்னை என்ன பண்ணச் சொல்றே? ஒரு நிமிஷத்துக்கு ஒரு தப்பு நடக்கற ஊரா இந்த ஊர் மாறிடிச்சு. இருக்கறதோ பத்தே பத்து போலீஸ்காரங்க. நாங்க யாரைப் பார்க்க, எதைப் பார்க்க?"



ஏட்டின் பேச்சில் ஒட்டுமொத்த இந்திய உபாதையே தெரிந்தது. மனோகர் வெடித்தே விட்டான்.

சார்! நான் உங்க குறையைக் கேட்க வரலை. எப்படியாவது என் தங்கையை மீட்டுத் தாங்க சார் ப்ளீஸ்"

"ஆமா... காணாமப் போகும்போது உன் தங்கை என்ன டிரஸ் போட்டிருந்தா. அதை எழுதலையே?" ஏட்டு பெரிதாக எதையோ கேட்பது போல் கேட்க அவனும் அதை எழுதி நீட்டும் சமயம் கும்மென்ற பெர்ப்யூம் வாசனை அங்கே திடீரென்று நுழைந்தது.

ஏட்டு நிமிர்ந்து பார்த்தார்.

எதிரே ஒரு பெண்!

இருபதை மீறியிராத வயதில், சல்வார் கம்மீசுடன் ஹேண்ட் பாக் சகிதம், நிலா போன்ற முகத்தோடு ஒரு வகிடு எடுத்து தளிர்க்க வாரிய கூந்தலில் ஒற்றை ரோஜா கச்சிதமாய் உட்கார்ந்திருக்க, ஏட்டை பார்த்து இணக்கமாய் வணக்கம் சொல்லியபடி அவர் எதிரே பிரசன்னமானாள்!

"யாரும்மா நீங்க?"

"என் பேரு ஏஞ்சல். ஊர் மெட்ராஸ்! 'சிவரஞ்சனி' பத்திரிகைல இருந்து வந்துருக்கேன். நான் ஒரு ரிப்போர்ட்டர் கம் ரைட்டர்! இன்ஸ்பெக்டர் தேவதாஸைப் பார்க்கணும்"

"அவர் வெளிய போயிருக்காரு. அப்படி உட்காருங்கம்மா" கையை எதிரிலுள்ள ஒரு நாற்காலியை நோக்கி நீட்டிய அந்த ஏட்டு இப்பொழுது சற்று எச்சரிக்கையோடும், பரபரப்போடும் பேசத் தொடங்கினார்.

"மிஸ்டர் மனோகர். கவலைப் படாதீங்க... உங்கள் சிஸ்டரை எப்படியும் கண்டு பிடிச்சடலாம். நான் ரயில்வே ஸ்டேஷன், பஸ் ஸ்டாண்டுக்கெல்லாம் போன் பண்ணி மஃப்டியில இருக்கற எங்க ரோந்து போலீசுக்கு தகவல் தந்துட்டு வரேன்" -என்றபடி டெலிபோனை தேடி ஓட

ஆரம்பித்தார்.

மனோகர் சோர்ந்து போய் அந்த ரிப்போர்ட்டக் கம் ரைட்டர் அருகே உள்ள நாற்காலியில் போய் அமர்ந்து கொண்டான்.

முகத்தில் கலவரப் புயல், மனதில் நிர்மலாவின் குழந்தை முகம் கண்ணீர் விட்டு புலம்புவதாக ஒரு பிரமை.

'அண்ணா என்னை காப்பாத்துண்ணா....' வாஞ்சையாக கேட்டாள். அவனால் அவளுக்கு பதில் கூட சரியாக சொல்ல முடியவில்லை. ஒரு ரிப்போட்டரான அவனுக்குள் ஏதோ சுவாரஸ்யமான அதே சமயம் மிகச் சிக்கலான விஷயம் தான் என்னும் அனுமானம் சுடர்விட, செய்திகளுக்காக நாயாய் அலையும் அவளின் சாமார்த்தியப் புத்தி அவனை விடாது கேள்வி கேட்க ஆரம்பித்தது.

"என்ன சார் ஏதாவது பிரச்சினையா?" சும்மா சொல்லுங்க, என்னால முடிஞ்ச உதவிய செய்யறேன். இன்ஸ்பெக்டர் தேவதாஸ் என்னோட உறவுக்காரர்தான்" - அவன் சொன்ன அந்த 'உறவுக்காரர்' என்ற பதம் அவனுக்கு தெம்பைத் தந்தது.

வாயைத் திறந்து நடந்ததை சொல்ல ஆரம்பித்தான்.

கனகமயிலும் சொல்லிக் கொண்டிருந்தாள்.

எதிரே அவளது ஆசைக்குரிய கணேசன்.

இருவரும் தாமிரபரணிக் கரையோரம் மண் திண்டின் மேல் உட்கார்ந்து கொண்டு இருக்க இருவர் பாதங்களையும் அந்த நதி நீர் தழுவியபடி ஓடிக் கொண்டிருந்தது.

"இன்னிக்கு நான் நம்ப சிவன் கோயிலுக்குப் போய் விட்டு வந்தேன். உனக்கு ஒரு அதிசயம் தெரியுமா? கோவிலுக்கு நாச்சியப்பனும் வந்திருந்தான். கோவிலுக்கு வெளிய ஒரு அழகான பொண்ணு கூட நின்னு பேசிக்கிட்டு வேற இருந்தான். அவனை நினைச்சாலே எனக்கு பத்திக்கிட்டு வருது கணேசா"

தாமிரபரணியை காற்று தழுவ, காற்றோடு கூடி



தாமிரபரணி இருவரின் பாதங்களையும் தழுவ, ஜிலுஜிலுப்பான இதம்பதமான அந்த வேளையில் கனகமயிலின் பேச்சில் மெல்ல தன்னை இழந்து கொண்டிருந்தான் கணேசன்.

"ஆமா... மாடு செத்துப் போனிச்சே, அது எப்படின்னு தெரிஞ்சுச்சா? காட்டுல ஒரு மாடு மந்திரவாதிக்கு பால் கொடுத்திச்சே அந்த விஷயத்தை பண்ணையார்கிட்டே சொன்னியா, அவர் என்ன சொன்னாரு?"

கனகமயில் மிக முக்கியமாய் தான் கேட்க வேண்டிய கேள்வியை கேட்ட அதே சமயம் கணேசன் திடும்மென்று உருமாறத் தொடங்கினான்.

வழக்கமாய் அவனை வந்து வளைக்கும் அந்த தலைவலியில் அவன் நெற்றிப் பொட்டில் வியர்வை குபுகுபு என்று கொப்பளித்து கோடு போட, மனதில் நிழற் படம் போல் விரிந்த காட்சியில் 'பட்டத்திரியின் எதிரில் நிர்மலா கண்ணீர் மல்க நின்று கொண்டு இருக்கிறாள்! பக்கத்தில் நாச்சியப்பன்!

சற்றுத் தொலைவில் கனகமயிலும் போலீஸ் ஸ்டேஷனில் அறிமுகமான எஞ்சல் என்னும் அந்த நிருபர் பெண்ணும்!

பட்டத்திரி ஒரு பெரிய வெட்டரிவாளோடு நிர்மலாவின் கழுத்தை நோக்கி கைகளை ஓங்குகிறான்!'

கணேசன் மனக் கண்ணில் காணும் காட்சியின் உக்கிரம் தாளாமல் 'ஓ' வென்று வாய் விட்டு அலற ஆரம்பித்தான். கனகமயில் விக்கித்துப் போனாள்.

## 17

"கணேசா... ஏய் கணேசா என்னய்யா ஆச்சு உனக்கு? ஏன் இப்படி கத்தறே?"

கனகமயிலிடம் பீதியுடன் கேள்வி பிறந்தது. கணேசன் தன்னை மறந்து கூச்சலிட்டு

விட்ட நிலையில் முகத்தில் வழியும் வியர்வையை வழித்தவனாய், கண்கள் கலங்கிக் கிடக்க, உதடுகளை கஷ்டப்பட்டு பிரித்து அசைத்து. "கனகு எனக்கு பயமா இருக்கு புள்ள!" என்றான்.

"என்னய்யா ஆச்சன்னா, பயமா இருக்குன்னு சொல்றியே? உனக்குள்ள அடிக்கடி தங்கக் காசுங்க தெரியும்ன்னு சொல்வியே, அந்த மாதிரி எதாச்சும் தெரிஞ்சுச்சா?" -கேட்டாள் அவள்.

"தங்கக் காசு தெரிஞ்சா என்னை மீறி நான் எதுக்கு கத்தப் போறேன். வெட்டரிவாள்ல தெரிஞ்சுச்சு......!"

"வெட்டரிவாளா?"

"ஆமாம் பளபளன்னு ஜொலிக்கிற ஒரு அடி நீள வெட்டரிவாள்! அதுவும் அந்த மந்திரவாதி கையில! அதை கொண்டு அவன் ஒரு பொண்ணை வெட்டப் பாக்கறான். பக்கத்துல நாச்சியப்பன். மறைவா நீயும் இன்னொரு பொண்ணும்!"

"நெஜமாவா?"

"ஆமாம் கனகு. எனக்குள்ள எப்பவும் இப்படி மோசமா காட்சி தெரிஞ்சதே இல்லை."

"என்னய்யா சொல்றே? நீ சொல்றதைப் பொய்யுன்னு ஒதுக்கவும் முடியாது. ஏன்னா சொல்ற மாதிரியெல்லாம் நடந்துடுது! இப்ப சொல்றதைக் கேட்டா என் அடி வயிறே குலுங்குது. ஆமா எப்படிய்யா உன்னால இப்படி சொல்ல முடியுது?"

"கனகு! நான் அனுபவிக்கிறது நரக வேதனை. நீ என்னடான்னா சாதாரணமா கேக்கறே. மூளையை யாரோ குச்சி வெச்சு குத்தற மாதிரி ஒரு வலி. என் உடம்பே காணாம போயிட்ட மாதிரி ஒரு பிரமை. நான் என்னான்னு சொல்லுவேன்?"

"நீ ஒண்ணும் சொல்லாதே உனக்குள்ள காளியாத்தாளோ முனீசுவரனோ இருக்குறாங்க! நீ தெய்வத்தோட புள்ளை. ஆமா உன்னால என்னை கல்யாணம் கட்டி குடுத்தனம் பண்ண முடியுமா?"

"காளியாத்தாளுமில்ல, முனீசுவரனுமில்ல, ஏதோ தலைக்கோளாறு. நான் டாக்டருங்களை போய் பார்த்து வைத்தியம் செஞ்சிக்கிடப் போறேன்."

"அதெல்லாம் வேண்டாம். சாமி கோவிச்சக்கும்."

"நீ சும்மா இரு. திரும்பத் திரும்ப சாமின்னுகிட்டு நான் சாமிய கும்புட்றதே கிடையாது. அப்புறம் எப்படி எனக்குள்ள சாமி நுழையும்?"

"எனக்கென்னவோ அப்படித்தான் படுது. ஆமா வைத்தியம் பார்க்கணுமின்னா நூத்துக் கணக்கில செலவாகுமே. பணம் வெச்சிருக்கியா?"

"பண்ணையாரைக் கேட்க வேண்டியது தான்!"

"கேட்டு வாங்கிட்டு வா. நானே உன்னை திருநெல்வேலில நல்ல டாக்டரு கிட்ட கூட்டிப் போய் காட்டறேன். அவரும் இதையே தான் சொல்லப் போறாரு பார்."

"ஏ புள்ள நீயும் நானும் திருநெல்வேலி வரை தனியா போய் வந்தா யாரும் தப்பா பேசமாட்டாங்க....?"

"தெரியாம போய்விட்டு வருவோம். அப்டியே தெரிஞ்சாலும் கவலை இல்ல. நம்பளை சேத்துக்கற வேலைக்கு நாம சிரமப்பட வேண்டாம். ஊரே அந்த வேலையை பாத்து முடிச்சிடும்."

"ஆனாலும் உனக்கு ரொம்ப குறும்பு கனகு...." என்றவன் முதல் தடவையாக அவளது தாமரை போன்ற முகத்தைத் தன் கைகளால் ஏந்தியபடி பார்த்தான்.

சற்று முன் மனக் கண்ணில் தோன்றிய கொடுமையான காட்சியின் பாதிப்புக்கள் நீங்கினவனாய், நிர்மலமாய் கண்களில் காதல் சொட்டச் சொட்ட அவன் அவளைப் பார்த்தான்.

அவளும் ஏறத்தாழ அப்படித்தான். ஆனால் நாணப்பட்டு தலையை சற்று கவிழ்த்திருந்தாள்.

உல்லாசம் தனது கொடியை அவர்களுக்குள் மிக உயர பறக்க விட்ட வேளை தொலைவில் வெகு தொலைவில் தாமிரபரணிக் கரையில் ஒரு

புள்ளியைப் போல் அசைந்து கொண்டிருந்தான், நாச்சியப்பன்!

எதேச்சையாக அந்தப் பக்கம் பார்த்த கனக மயில் தாவணியை வேக வேகமாய் சரிசெய்து கொண்டு கணேசனை விட்டு வேகமாய் ஒதுங்க ஆரம்பித்தாள்.

"ஏன் கனகு?"

"தூரத்துல யாரோ வர்றாங்க...."

"யாரு?"

"யாரோங்கறேன். என்னியே திருப்பிக் கேக்கறியே?" கணேசனும் சுதாரித்துக் கொண்டு மெல்ல கண்களை கசக்கி விட்டுக் கொண்டான்.

"நாச்சியப்பன் மாதிரி தெரியுது!" என்றான்.

"சரி சரி வா வா நாம போயிடலாம். அவன் கண்ணுல பட்டா வம்பு" -படபடத்தாள் கனக மயில்.

இதற்குள் நாச்சியப்பன் அப்படியே திரும்பி கரை ஏறி மரங்கள் அடர்ந்த மயானப் பகுதியை நோக்கித் திரும்ப ஆரம்பித்தான்.

"என்ன இவன் சுடுகாட்டுப் பக்கம் போறான்?" கணேசனின் மனது பதைக்கத் தொடங்கியது.

"யோவ் நீ கொஞ்சம் முந்தி சொன்னியே வெட்டரிவாள் சம்பவம். அதுல இவனும் இருக் கான்ல?"

"ஆமா கனகு....."

"அப்ப இவனுக்கும் அந்த மந்திரவாதிக்கும் ஏதோ சம்பந்தம் இருக்கு."

"எதை வெச்சு சொல்றே?"

"மக்கு மக்கு... நீ சொல்ற எந்த விஷயம் நடக் காம போயிருக்கு? அந்த வெட்டரிவாள் விஷ யத்துல இவனும் தானே பக்கத்தில இருக்கான். அப்ப இவனும் அவன் கூட்டாளிதானே?"

"இருக்கலாம்....."

"இருக்கலாம் இல்ல. அதான் நிஜம். அத்தோட ஒரு பொண்ணு கழுத்தை குறி வெச்சு வெட்ட கைய ஓங்கினதா சொல்றே. அப்படின்னா இவங்க



யாரோ ஒரு பொண்ணை பலி போடப் போறாங் கன்னு அர்த்தம்."

"கனகு அப்படித்தான் இருக்கணும். இப்ப இவன் இந்த சுடுகாட்டுக்கு எதுக்கு வந்திருக்கான்னு பார்ப்போமா?"

"வா போய் பார்ப்போம். ஊருக்குள்ள என்ன வெல்லாமோ நடக்க ஆரம்பிச்சிடுச்சி. மந்திரம் மாயம்னு ஆயிரம் நடக்கும் போல இருக்கு. ஒண் ணுமே புரியலை. ஆமா நீ இந்த மந்திர மாயத்தை எல்லாம் நம்பறியா?"

நடந்தபடியே கேட்டாள் கனகமயில்.

"அப்படின்னா என்னன்னே எனக்கு தெரியாது" என்று வழிந்தான் கணேசன்.

சளசளவென்று கணுக்காலை நனைக்கும் தாமிரபரணியில் சற்று வேகமாய் அதே சமயம் எச்சரிக்கையாய் இருவரும் நடக்க ஆரம்பித்தார் கள்.

ஆற்றோரமாய் திட்டு திட்டான சமாதி களோடு, அந்த சமாதிகளை கீறிக் கொண்டு முளைத்த புற் களுக்கு மத்தியில் காட்சித் தந்தது மயானம். அந்த மயானத்தின் பக்கம் இறந்த வர்களை எரிக்கவும், புதைக்கவும் வருகிறவர்களே கூட அச்சப்படு வார்கள்.

ஆள் நடமாட்டமே இல்லாத அந்தப் பகுதியில் அச்சம் துளியும் இல்லாமல் தனது கால்களை வைத் தான் நாச்சியப்பன்.

தகர கூரைக்கு கீழே ஒரு பிணம் பாதி எரிந்தும் பாதி, எரியாமலும் வெந்து கொண்டிருந்தது. பக் கத்து பிண மேடையின் மேல் ஒரு சவம் முழுமை யாய் எரிந்து அவிந்திருந்தது. மற்றொரு பிண மேடை காலியாக இருந்தது.

வெட்டியானைக் காணவில்லை.

சமீப காலமாய் வெட்டியானால் கூட அங்கே நின்று தன் கடமையை செய்ய முடியாதபடி துஷ்ட சக்திகளின் ஆட்சி அங்கே நடந்து கொண்டி ருப்பதை உணர முடிந்தது.

நாச்சியப்பன் பட்டத்திரியை நினைத்துக் கொண்டான். உடனே பட்டத்திரியின் குரல் அவனுக்குள் ஒலிபரப்பாக ஆரம்பித்தது. நாச்சியப்பனாலேயே அதை நம்ப முடியவில்லை.

"பலே நாச்சியப்பா, காரியங்களை கச்சிதமாக செய்து வருகிறாய். என் திருஷ்டியில் எல்லாம் தெளிவாகத் தெரிகிறது. சந்திரசேகரை வளைத்து விட்டாய். கன்னிப் பெண்ணையும் கைப்பற்றி விட்டாய். தேவாங்கும் கிடைத்து விட்டது. கடைசி விஷயம் இந்த பிணச் சாம்பல் தான்.

அதிலும் எரிந்து கொண்டிருக்கும் பிணம் ஒரு குடும்பத்து தலைப் பிள்ளையின் பிணம். வாலிப வயசில் அநியாயமாக தற்கொலை செய்து கொண்டிருக்கிறான். எரியும் பிணத்தின் தலைமாட்டில் அவன் ஆவி உட்கார்ந்து அழுது கொண்டிருக்கிறது. அதை உன்னால் பார்க்க முடியாது. நீ அந்த எரியும் பிணத்தின் பாதப் பகுதியின் சாம்பலை ஒரு கைப்பிடி அள்ளி எடு.

நமது பூஜைக்கு மிக மிக உகந்தது அது. சாம்பலை எடுக்கும் சமயம் அந்த ஆவி, எரியும் உடம்பை அப்படியே நிமிர்த்தி உட்கார வைக்கும். பயந்து திரும்பி விடாதே. உன்னுள் நான் ஒலி ரூபம் எடுத்து நிற்பதால் அந்த ஆவியால் உன்னைப் பிடித்து ஒன்றும் செய்ய முடியாது.

சாம்பலை எடுத்த மறு வினாடி திரும்பிப் பார்க்காமல் நடந்து வீட்டுக்குப் போய்ச் சேர்.

பிணச்சாம்பலை எந்தக் காரணம் கொண்டும் வீட்டுக்குள் கொண்டு போகாதே. வாசல் நிலைகால் படிமேல் பொட்டலமாய் கட்டி வைத்து விட்டு கால் கழுவிக் கொண்டு உள்ளேச் செல்.

பிறகு சகல பொருள்களோடும், அந்த சந்திரசேகர், கன்னிப்பெண் இவர்களோடு என்னை வந்து பார்." பட்டத்திரியே அவனுக்குள்ளே நுழைந்து பேசுவது போல் ஒரு பாவனையில், அதுவரை தனக்குள் ஒலித்த பட்டத்திரியின் குரலுக்காக ஆச்சரியத்தில் அதிசயித்தவனாய் அந்த



தகரக் கூரையை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

அதே சமயம் கணேசனும், கனகமயிலும் பயத்துடன் மயான வாசலை எட்டியிருந்தார்கள். அதற்கு மேல் போக பயந்தவர்களாய் உள்ளே நடந்து கொண்டிருக்கும் நாச்சியப்பனையே என்ன தான் நடக்கப் போகிறது என்பதை அறிய பார்க்க ஆரம்பித்தார்கள்.

நாச்சியப்பன் எரியும் சவத்தை நெருங்கினான். சடசட வென்று சப்தம் போட்டுக் கொண்டு, இறுக்கமான புகை அணுக்களை உமிழ்ந்தபடி வெந்து கொண்டிருந்த அந்த தேகத்தின் பாதம் பட்டத்திரி சொன்னபடி முழுதும் வெந்து அவிந்திருந்தது.

குறிப்பாக விரல் எலும்புகள் கூட தீயால் நொறுங்கி சாம்பலாகி அங்கே படிந்து கிடக்க, கொஞ்சம் பயத்துடன் தனது இடது கையை நீட்டி அந்த சாம்பலில் கை வைத்தான், நாச்சியப்பன்.

பாதத்துக்கு மேல் இடுப்பு, மார்பு என்று சரியாக எரியாமல் சடசடத்துக் கொண்டிருந்த அந்த பிணக்கூடு, பட்டத்திரி சொன்னது போல் மெல்ல நிமிர்ந்து அமரத் தொடங்கியது. அதை உற்றுப் பார்த்தபடியே தைரியத்தை வலிய வரவழைத்தவனாய் சாம்பலை கூட்டி அள்ளினான். நாச்சியப்பன் எடுக்க விடாதபடி அந்த கூட்டின் எலும்புக்கை அவனை தடுக்க முயற்சி செய்தும் முடியவில்லை.

தூர இருந்து பார்த்துக் கொண்டிருந்த கணேசனும், கனகமயிலும் பயத்தில் அப்படியே உறைந்து போயிருந்தார்கள். சாம்பலை அள்ளியவன் பட்டத்திரி கூறிய மாதிரி திரும்பிப் பார்க்காமல் நடக்க ஆரம்பித்தான். மிக வேகமான நடை.

கணேசனும், கனகமயிலும் ஒரு பருத்த மரத்தின் பின்னால் சட்டென்று ஒளிந்து கொண்டார்கள். அவர்கள் ஒளிந்து கொண்ட வேகத்தில் சரசரவென்று இலை தழை வதங்கும் சப்தம் கேட்க வேகமாக திரும்பிப் பார்த்தான் நாச்சியப்பன்.

# 18

நல்ல வேளை... சட்டென்று கனகமயிலும், கணேசனும் பருத்த மரம் ஒன்றின் பின் புறத்தில் தங்கள் தேகங்களை பதுக்கி விட்டிருந்தார்கள். அதே சமயம் ஒரு ஓணான் ஒன்று அந்த இலை தழைகளுக்கு நடுவில் விண்ணென்று தலையை உயர்த்தியது. நாச்சியப்பன் நிம்மதிப் பெருமூச்சானான்.

அந்த சுடுகாட்டு வாசலில் அவனின் பெருமூச்சு வீசக்கூட பயந்து காற்றின் கூட்டத்தோடு சேர்ந்து கரைய, பார்வை தொலைவில் எழுந்து அமர்ந்து எரியும் அந்த சடலம் மேல் சென்றது.

உடனேயே அவன் காதுகளில் பட்டத்திரியின் ஒலி ரூபம்! "முட்டாள்... உன்னை திரும்பிப் பார்க்காதே என்று சொன்னதை மறந்து சடலத்தைப் பாத்துக் கொண்டு நிற்கிறாயே? நல்ல வேளை ஆவி சான்னித்ய வீச்சத்துக்கு அப்பால் அதாவது தொண்ணூறு தப்படி தாண்டி தெய்வீக அரசமரம் வேர் விட்டிருக்கும் மரக்கூட்ட நிழலில் நின்று கொண்டு பார்த்ததால் தப்பித்தாய்! இல்லையென்றால் நீ உள் வாங்கும் காற்றில் அந்த இளைஞனின் ஆவி கலந்து நுழைந்து உன் உடலின் உயிர் நரம்புக் கூட்டத்தையே போட்டு முறுக்கி விட்டு உன் வாயில் நுரை ததும்ப விட்டிருக்கும்.

நாச்சியப்பனுக்கு அதை கேட்க உதறல் எடுத்தது.

சட்டென்று உடம்பை திருப்பி மயானத்துக்கு முதுகைக் காட்டியபடி நடக்க ஆரம்பித்தான்.... நடையில் அசுர வேகம்.

'கனகமயிலும், கணேசனும் அவ்வளவையும் பார்த்து ஸ்தம்பித்து போயிருந்தனர்.

"யோவ்.... என்னய்யா இது? என்னவெல்லாமோ நடக்குது? இந்த மாடு திருடிக்கு



மயானத்துல என்ன வேலை? வந்தான், சாம்பல் எடுத்தான். அந்த பொணம் என்னடான்னா, உசுர் வந்த மாதிரி விறைச்சு உக்காருது! நம்பளை சுத்தி என்னதான் நடக்குது? எனக்கு ஒண்ணுமே புரியலையே.

-கனகமயில் கணேசனிடம் ஆதங்கப்பட்டுக் கொள்ள கணேசனும் பயங்கலையாத முகத்தோடு அதை ஆமோதிக்க மெல்ல இருவரும் அங்கிருந்து அகல ஆரம்பித்தனர்.

"கணேசா! நம்ப ஊர்ல ஏதோ ஒரு பெரிய காரியம் காதும் காதும் வெச்ச மாதிரி நடக்க ஆரம்பிச்சிருக்கு. அதுல அந்த மந்திரவாதி, இந்த நாச்சியப்பன், அந்த நட்டுவாணி தங்கமணி எல்லாருக்குமே பங்கு இருக்கு. அதை என்னான்னு பாத்துடணும். இல்லேன்னா உன் மனசுல அந்த மந்திரவாதி எவனையோ வெட்ட அரிவாளை ஓங்குன சமயத்துல இந்த நாச்சியப்பன் பக்கத்துல இருப்பானா?" -நடந்து கொண்டே கேட்டாள்.

"ஆமாமா... ஆனா இதுல எல்லாம் எதுக்கு கனகு நாம மனசை செலுத்திட்டு? எனக்கு என் தலைவலியே பெரிய பிரச்சினையா இருக்கச்சே...." கணேசன் சலித்துக் கொண்டான்.

"சும்மா இருய்யா..... எப்பப் பாரு தலைவலி தலைவலின்னுகிட்டு. அது எப்பேர்பட்ட அபூர்வ சக்தி அதைப் போய் பெரிய வேதனையா நினைக்கிறியே?"

"ஆமா. உனக்கு வந்தா தெரியும். மண்டைக்குள் வண்டுங்க பூந்து குடையற மாதிரி...."

"எனக்கு அந்த மாதிரி சக்தி இருந்தா இந்த ஊரையே கலங்க அடிச்சிடுவேன். பெரிய பெரிய மந்திரியெல்லாம் என்னை வந்து பார்த்து 'சுவாமி தயவு செய்து என் எதிர்காலம் பற்றி கூறவேண்டும்னு' மனு போட்டு மண்டி போட வெச்சுடுவேன். நீயொரு பொழைக்க தெரியாத ஆளு!"

"அப்படி பொழைக்கணும்னு எனக்கு அவசிய மில்லை. ஆத்தி! நீ பெரிய லவுண்டியா இருப்பே போல இருக்கே....?"

"அந்த விடு. இந்த நாச்சியப்பன் இந்த சாம்பலைக் கொண்டு போய் என்ன பண்ணப் போறான்? அது நமக்கு தெரிஞ்சாகணுமே...."

"நமக்கில்ல. உனக்குன்னு சொல்லு...."

"ஏய்யா பயந்து விலகறே? ஆம்பளையா லட்ச ணமா நிமிர்ந்து நில்லு. ஆமா எனக்கு முக்கியமா ஒரு விஷயம் தெரியணும். நாச்சியப்பன் வீட்டுக் குள்ற புகுந்த ஒரு மாடு செத்துப் போச்சு! உன் லட்சுமிப் பசுவோ மந்திரவாதிக்கு பால் கொடுத் திச்சு! இதையெல்லாம் கேள்விப்பட்ட உன் பண் ணையார் என்ன சொன்னார்?"

அவள் கேட்ட அந்த கேள்விமுன் கணேசன் வெகு யோசனையோடு மவுனம் சாதித்தான்.

அவள் விடாமல் கிண்டவும் மெல்ல வாயைத் திறந்தான்.

"கனகு நீ நான் சொல்லப் போறதை யார்கிட்டேயும் சொல்லக் கூடாது."

"என்னய்யா பீடிகையெல்லாம் போட்றே? நான் சாதாரணமாத் தானே கேட்டேன்?"

"நீ சாதாரணமா கேட்டிருக்கலாம். ஆனா பண் ணையார் அதை சாதாரணமா எடுத்துக்கிடலை"

"வேற எப்படி எடுத்துக்கிட்டார்?"

"நீ இதை பத்தி யார்கூடேயும் பேசக் கூடாதுன்னு என்னைக் கண்டிச்சார்!"

"ஆச்சர்யமாயிருக்கே... அப்புறம்?"

"அப்புறமா விறு விறுன்னு கொல்லைப்புறம் போனாரு. அங்கே பழைய குதிரை லாயம் ஒண்ணு இருக்கு. அதுல இப்ப குதிரையும் கிடை யாது. ஒரு கழுதையும் கிடையாது.....

அந்த குதிரை லாயத்துக்குள்ற ஒரு ரூம் இருக்கு. பழைய காலத்து தேக்கு கதவு போட்ட ரூம்! உள்ளே எப்படி இருக்கும்னு தெரியாது. ஏன்னா அது எப்பவும் பூட்டியே இருக்கும்."



"அட என்னய்யா இது ஆச்சரியம். குதிரை லாயத்தை கூடவா பூட்டி வைப்பாங்க?"

"என்னைக் கேட்டா? அந்த ரூமுக்குள்ற பண் ணையார் பூந்துக்கிட்டு கதவை தான் போட்டு கிட்டார். பிறகு அரை மணி கழிச்சுதான் வெளியே வந்தார்!"

"என் வரையில அந்த குதிரை லாய அறைக் குள்ற என்னவோ இருக்கு.... நம்ம ஊர்ல எவ்வ ளவோ விவகாரங்கள். மந்திரவாதி, நாச்சியப் பன்னு... இப்ப பண்ணையாரையும் அதுல சேர்த் தாகணும் போல இருக்கே?"

"நா பாரு கனகு... ஊர் விவகாரத்துல மூக்கை நுழைக்க இப்படி அல்லாடாதே. மொத என் தலை நோவைப் பத்தி பேசு"

இருவரும் படு கேஷுவலாக அதே சமயம் சீரிய ஸாக மாறி மாறி பேசியபடியே நடந்து ராஜ மங்கலத்து நுழைவாயிலின் பிரதான அந்த ஆல மரம் வரை வந்து விட்டார்கள்.

பளபளவென்று தார்ச்சாலைகள். பதவிசாய் அதில் பறக்கும் வாகனங்கள்!

அந்த வாகன கூட்டத்தில் அந்த போலீஸ் ஜீப் மட்டும் துண்டாய் பளிச்சென்று தெரிந்தது. உள்ளே டிரைவர் இருக்கையில் ஏஞ்சல்! பக்கத்தில் தேவதாஸ்.

"பரவாயில்லியே... நல்லாவே டிரைவ் பண்றி யேம்மா! ஆமா என்ன விஷயமா இந்த ராஜமங் கலம் வந்துருக்கே? அந்த மனோகரனோட புகாரை விசாரிச்சு ஆக்ஷன் எடுக்கவே நேரம் சரியா போயி டுச்சு, உன் கூட சரியா பேசக்கூட முடியல! ஊர்ல அப்பா அம்மா எல்லாம் சவுக்கியமா?"

தேவதாஸ் வாஞ்சையாய் விசாரிக்கவும் ஏஞ்சல் இறுக்கமாய் பிரேக் பிடித்து ஜீப்பை இளைப்பாற் றினாள்.

"எல்லோரும் சவுக்யம்! இனிமே நீங்க ஓட் டுங்க. ஜஸ்ட் ஏ மினிட். இந்த ஆலமரமும் இது மேலே உக்கார்ந்திருக்கிற பறவைகளும் பார்க்க

ரொம்ப அழகா இருக்கு. ஒரு ஸ்டில் எடுத்திட்டு வந்திட்றேன் அங்கிள். வந்து உங்க கேள்விக்கு விபரமா பதில் சொல்றேன்" - என்றவள் இளைப் பாறிய ஜீப்பை விட்டு இறங்கினாள். இடது தோளில் தொங்கிய காமிரா சகிதம் பெயருக்கேற்ப தேவதை போல் ஆலமரத்தை பார்த்தபடி நடந்தாள்.

எதிரே அந்த மரத்தை தாண்டி வந்து கொண்டிருந்த கணேசன் ஏஞ்சலைப் பார்த்துவிட்டு ஒரு வினாடி திடுக்கிட்டான். அதை கனகமயில் துல்லியமாய் உணர்ந்தவளாய் "என்னய்யா, என்ன விஷயம்?" என்று காதை கடிக்கவும் பதிலுக்கு அவன் காதை திரும்பக் கடித்தான் கணேசன்.

"எனக்கு இந்த பொண்ணு தான் கொஞ்சம் முந்தி என் மனசுல விரிஞ்ச அந்த அரிவாள் வெட்டற காட்சியில உன் பக்கத்துல நின்னுக்கிட்டிருந்த பொண்ணு!"

"நிஜமாவா? இவளைப் பார்த்தா போலீஸ்காரி மாதிரி தெரியுது- இவளா என் கூட...."

"ஆமா இவளே தான்!"

கணேசன் ஊர்ஜிதப் படுத்திய அந்த வினாடியில் ஏஞ்சல் இருவரையும் பார்த்து இலேசாய் புன்னகைத்தாள்.

கனகமயிலின் பூப்போட்ட தாவணியையும் அவள் தலையில் சூடியிருக்கும் மடல் விரிந்த தாழம் பூவின் ஒற்றை மடலையும் கண்டு ரம்மியமாய் ரசித்தாள்.

"லவ்லி!" என்று இதழ்கள் முணு முணுத்தன. தேவதாசும் ஜீப்பை விட்டு இறங்கி வந்தார். தேவதாஸ் அடிக்கடி பண்ணையாரை பார்க்க, பண்ணையார் வீட்டுக்கு வரும் சமயம் காப்பி கொடுத்து உபசரிப்பதெல்லாம் கணேசன் தான்.

அந்த வகையில் ஏற்பட்ட பரிச்சயம் போலீஸ்காரர் என்பதால் பயபக்தியாய் இப்பொழுது அவனிடம் வெளிப்பட்டது. அத்தோடு அவனைப் பற்றி ஊருக்குள் 'குறி சொல்பவன்' -என்பது போல் பேசப்படும் வதந்தி பற்றி அவரும் கேள்விப்பட்டிருந்தார்.

"இவன் எதையாவது சொல்லி வைப்பான். அது நடந்துடும். எல்லாம் காக்காய் உட்கார பனம் பழம் விழுந்த கதை தான் சார்!" என்று பண்ணையார் கூட கிண்டல் செய்தது உண்டு.

எல்லாம் ஞாபகத்துக்கு வர "என்னப்பா இந்த பக்கம், அதுவும் ஒரு பெண்ணோட?" -கனகமயிலைப் பார்த்தபடியே கேட்டார் தேவதாஸ்.

கணேசன் என்ன சொல்லலாம் என்பது தெரியாமல் விழித்தான். ஏஞ்சலோ கனகமயிலின் தாவணியைத் தொட்டுப் பார்த்து, 'என்ன விலை? எங்கே வாங்கியது' என்று இந்தியப் பெண்களின் குணத்தை காட்டிக் கொண்டிருந்தாள். கணேசன் தாறுமாறாக விழிப்பதைப் பார்த்த தேவதாஸ் எச்சரிப்பது போல் பேசினார்.

"ஊர்ல திருட்டுப் பசங்க நடமாட ஆரம்பிச்சுட்டாங்கய்யா. ஜாக்கிரதை! பெண்பிள்ளை தனியா நின்னுகிட்டிருந்தா அவ்வளவுதான். நேத்து சாயங்காலம் கூட ஒரு பொண்ணு நம்ம ஊர்ல காணாம போயிருக்கா. உன் ஜோடியா இந்த பொண்ணு, ஜாக்கிரதையா இருக்கச் சொல்லு."

தேவதாசின் எச்சரிக்கை கணேசனை ஒரு கசக்கு கசக்கியது.

"நம்ம கிராமத்திலேயே சார்?" -ஆச்சர்யமாக கேட்டான்.

"இப்ப நம்ப ஊர் கிராமம் இல்ல. எறத்தாழ டவுன். எல்லாம் தப்பும் நடக்க ஆரம்பிச்சிடிச்சு."

கணேசனுக்கு சட்டென்று மந்திரவாதி ஞாபகம் வந்தது கூறலாமா? என்று யோசித்து பிறகு மனதுக்குள்ளேயே கேள்வியை திருப்பி விட்டு அவரைப் பார்த்தான். பயத்தோடு சிரிக்க முனைந்தான்.

அதே சமயம் 'சிலீர்' என்று தலை வலித்தது. அந்த வழக்கமான வலி. கண்களில் ரத்த சிவப்பு ஓடிவந்து பரவியது. அவன் மனக்கண்ணில் தேவ

தாகம் ஏஞ்சலும் பயணம் செய்யும் அந்த போலீ
ஜீப் ஒரு மைல்கல் மேல் மோதி கவிழ இருவரு
தூக்கி எறியப்படுகின்றனர் தோன்றிய வேகத்தி
அந்த காட்சி அழிய சுயநிலை திரும்பிய கணேச
உடனேயே தேவதாசின் கைகளைப் பிடித்து "ச
தயவு செய்து இந்த ஜீப்ல போகாதீங்க சா
போனா மைல் கல் மேல் மோதி கவிழ்ந்துடு
உங்க உயிருக்கு ஆபத்து சார்" என்றான்.

ஏஞ்சலும் அதைக் கேட்டு ஆச்சர்யத்தோடு
அவன் அருகில் வந்தாள். கனகமயிலுக்கே
அதிர்ச்சி. ஆனால் தேவதாஸோ மிதமான ஒரு சிறி
போடு கணேசனைப் பார்த்தார். பின் பேசினார்.

"நீ விட்ற இந்த கதையை ஊர் வேணா நம்ப
லாம். நான் படிச்சவன். இப்படி ஏதாவது என் மாதிரி
போலீஸ்கிட்டே உன் குறி சொல்ற கப்ஸ
வேலைய வெச்சுகிட்டே பிடிச்சு உள்ற போட்டு
ருவேன் ஜாக்கிரதை" என்றார்.

"இல்ல சார் அவர் தலைவலி வந்து எது சொ
னாலும் அது உடனே நடந்துடுது...." கனகமயில்
இடையில் புகுந்து வக்காலத்து வாங்கிப் பார்த்
தாள்.

தேவதாஸ் அதை லட்சியப்படுத்தின மாதிரி
தெரியவில்லை. ஜீப்பை நோக்கி நடந்தார்.
ஏஞ்சலும் பின் தொடர்ந்தாள்.

"என்ன அங்கிள் இதெல்லாம்? யார் இவங்க
ஜோசியம் மாதிரி என்னவோ சொல்றான் அந்த
ஆளு?"

ஏஞ்சல் கேள்வியோடு ஜீப்பில் ஏற ஜீப்பை
ஸ்டார்ட் செய்தார் தேவதாஸ்.

"அவன் பேரு கணேசன். குறி சொ ங்களே
அந்த மாதிரியான ஆள்!"

"இந்த சாமி, பூதம் பேரால கதையடி ங்களே
அந்த மாதிரியா?" -ஏஞ்சல் கேட் ம் 'எக்
ஸாக்ட்லி' என்றபடி தார்ச்சாலையி ஜீப்பை
ஏற்றி ஆக்ஸிலேட்டரை அழுத்தி மிதி ர் தேவ
தாஸ்.



வில்லில் இருந்து விடுபட்ட அம்பைப் போல
வேகம் பெற்ற அந்த ஜீப். ராஜமங்கலத்தில்
இருந்து பாளையங் கோட்டைக்கு குறி வைத்தது.

"சரி எங்கே வந்தே? என்ன விஷயமா வந்தி
ருக்கே.... சொல்லு" தேவதாஸ் கேட்டார்.

"திருநெல்வேலில ஒரு அரசியல் மாநாடு.
நியூஸ் கவர் பண்ண வந்தேன். அப்படியே
ராஜமங்கலம் வந்து உங்களைப் பார்த்துட்டு போக
வந்துருக்கேன். ஏதாவது ஹாட் நியூஸ் உண்டா?
சொல்லுங்க எங்க பத்திரிகைல போட்டு பிச்சு
உதறிடறேன்." -அவள் கேட்டாள்.

"ஒரு பொண்ணை என் பகுதியில கடத்தியி
ருக்கறதே ஹாட் நியூஸ் தானே?" -தேவதாஸ்
கேள்வி கேட்ட சமயம் எதிரே வந்த வாகனத்திற்கு
வழிவிட வேண்டி சற்று பிரேக்கை அவர் பிடிக்க
அதன்மேல் அழுத்தம் கொடுக்கவும் அது புசுக்
கென்று அமுங்கியது.

'நான் ஃபெயிலியர் மிஸ்டர் தேவதாஸ்!'
என்றது.

## 19

கணேசன் சொன்ன குறி பலித்து விடுமோ? மைல்கல் மீது ஜீப் மோதி கவிழ்ந்துவிடும் என்றானே? - வினாடி நேரத்தில் மனதில் ஒரு சிலிர்ப்பு ஓட தேவதாசிடம் திகைப்பு!

சந்தேகத்தோடு திரும்பத் திரும்ப பிரேக்கை மிதித்துப் பார்த்தார்.

"ஏஞ்சல் திடீர்னு பிரேக் பிடிக்கலை! அந்த கணேசன் சொன்ன மாதிரிதான் நடக்கப் போகுது..." படபடக்க பேசியபடி ஸ்டியரிங்கை வளைத்து எதிர் வரும் வாகனத்துக்கு வழிவிட முயற்சி செய்தார். வேகம் குறையாத அந்த ஒதுங்கலில் அவரின் ஜீப் பாதையோரத்து புழுதி மண்ணில் சீறிக் கொண்டு 'பாளையங்கோட்டை

ஆறு கிலோ மீட்டர்' -என்ற எழுத்துக்களை
காட்டி நிற்கும் மைல்கல் மேல் வேகமாய் மோத
அப்படியே கவிழ்ந்து தேவதாஸையும் ஏந்தலை
பொட்டலமாய் குலுக்கி மண்ணில் விட்டெறிந்
புரட்டியது.

ஏஞ்சல் வீல் என்ற அலறலோடு அவ்வளவா
காயம் இன்றி மயக்கமடைய, தேவதாஸ் முழங்
லுக்கு கீழே ரத்தச் சகதியோடு மயக்கமாகத் துவள
னார்.

சப்தம் கேட்டு விபத்தைப் பார்த்து இவர்களை
தாண்டிக் கொண்டு சென்ற அந்த வாகன ஓட்
தனது வாகனத்தை அமைதிப்படுத்தி ஓரம
நிறுத்திவிட்டு இறங்கி ஓடி வர ஆரம்பித்தான்...

தொலைவில் வயல் மேல் கடலை பிடுங்கி
கொண்டிருந்த இன்னும் சிலரும் ஓடிவர
தொடங்க தேவதாஸ் மயக்கத்தில் முழுவதுமா
கலந்து விட்டிருந்தார்.

கனகமயிலிடம் சொல்லிக் கொண்டு பிரிந்
கணேசன் பண்ணையார் வீட்டை எட்டிய போது
வீடே ஆளரவமின்றி வெறிச்சோடிப் போய் கிட
தது.

அரண்மனையை நிகர்த்த வீடு.

ஐந்து பேர் சுற்றி வந்து பிடித்தாலும் பிடிக்கு
அகப்படாத நாயக்கர் மஹால் தூண்களை
போன்ற வழவழப்பான தூண்கள். அதனால் தூக்
நிறுத்தப்பட்ட மேல் மச்சு.

வீடு முழுக்க ஏ.சி. செய்த மாதிரி ஒ
குளுமை.

அதிசயமாய் மச்சுப்படி ஏறும் மரப்படி வளை
வின் மேல் கம்பீரமாய் பண்ணையார் முத்து
சுந்தரத்தின் தலைப்பாகை தரித்த வரைபடம்.

அங்கங்கே நல்ல தேக்கினால் கடைந்தெடுத்
உருவாக்கப்பட்ட மோடோக்கள். வார்னீஷ் பூச
மலே வழவழ பளபளப்பில் அது தனக்கு வயது
நூறுக்கும் மேல் என்று சொல்லும் விதத்தில் அ
ளுள் கம்பீரப் பழமை.



அதன் மேலெல்லாம் வாடிய பூச்சாடிகள். வேலைக்காரி ரத்தினம் பார்த்துப் பார்த்து செய்ய வேண்டி வேலையில் அதுவும் ஒன்று. கணேச னுக்கு அந்த பூச்சாடியை பார்க்கவும் ரத்தினத்தின் மேல் கோபமான கோபம். அவளைத் தேடத் தொடங்கினான்.

வீடு அநியாயத்துக்கு வெறிச்சோடிக் கிடந்தது.

ஒவ்வொரு அறையாய் புகுந்து பார்த்துவிட்டு இறுதியில் சலிப்போடு மாடி ஏற காலெடுத்தான் கணேசன்.

"ஏதாவது ஆத்திரம் அவசரம்னா கணேசன் மட்டும் மச்சுல வந்து என்னைப் பார்க்கலாம். வேற யாரும் மேல வரக்கூடாது."

என்றோ பண்ணையார் சொல்லியிருந்த அந்த பேச்சு கணேசனுக்கு ஞாபகம் வர மெல்ல படிகளில் ஏறினான்.

இத்தனை வருஷத்தில் ஒரு ஐந்தாறு தடவை தான் பண்ணையார் அறைக்கே அவன் போயிருந்தி ருப்பான். அந்த அறையில் எல்லா வசதிகளும் உண்டு. 'ஒரு பக்கம், டி.வி., ஸ்டீரியோ. இன் னொரு பக்கத்தில் கலர் கலரான பாட்டில்களில் மது. ரெட் கார்பெட்டால் வேயப்பட்ட தரை. நான்கு சிறகுள்ள சீலிங் ஃபேன். மெத்து மெத்தென்ற உருண்டை தலையணைகள்' என்று ராஜபோகமாய் திகழும் அந்த அறையை கணேசனுக்கு மிகவும் பிடிக்கும்.

அப்படி அவனுக்குப் பிடித்த அந்த அறையின் கதவுக்கு முன்னால் போய் நின்றான். பக்கத்து தேக்கு மோடோ மேல் பாடம் செய்து வைக்கப் பட்டிருந்த பொதிகை மலையில் பிடிக்கப்பட்ட புலி கணேசனை வாயைப் பிளந்து கொண்டு வெறித்தது.

தட்டின கதவு திறக்கப்பட எதிரே பண்ணையார் பட்டுச் சட்டையும், புலி நகச் செயினுமாய் வழக்க மாய் தென்படும் தோரணையில் இல்லாமல் நெற் றியில் மையும், குங்குமமும் தரித்தவராய் உடம்

பில் கறுப்பு அங்கி அணிந்தவராய்....!
கணேசனை பார்த்து விட்டு இலேசாய் மு
சுணங்கினார். பார்வையாலேயே எங்கு வந்த
என்று கேள்வி. கதவை முழுவதுமாய் திறக்காம
அரைக்கதவைத் திறந்து கொண்டு உள்
அறையை மறைத்தவராய் நிற்கும் அவரைச் சற்
ஆச்சரியத்தோடு பார்த்தான் கணேசன்.
"ஐயா... வீடு கீழ வெறிச்சோடிப் போய் கிட
குது. ஒருத்தரையும் காணோம். என்ன ஏதுன்
எனக்குத் தெரியலை. அதான் உங்களைப் பார்த்
விசாரிக்கலாம்னு வந்தேன்" - மிடறு விழுங்கிய
பேசினான்.
"நான்தான் எல்லாருக்கும் லீவு கொடுத்
அனுப்பிட்டேன். உனக்கும் ஒரு வாரத்துக்
லீவு...."
"ஐயா என்ன திடீர்னு லீவு தர்றீங்க...."
"லீவுன்னா சந்தோஷமா போறதை விட்டுட்
நின்னு நெளியறியே..." பண்ணையார் அவ
வரையில் அப்படிப் பேசி அவன் பார்த்த
யில்லை.
"ஐயா... எனக்கென்ன வீடா வாசலா? நா
எங்க போவேன். நீங்கதானே எனக்கு எல்லாம்?
குழைந்தான்.
"எனக்கு இங்க முக்கியமான வேலை இருக்
பணம் தரேன். உனக்கு அடிக்கடி தலைவலி வ
துன்னு. சொல்லுவியே. அதுக்கு திருநெல்வே
போய் மருத்துவம் பார்த்துட்டு வா. மொள்ள வ
அவசரமில்ல! அப்படியே வந்தாலும் நான் கூ
பிடாம இந்த மாடி ஏறி நீ என்னை பார்க்க வ
கூடாது. யாரையும் இந்த மாடி ஏற விடவும் கூடாது
என்ன?"
சற்று அதட்டலாய் கேட்டவர் படாரென்
கதவை மூடி விட்டு உள்ளே சென்றார். கணே
னுக்குள் ஒன்றும் புரியாத அதிர்ச்சி. அவன் சற்
நிலை குலைந்த மாதிரி பாடம் செய்து வைத்
ருக்கும் அந்த புலிப் பொம்மை அருகில் போ



அதன் மேல் சாய்ந்து கொண்டு பெருமூச்சு விட்டான்.

கணேசன் 'குழப்பம் ஆச்சரியம் பயம்' -என்ற கலவைகளில் பிடித்து வைத்த பிள்ளையாராய் நின்று கொண்டிருக்க திரும்பவும் கதவு திறக்கப் படும் சப்தம். பண்ணையார் கைகளில் பத்து நூறு ரூபாய்த் தாளுடன் தென்பட்டார்.

"இந்தா பணம்!" என்று அவன் எதிரே நீட்டினார். தயக்கத்தோடு அதை வாங்க கைகளை நீட்டினான். அப்பொழுதுதான் அவரது மணிக் கட்டைப் பார்த்தான். கொத்தாய் தலைமுடியைக் கயிறு போல் சுருட்டிக் கட்டியிருந்தார். அந்த முடிக் கயிற்றில் வெட்டி எடுக்கப்பட்ட ஒரு ஒற்றை சுண்டு விரல் மஞ்சள் துண்டு போல் செருகப் பட்டிருந்தது.

அதைப் பார்த்ததும் பார்க்காத மாதிரி பணத்தை வாங்கிக் கொண்டு படி இறங்குவது போல் பாவ்லா செய்யத் தொடங்கினான். அடி வயிற்றில் ஈட்டி பாய்ந்த மாதிரி ஒரு கலக்கம். சடாரென்று பலமாக தலையைத் தட்டியதுபடி வளைவில் இருந்த பண்ணையார் முத்துச் சுந்தரத்தின் வரைபடம்! வலியோடு அதை ஊன்றிப் பார்த்தான். அது இவன் தலை மோதிய தால் உண்டான அதிர்வில் இடது வலமாய் ஆடத் தொடங்கியது.

அதைப் பிடித்து அதன் ஆட்டத்தை நிறுத்த அவன் முனைய சடாரென்று தொங்கிக் கொண்டு இருந்த நிலையில் அந்தப் படம் தனது தொங் கலை இழந்து கணேசன் மேல் விழ ஆரம்பித்தது.

சுதாரித்துக் கொண்டு அதை தாங்கிப் பிடித் தான். ஆளுயர நல்ல மெல்லிசான மஞ்சக்கடம்பை பலகையில் வரையப்பட்ட படம். நீண்ட சதுரத்தில் அவன் கைகளை போட்டு அழுத்தியது. ஒருவாறு அதைத் தாங்கிப் பிடித்து பக்கத்து படி மேல் லேசாய் ஒருக்களித்து விட்டு நிமிர்ந்தவன் காலில் நரம்பு அறுந்த மாதிரி சுண்டி விடப்பட்டான். இதுநாள் வரையில் அந்த படம் தொங்கிக்

கொண்டு இருந்த இடத்தில் அந்த படத்துக்கு பின்னாலே சுவற்றிலேயே வரையப் பட்டிருந்தது இன்னொரு சித்திரம்! பார்க்க சற்று இலேசா மங்கின மாதிரி இருந்தது.

அந்த சித்திரத்திலும் பண்ணையார் முத்து சுந்தரம் இருந்தார். ஆனால் பக்கமாய் பதினாறு பதினேழு வயது மதிக்கத் தகுந்த அளவில் கஸ்தூ நின்று கொண்டிருந்தாள்.

பட்டுப் பாவாடை தாவணி தரித்து, இடுப்புக்கு ஒட்டியாணமும் மூக்குக்கு புல்லாக்கும் பூட்டி கொண்டு பூப்போல சிரித்தபடி....

ஆச்சரியமாய் பார்த்தான் கணேசன். 'யார் இந்த பெண்? பண்ணையாரின் மகளோ?' மனதில் வினாக்களோடு அந்த படத்தை ஊன்றிப் பார்த் தவன் காதுகளை இப்பொழுது பலமான ஓங்கா சப்தம் வந்து கலைத்தது.

யாரோ கர்ண கடூரமாய் ஒரே சொல்லைத் திரும்பத் திரும்பச் சொல்லி உச்சரிப்பது போன் சப்தம். ஆளரவமற்ற அந்த சூழ்நிலையில் அந் சப்தம் அவனைப் போட்டு பிரட்டியது.

உடனேயே வீட்டை விட்டு ஓடிவிட வேண்டு என்பது போல் பயம் அவன் தொண்டைக் குழியை வந்த அடைத்த போது 'வீல்' என்ற ஒரு பெண் அலறும் சத்தம்!

கணேசன் படிகளில் நின்றபடியே அண்ணாந்து சப்தம் வந்த மாடியின் பண்ணையார் அறையை பார்த்தான்.

கால்களை மேலே இயக்கி அறைக்கு நடப்பதைப் பார்க்கலாமா? இல்லை கீழே இறங் ஓடிப் போய் விடலாமா? அவன் குழம்பித் தவித் சமயம் பண்ணையாரின் அந்த மாளிகை போன் வீட்டுக்குள் கனகமயில் நுழைந்து கொண்டிரு தாள்.

'நிறைய பேர் இருப்பார்கள் கணேசனை எப்ப தனியாய் அழைத்து பேசுவது?' என்றெல்லா குழம்பியபடி வந்து கொண்டிருந்தவள். ஆளர



மற்ற வீட்டுச் சூழலை அதிசயமாய்ப் பார்த்தபடி உள்ளே நுழைந்தாள்.

வீட்டைச் சுற்றி மதில் சுவரின் சகல வாசல் களும் அடைக்கப்பட்டிருக்க கணேசன் திறந்து கொண்டு உள்ளே நுழைந்த அந்த ஒரு கதவு மட்டும் திறந்து கிடந்தது.

அதன் வழியாக உள்ளே தயங்கித் தயங்கிப் பிர வேசித்தவள் கணேசனை உள்ளே தேடி பார் வையை விரட்டவும் அவன் மாடிக்கு செல்லும் மரப் படி வளைவில் பேந்தப் பேந்த விழித்தபடி பண் ணையார் முத்துச் சுந்தரத்தின் வரைப்படத்துக்கு அருகில் நின்று கொண்டிருப்பதைப் பார்த்து விட்டாள்.

அவனைப் பார்த்து ஆர்வமாய் அழைப்பதற்காக வாயைத் திறந்தவளை அந்த ஓங்காரமான சப்தம் அப்படியே பிடித்து அமுக்கியது.

கணேசன் கனகமயில் அங்கே வந்து நிற்பதை பார்த்து விட்டு சற்று பலம் வந்த மாதிரி பெருமூச்சு விட்டான். தன்னை நோக்கி வரும்படி சைகை காட்டினான்.

அவளும் பைய நடந்து படியேறி அவனை நெருங்கினாள்.

"எங்க புள்ள வந்தே?" மெல்ல கேட்டான்.

"யோவ் நீ அருள் வந்து சொன்ன மாதிரியே அந்த இன்ஸ்பெக்டரும், அந்த பொண்ணும் போன ஜீப்பு மைல்கல் மேல மோதி கவிழ்ந்திடுச்சி... அவங்க இரண்டு பேரும் மயக்கமாயிட்டாங்க. இரண்டு பேரையும் திருநெல்வேலி பெரிய ஆஸ் பத்திரிக்கு கொண்டு போயிருக்காங்களாம். அதை சொல்லத்தான் ஓடி வந்தேன். ஆமா இது என்ன பண்ணையார் வீடுதானா இல்லை சுடுகாடா?

என்னய்யா இது யாரோ ஒப்பாரி வைக்கற மாதிரி முணுமுணுக்கற சப்தம்? இந்த படத்தை வேற கழட்டி வெச்சுகிட்டு நிக்கறே?"

கனகமயில் படபட என்று சொல்ல நினைத்ததை எல்லாம் சொல்லி கேட்க வேண்டிய

கேள்வியையும் கேட்டு நிறுத்தவும் "எனக்கு ஒன்னும் தெரியாது... எனக்கு ஒன்னும் தெரியாது" என்று ஒரு பெண்ணின் அழுகுரல் அவர்களை வந்து மோதியது.

இருவரும் சட்டென்று நெருங்கி ஒருவரை ஒருவர் இலேசாய் கட்டிக் கொண்டனர். கனகமயில் கணேசனை பிடித்த நிலையில், பயந்தாலும் ஆர்வமாய் நடப்பதைப் பார்க்கும் துணிச்சலோடும் [ப]டிகளில் ஏறினாள். கணேசனும் எதுவும் பேசாமல் [ப]ின் தொடர்ந்தான்.

அந்த அறையைச் சுற்றிலும் ஜன்னல். எல்லாமே மூடப்பட்டிருந்தது. ஜன்னலுக்கு மேலே காற்று போக்குக்கு தடை இல்லாதபடி சரிவான கண்ணாடி அடைப்பு.

கனகமயில் யோசிக்காமல் பொம்மை புலியைக் கீழே இறக்கி வைத்து விட்டு அதனுள் இரண்டு கால்களை தூக்கி நிறுத்தியபடி வைத்திருந்த அந்த தேக்கு மர மோடாவை இழுத்துப் போட்டு அதன் மேல் ஏறி சரிவான கண்ணாடி அடைப்பை உருவினாள். அந்த கண்ணாடியை கணேசன் வசம் தந்துவிட்டு உள்ளே பார்வையை விட்டாள்.

அறையின் நடுமையத்தில் முழு நிர்வாணமாய் ஒரு பெண். எதிரே மிகமிக வயதான ஒரு பழுத்த தாடியும் மீசையுமான மந்திரவாதி. இருவருக்கும் நடுவில் தணலோடு தகதகப்பாய் ஒரு மண்சட்டி. ஒரு மண்டை ஓடு. அதன் அருகில் அரிசி மாவைப் பிசைந்து உருட்டி வைத்து அதன் மேல் செருகப்பட்ட நிலையில் நிறைய ஊசிகள்.

அந்தப் பெண் எங்கோ வெறித்து பார்த்தபடி நிற்க அவள் கைகளை நாடி பார்ப்பது போல் பிடித்துக் கொண்டு அந்த மந்திரவாதி உக்கிரமாய் ஏதோ முணுமுணுத்து நாடியை விரல்களால் அழுத்துகிறான். அவன் அப்படி அழுத்தும் சமயமெல்லாம் அவள் அலறுகிறாள். அதை வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றார் பண்ணையார்.



## 20

கனகமயில் அதைப் பார்த்து அப்படியே ஸ்தம்பித்து நின்று விட்டாள். கணேசன் பொறுமை இழந்தவனாய் கனகமயிலை அண்ணாந்து பார்த்துப் பேசினான்.

"கனகு என்ன நடக்குது உள்ளே, ஏன் சிலையா நின்னுட்டே?"

கனகமயிலிடம் இருந்து இதற்கு பதிலே இல்லை. அவள் வைத்த கண் வாங்காமல் உள்ளே நடக்கும் அந்த கொடுமையான காட்சியையே பார்த்துக் கொண்டு இருந்தாள்.

அந்த வயதான மாந்திரீகன் அவள் கைகளை நாடி பிடிப்பது போல் பிடித்துக் கொண்டு ஆங்காரமாய் திரும்பத் திரும்ப எதையோ முணுமுணுக்கிறான்.

அந்த பெண்ணோ வெறித்த விழிகளும், விரைத்த தேகமுமாய் எங்கோ பார்த்துக் கொண்டு நிற்கிறாளே யொழிய வாயைத் திறக்க மறுக்கிறாள்.

பக்கத்தில் பரிதவிப்பாய் பண்ணையார்! ஆனால் கண்களிலோ ஏகப்பட்ட எதிர்பார்ப்பு...

கனகமயில் பார்வையை அங்கிருந்து விலக்கி கணேசன் மேல் கொண்டு வந்தாள். அவன் அவளை அப்படியே பிடித்து ஆர்வக் கொதிப்போடு கீழே இறக்கி விட்டு அந்த மோடா மேல் தன்னை ஏற்றிக் கொண்டு உள்ளே நடப்பதை பார்க்க ஆரம்பித்தான்.

நிர்வாண மயமான அந்த பெண்ணை பார்த்த வினாடியில் தீயில் விழுந்த மாதிரி ஒரு பதைப்பு அவனுக்குள். சில நிமிடங்கள் ஊன்றிப் பார்த்தவன் சடாரென்று கீழே இறங்கி கனகமயிலையும் பிடித்து இழுத்துக் கொண்டு மாடிப்படி இறங்கி அதன் வளைவில் தான் சுவற்றில் பார்த்த பண்ணையார் உருவப்படம் அருகே போய் நின்றான்.

பண்ணையாரின் அருகில் பதினாறு, பதினேழு வயதுக் குமரியாய் கஸ்தூரி!

கனகமயிலுக்கு இப்பொழுதுதான் உண்மை புரிந்தது.

"கணேசா நாம உள்ளே பார்த்த பொண்ணு மாதிரியேல்ல இருக்குது?" அவள் கேட்க "அதான் எனக்கும் புரியலை. இது எங்க பண்ணையாரோட தாத்தாவோட படம். படத்துல இருக்கற பொண்ணு எங்க பண்ணையாருக்கு அத்தை முறையாகணும். ஆனா நாம உள்ள பார்த்த பெண்ணுக்கு வயசே ஆகியிருக்கலையே?"

கணேசன் கேள்வியினால் கனகமயில் மேவாயை வருடியபடி கலக்கமாய் யோசிக்க திரும்பவும் அறைக்குள்ளிருந்து அரக்கத்தனமாய் சப்தம் கேட்டது.

இருவரும் திரும்ப மாடி ஏறி ஜன்னல் வழியே பார்க்க தொடங்கினார்கள். அவர்கள் இப்பொழுது பார்க்கும் சமயம் அந்த பெண் மயங்கி தரையில் கிடந்தாள்.

அந்த மாந்திரீகன் வியர்த்து வடிந்திருந்தான்.

"பண்ணையார் இந்த பெண் சாதாரணமானவ இல்ல! மாந்திரீக உலகத்துக்கே சவால் விட்ற ஒரு சக்தி. இந்த நித்ய கன்னியோட ஜாதகம் வேணும். கிடைக்குமா?"

மாந்திரீகன் கேட்கிறான்.

பண்ணையார் உதட்டைச் சுழித்து இல்லையே என்பது போல் பார்க்கிறார்.

மாந்திரீகனிடம் அதை கேட்க முகத்தில் ரவுத்ரம் தொனிக்கிறது.

"இந்த மாந்திரீக உலகத்துல என் சஞ்சாரம் ஆரம்பமாகி அறுபது வருஷங்களுக்கு மேல ஆகுது. வாயு ஸ்தலமான காளாஸ்திரியில ஆறு வயசுல மாந்திரீக தீட்சை எனக்கு ஆரம்பமானது.

எனக்கு நினைவு தெரிந்த அந்த நாள்ல இருந்து இன்று வரை நான் உப்பு, புளி, காரம், இனிப்பை தொட்டு ருசிச்சது இல்லை. அந்த



அளவு இந்த நாக்கை கட்டுப்படுத்தி, உடம்பை என் விருப்பத்துக்கு கட்டுப்படுத்தி வெச்சருக்கேன். என் நரம்புல தளர்ச்சியையோ, மனசுல குழப்பத்தையோ நான் உணர்ந்ததே இல்லை. ஆனால் என்னோட சரீரத்தின் தோல் சுருக்கங்களை என்னால் தவிர்க்க முடியலை.

இந்தப் பெண் மட்டும் எப்படி இந்த எண்பது வயசிலும் இளமையா இருக்கான்னே தெரியலை! சமீப காலமா மாந்திரீக உலக ரகசியங்கள் மறைஞ்சுகிட்டே வருது. எல்லாம் கால மாற்றங்களோட கோளாறு. விஞ்ஞான வளர்ச்சி எங்க உலகத்தோட போட்டி போட ஆரம்பிச்சதன் எதிரொலி!"

அந்த மாந்திரீகனின் கவலை ததும்பும் நீண்ட பேச்சும் பண்ணையாருக்கு மட்டுமல்லாமல் கனகமயில், கணேசன் இருவருக்குமே புரியாத மாதிரியும், புரிந்த மாதிரியும் தோன்றியது.

"சாமி இந்த பொண்ணை ஊர் கண்ல படாம நான் பாதுகாப்பா வெச்சுக்க எவ்வளவு கஷ்டப்பட வேண்டியிருக்கு தெரியுமா? இந்தப் பெண் எனக்கு அத்தை முறை! ஆனா எங்க குடும்பத்துல விஷயம் தெரிஞ்ச சிலர் அந்த உறவு முறைகளையே மறந்துட்டோம். இவங்க எங்க வரையில மந்திரப் பெண்!

நான் பல சமயம் இவங்களை மருத்துவ சோதனைகளுக்கு உட்படுத்தி இந்த அதிசயத்தை உலகத்துக்கு தெரிவிக்க நினைச்சதுண்டு. ஆனா அது என்னால முடியாமலே போயிட்டது! நான் எப்பல்லாம் அந்த முடிவுக்கு வந்தேனோ அப்பல்லாம் குளிர் ஜுரம் வந்து பத்து பதினைந்து நாள் எழுந்திருக்க முடியாதபடி ஆயிடும். இது ஏன் சாமி?"

பண்ணையாரின் விஸ்தாரமான கேள்வி மாந்திரீகன் முகத்தில் புன்னகையைப் பிழிந்து எடுத்தது.

"என்னைப் போல் ஒருத்தன் மிருத்யுஞ்சய ஜபம் பண்ணி தன்னோட பிரம்மச்சர்யத்தையே தாரை வார்த்து ஸ்ரீ காயத்திரிகிட்டே கேட்டு வாங்

கின வர சக்தியாதான் இது இருக்கணும்.

பில்லி, சூனியம் வைக்கத் தெரிஞ்சு, எடுக்கத் தெரிஞ்ச சாமான்ய மாந்திரீகர்களுக்கு இது சாத்யமில்லே. யோகாப்பியாசமும், குண்டலினி மகாசக்தி பிரயோகமும் தெரிஞ்ச ஸ்ரீ வைஷ்ணவனால தான் இதை சாதிக்க முடிஞ்சிருக்கு. அவன் வம்சத்துக்கே துர்தேவதைகள் ஏவலாளிகள். இப்ப வந்துருக்கற பட்டத்திரிக்கும் யட்சநீலிங்கற அந்த தேவதை ஏவலாளி"

மாந்திரீகனின் பதில் பண்ணையாரை கூர்மையாக்கியது.

"[illegible] அந்த பட்டத்திரி எதுக்கு வந்திருக்கான்? [illegible]டியா?"

"[illegible]மா அதுக்குத்தான், ஆனா அந்த தங்கப் புதையலை நேரில் பார்த்து எடுத்த கஸ்தூரி இங்க இருக்கும் போது அவனால இவ துணையில்லாம எப்படி தங்கத்தை எடுக்க முடியும்ங்கறது புரியலை. அவன் எப்படியும் இவளைத் தேடி வரலாம்."

"அப்படி அவன் வந்து அவன்கிட்டே நான் அவஸ்தைப் படக்கூடாதுன்னுதான் ஆந்திராவரை தேடி வந்து உங்களை அழைச்சிகிட்டு வந்திருக்கேன். நீங்கதான் தலைமுறைகளை தாண்டி உள்ள இந்த மர்மத்தை விலக்கி எங்களுக்கு உதவணும்."

"முயற்சிக்கிறேன். நான் மாந்திரீக உலகத்தோட சாதாரண பிரதிநிதி. எனக்கு இங்க வந்து இருக்கற பட்டத்திரி அளவு சக்தி கிடையாது. நான் ரவுத்தர உபாசகன். பட்டத்திரி சத்வ உபாசகன். நான் மயானவாசி. பட்டத்திரி ஆலய வாசி. நான் சமயங்கள்ல கூலிக்கு மாரடிப்பேன். ஆனால் பட்டத்திரி விலை போகற ஆள் கிடையாது. எனக்கு துர்தேவதைகள் மட்டுமே சகாயம் செய்யும். விசாலாட்சி, காமாட்சின்னு தேவ தேவிகள் கருணை கடாட்சமே உண்டு.

என் பரம்பரைக்கே புரியாத வேத ரகசியம் உண்டு. ஆனால் பட்டத்திரி விஷயம் எனக்கு புல்



லரிப்பை தந்து இருக்கற ஒரு விஷயம்.

உலக விஞ்ஞானிகளுக்கே சவால் விட்டிருக்கற இளமை ரகசியம். ஆகையால் இதுல ஆர்வத்தோட அதே சமயம் கவனமா ஈடுபட நான் முடிவு பண்ணிட்டேன். கவலை வேண்டாம்"

"என்ன செய்யலாம்?"

பட்டத்திரியோட நோக்கத்தை முதல்ல நுல்லியமா தெரிஞ்சுப்போம்"

"எப்படி?"

"பட்டத்திரியோட உபாசனா தேவதை யட்ச நீலி மூலமா?"

"நீங்க கூப்பிட்டா அந்த தேவதை வருவாளா?"

"வர வைப்பேன்"

உக்கிரமாய் சொன்ன அந்த மாந்திரீகன் சட்டென்று கண்ணை மூடிக் கொண்டான். கைகளை கொழுக்கட்டை பிடிப்பது போல் மூடி நெஞ்சுக்கு ஒரு சாண் முன்னாலே நிறுத்தி கட்டை விரலை மட்டும் விண்ணென்று நிமிர்த்தி அந்த கட்டை விரலையே உற்று பார்க்க இமைகளை விரித்தான்.

பண்ணையாரிடம் அசாத்ய மவுனம்.

ஜன்னலுக்கு அப்பால் கணேசன், கனகமயிலிடம் கூட அதே அளவு மவுனம்.

நேரம் கடந்து கொண்டு இருந்தது. மாந்திரீகனிடம் எந்தவித அசைவுமில்லை. அந்த நிமிர்ந்து நிற்கும் கட்டை விரல் இப்பொழுது கறுக்கத் தொடங்கி இருந்தது!

வானம் இருண்டு வரும் போல் தோன்றியது.

ஒரு பாறை மேல் மல்லாக்க படுத்தபடி திறந்த விழிகளை ஒரு தடவை கூட இமைக்காமல் படுத்திருந்த கருடராஜ பட்டத்திரி மழை வானம் பார்த்து எழுந்து அமர்ந்தான்.

'பாயும் மின்னலை திசை திருப்பி மாடு விழுங்கிப் பள்ளத்தில் இறக்கினால்? அந்த இருண்ட குகையில் அதன் வெளிச்சம் அந்த குறளி பொம்மையை உயிர்ப்பித்து அசைத்து விடுமா?

இயற்கை ஒளியில் அது என்னவாகும்?

விடையை யட்ச நீலியிடம் கேட்டு விட்டு மின்னலை தன் காந்த மனோ சக்தியால் மாடு விழுங்கிப் பள்ளத்தில் இறக்கித் தான் பார்த்து விடுவது!'

கண்களை மூடிக் கொண்டு பட்டத்திரி யட்ச நீலிக்கு அழைப்பு விடுக்க முதல் முறையாக அந்த அடிமை தேவதை அவன் அழைப்புக்கு வராமல் அவனது ஞானோதயத்தில் வெறுமையைக் காட்டினாள்.

பட்டத்திரி ஒரு வினாடி அப்படியே கொதித்துப் [illegible]ானான்.

'ஏ நீலி....' -வானத்து இடிக்கு சமமாய் முழுங்கி[illegible]ான். அவன் குரல் ஒலி அந்த அனுமன் கரட்டு பாறைகளையே மிரட்டியது.

தொலைவில் சகல காரியங்களையும் வெற்றிகரமாய் முடித்த நிலையில் நாச்சியப்பன் வந்து கொண்டிருந்தான்! அவன் காதுகளையும் குடைந்தது, அந்த சப்தம்!

## 21

எதற்காக பட்டத்திரி இப்படி கத்துகிறான்?

நடந்து வரும் நாச்சியப்பன் ஆச்சரியத்தோடு அனுமன் கரட்டுப் பாறைகளில் ஏறி நடக்கத் தொடங்கினான்.

பட்டத்திரி ஒரு வழ வழப்பான உருண்டையான பாறை மேல் கால்களை அகட்டி வைத்தவனாய் நின்று கொண்டு ஆகாசத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

புசுபுசுவென்ற அவனது அடத்தியான தலை முடிகள் அவிழ்ந்து வீசும் காற்றில் அல்லாட, கையி ரண்டையும் முதுகுப்புறமாய் கோர்த்துக் கட்டி நிற்கும் பட்டத்திரியின் தோரணை நாச்சியப்பனை சற்று கலக்கியது.

"பட்டத்திரி...... பட்டத்திரி...." - அழைத்தான்.



பட்டத்திரியின் பார்வை நாச்சியப்பன் மேல் திரும் பியது. ஆனால் முகத்தில் கலையாத கோபம்.

"என்னாச்சு பட்டத்திரி, ஏன் அப்படி கத்தினே? நீ கேட்ட எல்லாம் தயார்! நரபலிக்கு பொண்ணு கூட கிடைச்சிட்டா, நல்ல தளதளன்னு...."

பட்டத்திரியிடம் பதிலே இல்லை. நாச்சியப் பனின் கருத்தை கேட்ட சந்தோஷமும் இல்லை. உக்கிரமாய் நிற்கும் பட்டத்திரி மேல் இப்போது வானம் உணங்கிச் சிந்தியது. சடசட படபட வென்று நீர் முத்துக்கள் வேகமாய் அம்பாரமாய் கீழிறங்கின. அவன் மேனி கழுவின. அவ்வப்போது 'பளார் பளார்' என்று கன்னத்தில் அறைகின்ற தினுசில் மின்னல்.

எங்கோ ஒரு பச்சை மரம். அதன் மேல் இடி சப்தத்தோடு கூடி மின்னல் இறங்க அந்த மரமே பற்றி எரியத் தொடங்கியது. அந்த சப்தத்தில் அந்த அனுமன் கரட்டுப் பாறைகள் எல்லாம் கூட நடு நடுங்கிப் போக நாச்சியப்பன் ஓடிப் போய் ஒரு பருத்த சப்பாத்திக் கள்ளி கூட்டத்தின் ஊடே புகுந்து நின்றான்.

"பட்டத்திரி என்ன ஆச்சு உனக்கு, ஏன் இப்படி கத்தினே?" - அங்கே போய் நின்றபடி திரும்பவும் விடாமல் கேட்டான்.

பட்டத்திரியோ பதில் பேசாமல் திரும்ப கண்களை இழுக்கிறான்.

மந்திரங்களை மனது உச்சரிக்க யட்சநீலிக்கு அவன் திரும்பவும் அழைப்பு விடுக்க இந்த முறை யும் அவள் வரவில்லை.

பட்டத்திரி திரும்பவும் இடி பாய்ந்த மாதிரி கத்தத் தொடங்கினான்.

"யட்ச நீலி.... யட்ச நீலி... ஏய் யட்சி... நீசத் தேவதையே, என்னை ஏய்க்கப் பார்க்கிறாயா? ஒரு யானை முடி போதும் உன்னை கட்டி இழுத்து வந்து இம்சிக்க... வந்துவிடு. வா.... வா...."

பட்டத்திரியிடம் கோபம் கூடிக் கொண்டே போக குரலிலும் உக்கிரம் தொனித்தது. அந்த

உக்கிரம் அவன் ஜெபித்த மந்திரத்தில் கலந்து யட்ச நீலி என்னும் அந்த தேவதையை, காற்று மண்டலத்தில் ஒலி வேகம் எடுத்துச் சென்று அழைக்கப் போனது. அந்த தேவதையோ, பண்ணையார் வீட்டில் அந்த கிழட்டு மாந்திரீகன் முன் மண்டியிட்டிருந்தாள்.

"ருத்ரகேசி... நான் புறப்படுகிறேன். என்னை விட்டுவிடு! நீ இங்கு என்னை கால பைரவாஷ்டகம் பாடியும், ககன மந்திரம் சொல்லியும் அழைத்துப் பேசிக் கொண்டிருப்பது கருட ராஜ பட்டத்திரிக்கு தெரிந்தால் உன்னைத் தொலைத்து விடுவான்.

அவன் உன் சக்திகளை அரை மணியில் முடமாக்கி உன்னை சித்தசுவாதீனம் இழக்கச் செய்வான். ஸ்ரீ காயத்ரியோடு நினைத்த மாத்திரத்தில் கலக்க முடிந்தவன்." யட்சநீலி 'ருத்ரகேசி' என்று உணரப்பட்ட அந்த மாந்திரீகன் முன் புலம்பிக் கொண்டிருந்தாள். ருத்ரகேசியிடம் அதைக் கேட்க கலக்கம்.

"நீலி... உனக்கு என் நன்றிகள். உன்னால் பட்டத்திரி பற்றியும் அவன் நோக்கம் பற்றியும் தெரிந்து கொண்டேன். நீ போகலாம். என்னை சந்தித்த விஷயத்தை நீ பட்டத்திரியிடம் கூறாதே. இது நான் கோரும் உறுதி...."

"அது மட்டும் முடியாது. பட்டத்திரிக்கு நான் மறைப்பது தெரிந்து விட்டால் நான் மேலும் ஏழு ஜென்மத்துக்கு தலை எடுக்க இயலாதபடி என்னை மயான சூலிக்கு ஏவலாள் ஆக்கி விடுவான்...."

"கவலைப்படாதே. அப்படி ஆக்க[illegible]ால் நான் உன்னை விடுவிக்கிறேன். மயான ரா[illegible]்யத்தில் நான் தான் அரசன். மயான சூலி என் த[illegible] தேவி."

"பார்க்கலாம். நான் வருகிறேன்." [illegible]ங்கிருந்து காற்றில் பயணப்பட்ட அந்த தேவ[illegible] அடுத்த வினாடியே கருடராஜ பட்டத்திரியின் [illegible]னக் கண்ணில் விசும்பலோடு தோன்றினாள்.



"ஏய் நீச தேவதையே எங்கே போய் ஒழிந்தாய்? அழைத்த அழைப்புக்கு உடன் வரத் தவறி உன் கடமையை மறந்து விட்டாய்! உன்னை......"

பட்டத்திரி ஆங்கார வயப்பட்டு கைகளில் கட்டியிருந்த யானை முடியை அவிழ்க்கப் போனான்.

"பட்டத்திரி என்னை மன்னித்துவிடு. அவசரப்படாதே! என்னை ஒரு மாந்திரீகன் தனது கட்டுப்பாட்டு எல்லைக்குள் இழுத்து நிறுத்திவிட்டான். மீண்டு வர பெரும் பாடாகி விட்டது."

யட்ச நீலியின் கதறலில் உண்மை இருப்பதாகப்படவே கருடராஜ பட்டத்திரி நீலியை சாந்தப்படுத்தும் விதமாக 'யார் அவன்?' என்று கேட்டான்.

பட்டத்திரி பாறையை விட்டு இறங்காமல், பின்னால் கட்டிய கைகளை விலக்கியிராமல் முக பாவங்களில் யட்ச நீலியுடன் பேசிக் கொண்டிருந்தான்.

நாச்சியப்பன் அதை ஆச்சரியமாக பார்க்கவும் அவன் காலடியில் வந்து நின்றது வில்வாத்திரி, தனது இரட்டை நாக்கை நீட்டி அவன் கால் விரல்களை சீண்டியது.

திடுக்கிட்ட நாச்சியப்பன் கால்களை விருட்டென்று நகர்த்த சரசரவென்று அது அவன் கால்களில் ஏறி இடுப்பில் தாவி பின் முதுகு வழியாக தோள் பட்டையை எட்டிப் பிடித்தது.

இதுதான் எனக்கு ஏற்ற இடம் என்பது போல் உட்கார்ந்து கொண்டு தன் முகத்தை மிரண்டு போய் விழிக்கும் நாச்சியப்பன், முகத்துக்கு நேரே திருப்பிக் கொண்டு பார்த்தது. பிறகு நாக்கை உள்ளிழுத்து வெளியே நீட்டியபோது அதன் பேரபோலா வடிவ உறுதியான வாயின் அண்ணங்களில் நாச்சியப்பன் தன் வீட்டு உத்திரத்தில் கண்டு எடுத்த நெளி நெளியான மிகச் சிறிய சாவிகளை கொண்ட சாவிக் கொத்து.

தேவதாஸ் மயக்கம் நீங்கி கண் மலர்த்தியிருந்தார். டிரிப்ஸ் அவரது இடது கை வழியாக உடம்புக்குள் இறங்கிக் கொண்டிருந்தது.

சுற்றிலும் சில போலீசார்! குறிப்பாக டி.எஸ்.பி. பழனிராஜ்.

"ஹௌ ஈஸ் மிஸ்டர் தேவதாஸ். டு யு ஃபீல் எனி பெய்ன்?" வாஞ்சையாக காப்பைக் கழட்டி கைகளில் வைத்துக் கொண்டு கொண்டு கேட்டார்.

தேவதாசிடம் கரிசனமான மறுப்பு. கூடவே ஏஞ்சல் என்ன ஆனாள் எனும் ஆர்வத்துடிப்பு.

"சார் ரிப்போர்ட்டர் ஏஞ்சல் எப்படி இருக்காங்க?" மிகக் கஷ்டப்பட்டுக் கேட்ட கேள்விக்கு ஏஞ்சலே விடையாக வந்து நின்றாள். அங்கங்கே கூட்டல் குறியாக ஒட்டப்பட்டிருக்கும் பிளாஸ்திரிகள் அவளுக்கு ஆபத்து ஒன்றுமில்லை. இலேசான காயம்தான் என்றன!

"ஐயாம் வெரிசாரி ஏஞ்சல், வெரிசாரி." - தேவதாஸ் உண்மையாகவே வருத்தப்பட ஏஞ்சல் புன்னகையோடு அதை அங்கீகரித்தாள்.

"நோ அங்கிள், இது எதிர்பாராம நடந்த விபத்து. இதுல உங்க தப்பு ஒண்ணுமில்லை என்று அவள் சொன்ன அதே சமயம் அவள் மூளையில் கணேசன் பளிச்சிட்டான்.

"அங்கிள்.... நமக்கு இப்படி ஆகும்னு சொன்ன அந்த கணேசனை நினைச்சு பாத்தீங்களா? ரியலி ஒரே ஆச்சரியமா இல்லை?" ஏஞ்சல், கணேசனை நினைத்து பரவசப்பட்ட படி கேட்டாள்.

பக்கத்தில் டி.எஸ்.பி. இருக்கிறார் என்பது ஞாபகத்துக்கு வர, தன் நினைப்பை கட்டுப்படுத்தியவளாக முக்கியமான விஷயத்துக்கு வந்தாள்.

"அங்கிள் உங்களுக்கு இப்படி ஆயிடுச்சே, அந்த மனோகர் கேஸை யார் இனிமே டீல் பண்ணுவா?" - கேட்டாள்.

தேவதாசிடம் பதில் பேச முடியாத தவிப்பு. ஆனால் டி.எஸ்.பி. அதற்கு இணக்கமான பதில் தந்தார்.

"பாப்பா... போலீஸ் டிபார்ட்மெண்ட்டுல தேவதாசைப் போல ஆயிரம் இன்டெலெச்சுவல்ஸ்



உண்டு. ஒருத்தர் இல்லேன்னா இன்னொருத்தர். டோண்ட் ஒர்ரி." அந்த பதில் ஏஞ்சலை திருப்திபடுத்தின மாதிரி தெரியவில்லை.

பழனிராஜ் நகர்ந்து கொள்ளவும் ஓடிப்போய் தேவதாசின் காதை குடைய ஆரம்பித்தாள் ஏஞ்சல்.

"அங்கிள் நான் உடனடியாக அந்த கணேசனைப் பார்க்கணும்."

தேவதாஸ் அதைக் கேட்டு அந்த நிலையிலும் இலேசாய் சிரித்தார்.

"என்ன அங்கிள் அவன் பேர்ல உங்களுக்கு இன்னமும் நம்பிக்கை வரலியா?"

கேள்வியை ஆமோதிக்கும் ரகமாய் புருவங்களை தாழ்வாக வளைத்து கண்களில் தனது கருத்தை காண்பித்தார்.

தேவதாஸ் தன் தரப்பு விளக்கத்தை சொல்லிக் கொண்டிருந்த அதே வேளை அந்த மருத்துவமனையை தேடியபடி கணேசனும் கனகமயிலும் வந்து கொண்டிருந்தார்கள்.

இருவரையும் பார்த்த மாத்திரத்தில் ஏஞ்சலுக்கு மயக்கம் வராத குறை.

நான் உங்களை பார்க்கணும்னு நெனைச்சுகிட்டிருந்தேன். இப்பதான் இன்ஸ்பெக்டர் அங்கிள் கூட பேசிக்கிட்டிருந்தேன்."

ஏஞ்சல் தான் எப்பொழுதும் தோளில் மாட்டியிருக்கும் ஹேண்ட்பேக்கை பக்கத்து மெடிசின் ட்ரே மேல் வைத்தவளாய் கனகமயிலை தேவதாஸ் அருகே அழைத்துப் போனாள்.

கணேசன் தேவதாஸை பயத்தோடு பார்த்துக் கொண்டிருந்தான்.

அப்படியே அந்த அறை முழுக்க ஒரு நோட்டம் போட்டான். தேவதாசுக்குள் சொட்டு சொட்டாய் இறங்கிக் கொண்டிருக்கும் குளுக்கோஸ் ட்ரிப்ஸை பார்த்து செருமாந்தவனாய், சுழலும் ஃபேனையும் பார்த்து காற்றுபட்டு முகம் சிரித்தவனாய் பார்வையை அந்த அறை முழுக்க சுற்றிச் சுழல

விட்டவன் ஹேண்ட் பேக்கை பார்த்த வினாடியில் என்னவே போல் ஆனான். உடனேயே நெற்றிப் பொட்டில் சுரீர் என்ற அந்த வலி!

சட்டென்று நெற்றிப் பொட்டை பிடித்தபடி அங்கேயே மண்டியிட்டு தனது வழக்கமான வலி வேதனைக்குள் நுழைந்த அவன் மனக்கண்ணில்

அந்த ஹேண்ட் பாக்கினுள் மூச்சு விடவே சிரமப்பட்டபடி கோபக் கொதிப்போடு, உடம்பை நெளிக்க சிரமப்பட்டுக் கொண்டிருந்தது ஒரு இளவயதுக் கருநாகம்!

## 22

ஏஞ்சலின் கைப்பையில் அடைப்பட்டுக் கிடக்கும் கருநாகத்தின் கோமேதகக் குண்டு மணி அளவிலான கண்களில் தான் சுதந்திரம் அடைந்தே தீர வேண்டும் என்பதற்கான வெறி பளபளப்பது போல் ஒரு தோற்றம். சரியாக இந்த சமயம் பார்த்து மிக எதார்த்தமாய் ஏஞ்சல் பேக்கை திறக்க அந்த பேக்கின் ஜிப்பை அசைக்கிறாள்..........

'ஸ்ஸ்ஸ்ஸ்' -அப்பப்பா என்ன ஒரு பயங்கர எழுச்சி.

அந்த சப்தம் வரை படர்ந்த காட்சி தனக்குள் விரிய பயத்தோடு அப்படியே பக்கத்து நாற்காலி மேல் தலையை பிடித்துக் கொண்டு போய் உட்கார்ந்தான் கணேசன்.

கனகமயில் அதை மிகத் துல்லியமாய் கணக்கிட்டாள்.

"ஏய்யா, திரும்ப ஏதாச்சும் மனசுல தெரிஞ்சுச்சா?" கேட்டாள்.

"ஆமா!"

இன்ஸ்பெக்டர் தேவதாஸ் கண்களிலும் அவனது தலைவலித் தடுமாற்றத்துக்கான காரணம் தெரிந்து கொள்ள ஆர்வம் பளபளத்தது.

கனகமயில் அவனை ஊக்கினாள்.

"வந்து இந்தம்மாவோட அந்த கைப்பைக்குள்ள



ஒரு கருநாகம் புஸ் புஸ்ஸுன்னு மூச்சு விட்டுக்கிட்டு உடம்பை பெறட்ட முடியாம அவஸ்தைப்பட்டுகிட்டு இருக்குது. இவங்க அப்ப பார்த்து பேக்கோட வாயை திறக்கப் போறாங்க!"

-அவன் பதிலால் ஒரு வினாடி ஏஞ்சல் தீயை மிதித்த மாதிரி ஆனாள்.

"என்னது.... என் ஹேண்ட் பாக்ல கருநாகமா? வாட் எ ஹாரிபிள்?" முணுமுணுத்தபடி தன் பேக்கையே சந்தேகத்தோடு பார்த்தாள். இன்ஸ்பெக்டர் தேவதாஸ் முகத்திலும் அதை கேட்க பதட்டம். கனகமயில் இதுதான் சாக்கு என்று பிடித்துக் கொண்டாள்.

"இந்த தடவையாவது இவர் சொல்றத நம்புங்க. இவர்கிட்ட ஒரு அபூர்வ சக்தி இருக்குது. நா அதை காளியாத்தாளோ இல்லை முனுசாமியோன்னு சந்தேகப் படறேன். ஆனா இவரு அதை சாதாரண தலைவலின்னு நினைக்கிறாரு. அது மட்டுமில்ல இந்த தலைவலி போகணும் வைத்தியம் பாத்துக்கணும்னு துடிக்கிறாரு. நான் தான் அதுக்காக அழைச்சிக்கிட்டு வந்தேன். அது மட்டுமல்லீங்க. நீங்க எங்களை நம்புனா உங்ககிட்ட நிறைய விசயம் பேச வேண்டியிருக்கு......"

ஏஞ்சல் சட்டென்று தேவதாஸைப் பார்த்தாள். அவர் கண்கள் நம்பிக்கையோடு அவளைப் பார்த்தன. அதே சமயம் அந்த ஹேண்ட்பாக் மேல் வேறு தாவியது.

கனகமயில் அது புரிந்த மாதிரி அந்த ஹேண்ட் பாக்கை கைகளில் எடுத்து ஜிப்பை திறக்காமல் அதன் பருத்த அடிப்பாகத்தில் கைகளை கொண்டு பிசைந்தாள். பேனாவும், ரூபாய் நோட்டுச் சில்லறைகளும் இருப்பதை உணர முடிந்தது. அவள் மூச்சில் குளுமை!

"உள்ற இப்ப ஒன்னுமில்லே. ஆனா இனி மேல் அவர் சொன்ன மாதிரி அந்த பாம்பு வந்து உக்காந்துக்கலாம்......"

"அது எப்படி அவ்வளவு தீர்மானமா சொல்றே?" ஏஞ்சல் கேட்டாள்.

"எல்லாம் அனுபவம் தான். இவர் சொல்லி எது நடக்காம போயிருக்கு? இப்ப நீங்க நம்பித்தான் தீரணும். இன்னும் ஒண்ணு சொல்றேன். எங்க ஊருக்கு புதுசா ஒரு மந்திரவாதி வந்துருக்கான். அவன் ஒரு பொண்ணை அரிவாளால வெட்டப் போறான். அந்த சந்தர்ப்பத்துல அதைப் பயத்தோட பார்த்தபடி நானும் நீங்களும் அங்கே இருக்கிறோம்!

உங்களை இனிமே என்னால ஒரு மூணாவது நபரா நினைக்க முடியாது. நாங்க இனிமே செய்யப் போற காரியங்கள்ல உங்க பங்கும் இருக்கு. இதை என் கணேசனோட சக்தியால நாங்க முன்னாடியே உணர்ந்திட்டோம்"

ஏஞ்சல் முகத்தில் அதைக் கேட்டு ஆச்சரிய ரேகைகள்.

"ப்ளீஸ் புரியும்படி சொல்லுங்க....."

"சொல்லத்தானே வந்துருக்கோம். முதல்ல இந்த அறையோட கதவுகளை மூடுங்க. ஒரு நர்ஸ், ஆயா, காதுங்கள்ல கூட நாம பேசப்போற விஷயம் விழுந்துடக் கூடாது......"

"ஏஞ்சல் விநாடிகளை வீணாக்க விரும்பாமல் வேகமானாள். அவள் காதுகளோடு கூடி தேவதாசம் அந்த நிலையிலும் அனைத்தையும் கேட்க ஆயத்தமானார். கனகமயிலும் கோர்வையாக சொல்ல தயாரானாள்.

"ஒரு நா எங்க லட்சுமி பசு தானா அனுமன் கரட்டுப் பக்கம் போய்க்கிட்டிருந்துச்சு. நாங்க பின்னாடியே போனோம். அப்ப...."

கனகமயிலின் வர்ணனையில் சிக்கிய அனுமன் காடு இப்பொழுது பட்டத்திரியின் கோபப் பார்வையில் பாறைகளெல்லாம் தூள் தூளாகிப் போக, பிரண்டைச் செடிகளும், சப் பாத்திக் கள்ளிகளும் பற்றிக் கொண்டு எரிய சர்வ நாசமாகும் போல தோன்றியது.



ஒரு பருத்த பாறை மேல் பத்மாசனமிட்டபடி யட்சநீலியோடு பேசி முடித்த களைப்போடு, அனுமன் கரட்டை தன் பார்வையால் மிரட்டிக் கொண்டிருந்தான் பட்டத்திரி. பக்கத்தில் லேசான பயத்தோடு நாச்சியப்பன்.

"பட்டத்திரி உனக்கு என்ன வந்துச்சு? இப்படி கடுகடுன்னு மாறிக்கிடக்கிறியே, ஏதாவது விபரீதமா?"

ஆமாம் என்பது போல் பட்டத்திரி தனது சடை பிடித்த தலைமுடிக்கற்றைகளை கைகளால் வருடியபடி நாச்சியப்பனைப் பார்த்தான்.

"என்ன விபரீதம்?"

"என் யட்சநீலியே எனக்கு தண்ணி காட்டின விபரீதம். அவளை இன்னொருத்தன் தன் வயப் படுத்தி என்னை பற்றி விசாரிச்சிருக்கான் நாச்சியப்பா......"

"நெஜமாவா? நீ கண்ணை மூடிக்கிட்டு யார் கூடயோ பேசுவியே அந்த தேவதையவா?"

"ஆமா.... என் உபாசன சக்தி தேவதையான என் யட்சநீலியை ருத்ரகேசிங்கற ஒரு சாதாரண மாந்திரீகன் தன் வயப்படுத்திட்டான்! மாந்திரீக ராஜ்யத்துல நான் தான் ராஜான்னு நெனச்சகிட்டு இருந்தேன். எனக்கு போட்டிகளும் உருவாயிட்டாங்க. அது மட்டுமில்ல நம்முடைய லட்சியக் குறியான அந்த தங்கத்தை குறி வெச்ச அவங்களும் நடக்க ஆரம்பிச்சருக்காங்க. ஆமா யார் அந்த பண்ணையார்?"

பட்டத்திரி தனது பதிலின் இறுதியில் எழுப்பிய கேள்வி நாச்சியப்பனை இலேசாய்க் கீறியது.

"என்ன நீ.... எதை எதையோ பற்றி சொல்லிட்டு கடைசியிலே பண்ணையார் கிட்ட வந்து நிக்கறே?" கேட்டான்.

"ஆமா இப்போதைக்கு நம் முதல் எதிரி அந்த பண்ணையார் தான், அப்புறமா தான் ருத்ர கேசி....."

"பண்ணையாருக்கும் இதுக்கும் என்ன

சம்பந்தம்?"

"முட்டாள். பண்ணையார் வீட்லதானே நித்ய கன்னி கஸ்தூரி இருக்கா? அப்ப அவனுக்கில்லாத தொடர்பா?"

"பட்டத்திரி என்ன நீ. கத்தி போச்சு, வாளு வந்துச்சு கதையா என்ன என்னவோ சொல்றே?"

"நடப்பதை சொல்லாம இருக்க முடியுமா? தங்கத்தை தேடி நீயும் நானும் அந்த சந்திரசேகரும் மட்டுமே முயற்சி செய்த காலம் மலை ஏறிப் போயாச்சு நாச்சியப்பா. இப்ப நாம மூணு பேரும் ஒண்ணாகி ஒரு முனையாகிட்டோம்.

மறு முனையில அந்த பண்ணையார் ருத்ர கேசிங்கற ஒரு அல்ப மயானவாதியோடவும், கஸ்தூரிங்கற நித்ய கன்னியோடவும் நம்பள மாதிரியே புறப்பட்டுட்டான். இனியும் காலம் தாழ்த்தினா தொலைஞ்சோம்......"

"வாஸ்தவம் தான். மளமளன்னு காரியத்தை செய்வோம். நான் கடத்திக்கிட்டு வந்த பொண்ணோட அண்ணன் போலீசுக்கு போயிருக்கான். போலீஸ் ஜரூராயிட்டாங்க பட்டத்திரி!"

"நீ ஒரு மடையன். எதுக்கு அந்தப் பொண்ணோட அண்ணனை போலீசுக்கு நீயே போகச் சொன்னே? பேசாம விட்டிருக்கறதை விட்டுட்டு... இப்ப போலீசை வேற சமாளிச்சாகணும்......"

"தப்பு பட்டத்திரி... நான் ஒரு நாடறிஞ்ச திருடன். இந்த மாதிரி விஷயத்துல நான் முந்திக்கலேன்னா போலீஸின் சந்தேகப் பார்வையிலே நான் விழும்படியாயிடும். அதுக்காகத் தான் அப்படி செஞ்சேன்......."

"சரி சரி போகட்டும். எல்லா பிரச்சனைகளுக்கும் ஒரே விடிவு அந்த குறளி தான்"

"எந்தக் குறளி..... மாடு விழுங்கிப் பள்ளத்துல விழுந்து கிடக்கே அந்தக் குறளியா?"

"ஆமா. குறளி என் வசமானா வரப்போற ஒவ்வொரு எதிரியோட நிலையும் பரிதாபமாயிடும். நம்மை எதிர்த்து வர்றவன்களை குறளி



கவனிச்சுக்கும். நாம் தங்கத்தை குறி வெச்சு நடக்கலாம். ஆமா தங்கம் இருக்கற இடம் பற்றிய குறிப்புகளை அந்த சந்திரசேகர் தந்துட்டானா?"

"தந்துட்டான். ஆனா ஒண்ணும் புரியலை. ஒரு முக்கியமான கேள்வி பட்டத்திரி. என் வீட்டு உத்தரத்துல நான் கண்டு எடுத்த சாவிக் கொத்து. உன் வில்வாத்திரி கிட்ட எப்படி வந்தது? அதுக்கும் தங்கத்துக்கும் சம்பந்தமுண்டா?"

"நீ குறிப்பைக் கொடு. நான் உனக்கு புரிய வைக்கிறேன்"

நாச்சியப்பன் தன் அடிமடியில் வேட்டியோடு போட்டு சுருட்டி வைத்திருந்த அந்த குறிப்புகள் அடங்கிய ஜெராக்ஸ் காப்பியை வெளியே எடுத்தான்.

விரித்தான்.

நெல்லை மாவட்டம் முழுக்க உள்ள மலைகள், குன்றுகள், புராதன இடங்கள், கனிம வளப் பகுதிகளைப் பற்றிய அடையாளங்கள், சரித்திர கால நகரம் பற்றிய சான்றுகள் என்று குறிப்பு விஷயம் நீண்டு கொண்டே போன தொடர்ச்சியில் சிவப்பு மையினால் அடிக்கோடிட்டிருக்கும் ராஜமங்கல கிராமம் பற்றிய விஷயம் சுருக்கமாக பத்து வரிகளில் முடிந்திருந்தது.

"கட்டபொம்மன் தனது வசந்த கால நாட்களை சில சமயம் விரும்பிக் கழித்த இடமாம் இக்கிராமம். இக்கிராமத்து அனுமன் காடு மிகப் புராதனமானது. பல்லவர் காலத்து 'காளமுகர்' என்னும் கொடிய இனத்தவர் இந்த காட்டில் ஒளிந்திருந்து வாழ்ந் திருந்த இடமிது.

இங்கு பொன் ஆபரணமும், காசும் தவலை தவலையாய் மறைந்து கிடப்பதாய் அறியப் படுகிறது. பேயும் பிசாசும் அதைக் காவல் காப்ப தாகவும் உணரப்படுகிறது. 1921-ம் வருஷம் கார்த் திகை மாதத்தில் அவைகளை சிலர் கண்டெ டுத்ததாகவும், பின்னர் எடுத்தவர்கள் பேய் பிசாசு களால் உபாதைக்கு உள்ளானார்கள் என்றும்

தெரிய வருகிறது.

இதுவரையில் குழப்பமில்லாமல் புரிந்த அந்தக் குறிப்பு இதற்குமேல் தமிழின் வலிமையைக் காட்டிச் சிரித்தது.

"கரிசல் முடிவில் புரசை விளைவில் புனிதன் பார்வையில் முரசம் உண்டு! முரசம் உள்ளே விஷயம் வேண்டிட விரைக அனுமன் கரட்டு நடுகல். நடுகல் நாலு கல், நாலு கல்லில் ஒரு கல்லே ஒளிக்கல்! ஒளிக்கல் உரைக்கும் உண்மைகள்!"

ஓரளவே தமிழறிந்த பட்டத்திரி அந்தக் குறிப்புகளை சரியாக படிக்கக் கூட முடியாமல் குழம்பினான்.

"ஒண்ணும் புரியலையே" என்று முணுமுணுத்தவன், நாச்சியப்பா நீ கவலைப்படாதே. நான் யட்சநீலிகிட்ட கேட்கறேன்" என்றவனாய் கண்களை இடுக்கி சட்டென்று உருமாறினான்.

கைகளில் காற்றில் சடசடத்தது அந்த குறிப்புகள் அடக்கிய தாள்.

'சரணம் சரணம்' என்றபடி இந்த முறை அவன் அழைப்பிற்காக ஓடோடி வந்தாள் அந்த தேவதை.

## 23

வந்து நின்ற யட்சநீலியை மனக்கண்ணில் தீர்க்கமாய் பார்த்தான் பட்டத்திரி. பின்னர் அவளது மனா உரையாடல் ஆரம்பமானது.

"யட்சநீலி.... நான் இந்த ராஜமங்கலம் வந்த நோக்கம் மிக விரைவில் ஈடேற உள்ளது" என்றபடி சந்தோஷமாய் புஜங்களை குலுக்கி விட்டுக் கொண்டான்.

"நல்லது!" இது யட்சநீலியின் பதில்.

"உன்னை நான் இப்பொழுது அழைத்திருப்பது முக்கியமான விஷயத்துக்காக...."

"என்ன?" நீலி பணிவாகக் கேட்டது.

"அந்தத் தங்கப் பாத்திரங்கள் இருக்குமிடம் தெரிய வந்து உள்ளது. அந்த குறிப்பு ஒரு பாட்டாக உள்ளது. பொருளை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை."

"அதற்கு நான் என்ன செய்யட்டும்?"

"பாடலைப் படிக்கிறேன். இடத்தை இப்பொழுது நீ சொல்"

"அப்படியே செய்கிறேன்!"

"பாடலைப் படிக்கவா?"

"உம்!"

"கரிசல் முடிவில் புரசை விளைவில் புனிதன் பார்வையில்..."

"போதும் பட்டத்திரி. வரி வரியாய் நீ வாசித்தால் போதும். நான் பொருள் சொல்கிறேன். கரிசல் முடிவில் என்றால் கரிசல் காட்டின் முடிவில் என்று பொருள்! புரசை விளைவில் என்றால் புரச மரங்கள் வளர்ந்துள்ள இடத்தில் என்று பொருள்....."

"பலே! புனிதன் பார்வையில்... என்றால்?"

"தெய்வ சான்னித்தியத்தில்... அதாவது அங்கு அமையப் பெற்றிருக்கும் சுடலை முனியின் பார்வையில் என்றாகிறது!"

"சுடலை முனியனா? நள்ளிரவானால் குதிரை ஏறி சுருட்டு பிடித்தபடி ஊர்க் காவல் புரிகிறேன் என்று ஊர் எல்லையை சுற்றி வரும் அந்த வல்ல கண்டன் பார்வையிலா?"

"ஆமாம்... அவன் பார்வையில் தான் அங்கே ஒரு மத்தள முரசம் இருக்கிறது. அந்த முரசின் தோல் பாறையை கிழித்து விட்டுப் பார்"

"அதற்குள்ளே என்ன இருக்கிறது?"

"போய் பார்த்து தெரிந்து கொள்"

"சரி பாடல் இன்னும் தொடர்கிறதே?"

"படி!"

"முரசம் உள்ளே விஷயம்! விஷயம் வேண்டிட விரைக அனுமன் கரட்டு நடுகல்! நடுகல் நாலுகல் நாலுகல்லில் ஒரு கல்லே ஒளிக்கல்! ஒளிக்கல் உரைக்கும் உண்மைகள்!"

"அதாவது முரசில் நீ காணும் விஷயம் உனக்கு

நேரடி இடத்தைக் காட்டாது. அது ஒரு குறிப்பு
அந்தக் குறிப்பின் பொருளைத் தெரிந்து கொள்ள
நடுகல்லைக் கண்டுபிடி.
நடுகல் கூட ஒரு கல் அல்ல. மொத்தம் நாலு
கல். அந்த நாலு கல்லில் ஒரே கல்லான ஒளி
கல்லின் கீழ்தான் உண்மை ஒளிந்துள்ளது."
"யட்சி.... குழப்பாதே! நேரடியாக விஷயத்
துக்கு வா. ஒளிக்கல் என்றால்?"
"நடப்பட்ட நாலு கல்லில் ஒரே ஒரு கல் மட்
டும் பிரகாசமாய் இருக்கும். அந்த கல்லுக்கு கீழே
தான் உனக்குத் தேவையானது உள்ளது."
"கற்கள் எல்லாமே ஒன்று போலத்தானே
இருக்கும். இதில் ஒரு கல் மட்டும் எப்படி
ஜொலிக்க முடியும்? ஜொலிக்க அது என்ன வைரக்
கல்லா?"
"எனக்குத் தெரியாது. பாட்டுக்கு மட்டும்
பொருள் சொன்னேன்."
"அப்படியானால் ஒளிக் கல்லுக்கு கீழேயா
தங்க பாத்திரங்கள் உள்ளன?"
"அதை நீதான் பார்த்துத் தெரிந்து கொள்ள
வேண்டும்."
"ஆரம்பத்தில் இருந்தே இந்த விஷயத்தில் நீ
மூடு மந்திரமாய் பேசி வருகிறாய். நீ என் அடிமை
என்பதை மறந்து எஜமான துரோகம் செய்கிறாய்
என்றாவது ஒருநாள் நீ உன் துரோகத்திற்கு பலி
யாக நேரிடும்."
பட்டத்திரியின் கோபக் கொதிப்பான பேச்சின்
முன் யட்சநீலி சற்று அர்த்தமுள்ள மவுனம் சாதித்
தது.
"என்ன நீலி.... பதிலைக் காணோம்?" -பட்டத்
திரி நிமிண்டினான்.
"பட்டத்திரி நீ என்னை தவறாக புரிந்து
கொண்டு விட்டாய்"என்று வருத்தம் தோய்ந்த
குரலில் யட்சநீலி தன் விளக்கத்தை துவக்கியது.
"பரந்த இந்த பிரபஞ்சத்தில் என் போன்ற அமா
னுஷ்யத் தேவதைகளின் சக்தி ஒரு எல்லையோடு



ப்படுத்தப் பட்டிருப்பதை நீ மறந்து விட்
மானுட வாழ்வில் எப்படி ஒழுக்க விதிகள்,
ிய தர்மங்கள் அனுசரிக்கப்பட வேண்டிய
யோ அப்படி இந்த மாயாலோக சஞ்சாரி
க்கும் சில கட்டுப்பாடுகளும், விதிகளும்
ப்பது உனக்கு தெரியாதா?" யட்சநீலியின்
க்கம் பட்டத்திரியை கோபப்படுத்தியது.
"போதும் உன் விளக்கம். வெறும் மனிதனாய்
ந்து வேளை வந்தால் வெறும் மனிதனாகவே
ந்து இந்த பிரபஞ்ச காற்றில் கரைந்து போய்
க் கூடிய சாதாரண மனிதர்களிடம் உன் விளக்
ாடுபடும்.
நான் வாழ்க்கையை குடைந்தவன். வாழ்க்
க்கு முன்பும், பின்புமான இறப்பையும், பிறப்
யும் சலித்து ஆராய்ந்து உலகின் அற்புத ரக
ங்களை உணர்ந்தவன்.
ஒப்பற்ற ஹையக்ரீவன் அருளுக்கு பாத்திர
ப் போகிறவன். எனது சொர்ணாபிஷேக
ற்சி என்ன சாதாரண விஷயமா? எனக்கு இம்
டில் உதவுவது உனக்கும் சாபம் தீர்க்கும்
ிய விஷயமல்லவா? நான் சர்வ சித்தியும்,
ன முக்தியும் பெற்று விட்டால் உன்
விகளுக்கு நன்றியாக உனக்கு நீ விரும்பும்
த்தை தருவேனே......? இதெல்லாம் ஏன்
க்கு புரியவில்லை? உன் சக்தியால் நிமி
ில் இடத்தை காட்டி என்னை வியப்படையச்
்வதை விட்டு விட்டு அன்றாடம் என்னிடம்
ு கேள்விகள் கேட்கச் செய்கிறாய்"
யட்சநீலி பட்டத்திரியின் அந்த ஆதங்கத்தின்
் நீண்ட மவுனத்தை ஒரு அர்த்தத்துடன்
ளிப்படுத்தியது.
"ஏன் பேச மாட்டேன் என்கிறாய்? இதற்குத்
னே உன்னை நான் உபாசித்தேன்? உன்னை
் வசப்படுத்த, என் மாந்திரீக தவ வாழ்வு மங்
் வாழ்வாய் அமைய நான் இருந்த விரதங்கள்
தனை? பூஜித்த விரதங்கள் தான் எத்தனை?

சந்தித்த துயரங்களுக்கும் எல்லை இல்லையே.
மயான பத்ரன் எத்தனைமுறை உன்னை, நா
உபாசிக்கும் சமயம் எனக்கு இடைஞ்சல் செ
தான் தெரியுமா? மூச்சு முட்ட நான் வாயால் கக்கி
ரத்தத்துக்கு ஒரு அளவே கிடையாதே.......

பாதரசத்தை அடி வயிற்றில் அப்படியே சிந்த
மல் சிதறாமல் கட்டி வைத்து உடம்பின் ஜெ
இயக்கத்தையே என் விருப்பத்துக்கு வளைத்
உன்னை நான் பூஜித்த அந்த நாட்களை எண்ண
பார்....."

பட்டத்திரியின் ஆயாசம் விட்டால் ஒ
மாமாங்க அளவு நீளும் போலத் தோன்றியது. யட்
நீலி அதற்கு இணங்கின மாதிரி பேசத் தொட
கியது.

"பட்டத்திரி உனது வருத்தத்தில் அர்த்
மில்லை. உன்னிடம் வேகம் இருக்கும் அள
விவேகம் இல்லை. அறிவு உள்ள அளவிற்
ஞானம் இல்லை. இப்பொழுது கூட நீ செய்
வேண்டிய முக்கிய காரியங்கள் எவ்வளவோ
உள்ளது. தங்கத்தை அடைய வேண்டிய குறியா
முயற்சியில் நீ அவைகளை மறந்து விட்டாய். உ
போன்றவர்கள் மறந்து போவதும், இறந்
போவதும் ஒன்றுதான்."

"என்ன சொல்கிறாய்?" -பட்டத்திரி வினா
போடு கேட்டான்.

"அதுவும் பாஸ்கர பட்டத்திரியின் ஆத்ம
வுக்கு வழி கண்டாயா? அந்த ஆத்மாவுக்கு கர்ம
செய்வது முக்கியமில்லையா? சொர்ணலிங்க
தகடு அப்பொழுது தானே உனக்கு தடையின்
கிடைக்கும்? அது கிடைத்தால்தானே தங்கத்
நீ தகுந்த பாதுகாப்பு சக்திகளோடு எடுக்க முடியு
எண்ணிரண்டு பதினாறு சக்திகளின் எதிர்ப்
சமாளிக்க என்ன வழி என்று யோசிக்காமல் பா
டுக்கு பொருள் கேட்டு வந்து விட்டாயே? நா
பொருள் சொல்லி இடம் தெரிந்து விட்டா
போதுமா? உன்னால் அதை எடுத்து விட மு



?"

யட்சநீலியின் அந்த சரியான கேள்வி பட்டத்
யை சக்கென்று பிடித்து நிறுத்தியது. நெடு
ம் எதுவும் பேசாமல் யோசித்த பட்டத்திரியின்
து இப்பொழுது யட்சநீலியை நினைத்து
சாய் மகிழத் தொடங்கியது.

"நீலி..... சரியான கேள்வியைக் கேட்டு
னை தூக்கி நிறுத்தி விட்டாய். நல்லது நீலி,
து. இனி என் ஒவ்வொரு அசைவையும் நீயே
னித்து என் வேலையை வரிசைப் படுத்தித்
அதன் படி செய்து விடுகிறேன்.

"இப்பொழுதாவது என்னைப் புரிந்தாயே...
ச்சி பட்டத்திரி! நாளைக்கே நீ பாஸ்கர பட்
திரிக்கு கர்மம் செய். ஒரு தகுந்த பிராமணரைக்
ண்டு அதர்வண வேதத்தின் முக்கிய சாரம்
றைக் கூட விடாமல் கர்மம் செய். நாளை அமா
சை!

ஓடும் தாமிரபரணியில் நீ விடும் எள்ளும், தர்ப்
யும் பாஸ்கர பட்டத்திரியை ஆவி லோகத்
கு இட்டுச் செல்லும்.

பிண்டச் சோற்றை மாடு விழுங்கிப் பள்ளத்தை
றியுள்ள பாறைகள் மேல் இறைத்து காக்கை,
ருவிகளை விழுங்கச் செய். கருட மந்திரத்தை
டனேயே ஜெபிக்கத் தொடங்கு!

உனது கர்மம் திவ்யமாய் நிறைவேறினால் மாடு
ழுங்கிப் பள்ளத்துக்கு மேலே கருடன் வந்து வட்
மிடும். அது வந்து வட்டமிடும் போது மீண்டும்
ள்ளத்தில் இறங்கு. சொர்ணலிங்க தகட்டை பட்
த்திரியின் கூட்டிலிருந்து எடுத்து வைத்துக்
காண்டு பள்ளத்தின் எலும்புக் கூடுகளுக்கும்,
ண்டங்களுக்கும் நீ வைத்துவிடு..."

"அப்படியானால் அந்த குறளி....."

"அதுவும் எரிந்து சாம்பலாகட்டும்."

"அந்த குறளியை வசப்படுத்தி என்னை
திர்க்க வருபவர்களை அழிப்பது தானே என்
நோக்கம்.....?"

"அவசியமில்லை. நான் சொன்னதை செ
குறளியின் துணையைவிட பெரியது நீ பெ
போகும் ஹைரண்யவன் அருள். அது கிடைத்து வி
டால் அதைவிட வேறு வரம் உனக்கு தேவை
இல்லை......"

"என்ன நீலி நீ.... குறளியை வசப்படு
தானே நான் நரபலிக்கான சர்வ ஆயத்தங்களோ
இருக்கிறேன்."

"திரும்பவும் சொல்கிறேன். அது அவ
மில்லை! உன் நரபலியை நீ தங்கத்தை பெ
வதற்காக செய். தங்கத்தை தீண்டும் சமயம் ய
வது ஒருவர் இறந்தே தீர வேண்டும். உன் நரப
பூத சாந்தியாக அமைந்து எவரும் இறவாத வ
ணம் தடுக்கட்டும்....."

"நல்லது......"

"எச்சரிக்கை செய்கிறேன். ஒரு முக்கி
விஷயம். இந்த முயற்சியில் உன் விதி முடி
கூடும். ஜாக்கிரதை!" - யட்சநீலி இறுதியாக கூறி
அந்த கருத்தைக் கேட்டு பட்டத்திரி உடனே
திடுக்கிட்டான்.

"என் விதி முடியக் கூடுமா? எனக்கு ஆயுள்
காலம். எண்பத்து நான்கு வருடங்கள்! இது எ
ஜாதகப் பதில், தெரியுமா உனக்கு?"

யட்சநீலி அதைக் கேட்டு வருத்தத்தோடு
சிரித்தது.

"ஜாதக பலன்கள் மனிதர்களுக்குத் தா
மனித வரையறையை மீறி பிரபஞ்ச ரகசியங்களை
தெரிந்து கொண்டு விட்டவர்கள் கிரகங்களின்
கருணையை விசேஷமாக பெற்றவர்கள். கி
கத்தின் கருணை குறைந்து போனால் உன் நிலை
எப்படியும் ஆகக் கூடும்......"

"அப்படியானால் என் வரையில் நவக்கிரக
நாயகர்களின் கருணை குறைந்து விட்டதா?"

"ஆமாம்..... சோதனைக்குரிய காலம் இ
உனக்கு. உன் அஷ்டமத்தில் போன பஞ்சமியில்
குந்தே சனி சஞ்சாரம் செய்யத் தொடங்கி வி



...ன் பட்டத்திரி"

"என்னது எனக்கு அஷ்டம சனியா?" - பட்
...த்திரி அதைக் கேட்டு அப்படியே தொறுங்கி விட்
...டான்.

மனது தளர்ந்து அப்படியே பாறை மேல் சரிந்து
விழுந்தவனை நாச்சியப்பன் ஆச்சரியமாக பார்த்
...தான்.

"பட்டத்திரி நான் வந்ததுல இருந்தே என்னை
...ீ குழப்பு குழப்புன்னு குழப்பறே. என் கூட பேச
...றதை விட நீ கண்ணை மூடிகிட்டு முணு முணுக்
...கறதுதான் அதிகமா இருக்கு. உன் யட்சநீலி என்ன
...தான் சொல்றா" - கோபத்தோடு கேட்டான். பட்டத்
...திரி சுதாரித்து நிமிர்ந்தான். யட்சநீலி விலகிக்
...கொண்டு விட்டிருந்தாள்.

"நாச்சியப்பா சந்தோஷத்தை அடைஞ்சிட்
...டோம்னு நினைக்கற சமயத்துல கதையே திசை
திரும்பிடுச்சி" என்றான் பட்டத்திரி.

"என்ன பட்டத்திரி சொல்றே?"

"தங்கம் இருக்கற இடம் தெரிஞ்ச மாதிரி தான்.
ஆனா அதை எடுக்கற முயற்சிகள் சாதாரணமானது
இல்லை. நிறைய காரியம் செய்ய வேண்டியிருக்கு.
இந்த முயற்சியிலே என் உயிருக்கே கூட ஆபத்து
இருக்கு......"

"பெரிய விஷயம்னா பெரிய அளவுல தான்
ஆபத்து வரும். நான் உயிருக்கு துணிஞ்சுதான்
இறங்கியிருக்கேன். இதுக்கெல்லாம் பயப்பட
லாமா? ஆமா எப்ப நரபலி வைக்கப் போறே.
அந்தப் பொண்ணை நான் ரகசியமா வெச்சருக்
கறதுக்குள்ள உயிர் போயிடும் போல இருக்கு.
போலீஸ் தொல்லை ஜாஸ்தி பட்டத்திரி."

பட்டத்திரி அவனது விசாரத்தின் முன்
பெரிதாக பெருமூச்சு விட்டான்.

"நாச்சியப்பா எல்லாம் இன்னும் பதினைஞ்சு
நாள் அளவுல முடிஞ்சிடும். நாளைக்கு நான் இந்த
பாஸ்கர பட்டத்திரிக்கு கர்மம் செய்ய தாமிரபரணி
கரைக்கு வந்தாகணுமே. எப்படி வரட்டும்! வழி

சொல்லு?"

"பலி எப்ப கொடுக்கப் போறே. தங்கத்தை எப்ப எடுக்கப் போறோம்? அதுக்கு பதிலை சொல்லு. பாஸ்கர பட்டத்திரிக்கு கர்மம் பண்றது முக்கியம்?"

"ஆமாம். நாம செய்யப் போற செயல்களோட முதல் கழிச் செயலே அது தான். நான் ஊருக்குள்ள மாறு வேஷத்துல வரட்டுமா?"

"எனக்கு ஆட்சேபணை இல்லை. எனக்கு தேவை காரியங்கள் வேகமா நடக்கணும். பாட்டுக்கு பொருள் தெரிஞ்சதா? சொல்லு. இப்பவே அந்த இடத்தைக் கண்டுபிடிச்சு அந்த தங்கத்தை நான் என் கண்ணால பார்த்துட்டாவது வந்துட்றேன்.... நாச்சியப்பன் பட படத்தான்.

"தங்கத்தை அவ்வளவு சுலபத்துல பாத்துட முடியாது நாச்சியப்பா... பாடலோட பொருள் ஒரு பெரிய குழப்ப விஷயம். 'நாலுகல், ஒளிக்கல்னு புரியாத ரகசியமா இருக்கு. போகட்டும். முதல்ல நடக்க வேண்டியதைப் பார்ப்போம்."

"அப்ப நான் அந்த சந்திரசேகர், நிர்மலா, தேவாங்கு, பிணச்சாம்பல் இவைகளோட இன்னும் எத்தனை நாள் காத்திருக்கிறது?"

"அதிக பட்சம் பதினைந்தே நாள். அதுக்கப்புறம் நீ குபேரன்."

"நிஜமாவா பட்டத்திரி."

"சத்தியமா!"

"அப்ப சரி... நாளைக்கே நீ சூரிய உதயத்தப்ப மாறு வேஷத்துல தாமிரபரணி பிள்ளையார் படித்துறைக்கு வா. நான் உனக்காக அங்கு காத்திருக்கேன். அங்கே நிறைய ஐய்யர்கள் இருப்பாங்க. நீ யாரையாவது ஒருத்தரை பிடிச்சு உன் வேலையை ஆரம்பி."

நாச்சியப்பன் பேசிவிட்டு சந்தோஷமாக திரும்பி நடக்க ஆரம்பித்தான். பட்டத்திரி சோர்ந்து போயிருந்தான். தான் அஷ்டம சனியின் வசம் இருப்பதை நினைக்கவே அவனுக்கு நடுங்கியது.



"அகப்பட்டுக் கொண்டவனுக்கு அஷ்டமத்தில் சனி" என்பார்களே, நான் யாரிடம் அகப்படுவேன். ...டமா?" மன உளைச்சலில் அப்படியே ஓடிந்து போய் அவன் கண்களை மூடிய சமயம். அவன் ...ந்து கிடக்கும் பாறைக்கு நேர் எதிரில் உள்ள ...த்தியான சப்பாத்திக் கள்ளி கூட்டத்துக்கு பின்னே யாரோ இரண்டு பேர் ஒளிந்து இருப்பது போல் ஒரு அனுமானம்.

அது வரைக்கும் பட்டத்திரியையும், நாச்சியப்பனையும் பரிதாபமாக பார்த்துக் கொண்டு ஒரு பாறை மேல் ஆடாமல் அசையாமல் படுத்திருந்த வில்வாத்திரி அந்த சப்பாத்திக்கள்ளி கூட்டத்தை தனது தலையை 'நங்' கென்று நிமிர்த்தி பார்க்க ஆரம்பித்தது.

வில்வாத்திரியின் எதிர்பார்ப்பு பொய்யாகிப் போகவில்லை.

அந்த மறைவில் பண்ணையாரும், கிழட்டு மாந்திரீகன் ருத்ரகேசியும் தான் ஒளிந்திருந்தனர். இதுவரை ஒளிந்திருந்து ஒட்டுக் கேட்டது போதும் என்பது போல் அங்கிருந்து அகல கால் எடுத்தார்கள்.

இருவர் முகத்திலும் அசாத்ய மவுனம். அதீத சிந்தனை!

வில்வாத்திரி உடனேயே பட்டத்திரியை எழுப்ப படுத்திருக்கும் பட்டத்திரி மேல் செல்லமாய் ஓடி ஏறியது.

## 24

பட்டத்திரியின் அசாத்ய உடல் களைப்பும், மனக் களைப்பும் அவனை தூக்கத்தின் வெகு ஆழத்தில் புதைத்திருந்தன.

"பத்மாசனமிட்டு ருத்ர ஜபம் செய்தாலே" - உடல் களைத்து போய் இப்படித்தான் அவனை சாய்த்து விடுகிறது. எனவே வில்வாத்திரி

அவனை எழுப்பச் செய்த முயற்சி உடனடி பலிக்கவில்லை.

இதை துல்லியமாக கண்டுவிட்ட பண்ணை யார் பக்கத்தில் இருக்கும் ருத்ரகேசியை பயு டன் பார்த்தார். பார்வையிலேயே 'ஓடி விடலா என்று கேட்டார்.

ருத்ரகேசியிடம் அதை ஆமோதித்தது போ பார்வை. இருவரும் உடனடியாக அங்கிரு அகலத் தொடங்கினார்கள்.

வில்வாத்திரியோ விடாமல் முயன்று பார் தோற்றுப் போய் உறங்கும் பட்டத்திரி மார்பு தனது இரண்டு விரல்களை பதித்து முன் உடம் தூக்கி நிறுத்திய படி அங்கிருந்து விலகி ஓ அவர்களை வெறிப்பாக பார்த்தது.

நடந்து செல்லும் இருவரும் கரட்டின் வாரத்தை அடையும் வரை மூச்சு கூட வில்லை. கரட்டின் முள்வேலியைத் தா பண்ணை தன் வயலில் இறங்கின பிறகே வா திறந்தார்.

"சாமி பாத்திங்கல்ல. அந்த பட்டத்திரி தங் துக்கிட்ட நெருங்கிட்டதை....."

ருத்ரகேசியிடம் அதைக் கேட்க இலே புன்னகை.

"என்ன சாமி சிரிக்கிறீங்க. தங்கத்தை சுல எடுக்க முடிஞ்ச கஸ்தூரியை நான் வீட்ல வெச் கிட்டு இடமும், எடுக்கற விதமும் தெரியாம கா காலமா தவிச்சுகிட்டு இருக்கேன். எங்கியே இருந்து வந்து இருக்கிற பட்டத்திரி அ எடுத்துக்கிட்டு போறதா?"

ருத்ரகேசியிடம் தொடர்ந்து மவுனம். பேசா செருமலாக நடந்தான். வயல் வரப்புகள் அ களுக்கு பாதையாகி வரவேற்பு சொல் கொண்டிருந்தது. காற்றின் இலேசான தழுவ கூட...

"சாமி..... இந்த தங்கத்தை எடுக்கப் போய் குடும்பத்துல பலர் இறந்துட்டாங்க. கொ



தானா இந்த தங்கம் பத்தி எல்லாரும் மறந்து இருந்தோம். இப்ப திரும்பவும் இந்த பட்டத்திரி யால பிரச்சினை. சாமி பட்டத்திரி தங்கத்தை எடுத்துடுவானா? இந்த நாச்சியப்பன் வேற அவன் கூட சேர்ந்து கூட்டணி அமைச்சிருக்கான். என்னதான் ஆகும் சாமி?"

ருத்ரகேசி பண்ணையாரின் கேள்விக்கு நின்று வானத்தை அண்ணாந்து பார்த்தான். பிறகு வாயை திறந்தான்.

"இந்த உலகத்துல புதையல் எடுத்த யாரும் உருப்பட்டதில்லைங்கறது உனக்கு தெரியாதா?" அந்த கேள்வி பண்ணையாரை ஒரு வெட்டு வெட்டியது.

"உன் குடும்பமே அதற்கு ஒரு உதாரணம். புதையலுக்கு மட்டும் அப்படி ஒரு சக்தி. ஆகை யால இது விஷயமா நீ இவ்வளவு தூரத்துக்கு அலட்டிக்கணுமா? பட்டத்திரி எடுத்தாலும் அதனால அவனுக்கு கஷ்டம் தானே?"

ருத்ரகேசி பண்ணையாரை பார்த்து கேட்ட கேள்வியில் பண்ணையார் லேசாய் சிந்திப்பது தெரிந்தது.

"அப்ப இந்த புதையல் பிரச்சினையை அப்படியே விட்டுடு. அவங்க எப்படியோ போகட்டுங்கறீங்களா?"

இதற்கு ருத்ரகேசி பதில் பேசாமல் அவரைப் பார்த்தான்.

"நீங்க என்னதான் சொல்ல வர்றீங்க? எனக்கொண்ணும் புதையல் தங்கத்து மேல ஆசையில்ல. எனக்கிருக்கிற சொத்தே ஏழு தலைமுறைக்கு சேரும். ஆனா இந்த புதையல் எடுக்கப் போய் நித்ய கன்னியாவே இருக்கிற என் அத்தை கஸ்தூரிய வெச்சுகிட்டு நான் என்ன பண்றது? அதுக்கு ஒரு வழி சொல்லுங்க....."

ருத்ரகேசி சற்று யோசித்துவிட்டு பிறகு பேசினான்.

"பண்ணையார்.....! கஸ்தூரி விஷயம் ஒரு மகா

குழப்பமான விஷயம். அதை நான் பிறகு கலவிக்கிறேன். இந்த பிரச்சனையில நீ தலையிடாதே. பேசாம விஷயத்தை போலீசுக்கு சொல்லிடு. பட்டத்திரி அனேகமா தங்கத்தை எடுக்க மாட்டான். அப்படி எடுத்தா தங்கம் அரசாங்கத்துக்கு போயிடும். நான் பட்டத்திரிக்கு எந்த வகையிலையும் உபத்ரவம் தரக்கூடாது. ஒரு மாந்திரீகனுக்கு இன்னொரு மாந்திரீகன் குரு மாதிரி. ஆகையினாலே நான் இந்த பிரச்சினையில இந்த நிமிஷத்துல இருந்து விலகிக்க விரும்பறேன்."

பண்ணையார் அதை அரை மனதோடு ஆமோதித்து தலையசைக்கவும், ஊர் எல்லை வரவும் சரியாக இருந்தது.

சிங்கத்தேவன் படுத்துறங்கிய அந்த ஆலமரமும் அதன் காற்றும் ருத்ரகேசியையும், பண்ணையாரையும் வரவேற்று நிறுத்தின. பண்ணையாரும், ருத்ரகேசியும் ஏறி வந்திருந்த வில்வண்டி அங்கே மாடுகள் அவிழ்ந்து வைக்கோலை மேய்ந்து கொண்டிருந்த நிலையில் இருக்க, வண்டி ஓட்டி, சரிந்த வண்டியின் உள்ளே குறட்டை விட்டுக் கொண்டிருந்தான்.

பண்ணையார் அவனை தட்டி எழுப்பவும் அந்த வண்டி அவர்கள் இருவரையும் ஏற்றிக் கொண்டு ஊருக்குள் உருள ஆரம்பித்தது. ஊருக்குள் சிலர் ருத்ரகேசியை பண்ணையாரோடு பார்த்து விட்டு மோவாய் கட்டையில் விரல்களை வைத்து ஆலோசித்தனர்.

கூண்டுக்குள் தேவாங்கு அப்படியே நூல் கண்டாய் சுருண்டு படுத்திருந்தது. அதன் எதிரே சிறிய அலுமினிய தட்டில் அது குடிக்க நீர்.

பக்கத்தில் அதை ஆர்வமாக பார்த்தபடி தங்கமணி.

இன்னும் சற்று தள்ளி அழுது அழுது முகம் வீங்கி, இப்பொழுது அழக்கூட சக்தியற்ற நிலையில் மோட்டு வளையையே வெறிக்கப்



பார்த்தவளாய் நிர்மலா!

அந்த அறையின் கட்டிலுக்கு அப்பால் குட்டிப் போட்ட பூனை போல் சந்திரசேகர். அவன் முகத்தில் ஒரு வாரத்து கேசம் மூன்று மில்லி மீட்டர்களை கடந்து முளை விட்டிருந்தது. கண்களில் கலக்கம்.

ஒரே ஒரு முறை அந்த ரகசிய குறிப்பை எடுத்து வர நாச்சியப்பனுடன் வெளியே அனுப்பினாள். அவ்வளவுதான்.

"தங்கமணி எங்களை இங்க அடைச்சு வெச்சு ஏன் இப்படி கொல்றே? நீ கேட்ட குறிப்பை தான் கொடுத்துட்டேனே. என்னை விட்டுடேன்" என்று கெஞ்சலாய் பேச்சை துவக்கினான்.

"உன்னை வெளிய அனுப்பறது என் கைல இல்லை. என் நாச்சி கைல!" -என்றாள் அவள் சாதாரணமாக.

பார்வையை நிர்மலா மேல் விட்டாள்.

கழுத்தில் கோரமாய் வெட்டுப்பட்டு உயிர்ப் பறவையை வானில் பறக்க விடப் போகும் அவள் பரிதாப நிலை, தங்கமணியை என்னவோ செய்தது. அவளது மரத்து போன இதயத்திலும் கூட துளி ஈரம் கசியும் போல இருந்தது.

"பாப்பா இப்படி இருந்தா எப்படிம்மா? நீ சாப்பிட என்ன வேணும். நல்லா ருசியா எது வேணும்னாலும் கேளு, வாங்கித் தரேன்" - என்றாள்.

அப்பொழுது வீட்டுக் கதவு வெளியே தட்டப்படும் சப்தம் பயத்துடன் அங்கிருந்து நகர்ந்து கதவுக்கு பின்னாலே நின்றபடி கதவிடுக்கு வழியாக வெளியே யார் என்று பார்த்தாள்.

நாச்சியப்பன்!

உடனேயே தங்கமணியின் மூச்சுக் குழலில் தென்றல் புகுந்தது. கதவை திறக்கவும் அவன் சோர்வாக உள்ளே நுழைந்தான். உடனேயே கதவை மூடி விட்டு அவள் பக்கம் ஆர்வமாகத் திரும்பினான்.

"என்னய்யா தங்கம் இருக்கற இடம் தெரிஞ்சுதா? அந்த மந்திரவாதி என்ன சொன்னான்?" - அவள் குரலில் ஏக ஆர்வம்.

நாச்சியப்பன் பெரு மூச்சு விட்டான்.

"அதை ஏன் கேக்கறே தங்கம். அந்த தங்கத்தை நானும் நீயும் பார்க்கறதுக்குள்ற உயிர் போனாலும் போயிடும்" - என்றான்.

"என்னய்யா சொல்றே?"

"ஆமாம். இன்னும் பதினைஞ்சு நாளாவது ஆகும் போல இருக்கு. நடுவுல நிறைய வேற காரியம் பாக்க வேண்டியிருக்கு."

"வேற காரியம்னா?"

"அந்த மாடு விழுங்கி பள்ளத்துல ஒரு மந்திரவாதி ஏற்கனவே செத்து விழுந்துருக்கான். அவன் எலும்புக் கூடு நொறுங்காம அப்படியே கிடக்காம். அத்தோட பக்கத்துல ஒரு குறளி பொம்மை வேற! அதுக்கு வெளிச்சத்தை கண்டா சக்தி வந்துடுமாம்.

இந்த இரண்டு விஷயத்தையும் ஒரு வழி பண்ணிட்டு அப்புறமா தங்கம் இருக்கற இடத்தைத் தேடி நடக்கணும்...."

"ஆமா இந்த பொண்ணை நரபலி கொடுக்கணும்னு சொல்லி கடத்தி வந்து வெச்சிருக்கியே... இவளை எப்ப பலி போடப் போறீங்க? உள்ள அந்த சந்திரசேகர் என்னை வெளிய விடு, வெளிய விடுன்னு உயிரை வாங்கறான்யா! என் கைத்துப்பாக்கிக்கும், அந்த போட்டோவுக்கும் அவன் பயப்படற வரையிலும் தான் நமக்கு பிரச்சினை இல்லை. பொம்பளை தானேன்னு நீ இல்லாதப்ப அவன் என்கிட்ட ஜேம்ஸ் பாண்ட் வேலை காட்டிட்டா?"

கவலைப்படாதே தங்கம்....! நாளைக்கு ஒரு நாள் பொறுத்துக்கோ. அமாவாசையான நாளைக்கு பட்டத்திரிக்கு நம்ம ஊர் தாமிரபரணிக் கரையில ஒரு வேலை இருக்கு. அத்தோட அந்த பள்ளத்துல இறங்கி அந்த சொர்ணலிங்கத்



...டையும் எடுத்துட்டா தங்கம் கைக்கு கிடைச்ச ...றி தான். 'பேய் பிசாசு'ன்னு ஒரு பயம் கிடை... புதையல் கைக்கு வந்த பிறகு 'அப்படி ...திடுமோ இப்படி ஆயிடுமோன்னு' நடுங்க ...ண்டாம். இந்த நிர்மலா தான் அந்த புதையலை ...க்கற பூதங்களுக்கு சாப்பாடு...."

"எனக்கென்னவோ அந்த மந்திரவாதியை ...னைச்சா பயமா இருக்குய்யா. பாத்துப் பழகு. ...ன்னை ஏதாவது பண்ணிடப் போறான்."

-நாச்சியப்பன் அதை கேட்டு இடக்காக ...த்தான்.

...னதுக்குள் தங்கத்தை நெருங்கி விட்டதை ...லவே ஒரு நினைப்பு. அது அவன் கண்களில் ...றித்தனமாய் மின்னத் தொடங்கியது.

தேவதாஸை ஸ்பெஷல் வார்டுல இருந்து ...ற்றிக் கொண்டிருந்தார்கள்.

தேவதாசே ஸ்ட்ரெச்சர் வேண்டாம் என்றவராய் ...ு காலை ஊன்றி சுவற்றைப் பிடித்தபடி நடக்கத் ...தொடங்கியிருந்தார். பக்கத்தில் பாதுகாப்பாக ...சுகள். இன்னும் சற்றுத் தள்ளி ஏஞ்சல் நின்று ...கொண்டிருக்க, அவளுக்கு அருகில் கணேசனும், ...ாகமயிலும்.

கணேசன் தலையில் சிறியதாய் ஒரு கட்டுடன் ...தன்பட்டான். அவன் தன் தலைவலிக்காக ...ங்கே மருத்துவம் பார்க்க ஆரம்பித்து விட்டான் ...ஃபதற்கு அடையாளம் மாதிரி இருந்தது அந்த ...ட்டு.

"அங்க்கிள்! ஸ்ட்ரெய்ன் பண்ணாதீங்க. ...பசாம ஸ்ட்ரெச்சர்ல படுங்க....." - ஏஞ்சல் ...கெஞ்சலாய் ஆணையிட்டு பார்த்தாள்.

"நான் என்ன கிழவனா, இல்லை நித்ய ...நோயாளியா படுத்தே கிடக்க... ஓடி ஓடி வேலை ...செஞ்ச கால்மா இது." - தேவதாஸ் அந்த ...நிலையிலும் விடாது சமாளித்தார்.

ஒரு வழியாக ஆர்டினரி வார்டின் பரந்த ...தமான அறைக்குள் அவர் வந்து சேர. அறைக்

ருள் ஏஞ்சல் நுழைந்தவளாய் கணேசனையும், கனகமயிலையும் அழைத்து பக்கத்து நாற்காலியில் அமரவைத்து விட்டு தேவதாஸை நெருங்கி வந்து அவர் முகத்தோடு முகம் பார்த்தாள்.

"அங்க்கிள்! சில முக்கிய விஷயங்களை சொல்லப் போறேன். ஆச்சரியப்படாம கேட்டுக்கணும் என்ன?" -கனிவான அவள் உதடுகளை குவித்து அசைத்ததில் பூ அரும்புகள் மோதி விரிந்த மாதிரி ஒரு பரவசம் தேவதாசுக்கு.

"சென்னை வர இன்னும் பத்து நாளாகலாம்னு எங்க பத்திரிகைக்கு தந்தி கொடுத்திட்டேன். அதோட நம்ம கணேசனைப் பற்றி ஒரு ஸ்கூப் நியூஸ் கொடுத்துருக்கேன்."

"என்னன்னு?"

"அதிசய சக்தி படைத்த ஆனந்தர்னு சாமியார்த்தனமால்லாம் கொடுக்கலை. இங்க இருக்கிற சைக்கிரியாட்ரிஸ்ட் டாக்டரும், பிரைன் ஸ்பெஷலிஸ்டும் கணேசனை நேற்று போட்டு குடைகுடைஞ்சு சில விஷயங்க சொன்னாங்க. அதைத்தான்!"

"என்னம்மா சொல்றே?"

"ஆமா அங்க்கிள், அவர் தலைவலிக்கு காரணம் என்ன? அவரால எப்படி முன் கூட்டியே நடக்கப் போற சம்பவங்களைச் சொல்ல முடியுதுன்னு ரிசர்ச் பண்ணினாங்க. ஸ்கேன் டெஸ்ட், எக்ஸ்ரே, எலெக்ட்ரிக் ஷாக்னு ஏக தடபுடல் போங்க."

"எல்லாம் சரி...... அவங்க ரிசல்ட் என்ன சொன்னது? அவனுக்குள்ற முனியப்பனும், காளியாத்தாளும் இருக்காங்கன்னு சொன்னிச்சா?"

பக்கத்திலிருந்த கனகமயில் அதைக் கேட்டு வெட்கத்தோடும் கொஞ்சம் கோபத்தோடு நெளிந்தாள்.

"அதெல்லாம் ஒண்ணுமில்ல அங்க்கிள். கணேசன் சிம்ப்ளி ஒரு ஈ.எஸ்.பி.!"

"ஈ.எஸ்.பி. ன்னா?"

"எக்ஸ்ட்ரா சென்சரி பவர் உள்ள ஒரு



கேரக்டர்......"

"எக்ஸ்ட்ரா சென்சரி பவரா, கணேசனுக்கா?"

"ஆமா! லட்சத்துல ஒருத்தருக்கு இப்படி இருக்றது சகஜமாம். மூளைல குறிப்பிட்ட சில விநாடிகள்ல வர்ற விளைவு. அதோட எதிரொலிதான் வலி!"

"அது எப்படி குறிப்பிட்ட நேரம் மட்டும் அதிக ரத்தம் மூளைல பாய முடியும்....."

"இன்னும் ரிசர்ச் முடியலை. ஆனா சந்தேகப்படத் தேவையில்லை. கணேசன் ஒரு ஈ.எஸ்.பி கேரக்டர் தான்! அது மட்டுமல்ல அங்க்கிள் கணேசன் சொன்ன அந்த ராஜமங்கலத்து மந்திரவாதி கதை இருக்கே அது பெரிய அதிசயம். அது சம்பந்தமா நாங்க மூணு பேரும் ஒரு முடிவுக்கு வந்துருக்கோம். நாங்க அங்க போகப் போறோம், என்ன நடக்குதுன்னு வாட்ச் பண்ணப் போறோம். உங்க டிபார்ட்மென்ட் உதவி எங்களுக்கு பல விதங்கள்ல வேணும்....."

தேவதாஸ் அதைக் கேட்டு புருவத்தை உயர்த்திய சமயம் அந்த அறையின் வாசலில் ஆஜானுபாகுவாய் ஒரு உருவம். அனைவரும் திரும்பிப் பார்த்தார்கள். பண்ணையார்!

## 25

பண்ணையாரை அங்கே பார்த்த அதிர்ச்சியிலும் ஆச்சர்யத்திலும் கணேசன் லேசாய் மிரள கனகமயில் அவனுக்குத் துணை போனாள்.

"வாங்க மிஸ்டர் ராஜரத்தினம்....." -பண்ணையாரின் பெயரை உரிமையோடு சொல்லி அழைத்த தேவதாசை ஏஞ்சல் புரியாமல் பார்த்தாள். அது புரிந்த கனகமயில் உடனே ஏஞ்சலை நெருங்கி அவள் காதைக் கடித்தாள்.

"இவர்தாங்க ராஜமங்கலத்துப் பண்ணையார்!"

யார் இவரா? ஒரு பொண்ணை வெச்சு, ஒரு

மந்திரவாதி கூட சேர்ந்து நிர்வாண பூஜை கூட பண்ணதா சொன்னியே அந்த ஆளா?"

"அதே ஆளுதான். ஆனா இந்த ஆளு இங்க வந்ததுக்குதான் காரணம் தெரியலை."

கனகமயில் ஆதங்கப்பட்டுக் கொள்ள அவளையும், கணேசனையும் ஒரு தினுசாப் பார்த்தபடி இன்ஸ்பெக்டரை நெருங்கினார் பண்ணையார்.

"இப்ப எப்படி இருக்கு உடம்பு.........? ஆக்சிடெண்ட் ஆன விஷயமே எனக்கு இன்னிக்கு காலையிலதான் தெரியும்." -பண்ணையாரின் அந்த கனிவான விசாரிப்பு தேவதாசிடம் இதமான புன்னகையை பிரசவித்தது.

"இப்ப பரவாயில்ல. இதுக்காகவா இவ்வளவு தூரம் வந்தீங்க?"

தேவதாசின் கேள்விக்கு பண்ணையாரிடம் ஒரு அர்த்தமுள்ள மவுனம் சில வினாடிகள் நீடித்தது.

கணேசனுக்கோ பண்ணையாரை அங்கே பார்த்த அதிர்ச்சியில் தொண்டை வரண்டு கொண்டு இருந்தது. அவனைப் பார்த்து விட்டு பண்ணையார் மவுனத்தை உடைத்தார்.

"ஆமா நீ எங்கேடா இங்கே வந்தே?" -கேள்வியாலேயே ஒரு அதட்டலான கூர்மை.

"அவரோட தலைவலிக்கு வைத்தியம் பாக்க....." - பதில் கனகமயிலிடம் இருந்து பாய்ந்து வந்தது.

"ஏன் ஐய்யா பேச மாட்டாரோ?" -திரும்பவும் பண்ணையார் கேட்ட விதத்தில் அவரது முதலாளித் திமிர் கொடி கட்டியது.

"இப்ப அவர்களைப் பத்தி என்ன பேச்சு? நீங்க விஷயத்துக்கு வாங்க ராஜரத்தினம்." - தேவதாஸ் பண்ணையாரை தன் பக்கம் பிடித்து இழுக்க பண்ணையார் தேவதாசின் கைகளை வாஞ்சையாகப் பிடித்தார்.

"சார் உங்க கூட நிறைய விஷயங்களை நான் பேசணும். தனிமையா இருந்தா நல்லதுன்னு



னைக்கிறேன்." - திருத்தி திடமாய் அவர் ார்த்தைகளில் காட்டிய எதிர்பார்ப்பு தேவதாஸ் கத்தில் கொஞ்சம் ஆச்சர்யத்தை பூசியது.

பார்வையை ஏஞ்சல் பக்கம் திருப்பவும் அவள் ணேசன், கனகமயிலுடன் அந்த அறையை விட்டு வெளியே செல்ல ஆயத்தமானாள்.

"அந்த பொண்ணு யாரு?" -பண்ணையாரிடம் ஞ்சலைப் பற்றிய விசாரிப்பு.

தூரத்து சொந்தம். பத்திரிகை நிருபரா மெட் ஸ்ல வேலை பாக்குது. என்னைப் பார்த்துட்டு க வந்த இடத்துல என் கூடவே கொஞ்ச நாள் ங்கும் படியா நிர்பந்தமாயிடிச்சி. ஆமா என்ன ஷயம்?"

தேவதாஸ் பண்ணையாரின் கேள்விக்கு திலைச் சொல்லிவிட்டு தான் கேட்க வேண்டிய கேள்வியைக் கேட்கவும் பண்ணையார் வாயைத் திறந்தார்.

அந்த பகல் பொழுதின் பதினோரு மணி அள விலான வேளை தாமிரபரணியைப் பொறுத்த மட் டில் ஒரு சோம்பலான காலமாக இருந்தது.

பட்டத்திரியின் பாதம் அந்த படித்துறை வளா கத்தில் பட்டபோது தொலைவில் நாச்சியப்பன் ஒரு பண்டிதரோடு மர நிழலில் நின்று கொண்டி ருந்தான்.

ஒரு சந்நியாசி போல் திரிசடையை வித்தி யாசமாக முடிந்தபடி காவி உடுத்தி நெற்றியில் திருநீறெல்லாம் அணிந்தபடி வந்து நின்ற பட்டத் திரி தொலைவில் நிற்கும் நாச்சியப்பனைப் பார்த்து முகம் இளகி அவர்களை நெருங்கினான்.

தன்னை பட்டத்திரி நெருங்கிய பிறகே நாச்சி யப்பனுக்கு அவன் யார் என்பது தெரிந்தது.

"வா பட்டத்திரி, ஆள் தயாரா இருக்கு. ஆமா குளிச்சிட்டியா?" பதில் பேசாமல் பட்டத்திரி தாமிரபரணியில் காலை நனைத்தான். புனித நதியின் சிலுசிலுப்பு அவன் கால்களைக் கவ்வியது. பார்வை பக்கமாய் அரசமரப் பிள்ளையார் மேல்

சென்றது. உடனே கண்கள் எரிவது போல் ஒரு பிரமை.

காவியை களையாமல் அப்படியே ஆற்றில் முங்கினான். பண்டிதர் பயத்துடன் அவ்வளவையும் பார்த்துக் கொண்டிருந்தார்.

"ஆமா இவர் யாருக்கு காரியம் பண்ணப் போறார், இவர் அப்பாவுக்கா?" அவரிடம் கேள்வி.

"ஒருத்தர் அவங்க அப்பாவுக்குத்தான் காரியம் பண்ணனுமா? அனாதை யாருக்கும் பண்ணக் கூடாதா என்ன?" நாச்சியப்பன் திருப்பிக் கேட்டான்.

"அப்பாவுக்கு பண்ணத்தான் ஒரு உயிருக்கு உரிமையும் கடமையும் விதிக்கப்பட்டிருக்கு. அதான் ஸ்லாக்கியம்."

"காரியம் பண்றது எதுக்கு சாமி?"

"இந்த காரியத்தின் மூலமா போட்ற பிண்டம் தான், இறந்த ஆத்மாவுக்கு சூட்சம தேகத்தைத் தரும். அந்த தேகத்தின் மூலமா அது தன் பாவ புண்ணியத்துக்கு ஏற்ப மேல் உலகங்களை அடையும்."

"இல்லேன்னா?"

"இந்த கேள்விக்கு கருட புராணப்படி நான் பதில் சொன்னா உங்களுக்கு புரியறது கஷ்டம்."

"புரியும்படி சொல்லுங்களேன்."

"அந்த ஆத்மா நிராசையா அலையும். பல உபத்ரவங்களைத் தரும். அது குடும்பத்துக்கு அவ்வளவா நல்லதில்ல....."

"சரியா சொன்னீங்க. இப்ப ஒரு ஆத்மா கூட நிராசையா ஒரு பள்ளத்துல உக்காந்துகிட்டு எங்க உசிரை வாங்கிட்டு இருக்கு. அதுக்கு சாந்தி கிடைக்கத் தான் இந்த ஏற்பாடே...."

இருவரும் பேசிக் கொண்டிருக்க பட்டத்திரி ஈரம் சொட்டச் சொட்ட கரை ஏறினான். "வாங்கோ இப்படி வந்து உட்காருங்கோ......" பண்டிதர் அவனை அழைத்து எதிரே உட்காரச் சொன்னார்.

அவன் உட்காரப் போன இடத்தில் சில தர்பைப்



ல்கள். பட்டத்திரிக்கு அதன் மேல் உட்கார மனம் றங்கியது. பயிர் வகையில் மிக பவித்ரமான அது வேத சாத்திரத்தில் ஒரு மிக உயர்ந்த பங்கு வகிப் தன் அவசியம் தேவி உபாசகனான பட்டத்திரிக்கு தெரிந்த விஷயம் தான்.

ஆனால் முற்றிலும் பாதை மாறி மயானம் ந்திரீக பிரயோகம் என்று வந்து விட்ட நிலை யில் அந்த புனித விஷயங்கள் அவனை மிரட் வது போல் பார்த்தன.

பட்டத்திரி அஞ்சாமல் மனதை ஒரு நிலைப் படுத்தி பண்டிதர் சொன்ன மந்திரங்களை சொல்லி எள்ளுத் தண்ணீர் விடத் தயாரானான்.

நேரம் உருண்டு கொண்டிருந்தது.

நாச்சியப்பன் அதிசயமாக அவ்வளவையும் பார்த்தான்.

வேத பண்டிதரின் பிடியில் பட்டத்திரியின் கர்மா ஒரு முடிவுக்கு வந்தது. இறுதியாக 'அர் சயம்' விட்டுவிட்டு எள்ளுச் சோற்றை உருட்டி வீசப்போன பட்டத்திரி சட்டென்று அதை எடுத்து ஈரத்துணியில் வைத்துச் சுருட்டினான்.

"காக்கைக்கு போட்டுட வேண்டியது தானே" - பண்டிதர் கேட்டார்.

"இல்ல. நான் தங்கியிருக்கற இடத்துல பிண்டம் போட்டுக்கறேன்." -என்றபடி பட்டத்திரி காரியம் முடிந்த மகிழ்ச்சியில் நாச்சியப்பனைப் பார்த்தான்.

நாச்சியப்பன் முகத்தில் உற்சாகம். ஒரு நூறு ரூபாயை எடுத்து பண்டிதர் எதிரே நீட்டினான். அவர் பெரிதாய் பல்லைக் காட்டியபடி அதை வாங்கி இடுப்பில் முடிந்து கொண்டார்.

பட்டத்திரி நடக்க ஆரம்பித்தான். நாச்சியப்பனும் பின்தொடர ஆரம்பித்தான்.

அனுமன்காடு வரும் வரை இருவரும் ஒன்று சேராமல் ஒருவர் பின் ஒருவராய் நடந்தார்கள். ஆளரவமற்ற காட்டில் இணைந்து கொண்டார்கள்.

"பட்டத்திரி அடுத்து என்ன செய்யப் போறே?" நாச்சியப்பன் கேட்டுவிட்டு பட்டத்திரியை ஆவலாகப் பார்த்தான்.

"முதல்ல பள்ளத்துக்கு வெளிய பிண்டத்தை காக்கைக் குருவிக்கு போடப் போறேன். காரியம் சர்வமங்களமா முடிஞ்சதுக்கு அறிகுறியா கருடன் வந்து இந்த இடத்துக்கு மேல வட்டம் போடணும்."

"போட்டா....?"

"நம்ம காரியத்துல பாதி முடிஞ்ச மாதிரிதான். அப்புறமா இடத்தை தேடிப் போய் பலி கொடுத்து தங்கத்தை வெளிய எடுக்க வேண்டியதுதான்."

"தங்கம் கண்ணுல பட்ட பிறகு பலி கொடுக்கப் போறியா. இல்ல, பலி கொடுத்த பிறகு தங்கத்தை பார்க்க போறோமா?"

"உன் கேள்விக்கு பதிலை செயல்ல பாரு. முதல்ல பிண்டத்தை போட்டுட்டு நான் பள்ளத்துல இறங்கி அந்த சொர்ணலிங்கத் தகட்டை எடுக்கற வழியைப் பார்க்கறேன். இன்னிக்கு அந்த காரியத்தை முடிச்சாத்தான் நல்லது" பேசி விட்டு ஈரத் துணியில் முடிந்திருந்த பிண்டச் சோற்றை எடுத்து பாறை மேல் பரப்பினான் பட்டத்திரி.

கைகளை கூப்பி உடனேயே தியானித்தான்.

பிறகு வில்வாத்திரியை தேடினான். அது தயாராக சுருட்டி வைக்கப்பட்டிருந்த கயிற்றுக்கு பக்கத்தில் நின்று கொண்டிருந்தது. கயிற்றின் ஒரு முனையை அதன் நான்கு கால்களுக்கு இடைப்பட்ட வயிற்றுப் புறமாய் போட்டு வளைத்து வில்வாத்திரியை மாடு விழுங்கிப் பள்ளம் வரை தூக்கிப் போய் அங்கே ஒரு அசுரனின் தலை போல் தெரிந்த ஒரு பாறை மேல் தூக்கி எறிய அதன்மேல் விழுந்து வினாடியில் சக்கென்று பாறையினை இறுக்கிக் அந்த பிடித்தபடி அது பட்டத்திரியை பார்த்தது.

மறுமுனை பட்டத்திரியின் கைவசம் இருக்க



பட்டத்திரி அதைப் பிடித்தபடி உள்ளே இறங்கத் தொடங்கினான்.

'ஆ' வென்று வாய் பிறந்த இருட்டுப் பள்ளத்தில் பட்டத்திரியின் தேகம் மெல்ல மெல்ல கீழே இறங்க தொலை தூரத்தில் ஒரு கருடன் அந்த பள்ளத்தை நோக்கி உன் 'கர்மத்தில் எனக்குப் பரம திருப்தி' எனும் பாவனையோடு பறந்து வந்து கொண்டிருந்தது.

கரையோர பிண்டச் சோற்றை காக்கையும் குருவியும் நாடி வந்து கொத்தி விழுங்கத் தொடங்க பட்டத்திரி பார்வையை விட்டே மறைந்தும் போனான். நாச்சியப்பன் மிடறு விழுங்கியபடி அனைத்தையும் உற்றுப் பார்க்க அவனையும், கயிறோடு பள்ளத்தில் இறங்கிய பட்டத்திரியையும், பறந்து வந்து கொண்டிருக்கும் கருடனையும் அதிசயமாக அங்கே பார்த்துக் கொண்டிருந்தன, ஒளிவான மறைவில் இருக்கும் மூவிரண்டு ஆறு விழிகள்.

## 26

மறைந்திருந்து பார்க்கும் அந்த ஆறு விழிகளிலும் அதீத எதிர்பார்ப்பு. அந்த ஆறு விழிகளில் இரண்டு விழிகளுக்கு சொந்தமான ஏஞ்சல் மட்டும் எதிர்பார்ப்புக்கு நடுவே துளி பயந்தவளாகவும் இருந்தாள்!

பக்கத்தில் மீதி நான்கு விழிகளுக்குச் சொந்தமான கணேசனும் கனகமயிலும்.

"கனகு அந்த பள்ளத்துக்குள்ற இறங்க றானே.. அவன் தான் மந்திரவாதியா?" -ஏஞ்சல் மெலிதாக சப்தம் வராதபடி கேட்டாள்.

"ஆமா.....! பக்கத்துல பேட்டை ரவுடி மாதிரி இருக்கானே அவன் தான் நாச்சியப்பன். இப்போதைக்கு அந்த மந்திரவாதியோட கையாளு...!"

"ஏஞ்சலும், கனகமயிலும் மட்டும் பேசிக்

கொள்ள கணேசன் வாய் பிளந்தபடி நடப்பதை கவனிக்க சற்று முன் தொலை தூரத்தில் தெரிந்த அந்த கருடன் இப்போது மாடு விழுங்கிப் பள்ளம் மேல் வட்டம் போடத் தொடங்கியிருந்தது!

உள்ளே........

பட்டத்திரி தடுமாறித் தடுமாறி இறங்கிக் கொண்டிருந்தான். திண்டுத் திண்டான பாறை முனைகள் அவனை இலேசாய் பதம் பார்த்துக் கொண்டிருந்தன.

கும்மிருட்டு கண்ணைக் கரிக்க விட்டது. இடுப்பில் சொருகிய எண்ணெய்த் திரியை எடுத்து பற்ற வைத்துக் கொண்டான். மளாரென்று பாய்ந்த வெளிச்சம் அந்தப் பள்ளத்தின் கர்ண கடூரத்தை அவன் கண் முன்னே காட்டியது.

யாரோ ஒருவர் பள்ளத்தில் தற்கொலைக்காக விழுந்து ஒரு பாறைச்சரிவில் சிக்கி மாய்ந்திருந்தார். அங்கே அப்படியே நொறுங்கிய நிலையில் அவரின் கூடு பட்டத்திரியை வரவேற்பது போல் பார்த்துக் கொண்டிருந்தது.

ஏற்கனவே இறங்கி ஏறிய அனுபவம் பட்டத்திரிக்குக் கை கொடுத்துக் கொண்டிருந்தது. திரியின் ஜுவாலை வெளிச்சத்தில் சூழ்நிலையை சலிக்கத் தொடங்கியது பார்வை.

"எங்கே இருக்கிறது பாஸ்கர பட்டத்திரியின் கூடு? அன்று பார்த்த அந்த சொர்ணலிங்கத் தகடு எங்கே?"

பட்டத்திரியின் தேடுதலில் ஒரு காட்டெருமையின் கூடு முதலில் சிக்கியது. அதன் பருத்த வயிற்று எலும்பு வளைவில் ஒரு ராட்சத வண்டு! விட்டால் பறந்து வந்து பட்டத்திரியை கடித்து சதையை சம்காரம் செய்யும் போல் தோன்றியது.

பட்டத்திரி அதைப் பார்த்துவிட்டு இலேசாக பயந்தான். இந்நேரம் யட்சநீலி இதைக் கண்டிருந்தால் கைகொட்டி சிரித்திருப்பாள்... சற்று அதை எண்ணிய வெட்கத்தோடு உடனடியாக கருட மந்திரம் ஜெபிக்க ஆரம்பித்தான் பட்டத்திரி.



கண்களை சுற்றி சுழல விட்டான். திரி வெளிச்சத்தை ஒரு கையால் இயன்றவரை உள்ளே அனுப்பினான். குறளி மேல்பட்டு அது உயிர் பெற்றால் என்ன ஆகும் என்ற பயம் நீங்கி இருந்தது.

தகடு கைகளுக்கு வந்த உடனேயே அந்த பள்ளத்தையே அதில் குவிந்து கிடக்கும் எலும்பு ராஜ்யத்தையே சாம்பலாக்க போகின்ற தகிப்பு அவனுக்குள் சுடர்விட மனது கருட மந்திரத்தில் லயித்தது.

அதோ பாஸ்கர பட்டத்திரியின் கூடு! அதன் மார்பு எலும்பின் மேல் அந்த சொர்ணலிங்கத் தகடு! பட்டத்திரி வேகமாகி கயிற்றில் தொங்கிய நிலையில் சற்று ஊஞ்சலாட்டம் ஆடி பாஸ்கர பட்டத்திரியின் கூட்டுக்கு அருகே போய் பாறையை பற்றிக் கொண்டு சற்று ஆசுவாசித்தான்.

பகலில் பாஸ்கர பட்டத்திரிக்காக கர்மம் செய்தது நினைவில் தெளித்தது.

"குருவே...... இப்பொழுது நான் உங்கள் பிள்ளை போல். எனக்கு உபத்திரவம் தராமல் உதவுவீர்கள் என்று நம்புகிறேன்." என்றபடி மார்பெலும்புக் கூட்டின் மேல் கை வைத்தான். இந்த முறை அந்த எலும்புக் கூட்டினிடம் மறுப்பான எந்த தடையும் இல்லை. சொர்ணலிங்கத் தகடு மெல்ல கருடராஜ பட்டத்திரி வசம் உள்ளடங்கியது.

பட்டத்திரி நிம்மதி பெருமூச்சு விட்டான்.

'ஓம் சாந்தி' -என்றபடி கயிற்றைச் சுண்டி விட்டான். மேலே பாறைமேல் பசை போட்டு ஒட்டின மாதிரி உள்ள வில்வாத்ரியின் வயிற்றின் மேல் அந்த சுண்டுதல் அதிர்வாக பரவியது.

அது உடனே மெல்ல உடம்பை தூக்கி, பாறையோடு ஒட்டிய நிலையில், உறுதியான பிடியை விடாமல் நடக்கத் தொடங்கியது. நாச்சியப்பன் வில்வாத்திரியை பார்த்தான். அதன் அசைவைக் கண்ட மாத்திரத்தில் கீழே பட்டத்திரி தடையின்றி தகட்டை அடைந்தது புரிந்தது.

அவன் முகத்தில் குதூகலம். உடனே துள்ளிய படி அங்கிருந்து நகர்ந்து ஒரு பாறையின் பின் புலத்தை தேடி ஓடினான். திரும்பும்போது அவன் கைகளில் பெட்ரோல் டின்!

மறைவில் நிற்கும் ஏஞ்சல், கனகமயில், கணேசனுக்குள் அது பீதியைக் கிளப்பியது.

அதிலும் கனகமயில் பெரிதாகவே அலறி விடுவாள் போல் தோன்றியது.

"என்னது இது? மந்திரவாதி உள்ற போயிருக்கச்சே இந்த நாச்சியப்பன் பெட்ரோல் டின்னோட வந்திருக்கான். மந்திரவாதியை வெளிய வரமுடியாதபடி செய்ய பள்ளத்துக்கு நெருப்பு வைக்கப் போறானா?"

"உஸ்ஸ்...." -ஏஞ்சல் கனகமயிலை அடக்கி விட்டு கைப்பையில் இருந்து பாதுகாப்புக்காக தேவ தாஸ் தனது சொந்தப் பொறுப்பில் சிரமப்பட்டு தந்திருந்த ரிவால்வரை வெளியே எடுத்தாள்.

ஆறு குண்டுகளோடு அது காற்றில் சீற காத்திருந்தது.

ஆனால் அதற்கு தேவையே இல்லாதபடி பட்டத்திரியின் தலை பள்ளத்திற்கு வெளியே தெரிந்தது.

வெளித் தெரிந்த பட்டத்திரி முகத்தில் பரவசமான பரவசம். நாச்சியப்பன் ஓடிப்போய் ஒரு கை கொடுத்து பட்டத்திரியை வெளியே இழுத்தான்.

பட்டத்திரி நாச்சியப்பனை பரவசமாய்ப் பார்த்த தோரணையே வெற்றி அடைந்து விட்டதை சொல்லாமல் சொல்லியது.

"நாச்சியப்பா.....! பகல்ல நான் செஞ்ச கர்மத்துக்கு நல்ல பலன் கிடைச்சிடிச்சு. என் குருவான பாஸ்கர பட்டத்திரியோட ஆவி எந்த தடையும் செய்யலை. அதிலையும் நான் கருட மந்திரம் ஜெபிச்சதால பிரச்சினையே இல்லாம போயிடிச்சு....." -பட்டத்திரி பேசிவிட்டு சட்டென்று அண்ணாந்தான்.



கருட வட்டம் நீங்கவில்லை!

கன்னத்தில் போட்டுக் கொண்டான்.

உடனேயே நாச்சியப்பனை பார்த்து "உம்... சீக்கிரம் பெட்ரோலைப் போட்டு பள்ளத்தைக் கொளுத்து" -என்றான்.

நாச்சியப்பன் தாமதிக்காமல் பெட்ரோல் டின்னைத் திறந்தான். 'குபுக் குபுக்' என்று கொப்பளித்தபடி பள்ளம் பார்த்து மழைத் தூறல் போல் உள்ளிறங்கியது பெட்ரோல் துளிகள். பின்னர் காலியான டின்னையும் உள்ளேயே வீசி விட்டு ஒரு தீக்குச்சியைக் கொளுத்தினான்.

பள்ளத்தில் எறியும் முன் பட்டத்திரியை சந்தோஷத்தோடு ஒரு பார்வை பார்த்தான். பின்னர் தீக்குச்சியை உள்ளே விட்டெறிந்தான்.

குபீர் என்று தீப்பற்றிக் கொள்ள திகுதிகுவென்று பள்ளம் முழுக்க அதன் நாக்குகள் சிவந்த தங்கள் கொழுந்தை பரப்பின.

அதன் பிடியில் பாறையின் இண்டு இடுக்குகளில் முளைவிட்டு வெண் சாமரமாய் தலையெடுத்து விட்டிருந்த கோரைப் புற்களும் இலை தழைகளும் கூட சிக்கி எரிய எலும்புத் துண்டுகள் எல்லாம் அந்த எரிசலில் தங்கள் உறுதியை இழக்க ஆரம்பித்தன.

அம்பாரமாய் புகைக் கோளம் குப்பென்று கிளம்பி வானம் ஏறியது. ஒரு மேகக் கூட்டம் போல் அனுமன் கரட்டுக்கு சற்று அருகில் வயலில் களை பறித்துக் கொண்டிருந்த சில ராஜமங்கலத்து கிராமவாசிகள் அந்த புகைக் கூட்டம் பார்த்து மோவாய்க் கட்டையில் தங்கள் வலக்கை விரல்களை வளைத்து நிறுத்தி ஆச்சரியமாய்ப் பார்த்தார்கள்.

ராஜமங்கலத்து கிராமத்தில் எங்கிருந்து பார்த்தாலும் அந்த புகைக் கோளம் தெரியும் என்பது போல் வானம் ஏறிக் கொண்டிருந்தது அந்த ஜுவாலை விட்ட கரும் புகை.

மாடு விழுங்கிப் பள்ளம் இன்னும் சில நிமிடங்

களில் சாம்பல் மயமாகி விடும் என்பது சந்தேகத்துக்கு இடமின்றி தெரியவர பட்டத்திரி நாச்சியப்பனை ஏவிட, அந்த இருவரையும் ஒளிந்திருக்கும் கணேசனும், கனகமயிலும், ஏஞ்சலும் எறிட்டுக் கொண்டிருக்க, ஊருக்குள்ளே அப்பொழுது தான் திருநெல்வேலியிலிருந்து நுழைந்திருந்த பண்ணையார் தனது வீட்டில் மொட்டை மாடியின் விசாலமான வளாகத்தில் நின்றபடி அனுமன் காட்டுப் பக்கம் திருதிரு வென்று வானம் எறிக் கொண்டிருக்கும் அந்த கரும்புகை மண்டலத்தை பார்த்தார்.

அனுமன் காட்டில் ஏதோ நடந்து கொண்டிருப்பதாக அவர் யூகத்தில் பளிச்சிட அதிசயமாய் அந்த புகைக் கோளத்தை பார்த்தார். பார்த்தபடியே நடந்தவைகளை நினைத்து அசை போட ஆரம்பித்தார்.

நடந்த அவ்வளவையும் இன்ஸ்பெக்டர் தேவதாசிடம் சொல்லியாயிற்று. அவரும் கூட இனி நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் என்று தைரியம் சொல்லி விட்டார்.

இருந்தும் கூட மனது நிலை கொள்ளாமல் அவருக்குள் அலை மோதிக் கொண்டிருந்தது. ஏனோ ருத்ரகேசி சொன்ன யோசனையின் மேல் திடீரென்று எரிச்சல் பீறிட்டது.

"கோடி கோடி மதிப்பு பெறும் தங்கத்தை இனி அரசாங்கம் தான் கொண்டு செல்லும். அதற்காக இதுநாள் வரை வழி தெரியாமல் கஸ்தூரி என்னும் நித்ய கன்னியோடு நான் அலை மோதியதற்கு பலன் தான் என்ன?"

கஸ்தூரியை பற்றி நினைத்த மறுவினாடியே அவளை மருத்துவ சோதனைக்கு உட்படுத்திப் பார்க்க வேண்டும் என்று தேவதாசும், ஏஞ்சலும் குறுக்கிட்டது புத்தியில் பளிச்சிட்டது.

அவர்கள் கஸ்தூரியை நித்ய கன்னியாக நம்பி அப்படிச் சொன்னார்களா? இல்லை சந்தேகத் தோடா? - மார்பில் தவழும் புலி நகச்செயினை வரு



டியபடி யோசிக்க ஆரம்பித்தார் பண்ணையார்.

தேவையில்லாமல் ஏஞ்சல் முகமும், அவளின் குறுக்கீடுகளும் அவருக்குள் மின்னலாய் வெட்டின.

"இப்பொழுது கஸ்தூரி எங்கே?" - இன்ஸ்பெக்டர் கேட்டது காதில் ஒலி பரப்பானது.

"என் பாதுகாப்புல இருக்கா...." -அவர் சொன்ன பதில் இது.

"உடனே இங்கே அழைச்சிக்கிட்டு வாங்களேன். இந்த ஆஸ்பத்திரி வெளிநாட்டு ஆஸ்பத்திரிகளுக்கு சமமானது. நீங்க சொல்ற அதிசயத்தை ஆராய்ஞ்சு பார்த்துடுவோம்."

"வேண்டாம் சார்..... இதுக்கு முந்தி நான் இப்படி நினைச்சப்பல்லாம் ரொம்ப அவஸ்தைப் பட்டிருக்கேன்...."

"என்ன பண்ணையார் நீங்க. அதுக்காக இந்த பிரச்சனையில நாம கஸ்தூரியை ஒதுக்கிட முடியுமா? நீங்க சொல்றதைக் கேட்டா அவ உலகத்தோட எட்டாவது அதிசயம்....."

வாஸ்தவம் தான்! ஆனா கஸ்தூரியை நான் இப்ப அழைச்சிக்கிட்டு வரலை. தங்கம் இருக்கற இடம் முதல்ல குழப்பமில்லாம தெரியட்டும். அப்ப அதை அந்த மந்திரவாதி எடுக்கப் போகும் போது நாம் தடுத்து நிறுத்திட்டு கஸ்தூரியின் கையால அதை எடுப்போம். பிறகு நீங்க உங்க ஆராய்ச்சியை செய்யுங்க....."

தனது பதிலால் தேவதாஸ் மோவாயை வருடி விட்டுக் கொண்டு யோசித்ததும், ஏஞ்சல் அவர் காதுகளில் ஏதோ குசு குசு என்று குசு குசுத்ததும் அவர் நினைவில் படர்ந்தது.

"சரி உங்க இஷ்டப்படியே செய்யுங்க. எதுக்கும் இந்த விஷயத்துல நீங்க டி.எஸ்.பி.ஐ. பார்த்துட்டுப் போறது நல்லது. இது சுண்டக்காய் கேச இல்ல பாருங்க....."

தேவதாசின் கருத்தை கேட்டு அரைமனதாய்

தலை ஆட்டி விட்டு டி.எஸ்.பி.ஐ பார்த்ததும், அவர்கள் விஷயத்தைக் கேட்டு வாயை காது வரை பிளந்ததும் அவருக்குள் 'ரிலே' ஆகின.

அனுமன் கரட்டுப் பக்கம் வைத்த பார்வையை எடுக்காமல் இவ்வளவையும் யோசித்த பண்ணையார் கஸ்தூரியை பார்க்கும் ஆவலுடன் அங்கிருந்து அகல ஆரம்பித்தார். புகைக் கோளமும் கரையத் தொடங்கியிருந்தது.

பட்டத்திரி கூட அனுமன் கரட்டில் வில் வாத்திரியை அன்போடு தன் கைகளில் வாரி எடுத்தவனாய் நாச்சியப்பனை நெருங்கினான்.

"பட்டத்திரி அடுத்து என்ன? அந்த பாட்டுல சொல்லியிருக்கிறபடி இடத்தை தேடற வேலை தானே?" நாச்சியப்பன் கேள்விக்கு உற்சாகமாய் 'உம்' கொட்டியது பட்டத்திரியின் சிரம்.

"அவசரப்படாதே! இடம் தெரியறது முக்கிய மில்ல. தங்கத்தை எடுக்கவும், பலி கொடுக்கவும் உகந்த நாள் பவுர்ணமி தான். அதுக்கு இன்னும் பதினைந்து நாள் இருக்கே!" பட்டத்திரியின் பதில் நாச்சியப்பன் பொட்டில் தாக்கியது.

"என்னது இன்னும் பதினைந்து நாளா? பட்டத்திரி நான் இப்பவே காரியம் முடிஞ்சிடிச்சின்னு நினைச்சேன். வேலையை ஜவ்வா இழுக்கறியே?"

நாச்சியப்பன் கோப வயப்பட்டான். பட்டத்திரிக்கும் அதனால் முகம் சிவந்தது. அதுவரை அவன் முகத்தில் நிலவிய மகிழ்ச்சி வினாடியில் ஒதுங்கி ஓரம் கட்ட முகத்தில் கடூரம் பளிச்சிட்டது.

"நாச்சியப்பா! ஆக்கப் பொறுத்த உன்னால ஆறப்பொறுக்க முடியலையா?"

இந்த கேள்வியில் நாச்சியப்பன் இலேசாய் நடுங்க, மறைந்திருந்த ஏஞ்சலோ அவ்வளவையும் உன்னிப்பாய் கேட்டபடி தன் கைவசம் ஹேண்ட்பாக்கில் தூங்கிக் கொண்டிருந்த வயர்லெஸ் கருவியை தேவதாசோடு தொடர்பு கொள்ள வெளியே எடுத்தாள்.

அதே துல்லியமான வினாடிகளில் பண்ணை



ரின் வீட்டு ரகசிய அறையின் கதவு அவரால் றக்கப்பட அறையின் இருண்ட மூலையில் ங்கோ வெறித்து பார்த்தபடி உட்கார்ந்திருந்த ஸ்தூரி எதிரே பண்ணையார் போய் நின்றார்.

அவள் பயத்தோடு பண்ணையாரை ஏறிட்டு பார்த்து விட்டு சட்டென்று முகத்தை கவிழ்த்துக் கொண்டாள்.

உடம்பில் ஒரு அங்குல ஆடை கூட இல்லாத நிர்வாணத்தில் அவள் இளமை, இருளையும் மீறி பண்ணையாரை சுண்டிவிட பண்ணையாரின் கரங்கள் அவள் தோளைப் பற்ற வேண்டி ஆசையாக அவளை நோக்கி நீண்டன.

## 27

தன்னை நோக்கி நீண்ட பண்ணையாரின் கரங்களைப் பார்த்து அவள் விதிப்படைந்தாள். பட்டுப்பூச்சி சிறகாய் விழி இமைகள் படபடவென்று அடித்துக் கொள்ள விழி மணிகளில் பசை பூசின மாதிரி ஈரக் கலக்கம்.

"வேணாம்.... வேணாம்.... தொடாதீங்க. என்னைத் தொடாதீங்க!" அவள் முணுமுணுக்கிறாள்.

பண்ணையார் உடனே நீட்டிய தனது கரத்தை பின்னுக்கு இழுத்துக் கொண்டார். சில வினாடி வரை மெல்லிய அந்த மோசமான அறையின் இருட்டுக்குள் அவளை ஊன்றிப் பார்த்தவர் மெல்ல மீசையை நீவியபடி லேசான வெளிச்சத்தில் போய் நின்று கொண்டார்.

"கஸ்தூரி, நீ வெளி உலகத்தைப் பார்க்கிற நாள் வந்தாச்சு. உன்னோட இந்த மோசமான வாழ்க்கைக்கு கூடிய சீக்கிரம் முடிவு காலம் பிறக்கப் போகுது. இது நாள் வரை உன்னை சந்திச்சு வந்தவன் நான் ஒருத்தன் தான். இனி உன்னை யார் யாரோ சந்திக்கப் போறாங்க......"

அந்த 'யார் யாரோ சந்திக்கப் போறாங்க' எனும் பதத்தில் ஏக அழுத்தம் கொடுத்தது அவர் குரல்.

'ரொம்பக் குளிருது.... உடுத்திக்க துணி தாங்க' கேவும் குரலில் அவள் தனக்கு தேவையானதை கேட்ட போது பண்ணையாரிடம் பயங்கரமான சிரிப்பு.

"ஒரு தடவை உனக்கு துணியைத் தரப்போக அதைக் கொண்டு நீ தற்கொலை செஞ்சுக்க தூக்கு கயிறு தயாரிச்சதை நான் இன்னும் மறக்கலை. உன் மரணம் தூக்கு கயிறால இல்லை....."

'வேறு எதனால?' அவள் கேள்வி கேட்காமல் திமிர்ந்த தோரணையில் கண்களில் அந்த சிந்தனை பளிச்சிட்டது. பண்ணையார் அதற்குப் பதில் சொல்லாமல் அறையைச் சுற்றிலுமாக ஒரு சுற்று சுற்றி வந்தார். கடந்த ஒரு சில நாட்களாக கஸ்தூரி இருக்கும் அறை பக்கம் அவ்வளவாக வராததும் சத்தப்படுத்தாததும் ஞாபகத்துக்கு வந்தது.

ஊருக்குதான் பண்ணையார் மற்றும் பெரிய தனக்காரர் அந்த அறையைப் பொருத்த மட்டில் அவர் ஒரு தோட்டி தான். ஒரு விளக்கு மாற்றை கூட அந்த அறைக்குள் நீயே 'கூட்டிக் கொள்' என்று போட்டு வைக்க அவருக்கு தயக்கமாக இருந்தது.

ஒருநாள் அவர் அந்த அறைக்குள் லாந்தர் ஒளியோடு நுழைந்த சமயம் அங்கே அவர் போட்டு வைத்திருந்த விளக்குமாறு கஸ்தூரி கைகளில் ஒரு ஆயுதமாய் உருமாறி அவர் மேல் ஆவேசமாய் மோதித் தாக்கிய சம்பவத்தை அவர் மறந்திருக்கவில்லை.

"என்னை வெளியே விடு, என்னை வெளியே விடு! நான் கஸ்தூரி இல்ல. கன்னியம்மா.... கன்னியம்மா...." என்று அவள் ஆவேசமாக கத்தி தீர்த்ததும் அவருக்குள் பூத்து அடங்கியது.

நம்பிக்கைக்குரிய எவரையும் அவளுக்கு காவலாகப் போடக் கூட அவர் தயாராக இல்லை.



'ஒரு முகம் இரட்டைச் செவி'. இதற்குள்ளேயே அமர்ந்திருக்கும் விஷயம் தான் ரகசியமாகிறது. இன்னொரு காதுக்கு அது போனால் கூட அது ரகசியம் இல்லை. இது நாள் வரை தன் குடும்ப அளவில் கூட பகிர்ந்து கொள்ளாத ரகசியத்தை இப்போது துணிந்து தேவதாசிடம் கூறியாயிற்று. 'தேவதாஸ் என்ன லேசுப்பட்ட ஆளா?'

கவலையோடு அந்த ரகசிய அறையின் கதவை இழுத்து மூடிவிட்டு வைக்கோல் பூட்டிய கதவு முன்னாலே போட்டு மறைத்து விட்டு வேட்டியை இழுத்து மடித்து கட்டியபடி அங்கே நின்று கொண்டிருக்கும் மாடுகளின் திமிலைத் தடவியவாறு காற்றோட்டமான கொல்லையை எட்டிப் பார்த்தார்.

கழுநீர் பானையில் தவிட்டை கொட்டி கலந்து கொண்டிருந்தான் ஒரு வேலைக்காரன். பார்க்க புதியவன் மாதிரி தெரிந்தான். பண்ணையாருக்கு பரிச்சயமில்லாத அவன் முகம் அவரை உறுத்தவே "எலே ஆருவே நீ....." அழைத்து விசாரித்தார்.

"எம் பேரு செங்கோடனுங்க, ஊரு பக்கத்து சீனிப்பட்டி" என்றான்.

"உனக்கு இங்க என்னா ஜோலி?" -கோபமாக வெளிப்பட்டது கேள்வி.

"குமாஸ்தா தானுங்க கொல்லையில போயி மாடுகளுக்கு தீனி கொடுன்னார். அவருகிட்ட ரொம்ப நாளா நான் ஏதாவது ஜோலி இருந்தா சொல்லுங்க கருத்தா செய்வேன்னு கெஞ்சிக்கிட்டிருந்தேன். இன்னிக்குத்தான் வாச்சது."

மிக பணிவாக அவன் சொன்ன விதம் பண்ணையாரை கவர்ந்தது.

"சரி சரி ஒழுங்கா ஜோலிய கவனி. உனக்கு என்ன ஜோலியோ அதைத்தான் செய்யணும். இது பண்ணை ராஜ்யம். ஆயிரம் நடக்கும். அப்பால போய் புரளி பேசக்கூடாது. சொல்லி போட்டேன்! மீறினா வேலை மட்டும் போவாது. உடம்பையும் அக்குவேறு ஆணி வேறா கழட்டிப்புடுவேன். கவனத்துல வெச்சுக்கோ...."

சொன்னவர் பலமாக கைகளை தட்டினார். உடனேயே ஒருவன் கைகளில் விறகு பிளக்கும் கோடாலியோடு அவர் முன்னே வந்து கை கூப்பினான்.

"டேய் சூலக்கருப்பா.... பய புதுசா வேலைக்கு வந்துருக்கான். கவனமா சொல்லிக் கொடு" என்றார். அவன் பதில் பேசாமல் ஏவுத்தரமாக தலையை ஆட்டினான்.

"எங்க வாயத் திறந்து காட்டு பார்ப்போம்" அவன் சட்டென்று வாயைத் திறந்தான்.

அவன் நாவில் ஒரு பாதி துண்டிக்கப்பட்டு இருந்தது.

"என்னைப் பத்தி தப்பா ஒருத்தர்கிட்ட புரளி பேசுனான். நறுக்கி எறிஞ்சுட்டேன்! நான் அவ்வளவு கண்டிப்பான ஆள். ஞாபகத்துல வெச்சுக்கோ!"

பண்ணையார் அவனை பற்றி செங்கோடனிடம் சொல்லும் சமயம் சூலக்கருப்பன் என்னும் அவன் முகம் அநியாயத்துக்கு வெளிறிக் கொண்டிருந்தது. செங்கோடனிடமும் விதிர்ப்பு.

அது கலையாத தினுசில் பண்ணையாரை பார்த்து பணிவாக தலையை அசைத்து பண்ணையார் சொல்வதை அங்கீகரித்தான்.

"டேய் சூலக்கருப்பா எங்கடா உன் சின்னப் பொண்ணு......? போய் அழைச்சிக்கிட்டு வா. இன்னிக்கு அந்த குட்டி பள்ளிக்கூடம் போகாட்டி பரவாயில்லை. ஒரு முக்கிய வேலை இருக்கு" என்றவர் மாடியில் உள்ள தனது வசதி மிக்க அறையை நோக்கி கால்களை செலுத்தினார்.

அந்த குளிர்பதன அறைக்குள் வசதியாக உட்கார்ந்து யோசித்து யோசித்து எழுத ஆரம்பித்தார். ஒரு வழியாக அந்த கடிதம் முற்று பெற்றது. அதை நாலாக மடித்து ஒரு உறைக்குள் போட்டு ஒட்டி விட்டு சூலக்கருப்பனின் பொண்ணுக்காக காத்திருக்க ஆரம்பித்தார்.

அனுமன் காட்டின் மாடு விழுங்கி பள்ளம்



இப்போது சாம்பல் பள்ளமாக காட்சி தந்து கொண்டிருந்தது.

அதன் விளிம்பில் கருட ராஜ பட்டத்திரி. பக்கத்தில் பால் செம்புடன் நாச்சியப்பன்.

சற்று தள்ளி மறைவான பாறையின் பின்னாலே பயத்தோடு கனகமயில், கணேசன், ஏஞ்சல்!

பட்டத்திரி அந்த விளிம்பில் நின்ற நிலையில் வானை நோக்கி தன் கைகளை உயர்த்தி எதையோ முணு முணுத்துக் கொண்டிருந்தான். பின்பு இடக்கையை வலக்கையோடு கோர்த்து வலது நடு மார்புக்கு நேரே கோர்த்த கையை பிடித்துக் கொண்டு 'சங்கல்பம்' செய்யும் பாவனையில் சில வினாடிகளை கழித்தான்.

நாச்சியப்பன் அனைத்தையும் வேடிக்கை பார்த்தபடி வழக்கம் போல் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தான். பட்டத்திரி தனது செயல் முடிந்தது என்பதற்கு தோதாக நாச்சியப்பனிடமிருந்து, பால் செம்பை வாங்கி பள்ளத்துக்குள் தெளிக்கத் தொடங்கினான்.

பிறகு இருவரும் அங்கிருந்து அகலத் தொடங்கினார்கள். பருத்த பாறைகளின் மேலேறி இறங்கி எங்கோ அவர்கள் செல்வது தெரிந்தது. அனுமன் காட்டின் பின்புலத்தில் தழைத்த கருவேலங்காடு.... உள்ளே ஒரு கோழிக்குஞ்சு கூட நுழைந்து திரும்ப முடியாதபடி நெருக்கமான கிளைகளோடு அது சில ஏக்கர் அளவில் ஏகாண்டமாய் வளர்ந்து கிடந்தது.

அந்த கருவேலங்காட்டினுள் இப்பொழுது ஒருவர் பின் ஒருவராய் மெல்ல மெல்ல நடந்து செல்ல தோதாக ஒரு குட்டிப் பாதை. காட்டின் மையத்தில் பச்சை நிறத் துணியால் உருவான குட்டிக் கூடாரம்!

தூர இருந்து பார்ப்பவர்களுக்கு அங்கு ஒரு கூடாரம் இருப்பதே தெரியாத தினுசில் அதன் மேலெல்லாம் நாச்சியப்பன் கருவேலங்கி

னைகளை வெட்டிப் போட்டு மூடியிருந்தான்.

அந்த கூடாரத்தை நோக்கி முட்கிளைகளை கைகளால் ஒதுக்கி தள்ளியபடி பட்டத்திரியும், நாச்சியப்பனும் நடந்து கொண்டிருந்தனர். பின்னாலே இவர்களை பின் தொடரும் ஏஞ்சலும் கனகமயிலும் கூடாரத்தை பார்த்து கண்களை அகல விரித்தார்கள்.

ஏஞ்சல் தனது பேக்கை திறந்து வயர்லெஸ் டெலிபோனை வெளியே எடுத்தாள்.

தோளில் பாரமாய் தொங்கிக் கொண்டிருக்கும் அதனுள் விலை உயர்ந்த காமிரா, மற்றும் பாக்கெட் டேப் ரிக்கார்ட், பேனா, கத்தி என்று ஏக கருவிகள்.....

அந்த பேக்கை அப்படியே திறந்த ஜிப்பை கூட மூடாத அவசரத்தோடு கீழே ஒரு பாறை மேல் வைத்துவிட்டு டெலிபோனின் நம்பர் பட்டனை தட்டினாள்.

ராஜமங்கலம் போலீஸ் ஸ்டேஷனிலும் காத்துக் கிடக்கும் ஒரு சிவில் போலீசின் வயர்லெஸ் டெலிபோன் பதிலுக்கு சிணுங்கியது.

'ஹலோ மிஸ்டர் ராஜதுரை....?'

'எஸ், ராஜதுரை ஸ்பீக்கிங்....!'

'சார் நான் ஏஞ்சல் பேசறேன்!'

'சொல்லுங்க. நான் கிரைம் பிராஞ்ச் ராஜதுரைதான் ரிசீவ் பண்றேன்.'

"குட் நான் அனுமன் காட்டுல இருந்து பேசறேன். இங்க சீரியஸா எதுவும் தெரியலை சார். அந்த மந்திரவாதி இங்க காட்டுக்கு பின்னாலேயே உள்ள ஒரு கருவேலங்காட்டுக்குள்ற டெண்ட் அடிச்சு தங்கியிருக்கான். எல்லாம் இந்த நாச்சியப்பன் உதவியினாலன்னு நினைக்கறேன். இன்னும் பதினைஞ்சு நாளைக்கு சீரியஸா எதுவும் நடக்கும்னு தோணலை. இருந்தாலும் இவங்க பாட்டுல உள்ள குறிப்புப் படி இடத்தைத் தேடி அலைவாங்கன்னு தோணுது."

"மேடம் இதுவரை நீங்க ரிஸ்க் எடுத்தது



போதும். இனிமே அவங்களை ஃபாலோ பண்றதுல இருந்து எல்லாத்தையும் கவனிக்கறது எங்க பொறுப்பு. நீங்க உடனே திரும்பிடுங்க."

ஏஞ்சல் சலிப்போடு டெலிபோனை மூட்டினாள். அவள் முகத்தையே கனகமயிலும், கணேசனும் பார்த்துக் கொண்டிருந்தனர். மேற்கில் சூரியன் நழுவிக் கொண்டிருந்தான். கருவேலங்காட்டுக்குள் நுழைந்து மறைந்திருந்த பட்டத்திரியும், நாச்சியப்பனும் டெண்டுக்குள் முடங்கி விட்டதை சப்தமற்ற சூழ்நிலை உணர்த்திய அந்த அமைதி விநாடிகளில் ஏஞ்சல் கீழே வைத்திருந்த பேக்கிற்கு அருகில் ஒரு கருநாகம் நெளிந்து கொண்டிருந்தது.

அது மெல்ல பாறை மேல் தலையை உயர்த்தி திறந்து கிடந்த பேக்கினுள் முகத்தை நுழைத்துப் பார்த்துவிட்டு தனது நீண்ட பின் உடம்பையும் ஏனோ விறுவிறு என்று உள் இழுத்துக் கொண்டது.

ஏஞ்சல் மெல்லிய அந்த இருட்டில் அது உள்ளே நுழைந்து கொண்டது கூட தெரியாமல் தன் கைவசத்து வயர்லெஸ் டெலிபோனை அதற்குள் வைத்து ஜிப்பை சிருட்டென்று இழுத்து மூடிவிட்டு பேக்கை தூக்கி தோளுக்கு மாட்டினாள்.

"இன்னிக்கு இவ்வளவு தூரம் கவனிச்சதே போதும். தேவதாஸ் அங்கிளுக்கு பதிலா இந்த கேஸ்ல டி.எஸ்.பி. உத்தரவு படி சார்ஜ் எடுத்துக்கிட்டிருக்கிற ராஜதுரை சார் நம்மகூட பேசணுமாம். ஸ்டேஷனுக்கு வரச் சொல்லியிருக்கார். வாங்க போகலாம்."

ஏஞ்சலின் கருத்துப்படி மூவரும் திரும்பி நடக்க ஆரம்பித்தார்கள். காட்டுப் பாறைகளில் ஏறி முழுவதுமாய் இருட்டுவதற்குள் ஊர் எல்லையை எட்டிப் பிடிக்கும் அவசரம் அவர்கள் நடையில்.

ஊடே ஓரிடத்தில் அவர்களுக்கே தெரியாமல் அவர்களை கடந்து கருவேலங்காட்டை நோக்கி ஊர்ந்து கொண்டிருந்தது வில்வாத்திரி.

## 28

கருட ராஜ பட்டத்திரியின் வில்வாத்திரி என்னும் உடும்பு தன் வாய் அண்ணத்துக்குள் பிளாஸ்டிக் பொட்டலத்தில் அடங்கிய கடிதத்துடன் பட்டத்திரியின் கூடாரத்தை நோக்கி விரைந்து கொண்டிருந்தது.

சிறிய தீப்பந்தம் ஒன்றின் வெளிச்சத்தில் பட்டத்திரியும் நாச்சியப்பனும் எதிரும் புதிருமாக உட்கார்ந்தபடி பேசிக் கொண்டு இருந்தார்கள். ஊடே நுழைந்த வில்வாத்திரி பட்டத்திரியின் மடி மேல் ஏறி வாய் அண்ணங்களில் அடங்கியிருந்த அந்த பிளாஸ்டிக் பொட்டலத்தை துப்பியது.

பட்டத்திரி அதை சற்று அதிர்ச்சியோடு பார்த்து விட்டு வேகமாக அந்த பொட்டலத்தை பிரித்து கடிதத்தை வெளியே எடுத்தான். நாச்சியப்பன் குறுக்கே ஆர்வத்தோடு எட்டிப் பார்த்தான். அவனை பட்டத்திரி உடனே தனது பெரிய சிவந்த விழிகளால் ஏறிட்டான். நாச்சியப்பனுக்கு என்னவோ போல் ஆகிவிட்டது.

தலையை பின்னே இழுத்துக் கொண்டு கடிதம் கொண்டு வந்த வில்வாத்திரியை வெறுப்போடு பார்க்க ஆரம்பித்தான். பட்டத்திரியோ தீப்பந்த வெளிச்சத்தில் கடிதத்துக்குள் மூழ்கியிருந்தான்.

கடிதத்தைப் படித்து முடித்த பட்டத்திரியின் நெற்றிப் பொட்டில் திடீரென்று வியர்வைப் பெருக்கம். விழி மணிகளில் கூட கலக்கம். அதை துல்லிதமாக உணர்ந்த நாச்சியப்பன் பட்டத்திரியை சற்று கலக்கத்தோடு பார்த்தா

"என்ன பட்டத்திரி. ஏன் கலங்கிப் ே விட்டே? ஆமா. இது என்ன கடிதம், யார் எழுதி ?" -ஆர்வமாக கேட்டான். பட்டத்திரி பதில் பசாமல் கடிதத்தை சுருட்டி தனது ஜோல்னா பக்குள் திணித்து விட்டு டென்டின் கூம்ப ன கூரையையே வெறித்து பார்க்க ஆரம்பித்தான.



"பட்டத்திரி நான் கேக்கறேன்ல... என்கிட்டேயே ஒளிவு மறைவா?" -நாச்சியப்பனின் அந்த கேள்வி ஏனோ உடனேயே பட்டத்திரியை சற்று இளக்காரமாக சிரிக்க வைத்தது.

"பட்டத்திரி சிரிக்காதே! இந்த ஊர்ல என்னைத் தவிர யாரையுமே உனக்கு தெரியாதே... அப்படி இருக்க எங்கிருந்து வந்தது இந்த கடிதம்? இதுக்குள்ள என்ன இருக்கு. ஏன் என்கிட்ட காட்ட மாட்டேங்கறே? நான் ரொம்பப் பொல்லாதவன் பட்டத்திரி. எனக்கு யாராவது துரோகம் நினைச்சா நீஸ் பீஸாக்கிடுவேன். எனக்கு தெரியாம ஒரு அணு கூட அசைய முடியாது!"

மீண்டும் பட்டத்திரியிடம் சிரிப்பு பெரிதானது. நாச்சியப்பன் உடனே உக்கிரமானான். "பட்டத்திரி" நாடி துடிக்க அலறினான்.

அந்த அலறல் பட்டத்திரியை கட்டுப்படுத்திய அதே சமயம் பட்டத்திரி விருட்டென்று எழுந்து நாச்சியப்பனின் வலக்கழுத்தோரமாய் தனது வலது கையின் சந்திரமேட்டு பகுதியால் ஒரு தட்டு தட்டவே நாச்சியப்பனின் வாய் சட்டென்று கோணிக் கொள்ள கழுத்து அப்படியே தொங்கிப் போனது.

நடுங்கிப் போக ஆரம்பித்தான் நாச்சியப்பன். வாயிலிருந்து வார்த்தைகள் வெளியேற முடியாமல் நாவிற்குள்ளேயே சிக்கித் திணறின.

"முட்டாள்.... நீ பெரிய புத்திசாலிங்கறது எனக்கு தெரியாதா என்ன? மந்திர சாஸ்திரம் பற்றி உனக்கு என்ன தெரியும்? ஆக்கப் பொறுத்தவனுக்கு ஆறப் பொறுக்க முடியலையோ....

கடிதத்தை எழுதிக் கொடுத்தது யார்னு தெரிஞ்சு என்ன பண்ணப் போற.....? எனக்கு ஆயிரம் தொடர்பு ஆயிரம் பேரோட இருக்கும். அதைப் பற்றி நீ கவலைப் படக்கூடாது. உனக்கு தேவை தங்கம்! அதை அடையற வரை என்னை ஏன் எதுக்குன்னு கேள்வி கேட்டு தொணப்பக் கூடாது. நான் போற பாதைல பேசாம என் கூட வரணும். நான் சொல்றதை செய்யணும். மீறினே. இப்ப நீ பேச்சை

மட்டும் இழந்திருக்கே. அப்புறமா உயிரையே இழப்பே....."

என்ற பட்டத்திரி மீண்டும் தனது வலது கரத்தின் சந்திர மேட்டுப் பகுதியால் நாச்சியப்பனின் கழுத்தை வர்மத்தில் தாக்கவும் சிருட்டென்று பழைய நிலையை அடைந்தது நாச்சியப்பனின் சிரம். உடனேயே.....

"பட்டத்திரி என்னை மன்னிச்சிடு.... என்னை மன்னிச்சிடு...." என்று பட்டத்திரியின் கால்களை கட்டிக் கொண்டான். நாச்சியப்பன். ஆனால் உள் மனதிலோ அந்த காலை அப்படியே வாரி விட வேண்டிய ஆத்திரம் பாலாய் பொங்கத் தொடங்கியிருந்தது.

பட்டத்திரியிடம் நாச்சியப்பனின் பயந்த மாற்றம் சந்தோஷத்தை தந்தது.

"நல்லது நாச்சியப்பா... சரி விஷயத்துக்கு வரேன்! இது வரையில நாம நம்ம காரியங்களை யாரும் தெரிஞ்சிக்கலைங்கற தெம்போட செஞ்சிக்கிட்டிருந்தோம். ஆனா இப்ப நிலைமை மாறிடிச்சு, போலீஸ் நம்பளை சந்தேகப்பட ஆரம்பிச்சிடுச்சாம்."

"என்ன பட்டத்திரி சொல்றே? நம்ப முயற்சி போலீசுக்கு எப்படி தெரியும்? பயத்தோடு கேட்டான்.

"பழைய கேடியான நீ அடிக்கடி இந்த காட்டுப் பக்கம் வர்றதை சி.ஐ.டி. போலீஸ் பாத்துருக்கலாமில்லியா?"

"இருக்கவே முடியாது. நான் சர்வ ஜாக்கிரதையா இருக்கேன் பட்டத்திரி!"

"முட்டாள், நான் என்ன பொய்யா சொல்றேன். ஆபத்து என்ன உனக்கு மட்டுமா? எனக்கும் தானே. சொல்றதை கேள். நாம் இனிமே ஒரு நிமிஷம் கூட தாமதிக்கக் கூடாது. அந்த பாடல் குறிப்புப்படி உள்ள இடத்தை உடனே தேடிப் போகணும். தங்கம் இருக்கற இடத்தை வேகமா தெரிஞ்சிகிட்டாகணும்."



"அப்புறம்?"

"அப்புறமென்ன? பலி தான்...."

"இப்பத்தான் பட்டத்திரி எனக்கு உயிர் வந்தது. அந்த பெண்ணையும், அந்த சந்திரசேகரையும் போலீசுக்கு தெரியாம காப்பாத்த நான் பட்டுக்கிட்டிருக்கற பாடு உனக்கு தெரியாது. என் தங்கமணிதான் இந்த விஷயத்துல மலை மாதிரி நின்னு எனக்கு உதவிக்கிட்டு வர்றா!"

தங்கமணி பற்றி நாச்சியப்பன் பேசவும் பட்டத்திரியின் இதழ்க் கடையில் இளக்காரமாய் ஒரு சிரிப்பின் பரவல். உடனேயே அதை கலைத்துக் கொண்டு "சரி சரி நீ உடனே கிளம்பிப் போய் அவங்களை இங்க கூட்டிக்கிட்டு வா...." என்றான்.

"யாரை.... அந்த நரபலிப் பெண்ணையும் சந்திரசேகரையுமா?"

"ஆமா!"

மறு வினாடியே துள்ளிக் கொண்டு எழுந்திருந்தான் நாச்சியப்பன். அந்த கருவேலங் காட்டின் இருண்ட நிலையை துச்சமாக கருதின திறுசில் குனிந்தும் வளைந்தும் கருவேலங் கிளைகளின் முட்களை ஏமாற்றியபடி நடக்க ஆரம்பித்தான்.

நாச்சியப்பன் அங்கிருந்து அகலவும் உடனேயே யட்ச நீலியை எண்ணி ஒருமுகப்பட்டது பட்டத்திரியின் மனது.

"நீலி வா....! என் ஆதர்ச தேவதையே வா! என் வாழ்வின் பிரதான முயற்சியின் விளிம்பில் நான் சற்று தடுமாறிக் கொண்டிருக்கிறேன். உடனே வந்து வழிகாட்டு!"

அவனது வேண்டுதல் பலித்த மாதிரியில் அவன் மனதில் சுடர் விட்டாள் அந்த தேவதை.

"நீலி... சகல காரியத்தையும் முடித்து விட்டேன். பாஸ்கர பட்டத்திரிக்கு கூட திவ்யமாக கர்மம் செய்து விட்டேன். இனி தங்கம் இருக்கும் இடத்தை தேடி பலி கொடுத்து அதை எடுக்க வேண்டியதே மீதம். ஊடே ஒரு திடுக்கிடும்

செய்தி. எங்கள் முயற்சியை சிலர் கண்டு கொண்டு உளவு பார்ப்பதாக வந்திருக்கிறது. பண்ணையார் முயற்சிப்பது மட்டும் தெரியும். பிறரைப் பற்றி தெரியாது. யார் அவர்கள்? எப்படி அவர்களுக்கு எங்கள் முயற்சி தெரியும்?"

பட்டத்திரியின் கேள்விக்கு நீலி முகத்தை இறுக்கமாக வைத்துக் கொண்டு பதில் பேசாமல் அவனைப் பார்த்தது.

"நீலி! என்னை எச்சரிக்காமல் முறைக்கிறாயா? வாயைத் திறந்து பதில் சொல்" - பட்டத்திரி கோபமாய் மனதுக்குள்ளேயே கத்தினான்.

"நேற்று வரை நீ தர்மப்படி நடந்து வந்தாய். நரபலிச் சிந்தனை ஒன்றைத் தவிர உன்னால் யாருக்கும் துன்பமில்லை. ஆனால் இன்று உன்னை மலை மாதிரி நம்பியிருக்கும் நாச்சியப்பனையே நீ துரோகிக்கப் போகிறாயே... நியாயமா பட்டத்திரி?"

அது கேட்ட கேள்வி முன்னால் பட்டத்திரி சற்று தலை குனிந்தான். பின் சுதாரித்தான்.

"நீலி... என்னை விமர்சிப்பது உன் வேலையல்ல. என் கேள்விக்குப் பதிலைச் சொல்." மீண்டும் கர்ஜித்தான்.

"மந்திர சாஸ்திரப்படி உன் மனம் சுயநலமற்று ஒப்பந்த லட்சியத்துக்கு பாடுபட்டால் தான் உனக்கு என்னால் உதவ முடியும். சராசரி மாந்திரீகனாக நீ மாற ஆரம்பித்து விட்டாய். என்னால் இனி உனக்கு உதவ முடியாது. நீ என்னை என்ன வேண்டுமானாலும் செய்து கொள்....!"

பேசிய வேகத்தில் யட்ச நீலி அவன் மனதில் இருந்து மாயமாய் மறைந்தும் கொண்டது. பட்டத்திரி ஒரு வினாடி நிலை குலைந்தான்.

"நீலி!" என்று வாய்விட்டு அலறினான். அது அந்த காடெல்லாம் எதிரொலித்தது. வில்வாத்திரியே கூட வெருண்டு பட்டத்திரியை பயத்தோடு பார்த்தது.

சில வினாடிகள் அசாத்ய மவுனம் பட்டத்தி



ரியிடம்.

"உன் துணை இல்லாவிட்டால் என்னால் வெல்ல முடியாதா என்ன? தங்கத்தை அடைந்து ஹையக்ரீவன் அருளை பெற்றுக் காட்டுகிறேனா இல்லையா பார்!" கருவினான்.

கருவின கையோடு டெண்ட்டுக்கு வெளியே தீப்பந்தத்தோடு வந்தான். கருமையான அமாவாசை வானம் அவனை எதிர் கொண்டது. வானைப் பார்த்தபடியே வேகமாக காட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

அவன் அணிந்திருக்கும் கட்டைச் செருப்பில் நெருஞ்சி முட்கள் சிக்கி சிதைய அவன் நடையில் புழுதி பறந்தது. காட்டின் திண்டு திண்டான பாறைகள் அவனை வரவேற்றன. வில்வாத்திரி அவனை பின் தொடர்ந்தது.

காட்டின் ஒரு முனையை அடைந்தவன் ஒரு பாறை மேல் ஏறி பத்மாசனமிட்டபடி அமர்ந்தான். தீப்பந்தத்தை அருகில் ஒரு பாறை இடுக்கில் செருகினான். ருத்ர ஜெபத்தில் மனது உடனேயே மூழ்கியது. சடசடக்க வீசும் காற்றை மீறி அந்த ஜெபத்தின் எதிரொலியாக அவனது தேகம் வியர்க்கத் தொடங்கியது.

போலீஸ் ஸ்டேஷனில் ராஜதுரை ஏஞ்சலுக்காக காத்திருந்து சோர்ந்து போன அந்த எட்டு மணி அளவிலான இருட்டில் ஏஞ்சல், கணேசனோடும், கனகமயிலோடும் உள்ளே நுழைந்து கொண்டிருந்தாள்.

ராஜதுரைக்கு அவர்களைப் பார்க்கவும் உயிர் வந்த மாதிரி ஒரு தெம்பு.

"ஒரு ஆபத்தும் உங்களுக்கு இல்லியே?" படபடக்க கேட்டார் ராஜதுரை.

"எங்களால யாருக்கும் ஆபத்தில்லையான்னு கேளுங்க சார்!" -என்ற ஏஞ்சல் டேபிள் மேல் கிடந்த தினசரியில் பளிச்சென்று தெரிந்த நிர்மலாவின் படத்தை பார்த்து விட்டு பக்கமாய் குனிந்து

செய்தியை படிக்க ஆரம்பித்தாள். போலீசார் நிர்மலாவை கண்டு பிடிப்பவர்களுக்கு சன்மானம் அளிப்பதாக கூறி வெளியிட்டிருந்த அந்த விளம்பரச் செய்தியில் அவள் மனம் நிர்மலாவை நினைத்து லேசாக கவலைப்பட்டு விட்டு "என்ன சார்... இந்த பொண்ணை இன்னுமா நீங்க கண்டுபிடிக்கலை?" என்று ராஜதுரை பக்கம் திரும்பினாள்.

"நாங்களும் மனுஷங்க தான்!" என்று ராஜதுரை சமாதானம் சொன்ன அந்த வினாடிகளில் கணேசன் தினசரியில் நிர்மலாவின் படத்தைப் பார்த்து விட்டு சட்டென்று பொறி தட்டின மாதிரி ஏஞ்சலைப் பார்த்தான்.

"என்ன கணேசன், இந்த பொண்ணை உங்களுக்கு முன்னையே தெரியுமா?" - ஏஞ்சலின் கேள்வியை தொடர்ந்து கனகமயிலும் அவனை ஆர்வமாக பார்க்க, "இந்த பொண்ணைதான் அந்த மந்திரவாதி அரிவாளைக் கொண்டு வெட்டப் போனான். அப்பதான் நீங்க இரண்டு பேரும் அங்கே இருக்கீங்க" என்று கணேசன் சொல்லவும் ஏஞ்சல் உடனேயே சுண்டி விடப்பட்டாள்.

"யூ ஆர் கரெக்ட்! சார்! கணேசன் சொல்றதுல உண்மை இருக்கு. நாங்க கரட்டுல ஒளிஞ்சிருந்து அந்த மந்திரவாதியையும், நாச்சியப்பனையும் வாட்ச் பண்ணப்போ அவங்க நரபலி பத்தி பேசினாங்க. அனேகமா இப்ப அந்த பொண்ணு நாச்சியப்பன் கஸ்டடியில தான் இருக்கணும். இல்லேன்னா அந்த கரட்டுக்கு பின்னால உள்ள டெண்ட்டுலதான் இருக்கணும்."

ஏஞ்சலின் பேச்சில் தொனித்த நம்பிக்கையை பார்த்த ராஜதுரை மளுக்கென்று மின்சாரம் பெற்ற மெர்க்குரி விளக்கு போல் பிரகாசமானார்.

"சார்!" பட்டத்திரி குருப்பை பக்குவமா சமயம் பார்த்து பிடிக்கணும். ஆதார சாட்சிகளோட அவங்களை கூண்டுல ஏத்தணும். இந்த கேஸ்ல நான் பலரை சந்தேகப்பட்டுக்கிட்டு இருக்கேன். நீங்க



எங்ககூட சேர்ந்து ஒத்துழைப்பு தந்தால் எல்லாம் நல்லபடியா முடியும்" என்றாள் ஏஞ்சல்.

ராஜதுரை அதைக் குறித்து தீவிரமாக யோசித்தவர், ஒரு முடிவுக்கு வந்தவராக அவள் எதிரே தனது கட்டை விரலை உயர்த்திக் காட்ட 'தேங்க்யூ சார்!' - என்றாள் ஏஞ்சல்.

ஏஞ்சலுக்கு திடீரென்று தங்கள் முடிவுகளை தேவதாசுக்கு தெரிவித்து அவர் கருத்தையும் தெரிந்து கொண்டால் தேவலை என்று தோன்றியது.

"சார்! நான் தேவதாஸ் சாருக்கு ஒரு லெட்டர் எழுதித் தரேன். அவரைப் பார்த்து தந்துடறீங்களா?" ராஜதுரையைப் பார்த்து கேட்டபடி தனது கைப் பையை எடுத்தாள்.

பக்கத்து நாற்காலியில் அமர்ந்து கொண்டு அந்த பேக்கை மடிமேல் வைத்தபடி உள்ளிருந்து பேனாவை எடுக்க ஜிப்பை உருவப் போனாள்.

மெத்தென்ற மடிக்கு அந்த பேக் போன அலுங்கல் குலுங்கலில் உள்ளே சுருண்டு கிடக்கும் அந்த கருநாகம் கோபத்தோடு நிமிரத் தயாரானது.

## 29

கைப்பையை எடுத்து ஜிப்பைத் திறந்து பேனாவை எடுக்க ஏஞ்சல் முனைந்த அதே சமயம் "அவசியமில்லை!" என்றது ராஜதுரையின் குரல்.

"ஏன் சார்?"

"தேவதாஸ் சார் இப்ப ஆஸ்பத்திரியில இல்ல. இந்தப் புதையல் வழக்கு முக்கிய கட்டத்தில் இருப்பதால் வற்புறுத்தி டிஸ்சார்ஜ் வாங்கிக்கிட்டு வீட்டுக்கு வந்திட்டார். அனேகமா இரண்டொரு நாள்ல ஸ்டேஷனுக்கு கூட அவசியம்னா அவர் வந்து போவார்"

ராஜதுரை பேசப் பேச ஏஞ்சலுக்குள் உற்சாகம்

தான் கிளப்பியது.

"அப்ப அவர் வீட்டுக்கே போய் மேற்கொண்டு ஆக வேண்டியதை பற்றி பேசுவோமே...."

ஏஞ்சல் தன் கருத்தைச் சொன்ன அந்த துல்லிதமான வினாடிகளில் திடும்மென்று கணேசனுக்குள் வழக்கமான அவனது தலைவலி தனது பிரவேசத்தை நிகழ்த்தத் தொடங்கியிருந்தது.

நெற்றி நரம்புகள் புடைத்துக் கொள்ள, காதோரம் வியர்வை பாதை போட, இரண்டு கைகளாலும் கணேசன் தன் நெற்றிப் பொட்டை பிடித்துக் கொண்டு அப்படியே உட்கார்ந்து விட்டான்.

மனதுக்குள் மின்னல் வெட்டின மாதிரி ஒரு வெளிச்சம். சட்டென்று அவனுக்குள் காட்சி ஒன்று தெரிய ஆரம்பித்தது.

அனுமன்காட்டின் வடக்கு பக்கத்தில் ஏறத்தாழ இரண்டு ஏக்கர் நிலத்துக்கு அப்பால் லேசாய் கருத்து கரிசல் பூமியாய் சில பருத்திச் செடிகளோடு காட்சி தரும் நிலத்துக்கும் அப்பால் புரசை மரக் கூட்டத்துக்கு நடுவிலே கம்பீரமாக வீற்றிருக்கும் சுடலை முனியப்பனின் சன்னதிக்கு எதிரில் ஆடு, மாடுகளை பலி கொடுக்கும் பீடம். ரத்தம் தோய்ந்த அந்த பீடத்துக்கு கீழே ஆறடி நீளத்திலும், ஆறடி அகலத்திலும், ஆறடி உயரத்திலுமாய் ஒரு பெரிய வெண்கலத் தகடு வேய்ந்த பெட்டி. அதற்குள்ளே தங்க நாணயங்கள் நிறைந்த பாத்திரங்கள் தாறுமாறாக கவிழ்ந்து கிடக்கின்றன.

தெரிந்த அந்தக் காட்சி உடனேயே கலைய, வலியும் விலகிக் கொள்ள மெல்ல சுய நிலைக்கு திரும்பினான் கணேசன்.

கனகமயில் அவனை ஆதரவாக அணைத்துக் கொண்டிருந்தாள். அவன் சுயநினைவுக்கு திரும்பவும் "இப்ப உன் மனசுல என்னய்யா தெரிஞ்சிச்சு?" வேகமாக கேட்டாள்.

ஏஞ்சலும், ராஜதுரையும் அவன் கூறப்



போவதை கேட்க மிக ஆவலாக காதுகளை கூர் தீட்டிக் கொண்டு காத்துக் கிடக்க கணேசன் வாய் திறந்தான்.

"அந்த தங்கம் வேற எங்கியோ இல்லை. நம்ப சுடலை முனியன் சன்னதிக்கு எதுக்க உள்ள பலி பீடத்துக்கு கீழதான் இருக்குது" - என்றான்.

"தெருமாவா, நல்லா பாத்தியா?" - கனகமயில் அவனை விடாது விசாரிக்க ஏஞ்சல் கனகமயிலை, 'அவசரப்படாதே!' என்பது போல பார்த்தான்.

"கணேசன் அந்த காட்சியை கொஞ்சம் விளக்கமா சொல்றீங்களா?" கணேசன் பக்கம் திரும்பி கனிவாக வாய் திறந்தாள்.

கணேசன் தனக்குள் தோன்றியதை சொல்ல வாயெடுத்தான். பலே! என்று இசைவாக கெடிகாரம் சப்தம் போட்டது.

ராஜதுரை கெடிகாரத்தை பார்த்தார். இரவு மணி ஒன்பது.

"மணி ஒன்பதாச்சு சட்டு புட்டுன்னு கிளம்பு தங்கம்!" தங்கமணியின் வீட்டில் அவளை வேகப் படுத்திக் கொண்டிருந்தான் நாச்சியப்பன்.

"நான் எதுக்கு நாச்சி. இவங்களை அழைச்சிகிட்டு போ, எனக்கு அங்கல்லாம் வர பயமா இருக்குய்யா...." -என்றாள் தங்கமணி.

"பைத்தியம்! இவங்க இரண்டு பேரையும் ஊர் கண்ணுல படாம காட்டுக்கு என் ஒருத்தனால கொண்டுகிட்டு போக முடியுமா? நான் வண்டி ஓட்ற சமயம் நீ இவங்களை வண்டிக்குள்ற துப்பாக்கியோட கவனிச்சுக்கிட்டே வந்தா தான் நம்பளால அந்த இடத்துக்கு ஒழுங்கா போய் சேர முடியும்.

நடுவுல எதாவது இடமொடக்கா நடந்திச்சன்னா நாம அங்கேயே இந்த துப்பாக்கியால சுட்டுகிட்டு தற்கொலை பண்ணிக்கறது நல்லது" என்றான் நாச்சியப்பன்.

பேசின கையோடு சந்திரசேகர் கைகளையும், நிர்மலாவின் கைகளையும் இழுத்து வைத்து

இறுகக் கட்டினான். பிறகு பெரிய பிளாஸ்திரி ஒன்றால் இருவர் வாயையும் மூடினான்.

சந்திரசேகருக்கு அவன் செயல்களால் அந்த இடத்திலேயே உயிர் போய் விடும் போல் தோன்றியது. கண்களில் நீர் வந்து முட்டிக் கொண்டது.

பிறகு ஒரு கறுப்பு அங்கியை எடுத்து வந்து இருவரையும் அதற்குள் அடக்கினான்.

வாசலில் ஸ்ரீ வைகுண்டத்து காளைகள் பூட்டின திருவிதாங்கூர் தேக்குமரத்து வில்வண்டி முன்னும் பின்னும் துணி ஸ்கிரீனால் மூடப்பட்டு தயாராக இருந்தது.

அந்த வண்டிக்குள் வீதியில் சுத்தமாக ஜன நடமாட்டம் இல்லாத நேரமாய் பார்த்து இருவரையும் உள்ளே ஏற்றி அடக்கினான். இறுதியாக வீட்டின் கதவை பூட்டி விட்டு துப்பாக்கி சகிதம் தங்கமணி ஏறிக் கொண்டான்.

அந்த வில்வண்டி குதிரை வண்டிக்கு சமமாய் ஓடத் தொடங்கியது.

முன் எச்சரிக்கையாக மாட்டின் கழுத்து மணிகளை அகற்றி இருந்தான். வண்டியின் கடையாணியின் காதில் தொங்கும் தகட்டு வளையையும் நீக்கியிருந்தான்.

ஆகையால் பெரிதாக சப்தம் போடாமல் ஓடியபடி அனுமன் காட்டை எட்டியது அந்த வில் வண்டி.

காட்டின் மேலே பண்ணையாரின் நிலத்துக்குள் நுழைந்து நடந்து செல்லாமல் தெற்கு பக்கமாக சற்று சுற்றியபடி நால்வரும் நடக்க ஆரம்பித்தார்கள்.

கறுப்பு உடைக்குள், வாயில் பிளாஸ்திரி ஒட்டியிருக்கும் நிலையில் அழக்கூட சக்தியற்ற நிலையில் அந்த இருட்டில் நிர்மலா சந்திரசேகரோடு ஓட்டியபடி நடந்தாள்.

இருண்ட சூழ்நிலை அவளை மிரட்டியது. தன் வாழ்க்கை திசை தடுமாறி இப்படி எங்கெங்கோ இழுபடும் நிலையை நினைத்த போது இதயத்



ப்பே நின்று விடும் போல் தோன்றியது.

அதற்கு மேல் நடக்க சக்தியற்றவளாக ப்படியே மயங்கித் துவண்டு விழுந்தாள். ச்சியப்பன் அதற்காக கவலைப்படாதவன் போல் வளை தூக்கி தோள் மேல் போட்டுக் ண்டான்.

கால்கள் அனுமன் காட்டின் பின்பக்க கரு லங் காட்டை குறி வைத்து நடந்தன.

கருவேலங்காட்டின் அந்த கூடாரத்தினுள் ஒரு ா விளக்கு மட்டும் எரிந்து கொண்டிருந்தது. ட்டத்திரியை காணவில்லை. டெண்டை டிய நாச்சியப்பனுக்கு சற்று குழப்பமாக னது. தங்கமணியை அந்த குழப்பதோடு த்தான்.

"எங்கைய்யா... அந்த மந்திரவாதி, ஆளைக் ணோமே?" - அவன் புரிந்த மாதிரி கேட்டான்.

"அதான் எனக்கும் தெரியலை, தங்கம் நீ ங்களோட பத்திரமா இங்கே இரு. நான் ட்டுக்கு மேலே போய் பார்த்துட்டு துட்றேன்" -என்றபடி அங்கிருந்து அகலக் கால் ந்தான்.

அமாவாசை இருட்டு கும்மென்று வனை வரவேற்றது. தடவித் தடவித் தடுமாறி ந்த காடு முழுக்க பார்வையை துழாவ விட்டான். "பட்டத்திரி, பட்டத்திரி" என்ற குரலை வேறு டு முழுக்க அலை பாய விட்டான்.

ஹூம்.... எங்குமே பட்டத்திரியை ணவில்லை! நாச்சியப்பன் மனது கவலைப் க்களை பறக்க விட்டது.

பட்டத்திரி தனக்கும் தெரியாமல் எதையோ ய்கிறான் எனும் உள்ளுணர்வு அவனை ளைத்தது.

மறு வினாடியே தைரியத்தோடு நிமிர்ந்தான். பட்டத்திரி அப்படி தப்பித் தவறி துரோகத்துக்கு ணை போய் தன்னை கருவேப்பிலையாக ஆக்கி த்தால் அடுத்த நிமிடமே துப்பாக்கியின் ஆறு

தோட்டக்களுக்கும் அவன் மார்பில் இடம் வாங்கி
கொடுத்து விட வேண்டியது தான் என்று
உறுதியான முடிவோடு அங்கிருந்து டென்ட்டை
நோக்கி திரும்ப ஆரம்பித்தான்.

பழகிய அவன் கால்களையே பாதை பதம்
பார்க்க ஆரம்பித்தது. அங்கங்கே கள்ளிச் செடியில்
முட்கள் அவனின் சதையைப் பொத்து ரத்தத்தை
ருசி பார்த்தன.

ஆனால் எதையும் பொருட்படுத்தும் மன
நிலையில் அவன் இல்லை.

கருவேலங்காட்டில் வேகமாக நடந்து, முட்
ளின் கீறலை ஒரு சாதாரண கொசுக்கடி போல
பாவித்தவனாக கூடாரத்துக்குள் நுழைந்தவனுக்கு
தூக்கி வாரிப் போட்டது.

தங்கமணியைக் காணோம்!

வாயில் பிளாஸ்திரியோடு மிரண்ட விழிகளில்
பயம் கொப்பளிக்க சந்திரசேகர் மட்டும் நாச்சிய
பனை வைத்த கண் வாங்காமல் பார்த்து
கொண்டு இருந்தான். பக்கத்தில் மயங்கிய நிலை
யில் நிர்மலா.

"எங்கைய்யா தங்கமணி?" -படபடப்போடு
கேட்டான். சந்திரசேகர் பார்வை பதிலுக்கு காட
விளக்குக்கு அருகில் சென்றது.

அங்கே ஒரு கடிதம்!

கடிதத்தை ஆவலாக எடுத்து பிரித்து படிக்க
ஆரம்பித்தான்.

"அன்புள்ள நாச்சி....

நரபலிக்கு தேவையான எல்லாவற்றையும்
எடுத்து வந்தாயே. அந்த பிணச்சாம்பலையும்
தேவாங்கையும் எடுத்து வைத்தாயா? என் வீட்
வாசல் நிலைகால் மேல் அது அப்படியே இருக்
றதே. அதை நான் போய் எடுத்துக் கொண்டு வி
வதற்குள் திரும்புகிறேன். நீ கவலைப்படாமல்
திரசேகர், நிர்மலா இவர்களை பார்த்துக் கொ
டிரு.

இப்படிக்கு
தங்கமணி.



கடிதத்தை படித்த நாச்சியப்பன் ஏனோ
தகளை குத்திப் பிசைந்து கொண்டான். சட
ன்று இந்தக் கடிதத்தின் தொடர்பாய் பட்டத்
திக்கு வந்த கடிதம் அவன் ஞாபகத்தில் ஊசியாய்
த்தியது.

பட்டத்திரியும் அதை தனது ஜோல்னாப்
பக்குள் வைத்தது நினைவுக்கு வர அவன்
ர்வை வேகமாக அந்த பையைத் தேடியது.
அந்தப் பை கூடாரத்தின் ஒரு மூலையில் பத்தி
க சுருட்டி வைக்கப்பட்டிருந்தது.
வேகமானான், நாச்சியப்பன்.

கடிதம் நல்ல வேளையாக அவன் கைகளில்
கி விட்டது.

ஆவலாக வேக வேகமாக பிரித்தான். அவ்வள
யும் சந்திரசேகர் இமை கொட்டாமல் பார்த்துக்
கொண்டிருந்தான்.

'அன்புள்ள பட்டத்திரிக்கு!' -என்று ஆரம்பித்த
ந்த கடிதத்தின் துவக்கம் காடா விளக்கின்
வெளிச்சத்தில் ஒரு மரண சாசனம் மாதிரி அவ
க்குத் தோன்றியது.

பட்டத்திரிக்கு!

மிக அவசரமான விஷயம். அதனால் தான் வில்
த்திரியிடம் இந்த கடிதத்தை கொடுத்து அனுப்
றேன். நாம் தங்கம் தேடும் விஷயம் எப்படியோ
ாலிசுக்கு தெரிந்து விட்டது.

நம்மை இவ்வளவு தூரத்துக்கு இயக்கிக் கொண்
க்கும் நமது எஜமானர் தற்போது புதையல்
க்கும் திட்டத்தை வேறு விதமாக மாற்றி
ள்ளார். நாச்சியப்பன் வசம் நான் கொடுத்த
ுப்பிய குறிப்பு பொய்யானது. நிஜ குறிப்பும்,
கம் உள்ள இடமும் தற்போது கண்டு பிடிக்கப்
டு விட்டது! நீ வந்து பலியும் பூஜையும் செய்து
ந்த தங்கத்தை எடுக்க வேண்டியதுதான் பாக்கி.
இன்று இரவு என்னை மறக்காமல் எப்படியாவது
முடைய ரகசிய இடத்தில் வந்து சந்தி. எல்லா
பரங்களையும் நேரில் சொல்கிறேன். இதுவரை

நீ நேரில் பார்த்திராத நம்முடைய எஜமானரையும்
சந்திக்கலாம். நீ அவரை பார்க்க விரும்புவதை
சொல்லி அவரிடம் சம்மதம் பெறு வதற்கு
போதும் போதுமென்றாகி விட்டது. எந்த
ணத்தைக் கொண்டும் நம் தொடர்பு நாச்சியப்பு
னுக்கு தெரியாதபடி பார்த்துக் கொள்.

இனியும் அது அப்படியே நீடிக்க வேண்டு
நாச்சியப்பனுக்கு உன் மேல் நம்பிக்கை வர நா
பட்டபாடு உனக்கு நன்றாக தெரியும். உன
சித்து வேலைகளும் வில்வாத்திரியும் அவனை ந
ராகவே ஏமாற்றி விட்டன.

ஜாதக நோட்டு, அதில் புதையல் தொடர்பா
பழைய கடிதம், சாவிக் கொத்து என்று ஒவ்வொ
றாக அவன் வீட்டில் அவனுக்கே தெரியாம
வைத்து அவனுக்கு புதையல் விஷயத்தில் ஈ
பாட்டை உண்டாக்கி பிறகு வில்வாத்திரியை வீ
டில் விட்டு ஆவி வசிய தாயத்தை எடுக்க வைத்
மாட்டை மிரள விட்டு ஓடச் செய்து கண்ணிமை
கும் வினாடியில் விஷ ஊசியை அதன் உடம்பி
பாய்ச்சி, அது மந்திரத்தால் இறந்ததாக நம்
வைத்து மிக கஷ்டப்பட்டு அவனை நாம் ந
கையாளாக மாற்றியுள்ளோம். அதை கெடுத்து
கொள்ள வேண்டாம். நாச்சியப்பன் மிக பொல்ல
தவன்! ஜாக்கிரதையாக இரு.

கஸ்தூரி பற்றிய மர்மத்துக்கு எந்த மந்திரவா
யாலும் விடை சொல்ல முடியவில்லையே...
இன்று நீ நேரில் அதை தெரிந்து கொள்வாய்.

நமது எஜமானர் மந்திரம் மாயங்களை நம்பு
மனிதர் கிடையாது. ஆனால் புதையல் எடுக்க
போய் சித்தப்பிரமை பிடித்து இன்று சென்னையி
அல்லல் பட்டுக் கொண்டிருக்கும் ராமநாத
போன்றவர்களை உத்தேசித்துத்தான் போய்
தொலைகிறது என்று உன்னை இந்த விஷயத்தி
பயன்படுத்திக் கொள்ள சம்மதித்தார்.

நீ இன்று அவரை சந்தித்து உனது மாந்திரீ



த்தால் புதையல் ஒரு பிரச்சினையும் இல்லாத
கைக்கு கிடைக்க வழி செய்ய வேண்டும். அப்
பொழுது தான் உனது பூஜைக்கு அவர் தங்கம்
கந்து உதவுவார். இல்லாவிட்டால் நீ தொலைந்

அனைத்தையும் மனதில் வைத்துக் கொள்.
பத்து நம்மை போலீஸ் வடிவில் நெருங்க
ரம்பித்து விட்டது. உடனே தங்கத்தோடு தப்ப
வேண்டும். போலீஸ் நெருங்கி வளைக்கும் சமயம்
நாச்சியப்பனும் சந்திரசேகரும் தான் அகப்பட
வேண்டும். பலன் நமக்கு.... பழி அவர்கள் மேல்
விழ வேண்டும்.

இப்படிக்கு
தங்கமணி.

கடிதத்தை படித்த நாச்சியப்பன் முகம்
ரத்தமேயில்லாமல் உறைந்தது போல் ஆனது.

## 30

ஆகாசம் கிழிபடும் வண்ணம் ஆவேசம் வந்து ஒரு இடி தன் தலைமேல் விழுந்து விட்டதைப் போல் நாச்சியப்பனுக்குள் ஒரு பிரமை.

சந்திரசேகர் கூர்மையாக இவைகளை கவனித்து விட்டு அவனைப் பார்த்து ஏதோ பேச
யன்ற பாவனையில் கைகள் கட்டப்பட்டி
க்கும் நிலையில் அவனது உடம்பின் நெளிசலும்,
க்கல் சப்தமும் நாச்சியப்பன் கவனத்தை அவன்
கம் இழுத்தது.

நாச்சியப்பன் உடனேயே தாமதிக்காமல் அவன்
டுகளை அவிழ்த்து வாய் பிளாஸ்திரியை
கினான்.

"நாச்சியப்பா அந்த கடிதத்துல இருக்கிற விஷ
த்தை ஓரளவு என்னால ஊகிக்க முடியும். தங்க
மணிதான் எழுதியிருக்கணும். தயவு செய்து
அவளை நம்பாதே. அவ ஒரு 'எமகாதகி".

பிளாஸ்திரி நீங்கிய நிலையில் சந்திரசேக
வாயில் இருந்து வெளிப்பட்ட முதல் எச்சிக்கை
நாச்சியப்பனை கீற ஆரம்பித்தது.

"நான் தெரியாத்தனமா அவகிட்ட கு
போதையில தங்கம் பத்தி உளறிட்டேன். அது இவ்
வளவு தூரத்துக்கு என்னை கொண்டுகிட்டு
வரும்னு நான் எதிர்பாக்கலை. போலீசால ஏதாவது
சிக்கல் வரும்னு தெரிஞ்சா தங்கமணி எப்படி
யாவது நழுவிடுவா. நீயும் நானும் மாட்டிக்கிட்டு
கம்பி எண்ண வேண்டி வரும். அவ கழுவு
தண்ணியில நழுவுற மீன்!"

சந்திரசேகர் உக்ரமாக மனம்விட்டு பேசும் ச
யம் நிர்மலாவிடம் மயக்கம் நீங்கிக் கொண்டிருந்
தது.

"பாவம் இந்த பொண்ணு. உனக்கு என்ன
கெடுதல் செஞ்சா? இவளை நரபலி கொடுத்து
கொலையாளி ஆயிடாதே நாச்சியப்பா"

சந்திரசேகர் பேசப் பேச நாச்சியப்பன் மனதி
புதிதாக ஒரு திட்டம் குட்டி போடத் தொடங்கியது
நட்போடு சந்திரசேகரை பார்த்தான்.

எதுவும் பேசாமல் கடிதத்தை சுருட்டி பட்ட
திரியின் ஜோல்னாப் பையில் வைத்தான். அ
இருந்த இடத்தில் இருந்த மாதிரியே வைத்
விட்டு சந்திரசேகர் பக்கம் திரும்பினான்.

"சந்திரசேகர் நான் தண்டனைக்கோ, போ
சுக்கோ பயந்த ஆள் கிடையாது. என் வாழ்
கையில ஒரு பொட்டச்சி என்னை மகா முட்ட
ளாக்கிட்டா. நல்ல வேளை இப்ப நான் சுதாரி
சிட்டேன். நீ கவலைப்படாதே. வைரத்தை வைர
தால தான் அறுக்கணும். நான் உயிரோட இருக்கி
வரையிலும் உங்க இரண்டு பேருக்கும் ஒரு கெ
தலும் வராது. தயவு செய்து நம்ப மன மாற்றம் ப
டத்திரிக்கோ தங்கமணிக்கோ தெரிய வேண்டா

அந்த தங்கம் எனக்கு கிடைக்கலேன்னா பரவ
யில்லை. அந்த நம்பிக்கை துரோகிகளுக்கு கிடை
கவே கூடாது. அது மட்டுமல்ல. அவங்க நம்பிக்



ரோகத்துக்கு அரசாங்கம் தண்டனை தந்தா அது
ததாது. என் கையால நான் தரணும். எனக்கு
சந்தேகம் தங்கமணி தன் கடிதத்துல மூணா
ஒரு நபரை பத்தி எழுதியிருக்கா. யார்
ன்னு என்னால யூகிக்க முடியலை, உனக்கு
சியுமா?"

சந்திரசேகர் உதடு மறுப்பாக பிதுங்கியது.

"யாருக்கு தெரியும்? பொதுவா பொம்பளைங்க
ளயே புரிஞ்சுக்க முடியாது. அதுலயும் இவ
சாலி....." சந்திரசேகர் தனது கருத்தை சொன்ன
ந்த வினாடியில் வெளியே இலை தழை சல
க்கும் சப்தம்.

நாச்சியப்பன் எட்டிப் பார்த்தான்.

பட்டத்திரி வந்து கொண்டிருந்தான்.

சந்திரசேகரின் கைக்கெடிகாரம் மணி மூன்று
று சொல்லிக் கொண்டிருந்தது.

காடா விளக்கு உயிரை விட்டு விடுவது போல
துங்கி அணையப் பார்த்தது. திரியை நிமிண்டி
டு அதற்கு உயிர் தந்தவனாய் அந்த டெண்ட்
வாசலை பார்த்தான்.

உற்சாகமாய் பட்டத்திரி.

உள்ளே மூவரையும் பார்த்து விட்டு சற்று
ர்ந்த பாவனையில் "நீங்க எப்ப வந்தீங்க?" -
று கேட்டான்.

"ஒரு அரை மணி இருக்கும்" முதல் பொய்
ச்சியப்பனிடம் இருந்து பிரசவம் ஆனது.

"ஆமா எங்கே, போயிட்டுவர்றே பட்டத்திரி?"
னர் லகுவாக கேட்டான். பட்டத்திரியிடம்
லசாய் தடுமாற்றம். சுதாரித்தபடி வாய்
ந்தான்.

"அமாவாசை ராத்திரியாச்சே. அதான் அர்த்த
ம பூஜை செஞ்சிட்டு வர்ரேன்."

அவனது வேட்டியின் ஓரிடத்தில் ரத்தம்
றந்து போயிருந்தது. நாச்சியப்பனின் கழுகுக்
கண்களில் அதுவும் பட்டு விட்டது.

"ஆமா வேட்டியில் என்ன ரத்தக் கறை?"-

நாச்சியப்பனின் தர்மசங்கடமான கேள்வி ஏனோ பட்டத்திரியை கொதி நிலைக்கு கொண்டு போய் விடவே. "நாச்சியப்பா தொண தொணன்னு கேள்வி கேட்காம கொஞ்சம் சும்மா இருக்கியா? நாளைக்கு பகல் 12 மணிக்கு இந்த நிர்மலாவை பலி போட்டு நாம தங்கத்தை எடுக்கறோம். இடம் தெரிஞ் சிடிச்சு!" -பட்டத்திரி நாச்சியப்பனை வேறு வித மாக திசை திருப்பவும் நாச்சியப்பன் பொய்யான வியப்போடு புருவத்தை வளைத்தபடி "இடம் தெரிஞ்சிடிச்சா? எங்கே?" -என்று கேட்டான்.

"சுடலை முனி சன்னதிக்கு வடமேற்கே ஒரு பூவரச மரம் கிட்ட....."

"ஆமா பகல் பொழுதா இருக்கே. போலீஸ் கீலீஸ் வந்துட்டா?" -நாச்சியப்பன் பயந்த பாவனையில் கேட்கவும்.

"ஒரு பய கிட்ட வர முடியாது. வந்தா சுடலை முனி பாத்துப்பான்" - என்றான் பட்டத்திரி.

கரட்டின் விளிம்பில் அந்த இரவு விடியும் வேளையிலும் இரண்டு போலீசார் மாடு மேய்பவர்களைப் போல் ஒரு போர்வையை உடம்பில் சுற்றிக் கொண்டு இடுப்பில் வயர்லெஸ் கருவியோடு சுற்றி சுற்றி வந்து கொண்டிருந்தார்கள்.

மூன்றாவதாய் ஒரு உருவம் அந்த இரண்டு பேருக்கும் தெரிந்தபடி அந்த கரட்டில் பாறை பாறையாக மறைந்து பின்புறமுள்ள கருவேல காட்டில் காலடி எடுத்து வைத்து நடக்க ஆரம்பித்தது.

அதன் கைகளில் சில பொருட்கள். இருளில் அது சரியாக அடையாளம் தெரியவில்லை.

டென்ட்டின் முன் போய் நின்று காடா விளக்கின் வெளிச்சத்தில் பார்த்த போது தான் தெரிந்தது அது தங்கமணி என்று பலிக்கு தேவையான சங்கதிகள்.

பட்டத்திரியை, பார்த்து பயந்த பாவனையி



நாச்சியப்பன் அருகில் போய் நின்றாள். நாச்சியப்பன் அவளை ஒரு வினாடி எரிக்கும் விழியோடு பார்த்தவன் மறு வினாடியே "வா தங்கம்! நல்ல வேளை ஞாபகமா இந்த பலிச் சாமான்களை வீட்டுக்கு போய் கொண்டு வந்தே...! ஆமா வழியில ஒருத்தரும் பார்க்கலியா?" என்று படபடப்பாக கேட்டான்.

"ஊஹூம் ஈ எறும்புக்குக் கூட நான் இதுங்களை எடுத்துக்கிட்டு வந்தது தெரியாது."

வேண்டுமென்றே போலீசார் பார்வையில் பட்ட மாதிரி வந்தவள் துணிந்து ஏதோ ஒரு உள் நோக்கத்தோடு பொய் சொன்னாள்.

"ஆமா எங்க தேவாங்கு?" - நாச்சியப்பன் சடாரென்று எதையோ கண்டுபிடித்த பாவனையில் கேட்கவும் தங்கமணி முதலில் சற்று மிரண்டு பிறகு பரிதாபமாக முகம் தூக்கினாள்.

"செத்துப் போச்சய்யா!" என்றாள்.

"செத்துப் போச்சா... என்ன சொல்றே தங்கமணி? நாம வரும் போது கூட உயிரோட இருந்திச்சே?"

"நாம வந்ததுக்கு அப்புறம்தான். எப்படியோ... பின் பக்கமா குழி தோண்டி புதைச்சிட்டு வந்திருக்கேன்."

"ஐய்யோ நரபலியில் அது தான் ரொம்ப முக்கியம் அதை பிடிக்க நான் என்ன பாடு பட்டேன் தெரியுமா? இப்ப என்ன பண்றது பட்டத்திரி?" - பரிதவிப்பாக பட்டத்திரி பக்கம் திரும்பினான் நாச்சியப்பன்.

"பரவாயில்ல நாச்சியப்பா. தேவாங்கு இல்லேன்னா ஒண்ணும் குடி முழுகிடாது. அதுக்கு பதிலா தான் சுடலை முனி அருளும் ஆவி வசிய தாயத் தும், சொர்ண லிங்கத் தகடும் இருக்கே. நான் பாத்துக்கறேன்."

பட்டத்திரியின் ஆறுதலில் மிகப்பெரிய மர்மம் ஒளிந்து முகம் காட்ட மறுத்துக் கொண்டிருந்தது.

நாச்சியப்பனுக்கு அது துளி கூட பிடிபடவில்லை.

'போலீஸ் சுற்றி வளைக்கப் போவது தெரிந்தும் பட்டத்திரி பதட்டமில்லாமல் பகலில் பலிக்கு ஏற்பாடு செய்ய காரணம் என்னவாக இருக்கும்? தங்கமணியை சந்திக்க சென்ற பட்டத்திரி ஆடையில் எங்கிருந்து வந்தது ரத்தம்? ஒன்பது மணி வரை உயிரோடு இருந்த தேவாங்கு அதற்கு பிறகு எப்படி இறந்தது?"

மூளையைப் போட்டு கசக்கிக் கொண்டான் நாச்சியப்பன். தங்கமணி அவன் குழம்பிய நிலையில் இருப்பதை பார்த்து பட்டத்திரியை கண்டு 'நமக்கு வெற்றி' என்பது போல் சிரித்தாள்.

பகல் பொழுதின் பன்னிரெண்டு மணியை குறி வைத்த படி அவர்கள் ஆளுக்கொரு மூலையாய் உட்கார்ந்து கொள்ள மெல்ல கிழக்கு வானம் வெளுக்கத் தொடங்கியது. பனி பூசிய காற்று உதிக்கப் போகும் சூரியனுக்கு பயந்து வேகமாக மேற்குப் பக்கம் ஓடிக் கொண்டிருந்தது.

ஓடும் அதனுள் வயர்லெஸ் செய்தி!

"இந்த நிமிஷம் வரை எந்தவித அசம்பாவிதமும் நடக்கலை. எல்லோரும் டெண்ட்டுல தூங்கிக் கிட்டு இருக்காங்கன்னு நினைக்கறேன். ஒரு மூணு மணி சுமாருக்கு ஒரு பெண் டெண்ட்டை நோக்கி போனா! அனேகமா அது தங்கமணியாத்தான் இருக்கணும். கையில எதையோ கொண்டுகிட்டு போனா. அதுக்கு முன்னால அந்த மந்திரவாதி டெண்ட்டை நோக்கிப் போனான். அவ்வளவுதான்!"

ஸ்டேஷனில் அதை ரிசீவ் செய்த ராஜதுரை கைகளை குத்திப் பிசைந்து கொண்டார். நடக்கப் போகும் விபரீதத்தின் கால நேரம் தெரியாத கோபமும் அதை தடுக்க வேண்டிய பொறுப்புணர்வும் அவருக்குள் குதி தாளம் போட்டது.

ஒரு கணம் கணேசன் அந்த புதையல் கடலை முனியின் சன்னதிக்கு எதிரில் உள்ள பலிபீடத்தின் கீழ் இருப்பதாக சொன்னதை நினைத்துப் பார்த்தார்.



அந்த பலிபீடத்தை தோண்டி பார்த்து கணேசன் சொன்னது எந்த அளவு உண்மை என் புதை கண்டறிய தேவதாசுடன் கூடி திட்டமிட்டபடி அதற்கு இன்னும் இரண்டு மணி நேரம் இருக்கிறது. வேகமாக இடைப்பட்ட அந்த இரண்டு மணி நேரமும் கழிந்தால் தேவலை என்று அவருக்குள் ஆர்வப் பொறி பறக்க ஆரம்பித்தது.

விடிந்து விட்டது.

சூரியன் அடிவானுக்கு இருபது முப்பது அடிக்கு மேல் ஒரு தங்கத் தட்டாய் ஜொலித்துக் கொண்டிருக்கும் சரியான காலை ஏழு மணிக்கு அந்த போலீஸ் ஜீப் படு வேகமாக ஸ்டேஷனை விட்டு கிளம்ப ஆரம்பித்தது.

உள்ளே அவிழ்க்கப்படாத கட்டுக்களோடு ஆனால் உற்சாகமாய் தேவதாஸ். பக்கத்தில் ஏஞ்சல், எதிர்ச்சாரியில் பணிவாக ராஜதுரை, பக்கத்தில் டி.எஸ்.பி. பழனிராஜ்!

ஏஞ்சல் ஏதோ காணாததை காணப் போகும் ஆவலில் பரபரப்புடன் தென்பட்டாள்.

தோளில் கருநாகத்தோடு தொங்கிக் கொண்டிருந்தது அந்த பேக். ஏதோ பேக்கை திறக்க வேண்டிய அவசியமே இன்னமும் அவளுக்கு வந்திருக்கவில்லை.

உள்ளிருக்கும் கருநாகம் போதிய காற்று இன்றி தன் உடம்பை மிகுந்த சிரமத்தோடு நெளித்துக் கொண்டிருந்தது.

அந்த போலீஸ் ஜீப்பை தொடர்ந்து பின்னால் ஒரு ஜீப்.

அதில் கடப்பாரை மண்வெட்டி சகிதம் சில போலீசார்!

அரை டிராயரும், வெள்ளை கை வைத்த பனியனுமாய் முரட்டு வேலைகளுக்கெல்லாம் தங்களை தயார் படுத்தி வைத்திருக்கும் செண்ட்ரிகளும் போலீசாரும் அதில். முதல் ஜீப்பை பின் தொடர்ந்து கொண்டிருந்தனர்.

ஊர் எல்லையில் டி.எஸ்.பி. பழனிராஜும்,

தேவதாசும் வந்த ஜீப் நின்று கொள்ள சற்று வித்தியபடி தேவதாஸ் எதிரே தெரிந்த வயல் வெளியில் வரப்பினிடையே இறங்கி நடக்க ஆரம்பித்தார்.

நடக்கத் தொடங்கும் போதே "அந்த கோவிலுக்கு இப்படித்தான் சார் போகணும். அனுமன் காட்டை ஒட்டி ஒரு அடர்ந்த காட்டுக்குள்ளே இருக்கு. அந்த கோவில் சுடலை முனி ரொம்ப சக்தி வாய்ந்தவர்னு கேள்வி. தனியா யாரும் அந்த கோவிலுக்கு போய்ட்டு வர பயப்படுவாங்க.

பெரும்பாலும் ஈ காக்கை இருக்காது!"

தேவதாஸ் சொன்னது நிஜம்தான்.

சுடலை முனி ஈ காக்கையின் ஸ்னேகம் கூட இன்றி தனி மரமாக கையில் வாளோடு அமர்ந்து கொண்டிருந்தார். உருண்டையான முட்டை விழிகளும், நீவி விட்ட மீசையும், ஆஜானுபாகுவான தேகமும் பார்ப்பவரை அரள வைக்கும் போல் தோன்றியது.

ஏஞ்சலுக்குள் பயம் ஒரு பருந்தாக பறக்க ஆரம்பித்தது. டி.எஸ்.பி. பழனிராஜன் பார்வை சூழ்நிலையை சலித்தது. ஏனோ கணேசனையும் கனகமயிலையும் தவிர்த்து விட்டு வந்திருந்தார்கள். சுடலை முனிக்கு எதிரே உயரமாய் பலி பீடம். ரத்தம் உறைந்து போய் சுற்றிலும் அப்பொழுது தான் யாரோ. அந்த நிலத்தை தோண்டி மூடிய பாவனையில் கிளறுதலாக கிடந்தது.

பழனிராஜுக்கு அதை பார்க்க இலேசாய் பதைத்தது. ராஜதுரையும் அதை சரியாகவே கணக்கிட்டு விட்டார். சற்றுத் தள்ளி நிறைய வேல் கம்புகளை வேண்டுதலாய் நட்டு வைத்திருந்தார்கள்.

பக்கத்து மரம் ஏகப்பட்ட பிரார்த்தனைக்கல் முடிச்சுகளுடன் காற்றில் ஆடிக் கொண்டிருந்தது. தயாராய் கடப்பாரை, மண்வெட்டி சகிதம் பலி பீடத்தை சுற்றி சில போலீஸ் வந்து நிற்க வெட்டுவதற்கு உத்தரவு போட்டது பழனிராஜின்



...ர்வை.

...வினாடியும் தாமதிக்காமல் கடப்பாரைகள் அந்த ...லி பீடத்தை பதம் பார்க்க ஆரம்பித்தன. மண் ...ட்டிக் கட்டியாக வராமல் பொலபொலவென்று ...ந்தது. வெட்டி மூடிய குழியை ஒரு சிரமும் ...இன்றி திரும்ப வெட்டுவது போல் தோன்றியது ...அவர்களுக்கு. தெரியப்போகும் தங்கப் பெட்டிக்...ாக எல்லோரும் காத்துக் கொண்டிருக்க ஒரு ...போலீஸ்காரரால் சக்தியெல்லாம் திரட்டி மண்...ணுக்குள் குத்தி நெம்பிய கடப்பாரை ஒன்று ...திரும்ப அவரால், மேலே உயர்த்தப்பட்ட போது ...அதன் கூர்முனையில் ரத்தக் சகதி.

பழனிராஜ் அதை பார்த்து விட்டு ஸ்டாப் இட்! ...ன்றார். இன்னொரு போலீஸ் இப்பொழுது ...மண்ணை கையால் விலக்க அனைவர் பார்வை...யையும் குத்திட்டுப் போகச் செய்தது. ஒரு இளம் ...பெண்ணின் சிரம் வெட்டப்பட்ட பிரேதம்! வெட்...டப்பட்ட சிரம் பிரேதத்தின் கால் மாட்டில் வாயில் ...எலுமிச்சையை கடித்த நிலையில் அமர்ந்திருந்தது.

# 31

பழனிராஜ் விதிர்த்துப் போய் அந்த பிரேதத்தை பார்த்து விட்டு சட்டென்று பின் வாங்கினார்.

ஏஞ்சல் வாய் விட்டு அலறியே விட்டாள்.

ராஜதுரை விழிகள் காது வரை விரிவடையும் போல் தோன்றியது. தேவதாஸ் ...ஏஞ்சல் அருகில் ஆறுதலாக போய் நின்று ...கொள்ள குழியை வெட்டிய போலீசார் குழியை ...விட்டு மேல் ஏறிக் கொண்டார்கள்.

சில நிமிடம் வரை ஒருவரிடமும் பேச்சு மூச்சு ...இல்லை. ஒரு வழியாக ராஜதுரை வாயைத் திறந்...தார்.

"சார் எந்த நரபலி நடந்துடக் கூடாதுன்னு ...நினைச்சோமோ அது நடந்துடிச்சி. தங்கப் பெட்டி

யும் கை மாறிடிச்சு. நாம தான் கொஞ்சம் லேட்டா வந்துருக்கோம்"

ஆமோதிப்பைப் போலவும், ஆவேசப்படுபவரைப் போலவும் முகம் தூக்கினார், பழனிராஜ்.

இந்த கோயில் பக்கமா ஏன் பாரா போடலை ராஜதுரை? கேட்டார்.

"இந்த கோயில்லதான் புதையல் இருக்குங்கறது யாருக்கு சார் தெரியும்? நம்ப சந்தேகம் எல்லாம் அனுமன் காட்டுப் பக்கமும், அதுக்குள்ற இருக்கற அந்த மந்திரவாதி மேலேயும், நாச்சியப்பன் மேலேயும்தானே? இந்த கோயில்லதான் அந்த புதையல் இருக்குங்கற விஷயமே. அந்த ஈ.எஸ்.பி.கணேசன் மூலமாக நேற்று இரவுதான் தெரியும். தெரிஞ்ச உடனேயே உங்களுக்கு தகவல் தந்துட்டேன்."

ராஜதுரை என்னதான் சமாதானம் சொல்லிய போதிலும் பழனிராஜன் அதை ஏற்க முடியவில்லை. ஏஞ்சல் மெல்ல சுதாரித்திருந்தாள்.

பழனிராஜை நெருங்கி "சார்..... நான் இந்த பாடியை ஒரு படம் எடுத்துக்கட்டுமா?" -பாக்கின் ஜீப்பின் மேல் விரல்களை வைத்தபடி கேட்டாள்.

பழனிராஜ் சற்று கோபத்தோடு ஏஞ்சலை பார்த்தார்.

"சாரி பேபி... விஷயம் ரொம்ப சீக்ரெட்டா இருக்கணும்னு விரும்பறேன். இல்லேன்னா குற்றவாளிங்க எச்சரிக்கையாயிடுவாங்க" -என்ற பழனிராஜ் "மிஸ்டர் ராஜதுரை இந்த பாடிதான் அந்த காணாம போன நிர்மலாவா?" - என்று ராஜதுரை பக்கம் பார்த்து கேட்கவும், ராஜதுரை பயத்தோடு அந்த முண்டத்தை ஒரு கடப்பாறையால் சாய்த்து விட்டு முகத்தை உற்றுப் பார்த்தார்.

"நோ சார்....." - என்றார்.

"அப்ப யார் இந்த பெண்?" கேள்விக்குள் நுழைந்தார் பழனிராஜ்.

"பிரசெர்வ் தி பாடி" என்றார். போலீஸ்காரர்கள் அந்த உடம்பை அங்கிருந்து அகற்ற ஆரம்பித்



ர்கள்.

உடனேயே ஸ்ட்ரெச்சர் ஒன்று கொண்டு ரப்பட்டது.

அதில் அந்த பிணம் ஏிப்படுக்க பலி பீடம் இரும்பவும் பழைய நிலைக்கு கொண்டு ரப்பட்டது.

பின்னர் அங்கிருந்து போலீஸ் ஜீப்புகள் வேகமாக கிளம்ப ஆரம்பித்தன.

ஸ்டேஷனில் பழனிராஜ் மண்டையைப் போட்டு குடைந்து கொண்டிருந்தார். தாமதிக்கும் வ்வொரு நிமிடங்களும் அவருக்கு ஏதோ ஒரு பெரிய தவறுக்கு கதவை திறந்து விட்டுக் கொண்டு இருப்பதாகப் பட்டது.

"இவ்வளவு பேர்.... எவ்வளவோ வசதி இருந்தும் ஒரு நரபலியைத் தடுக்க முடியாம போயிடுச்சே.... ப்ச்! ஆமா பலிதான் முடிஞ்சிடிச்சே. அந்த மந்திரவாதியும், அந்த நாச்சியப்பனும் அந்த காட்டுல இன்னும் என்னய்யா பண்றாங்க? யாரை ய்க்கப் பார்க்கறாங்க? போய் அவங்களை பிடிச்சு இழுத்துக்கிட்டு வாங்க. நாலு சாத்து சாத்தி உண்மையை வரவழைப்போம்"

கோபத்தில் அவர் போடும் கட்டளைகளை முரைகுறையாகத் தான் அங்கீகரித்தனர் ராஜதுரையும், தேவதாசும்.

"சார்! அவங்க நம்ப பார்வையை விட்டு எங்கேயும் போயிட முடியாது. அவங்களை நம்ப ரூப் ரொம்ப சின்சியரா ஃபாலோ பண்ணிக்கிட்டு இருக்காங்க. வாஸ்தவத்துல நேற்று இரவு வரை மக்கு மட்டுமில்ல அந்த நாச்சியப்பன் பட்டத்ரிக்கே கூட தங்கம் இருக்கற இடம் தெரியாது. அதுதான் உண்மை."

"அப்டின்னா பிணம் எப்படி வந்துச்சு எங்க அந்த தங்கப் பெட்டி. கணேசனோட ஈ.எஸ்.பி. வர்ங்கறது வெறும் ஹம்பக் மேட்டரா?"

பழனிராஜிடம் கோபம் கூடிக் கொண்டே பாய்க் கொண்டிருந்தது. ஊடே ஏஞ்சல் மெல்ல

நுழைந்தான்.

"சார்.... நீங்க இதுவரைக்கும் ஒரு முக்கியமான நபரைப் பற்றி பேசவேயில்லையே?" கேட்டான்.

டி.எஸ்.பி. உட்பட அனைவர் பார்வையும் ஏஞ்சலை ஏறிட்டது.

"அதான் சார் அந்த பண்ணையார்! உலகத்தின் எட்டாவது அதிசயமான நித்யகன்னி கஸ்தூரிய வெச்சுக்கிட்டிருக்கிறவர்."

கஸ்தூரி பற்றி ஏஞ்சல் ஞாபகப்படுத்தவும் அப்பொழுதுதான் அனைவருக்கும் அவள் நினைவே வந்தது. ராஜதுரை உற்சாகமாய் உடனேயே வாய் திறந்தார்.

"சார் பண்ணையாரை கண்காணிக்க ஒரு சி.ஐ.டி. போலீசை அவர் வீட்ல வேலைக்கு அப்பாய்ண்ட் பண்ணியிருக்கேன். செங்கோடன்னு பேர். இன்னிக்கு அவர் தன்னோட முதல் ரிப்போர்ட்டை தர்றதா சொல்லியிருக்காரு."

ராஜதுரை சொல்லும் போதே யாரோ ஒரு நபர் உள்ளே ஓடி வந்தான். பார்க்க தங்கமணியின் வண்டி ஓட்டி நடராஜனைப் போல் தெரிந்தான்.

வந்தவன் அனைவரையும் பார்த்து பெரிதாக கும்பிட்டான். அவன் கைகளில் ஒரு கடிதம். அதை தேவதாஸ் எதிரே நீட்டினான். வேகமாக அதை பிரித்தார் தேவதாஸ்.

மதிப்பிற்குரிய இன்ஸ்பெக்டர் அவர்களுக்கு.

வணக்கம், இப்பவும் நானாகிய தங்கமணியும், பிரபல மாந்திரீகரும் தேவி உபாசகருமான கருடராஜ பட்டத்திரி என்பவரும் நாச்சியப்பன் எனும் கொடிய ரவுடி வசம் மாட்டிக் கொண்டு அல்லாடிக் கொண்டு இருக்கிறோம்.

சந்திரசேகர் என்னும் தொல்பொருள் இலாகா அதிகாரியுடன் சேர்ந்து கொண்டு நாச்சியப்பன் எங்களை கடந்த பல வாரங்களாகவே கொடுமைப் படுத்தி வருகிறான்.

நிர்மலா என்ற பெண்ணை வேறு கடத்தி வந்து அடைத்து வைத்திருக்கிறான். இன்று பகல் சரியாக



12 மணிக்கு சுடலை முனிக்கு அவளை பலி போட்டு அங்கிருக்கும் தங்கப் புதையலை எடுக்கப் போகிறான்.

நாங்கள் அவன் பேச்சைக் கேட்கா விட்டால் எங்களை சுட்டு விடுவதாக மிரட்டுகிறான். உடனே சுடலை முனி கோயிலுக்கு வந்து பலி நடக்காமல் தடுத்து எங்களை காப்பாற்றி நாச்சியப்பனையும், சந்திரசேகரையும் கைது செய்யவும்.

இப்படிக்கு
தங்கமணி.

கடிதத்தை படித்த தேவதாசுக்கு இலேசாக தலையை சுற்றியது. சுதாரித்தபடி பேசினார்.

"சார்! இன்னும் தங்கம் எடுக்கற விஷயத்துல நரபலி நடந்து முடியலை. இனிமே தான் நடக்கப் போகுது" -என்றபடி புகார் கடிதத்தை டி.எஸ்.பி. எதிரே நீட்டினார், தேவதாஸ்.

ராஜதுரை தலையைப் பிய்த்துக் கொண்டார்.

கவலைப்படாதீர்கள் என்பது போல் செங்கோடன் அப்பொழுது ஸ்டேஷனுக்குள் நுழைந்து கொண்டிருந்தார்.

ராஜதுரைக்கு செங்கோடனை பார்க்கவும் உயிர் வந்த மாதிரி ஒரு தெம்பு. செங்கோடன் கைகளில் ஒரு ஃபைல்! பணிவாக டி.எஸ்.பி.ஐ பார்த்து சல்யூட் அடித்த செங்கோடன், உற்சாகமாக ஃபைலை ராஜதுரை வசம் தர, ராஜதுரை அதை பழனிராஜ் வசம் தர, ஃபைலின் முகப்பைத் திறந்தார், பழனிராஜ்.

பெரிதாகவே அதிர்ந்தார்!

மணி பதினொன்று! கருவேலங்காட்டு டென்டில் பரபரப்பாக தென்பட்டார்கள் ஒவ்வொருவரும், தங்கமணி பட்டத்திரியை அடிக்கொரு தரம் நாச்சியப்பனுக்கு தெரியாத மாதிரி பார்த்து வெற்றிப் புன்னகை சிந்திக் கொண்டிருந்தாள்.

நாச்சியப்பன் தன்னை மிகவும் கட்டுப்படுத்திய படி சந்திரசேகரிடம் ஊன்றியிருந்தான். சந்திரசேகர்

இதயமோ நிமிடத்திற்கு எழுபத்திரண்டு தடவை என்ற சராசரி கணக்கை மீறி துடித்துக் கொண்டிருந்தது.

வாடிய ரோஜா போல் நிர்மலா! சந்திரசேகர் தோள் மீது சற்று நட்பாக சாய்ந்தபடி அழுது கொண்டிருந்தாள். சந்திரசேகரின் கைகள் அவளை ஆறுதலாக தட்டிக் கொடுத்துக் கொண்டிருந்தன.

"கிளம்பலாமா நாச்சி..." தங்கமணி சூழ்நிலை இறுக்கத்தை பிளந்தபடி கேட்டாள். நாச்சியப்பன் பட்டத்திரியைப் பார்த்தான்.

பட்டத்திரி அதீத அமைதியோடு வில்வாத்திரியை வருடி விட்டுக் கொண்டிருந்தான். நிதானமாக நாச்சியப்பனை பார்த்து கிளம்பலாம் என்று தலையசைத்தான்.

கிளம்பினார்கள்.

"ஒவ்வொருத்தரா போங்க. யாராவது பாத்துடப் போறாங்க" தங்கமணியிடம் போலிக் கரிசனம்.

அவள் சொன்னபடியே ஒவ்வொருவராக கிளம்பினார்கள்.

அதை ஊர்ஜிதப்படுத்தியது மாடு மேய்க்கும் சில போலீஸ் சி.ஐ.டி.களின் வயர்லெஸ்!

"சார் ஒவ்வொருத்தரா கிளம்பி சுடலை முனி கோயிலுக்கு போறாங்க. நீங்க கிளம்பலாம்"

வயர்லெஸ் செய்தியை ரிசீவ் செய்த ராஜதுரை சற்று பதட்டமாக பழனிராஜைப் பார்த்தார்.

"சார் கோயிலுக்கு கிளம்பிட்டாங்கலாம் அவங்க. நாம்பளும் புறப்படலாம்"

பழனிராஜ் அதைக் கேட்டு ஆமோதித்த அந்த வினாடிகளில் ஸ்டேஷன் வாசல் படியில் சற்று துவட்டலாய் ஒரு உருவம்.

தேவதாஸ் ஏஞ்சல் உட்பட அனைவரும் அந்த உருவத்தை பார்த்து திகைக்க, துவண்ட அந்த உருவம் தலையை நிமிர்த்தியது.

பண்ணையார்!

"வாங்க ராஜரத்தினம். எங்கே கஸ்தூரி?" - பழனிராஜ் ஆவலாக கேட்டார்.



பண்ணையார் பதில் பேசாமல் மவுனம் சாதித்தார்.

"இன்னும் ஒரு மணி நேரத்துல அந்த நாச்சியப்பனும், மந்திரவாதியும் பலி கொடுத்து தங்கத்தை எடுக்கப் போறாங்க. காணாமப் போன நிர்மலா தான் பலியாகப் போறவ. பலியைத் தடுத்துட்டு கஸ்தூரி கையால புதையல் எடுக்கலாம்னுதான் உங்களுக்கு தகவல் தந்து அனுப்பினேன்" -பழனி ராஜ் தீர்க்கமாக பேசவும் இடைவெட்டினார் ராஜ துரை.

"மிஸ்டர் ரத்தினம். நாங்க ஆவலா இருக்கோம். உங்க கஸ்தூரியப் பார்க்க.... முதுமையை ஜெயிச்ச அந்த அதிசயப் பெண் எங்கே? விஞ்ஞான உலகத்துக்கே சவால் விட்டுகிட்டு இருக்கற அந்த மந்திரப் பெண் எங்கே?"

"சார் மோசம் போயிட்டேன் சார். மோசம் போயிட்டேன்!" -பெரிதாக கத்தியபடி தேவதாசின் கைகளைப் போய் பிடித்தார், பண்ணையார்.

"என்ன சொல்றீங்க?"

"அவளை நான் அம்பா சமுத்திரத்துல இருக்கற என் ரகசிய இருப்பிடத்துல வெச்சருந்தேன். இன்னிக்கு காலைல ரெயில்ல அவளை அழைச்சிக்கிட்டு வர்றப்போ தாமிரபரணி மேல பாலத்துல ரெயில் ஓடிக்கிட்டிருந்த சமயத்துல ஓடிப் போய் ஆத்துக்குள்ற குதிச்சிட்டா சார். ஆத்துலயோ ஆடி வெள்ளம்! நான் இப்ப என்ன சார் பண்ணுவேன்"

பண்ணையாரின் புலம்பலைத் தொடர்ந்து எல்லோரும் கைகளைக் குத்திப் பிசைந்து கொள்ள, பழனிராஜும், ஏஞ்சலும் மட்டும் ஒருவரை ஒருவர் அர்த்த புஷ்டியோடு பார்த்து சிரித்துக் கொண்டனர்.

"ஓ.கே..... கஸ்தூரி விஷயத்தை நாம் வந்து பேசிப்போம். நாம இப்ப உடனடியாக கவனிக்க வேண்டியது நடக்கப் போற பலியை... கமான்

க்கலிக்."

பழனிராஜின் கட்டளையை தொடர்ந்து வில்லிலிருந்து விடுபடும் அம்புகள் போல் போலீஸ் ஜீப்புகள் துப்பாக்கி ஏந்திய போலீஸ் படையோடு புழுதியைக் கிளப்பிக் கொண்டு சுடலைமுனி கோயிலை குறி வைத்து பறந்தன.

சுடலைமுனி முட்டை விழிகளோடு கம்பீரமாக அமர்ந்திருக்க பலி பீடம் அருகே பட்டத்திரி உட்பட எல்லோரும் கூடியிருந்தார்கள். சந்திரசேகரையும், நிர்மலாவையும் வாயைக் கட்டி, கையைக் கட்டி சற்று கஷ்டப்பட்டு அழைத்து வர வேண்டியிருந்தது.

சுடலை முனியையும், பலி பீடத்தையும், பட்டத்திரி கைகளில் மின்னும் அரிவாளையும் பார்த்த நிர்மலா அலறக் கூட சக்தியற்று மயக்கம் போட்டு விழுந்தாள்.

"சும்மா மயங்கட்டும் சனியன்... நாச்சி! நீ பட்டத்திரி கூட சேர்ந்து புதையல் இருக்கான்னு பார்!"

தங்கமணி நாச்சியப்பனை நிமிண்டி விட்டு விட்டு உடனே போலீசை எதிர்பார்த்து பார்வையை சுற்றிலும் சுழல விட்டாள்.

இதற்கிடையே பட்டத்திரியிடமிருந்து உற்சாகமாய் குரல் வந்தது.

"தங்கம்...... தங்கம்......."

சுடலைமுனிக்கு எதிரில் வடமேற்காக ஒரு பூவரச மரத்துக்கு கீழே பட்டத்திரி நின்று இருந்த இடத்தை நாச்சியப்பன் நெருங்கியதும்.....

ஒரு பாம்புப் புற்றை ஒட்டி அகண்ட ஒரு பாத்திரத்தில் கலகலவென தங்க நாணயங்கள்!

அதன் மேலெல்லாம் பாம்புப் புற்றை வெட்டி சாய்த்த புற்று மண்.

"பாம்புப் புற்றை விட பாதுகாப்பான இடம் இருக்க முடியாதுன்னு இதுக்குள்ற போட்டு வெச்சிருக்காங்க" -பட்டத்திரி சொல்லும் போதே ஒரு வயதான நாகம் தன் வசிப்பிடத்தை பட்டத்திரி எட்டி உதைத்த கோபத்தோடு உஸ் என்று



சீறியபடி படம் எடுக்க ஆரம்பித்தது.

இன்னொன்று தங்கப் பாத்திரத்தின் கழுத்தை தன் உடம்பால் வளைத்தபடி கிண்ணென்று நிமிர்ந்து தன் இரட்டை நாக்கை வெளியே சிருட்டென்று சீற விட்டு இருவரையும் வெறித்தது.

"நாச்சியப்பா ஓடு. நிர்மலாவை பலி பீடத்து மேல் நிற்க வை. எங்கே பிணைச் சாம்பல்?"

பட்டத்திரி உடல் நடுக்க கட்டளை இட்டான். தயாராக ஆவி வசிய தாயத்தை கையில் கட்டியிருந்தான். கண்கள் ரத்தச் சிவப்பாகி விட்டிருந்தன. நாச்சியப்பன் பலி பீடத்தை நோக்கி ஓடினான்.

சந்திரசேகரை பார்த்து கண்ணசைத்தவன் மயங்கி கிடந்த நிர்மலாவை இழுத்து பலி பீடம் மேல் கிடத்தினான்.

தங்கமணி நின்ற இடத்தை விட்டு அசைந்திருக்கவில்லை. சுற்றிச் சுற்றி போலீசைத் தேடினாள்.

போலீசும் ஊடுருவத் தொடங்கியிருந்தது. ஆனால் ஒரு பூனையைப் போல் அரவமில்லாதபடி ஒவ்வொரு மரமாய் பதுங்கிப் பதுங்கி முன்னேறிக் கொண்டு இருந்தது.

பழனிராஜும், ராஜதுரையும் ரிவால்வரை லோட் செய்த நிலையில் எந்த நேரமும் சுடத் தயாராக இருந்தனர்.

ஏஞ்சல் தேவதாசை ஒட்டி நடந்து கொண்டிருந்தாள். தனக்கு தோதாக கனகமயில் இல்லையே என்ற கவலை அவளுக்குள் துளிர்விட்ட சமயம் ஒரு மரத்தின் பின்னால் அவள் சற்றும் எதிர்பாராத நிலையில் கனகமயில்!

ஏஞ்சலுக்கு வாய்விட்டு கத்த வேண்டும் போல் இருந்தது. கனகமயில் சத்தமில்லாமல் ஏஞ்சலை நெருங்கி கையைப் பிடித்துக் கொண்டாள். ராஜதுரை அவளை லேசாக வெறித்தார்.

"ஏய் நீ எப்படி இங்க வந்தே?" -இது ஏஞ்சல்.

"ஊரை வளைச்சிக்கிட்டு ஜீப்புங்க போகவும் என்னவோ ஏதோன்னு ஓடி வந்தேன்" - என்றாள்

கனகமயில்.

பலி பீடத்தின் மேல் நிர்மலாவின் கழுத்து சாய்த்து நிறுத்தப்பட்டிருக்க மயங்கிய நிலையில் மண்டியிட்டிருந்தாள் அவள். பட்டத்திரி எதையோ முணுமுணுத்தபடி அவளைச் சுற்றி சுற்றி வந்தான்.

அடிக்கடி ஆகாசத்தை நோக்கி கைகளை உயர்த்தினான்.

தனது தலை முடியில் ஒன்றைப் பிடுங்கி உதட்டுக்கு நேராக வைத்துக் கொண்டு எதையோ முணுமுணுக்க உடனேயே அதுபற்றி எரியத் தொடங்கியது.

## 32

பலி பீடத்தில் நிர்மலாவை சாய்த்து விட்டு உக்கிரமாக பட்டத்திரி மந்திரம் சொல்லிக் கொண்டு நரபலிக்கு ஆயத்தமாக முற்பட்ட அதே வேளையில் பருத்த கருமருது மரத்தின் பின்னால் நின்றபடி துப்பாக்கியை குறி பார்த்து நீட்டிக் கொண்டிருக்கும் பழனிராஜ் பட்டத்திரியின் செயலை வெறித்தார்.

துல்லிதமான அந்த வினாடியில் பட்டத்திரி அரிவாளுடன் நிர்மலா முன் நின்றான். பின்னால் மிரண்ட விழிகளோடு தங்கமணி பக்கமாய் பதுட்டமாய் நாச்சியப்பன்.

சந்திரசேகர் இதற்கு மேல் தாங்காது என்பது போல் மயங்கி விழுந்திருந்தான். நாச்சியப்பனுக்குள் பொறி பறக்க ஆரம்பித்தது.

அரிவாளை ஓங்கினால் பட்டத்திரியை தடுக்க பழனிராஜூம் ராஜதுரையும் குறி பார்க்க ட்ரிகரில் இருவரது ஆள்காட்டி விரலும் அழுத்தம் கொடுத்து தோட்டாவை வெளியே பாயவிட தயாரானது.

அரிவாளோடு நின்ற பட்டத்திரி திடீரென்று நாச்சியப்பன் கைகளில் அரிவாளை தந்து



'வெட்டு' என்று சொல்லாமல் சொன்னவன் தங்கமணியை 'சரி தானே' என்பது போல் பார்க்க, அவன் விம்மிய மார்பில் கை வைத்து பெரிதாக ஆசவாசித்தான்.

பழனிராஜூம், ராஜதுரையும் பட்டத்திரியின் எதிர்பாராத இந்த செயலால் ஒரு வினாடி குழம்பிப் போக நாச்சியப்பன் யாரும் எதிர்பாரா அந்த வினாடியில் அரிவாளை மின்னலைப் போல் பட்டத்திரியின் கழுத்தை நோக்கி ஒரு சுழற்று சுழற்றினான்.

பந்தைப் போல பட்டத்திரியின் தேகத்தை விட்டு கழன்று விழுந்த தலையைப் பார்த்து விபரீதத்தை உணர்ந்த தங்கமணி பெரிதாக அலறியபடி அங்கிருந்து ஓட ஆரம்பிக்க, நாச்சியப்பனை நோக்கி பழனிராஜின் ரிவால்வர் தோட்டா மிக வேகமாக பாய்ந்தது! ராஜதுரையும் தன் பங்குக்கு ஒன்றை அனுப்பி வைத்தார்.

இத்தனை பரபரப்பு நடந்த சூழ்நிலையை புகைப்படத்துக்குள் அடைக்கலாம் என்ற பரபரப்பில் ஏஞ்சல் தன் கைப்பையின் ஜிப்பைத் திறக்க சீறிக் கொண்டு நிமிர்ந்தது சிறைப்பட்ட அந்த கருநாகம்.

"வீல்ல்ல்ல்........!" -ஏஞ்சல் அலறலோடு விட்டெறிந்த பை வானில் ஏறிப் பறந்தது. அதில் இருந்து சீறிய அந்த நாகம் நழுவிப் பிரிந்து குறுக்கே ஓடிய தங்கமணியின் கழுத்தில் ஒரு மாலை போல் போய் விழுந்தது.

விழுந்த வேகத்தில் ஆக்ரோஷத்தில் இருந்த அந்த நாகம் தன் தலையை உயர்த்தி தங்கமணியின் பளபளப்பான விழிகளை விழுங்கி விடுவது போல் கொத்தியது.

சப்தம் கேட்டு கண் மலர்ந்த சந்திரசேகர் எதிரே போலீஸ் படையையும், முண்டமாக பட்டத்திரியையும், குண்டுபட்ட பிணமாக நாச்சியப்பனையும், உயிருக்கு போராடும் ஜீவனாக தங்கமணியையும் பார்த்து விட்டு நிர்மலாவை நிமிஷமும்

தாமதிக்காமல் பலிபீடத்தில் இருந்து கீழே தள்ளி விட்டு விட்டு பழனிராஜை பார்த்து "தேங்க்யூ வெரி மச் சார்!" என்று சந்தோஷ அலறலோடு ஓடிப்போய் அப்படியே அவர் மார்பு மேல் விழுந்தான்.

பழனிராஜ் பக்கத்து மரங்களுக்கு சமமாக தானும் மாறியிருந்தார். நடந்தவைகளை அவரால் ஜீரணிக்க முடியவில்லை என்பது துல்லியமாக தெரிந்தது.

தேவதாசோ ஆர்வமாக நிர்மலாவை நெருங்கியிருந்தார்.

"நல்ல வேளை இந்த அப்பாவி பெண்ணுக்கு ஒண்ணும் ஆகலை!" - சுடலைச் சாமியை பார்த்து பெரிதாக கையெடுத்து கும்பிட்டார்.

ஒரு மணி சுமாருக்கு மூன்று பிணங்களோடு ஸ்டேஷனுக்கு திரும்பிய பழனிராஜையும் மற்றவர்களையும் பண்ணையார் அதிர்ச்சியோடு பார்த்தார்.

"சார் என்னாச்சு சார்....?" பண்ணையார் கேட்கும் போதே பாம்புப் புற்றுக்குள் தெரிந்த புதையல் பாத்திரத்தை கைகளில் பிடித்தபடி ஒரு போலீஸ் அவரை தாண்டி சென்றார்.

"புதையல் கிடைச்சுடிச்சா.....? இவங்கள்லாம் என்ன ஆனாங்க பூதம் அடிச்சிடிச்சா?" -பண்ணையாரிடம் கேள்வி நீண்டது.

பழனிராஜின் முகத்தில் ஏளனப் புன்னகை!

"அதெல்லாம் கிடக்கட்டும் மிஸ்டர் ராஜரத்னம். நாம கஸ்தூரி விஷயத்துக்கு வருவோம். அவ என்ன ஆனான்னு சொன்னீங்க?"

பழனிராஜின் குரலில் தொனித்த ஏளனத்தில் ஏதோ ஒரு மர்மம் ஒளிந்து கொண்டிருந்தது- ஏனோ பண்ணையார் வியர்க்க ஆரம்பித்திருந்தார்.

அப்பொழுது அவர் எதிரே செங்கோடன் பிரசன்னமானான். செங்கோடனைப் பார்த்ததும் பண்ணையாருக்கு ரத்தமே உறைந்து விட்டது.

"எலே செங்கோடா! உனக்கு இங்க என்னடா ஜோலி?" அவர் உதடுகள் தந்தியடிக்க கேட்ட



கேள்விக்கு. பழனிராஜ் முகத்தில் காட்டத்தை காட்டினார்.

"அவர் எங்க டிபார்ட்மெண்ட் ஸ்பெஷல் சி.ஐ.டி." என்றார். கூடவே கஸ்தூரியின் உடம்பை வேறு அழைத்துப் போய் காட்டினார். உடனேயே பண்ணையார் எகிறி பழனிராஜின் கால்களில் விழுந்து விட்டார். எதுவும் பேசவில்லை. இனி எதுவும் பேசுவதற்கில்லை என்பது அவருக்கு தெரிந்து விட்டது!

செங்கோடன் பழனிராஜ் வசம் தந்திருந்த ஃபைல் ஃபேன் காற்றில் தன் பக்கங்களை சடசடக்க விட்டது! அதில் பண்ணையார் கஸ்தூரியை ரகசிய அறையை விட்டு வெளியே இழுத்து வருவது போல் படமும், ரகசிய அறையில் செப்புத் தகட்டால் வேய்ந்த புதையல் நிரம்பிய பெட்டியை அவரும் சூலக்கருப்பனும் இறக்கி வைப்பது போன்ற படமும் பளீரிட்டன.

பலி பீடத்துக்கு கீழே புதைக்கப்பட்டிருந்த பிரேதமும், பிரேதத்தின் தலையும் கஸ்தூரியுடையது என்பது அந்த புகைப்படத்தை பார்த்த வினாடியில் பழனிராஜுக்கும், மற்றவர்களுக்கும் தெரிந்து விட்டது.

கூடவே பண்ணையாரின் சந்தேகத்துக்குரிய நடவடிக்கை பற்றி அன்றாடம் எடுத்த குறிப்புகள், தங்கமணியோடு அவருக்குள்ள ரகசிய தொடர்பு.... பட்டத்திரியோடு நேராக தொடர்பு கொள்ளாமல் பட்டத்திரிக்கே தான் யாரென்று தெரியாதபடி தன்னை வைத்துக் கொண்டு தங்கமணி மூலமாக அவனை இயக்கி வந்தது என்று ஒவ்வொரு விஷயமும் செங்கோடனால் ஆதார பூர்வமாக எழுதப்பட்டிருந்தது!

"ஆமா, நிஜமான புதையல் இப்ப உங்க வீட்டுல தானே இருக்குது?" பழனிராஜ் ஃபைலை மூடியபடி கேட்டார்.

"ஆமாம் சார்! நேற்று ராத்திரி கஸ்தூரிய பலி போட்டு பலி பீடத்துக்கு கீழே இருந்து அதை

எடுத்தேன். கஸ்தூரிய அங்கேயே புதைச்சிட்டேன். இது பட்டத்திரிக்கும் தங்கமணிக்கும் தவிர யாருக்கும் தெரியாது. அவங்க என் கூட்டாளிங்க.

புதையல் குறிப்பை கொடுத்த சந்திரசேகரையும் உதவி செய்த நாச்சியப்பனையும் சமாளிக்க வேண்டியிருந்தது. உங்களுக்கும் புதையல் பற்றி தெரிஞ்சு போச்சு.

ஆகையால நாங்க புதையல் எடுத்த கையோட பிரச்சினையை கை கழுவ முடியலை. ஆகையால முன்னையே போட்ட திட்டப்படி எடுத்த புதையல்ல கொஞ்சத்தை நிறைய செப்புக் காசுங்களோட சுடலை முனி சன்னதிக்கு பக்கத்துல உள்ள பாம்புப் புத்துல போட்டுட்டு மறுநாள் ஒரு செயற்கையான பலிக்கு ஏற்பாடு செஞ்சேன். அந்த பலியையும் நாச்சியப்பனும், சந்திரசேகரும் தான் செய்யறதா உங்களுக்கு காட்ட தங்கமணியை விட்டு உங்களுக்கு புகார் கடிதம் எழுத வெச்சேன்.

கஸ்தூரியைப் பற்றி நீங்க கேட்டா அவ காணாமப் போயிட்டாள்னு சொல்லி தப்பிக்க பார்த்தேன். என் திட்டப்படி எல்லாம் நடந்திருந்தா இந்நேரம் நாச்சியப்பனும், சந்திரசேகரும் கம்பி எண்ணிக்கிட்டு இருப்பாங்க. நிர்மலா பலியாயிருப்பா, பட்டத்திரியும், தங்கமணியும் தப்பியிருப்பாங்க. கிடைச்ச சில ஆயிரம் மதிப்புள்ள புதையலோட நீங்களும் கேஸை முடிச்சிருப்பீங்க....

எவ்வளவோ விஷயங்களை பார்த்துப் பார்த்து செய்த எனக்கு செங்கோடன் என் வீட்டுக்குள்ற நுழைஞ்சதையோ, கணேசன் தன் மனோ சக்தியால புதையல் இருக்கற இடத்தை துல்லிதமா சொன்னதையோ தடுக்க முடியலை. அதனால தானே இவ்வளவு விபரீதமும்!"

பண்ணையார் அப்ருவரைப் போல் பேசப் பேச அனைவரும் வியப்படைய ஏஞ்சல் மட்டும் கேட்க வேண்டிய கேள்வியை கேட்டாள்.

"ஆமா கஸ்தூரி நித்யகன்னி தானா?" பண்ணையார் அதை சோர்வாக மறுத்தார்.



"அவ ஒரு அனாதை! பேர் கன்னியம்மா. நித்ய கன்னின்னு சொன்னாதான் புதையல் விஷயத்துல மந்திரவாதிகளுக்கு ஈடுபாடு வரும்னு நம்பி அப்படிச் சொன்னேன். பிறகு அதையே எல்லார்கிட்டையும் சொன்னேன்.."

"இந்த பூதம் பிசாசுகள் விஷயத்துல உங்களுக்கு அவ்வளவு நம்பிக்கையா?"

ஏஞ்சல் விடாமல் அவரை பேட்டி எடுப்பது போல் கேட்டாள்.

"என் முன்னோர்களுக்கு ஏற்பட்ட கதி... புதையல் சம்மந்தமாக ஊருக்குள்ற உள்ள நம்பிக்கை. இதுதான் நானும் நம்ப காரணம். இப்பவும் சொல்றேன் புதையல் எடுக்க நினைக்கறவங்க யாரும் உருப்பட்டதில்லை. ரத்த பலி அங்க எப்படியாவது நடந்துடுது. அதுக்கு உதாரணம் செத்துப் போயிருக்கற தங்கமணி, நாச்சியப்பன், பட்டத்திரி மூன்று பேரும் தான்!"

அந்த பேச்சை அவர்களால் ஒப்புக் கொள்ளவும் முடியவில்லை. விலக்கவும் முடியவில்லை. தேவதாஸ் ஒரு கை விலங்கோடு பண்ணையாரை நோக்கி நடக்க, ராஜதுரையும், பழனிராஜூம் அவர் வீட்டுக்கு அந்த பெரும் செல்வத்தை பார்க்க ஆர்வமாக கிளம்பினார்கள்.

ஏஞ்சலும் கனகமயிலும் சந்தோஷ சமுத்திரமாக தென்பட்டார்கள்.

"என் கணேசு சொன்ன ஒரு விஷயம் கூட நடக்காம போகலை பாத்தீங்களா?" -கனகமயில் பெருமையாக கேட்டாள்.

"நிஜம் தான் கனகு. கணேசன் சாதாரண ஆள் இல்ல. அபூர்வ மனிதர். அவர் ஒரு மாபெரும் விஞ்ஞான ரகசியம். உடனே கணேசனை பார்த்து விஷயத்தை சொல்லணும். கணேசனை பற்றி மட்டுமே நான் எங்க பத்திரிகைல பக்கம் பக்கமா எழுதப் போறேன். இந்த புதையல் விஷயம் ஒரு பெரிய மர்மக் கதை மாதிரி இல்ல... வா கணேசனை நாமளும் போய் பார்க்கலாம்" என்றாள் ஏஞ்சல்.

"ஆமா நானும் என் கணேசனோட மெட்ராசுக்கு வரட்டுமா?" சற்று அதிக அக்கறையாக நடக்கும் போது கேட்டாள் கனகமயில்.

"நீ இல்லாமலா... நீ இனிமே கணேசனுக்கு வருங்கால மனைவி மட்டும் இல்ல, எனக்கு நல்ல சினேகிதியும் கூட!"

அவள் அப்படிச் சொன்ன போது இருவர் கண்களுமே கலங்கி விட்டிருந்தது!

பண்ணையார் வீட்டு கொல்லைப் புறத்தில் பண்ணையார் மாயமாய் மறைந்து கொள்ளும் ரகசிய அறையில் செப்புத் தகடு பூட்டிய பெட்டி திறந்து கிடக்க அதில் குவியல் குவியலாய் தங்க நாணயங்கள்! ஆபரணங்கள்! செம்பவழங்கள்! முத்துக்கள்! வைரங்கள்!

சுற்றிலும் டி.எஸ்.பி. பழனிராஜ் மற்றும் போலீஸ் படை சூழ, கை விலங்கோடு இவர்களுக்கு மத்தியில் பண்ணையார் அந்த புதையலை அரசாங்கச் சொத்தாக ஒப் படைக்க தாசில்தார், மாவட்ட கலெக்டர் வர வுக்காக அனைவரும் காத்திருந்தனர்.

ராஜதுரை கணேசனின் கைகளை சந்தோஷத்துடன் பற்றி குலுக்கினார். தோளில் தட்டிக் கொடுத்தார். அந்த பெருமை தாங்காமல் எஞ்சலையும், கனகமயிலையும் பார்த்தான் கணேசன்.

கதை, கவிதை மற்றும் கடிதப் போக்குவரத்து, டிடி. அல்லது எம்.ஓ. இவைகளை SREE AISHVARYA PUBLICATION டுடே க்ரைம், 4, தேவகி நகர் 2வது குறுக்குத் தெரு, பொன்னியம்மன் மேடு, சென்னை-110. என்ற நிர்வாக அலுவலக முகவரிக்கே அனுப்பவேண்டும்.

செல்: 94453 45067

TODAY CRIMENEWS Owner & Published by M.P. Chandra Sekaran at 50/1, Pycrafts Road, Royapettah, Chennai - 600 014. Printed by M.P.Chandrasekaran at Wonder Prints, No.14, Weavers Street, Triplicane, Chennai - 600 005.

Editor: Pon ChandraSekar



## வாசகர்களுக்கு ஜாக்பாட்

நமது ஸ்ரீ ஐஸ்வர்யா பப்ளிகேஷன் வெளியிடும் இந்திராஜியின் பல நல்ல நாவல்களை பொக்கிஷமாகக் கருதி தினம் தினம் வாசகர்கள் நம் அலுவலகத்திற்கு நேரிலும், தபால் மூலமும் தொடர்பு கொண்டு வாங்கிச்செல்கிறார்கள்.

இவ்வளவு மலிவு விலையில் விலையுயர்ந்த இந்த புத்தகத் திரட்டை தேடி வந்து வாங்கிச் செல்லும் வாசகர்கள் அனைவரின் நலன் கருதியே இந்த சலுகை விலை அறிவிப்பை திட்டமிட்டோம். இந்திராஜியின் 75 நாவல்களை சலுகை விலையில் வாசகர்கள் அனைவருக்கும் ஒரு பேக்கேஜ் மாதிரி கம்பெனி செலவிலேயே கூரியரில் அனுப்ப உள்ளோம்.

## சலுகை விலை ரூ.650 மட்டுமே!

இந்திராஜியின் கலெக்ஷன்கள் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டியது. இந்த ஆன்மீக மர்மம் நிறைந்த நாவல்கள் வரும் சந்ததியினரின் மனக் கேள்விகளுக்கு பதிலாகவும் அவர்கள் சிந்தனைகளுக்கு விருந்தாகவும் அமையும். இதை திருமணப் பரிசாகவும், நட்புப் பரிசாகவும், அன்பளிப்பாகவும் வழங்கலாம். தேவைப்படுவோர் ஸ்ரீ ஐஸ்வர்யா பப்ளிகேஷன் என்ற பெயரில் M.O. அல்லது D.D. அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

ஸ்ரீ ஐஸ்வர்யா பப்ளிகேஷன்,
4, தேவகி நகர் 2வது குறுக்குத் தெரு,
பொன்னியம்மன்மேடு, சென்னை 110.
தொடர்புக்கு: 94453 45067